Journal of

The Thanjavur Maharaja Serfoji's

# SARASVATI MAHAL LIBRARY

EDITOR

**S. SIVAGNANAM** M. A.,

*Administrative Officer*

SARASVATI MAHAL LIBRARY

THANJAVUR.

Vol XLVII Nos. 1, 2, 3 & 4

PUBLISHED BY DIRECTOR

**THE SARASVATI MAHAL LIBRARY**

THANJAVUR.

ANNUAL SUBSCRIPTION Rs. **50/**

A. D. 2001

Journal of
The Thanjavur Maharaja Serfoji's

# SARASVATI MAHAL LIBRARY


EDITOR

**S. SIVAGNANAM** M. A.,
*Administrative Officer*
SARASVATI MAHAL LIBRARY
THANJAVUR.



Vol XLVII Nos. 1, 2, 3 & 4

PUBLISHED BY DIRECTOR

**THE SARASVATI MAHAL LIBRARY**

THANJAVUR.

ANNUAL SUBSCRIPTION Rs. 50/
A. D. 2002

The Journal of
The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

Vol. XLVII A. D. 2002 Saka 1924 No. 1, 2, 3 & 4

# முகவுரை

சரசுவதி மகால் நூலகத்தின் ஆராய்ச்சிப் பருவ இதழ்த் தொகுதி 47ஐத் தற்பொழுது ஆய்வாளர்கள், அறிஞர்கள் மற்றும் வாசகர்கள்முன் வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ்விதழில் சுவடியியல், பதிப்பியல் நோக்கிலான தமிழ் வடமொழிப் படைப்புகள் இடம்பெற்றுள்ளன

இப்பருவ இதழில் 'தணிகைக் கலம்பகம்' எனும் சிற்றிலக்கியச் சுவடிப் பதிப்பொன்றும் 'சிதம்பரப் பாட்டியல்' எனும் இலக்கணச் சுவடிப் பதிப்பொன்றும் தமிழ்ப் பதிப்பியலுக்கு வளமூட்டும் வகையில் இடம் பெற்றுள்ளன. மணிப்பிரவாள நடையிலமைந்த சுவடியிலிருந்த 'கௌமுதிக் கதைகள்' எனும் படைப்பு, தமிழில் பதிப்பிக்கப் பெற்று இவ்விதழில் இடம்பெற்றுள்ளது. வடமொழியை எழுதப் பயன்படும் 'நந்திநாகரி' எனும் எழுத்து வடிவில் இந்நூலகத்தில் உள்ள சுவடிகள் குறித்த அட்டவணைப் படைப்பும் ஆய்வாளர்க்குப் பயன்படும் வகையில் இவ்விதழில் இடம் பெற்றுள்ளது.

இதழின் தொடக்கத்தில் நூலக வளர்ச்சிப் பணிகள் குறித்த அறிக்கையொன்றும் இடம்பெற்றுள்ளது.

இப் பருவஇதழை அணிசெய்யும் படைப்புகளைப் பதிப்பித்துள்ள நூலகப் பண்டிதர்களுக்கு என்னுடைய பாராட்டுகள்.

இவ்விதழ் நன்முறையில் வெளிவர ஆவனசெய்துள்ள இப் பருவ இதழின் ஆசிரியரான நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இதழ் வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர் திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும், இப் பருவ இதழ்ப் பதிப்புப் பணிகளுக்குத் துணைநின்ற தமிழ்ப் பண்டிதர் முனைவர் ய. மணிகண்டன் அவர்களுக்கும், இதழைச் செம்மையுற அச்சிட்டளித்துள்ள, நூலக அச்சகப்பணியாளர்களுக்கும் இவ்விதழ் சிறக்க உதவிய ஏனையோருக்கும் எனது பாராட்டுகள்.

இவ்விதழினை அறிஞர்களும், ஆய்வாளர்களும், ஆர்வலர்களும் படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

**சீ. கோசலராமன்**, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
24—1—2002.

# உள்ளுறை


✳ முகவுரை — பக்கம்

✳ பருவ இதழ்ப் படைப்புகள் — சுருக்க அறிமுகம்

அ. பஞ்சநாதன், எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்.,
வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர்

✳ RECENT DEVELOPMENTS IN THE LIBRARY

S. SIVAGNANAM, M. A.,
Administrative Officer

✳ தணிகைக் கலம்பகம் — முன்னுரை — 1—12

புலவர் ச. திலகம், பி.லிட்., — நூல் — 1—54
தமிழ்ப்பண்டிதர்

✳ சிதம்பரப் பாட்டியல் — பதிப்பு முகவுரை — i—iv

முனைவர் ம. மணிகண்டன் — நூல் — 1—116
தமிழ்ப்பண்டிதர்

✳ கௌமுதிக் கதைகள் — முகவுரை — 1—8

சாஹித்ய சிரோமணி
எஸ். இராஜலக்ஷ்மி, எம்.ஏ., — நூல் — 1—72
ஸம்ஸ்கிருத பண்டிதர்

✳ நந்திநாகரிச் சுவடிகளின் அட்டவணை — 1—71

நியாய சிரோமணி
ஆ. வீரராகவன், எம்.ஏ., பி.எட்., பி.எல்.ஐ.எஸ்.,
ஸம்ஸ்கிருத பண்டிதர்

# பருவ இதழ்ப் படைப்புகள் – சுருக்க அறிமுகம்

**அ. பஞ்சநாதன்,** எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்.,
**வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர் நிலை I,**
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

இப் பருவ இதழில் தமிழ், வடமொழி ஆகிய மொழிகளைச் சார்ந்த நான்கு படைப்புகளும் நூலக வளர்ச்சிப்பணிகள் குறித்த அறிக்கையும் இடம் பெற்றுள்ளன.

**நூலக வளர்ச்சிப் பணிகள்**

இந்நூலக வளர்ச்சிப் பணிகள் குறித்த அறிக்கையான இதனை ஆங்கிலத்தில் நூலக நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம் அவர்கள் எழுதியுள்ளார்.

**துணிகைக் கலம்பகம்**

கலம்பகம் என்னும் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்த இப்படைப்பு கி. பி. 18ஆம் நூற்றாண்டில் கந்தப்ப தேசிகர் என்னும் புலவர் பெருமகனாரால் இயற்றப்பெற்றதாகும்.

முருகப்பெருமானைப் பராவும் இச்சிற்றிலக்கியப் படைப்பை இந்நூலகத் தமிழ்ப்பண்டிதர் புலவர் ச. திலகம் அவர்கள் ஆய்வு முன்னுரை, அரும்பத உரை ஆகியன அமையப் பதிப்பித்துள்ளார்,

**சிதம்பரப் பாட்டியல்**

தமிழ் யாப்பு—பாட்டியல் இலக்கணங் கூறும் இப்படைப்பினைத் தமிழ்த் துறையில் இடம்பெற்ற ஓலைச்சுவடி (சுவடி எண் : 631, 636)யின் அடிப்படையில், இந்நூலகத் தமிழ்ப்பண்டிதர் முனைவர் ய. மணிகண்டன் அவர்கள் பதிப்பித்துள்ளார்.

ஆய்வுநலஞ்சான்ற அடிக்குறிப்புகள் முதலியன அமைய இப்பதிப்பு உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கௌமுதிக் கதைகள்

இந்தியத் துணைக்கண்டத்தில் தோன்றிய தொன்மை வாய்ந்த சமயங்களுள் ஒன்று ஜைன சமயம். அது மகாவீரர் மற்றும் அவரது கொள்கையைச் சார்ந்தவர்களால் நாடெங்கும் பரப்பப்பெற்றது. அவர்கள் சமஸ்கிருத மொழிக்கும், தமிழ் மொழிக்கும் இரு கண்களாக விளங்கும் பல நூல்களை யாத்தனர். இத்தகைய தொன்மை வாய்ந்த ஜைன சமயத் தொடர்புடைய நூலாகிய கௌமுதிக் கதைகள் என்னும் படைப்பு தற்போது நூலாகப் பதிப்பிக்கப்பெற்று வெளிவருகின்றது.

மணிப்பிரவாள நடையிலான ஓலைச்சுவடியில் (தமிழ்த்துறை ஓலைச் சுவடி எண்: 1078) இடம்பெற்றிருந்த இப்படைப்பினைத் தமிழ்நடையில் இந்நூலக சமஸ்கிருத பண்டிதர் திருமதி. எஸ். இராஜலட்சுமி அவர்கள் பதிப்பித்துள்ளார்.

## நந்திநாகரிச் சுவடிகளின் அட்டவணை

சரசுவதி மகால் நூலகம் பல்வேறு மொழிகள், எழுத்துக்கள் ஆகியவற்றிற்கு உறைவிடமாய் விளங்குகின்றது. எழுத்துக்களில் நந்திநாகரி என்பது தென்னிந்தியநாகரி எனவும் அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த எழுத்து வடிவம் பெரிதும் அருகியுள்ள இந்நிலையில் நூலகத்திலுள்ள நந்திநாகரிச் சுவடிகளுக்கு விவரப்பட்டியல் தயாரித்து, நந்திநாகரி எழுத்தினைப் பரப்பும் முகமாக விளக்கப்படமொன்றையும் இணைத்து இங்குப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

இந்த அட்டவணைப் பதிப்புப்பணியை இந்நூலக சமஸ்கிருதப் பண்டிதர் திரு. ஆ. வீரராகவன் அவர்கள் மேற்கொண்டுள்ளார்.

# RECENT DEVELOPMENTS IN THE LIBRARY

**S. SIVAGNANAM,** M. A.,
*Administrative Officer.*
Sarasvati Mahal Library.

The Library has found many strides in recent times in the developmental activities. The following activities may be worth mentioning:-

**EXPERT COMMITTEE**

The Government of Tamilnadu appointed an expert committee consisting of 15 scholars of repute in various languages field. The first meeting of the expert committee was conducted on 16—11—2001 and the scholars have gone through the titles available in the Library and selected 300 titles on the basis of merit and content for future publication. This will ensure to bring out qualitative books.

**NATIONAL MISSION FOR MANUSCRIPTS**

The Government of India appointed us a Nodal agency for gathering information on the availability of Manuscripts in Tamil with private individuals / Mutts and Samasthanams. Around 250 institutions have been addressed for furnishing information on the availability of manuscripts with them. So far 50 institutions have responded to our letter. The appeal is a continuing process and no stone will be left unturned to get either the manuscript or the required information in this direction.

**SALE OF BOOKS**

The new books and reprinted books are brought out in attractive laminated covers. A new Exibition cum sales counter is opened at the very entrance of the Library. Now the sale is steadily increasing.

The sale of books touched a new high of Rs. 4.57,000 (face value of Rs. 9 lakhs) during Serfoji Days Celebrations in 2000. In the year 2001-2002, the Serfoji Day Celebrations Sales exceeded Rs. 3. 57 lakhs.

## CONDUCT OF TRAINING CLASSES

The impart training to Students / Research Scholars and Librarians in various fields, the following training classes were conducted.

Manuscriptology training in

1. Grantha
2. Tamil
3. Marathi
4. Telugu Languages
5. Modi

Also training on editing was conducted on the above languages. Training Programmes were conducted on Preservation of Manuscripts and conservation of temple objects etc. The training programmes are found to be useful for the research students and scholars Action has been taken to affiliate the Library with Bharathidasan University so as to enable to conduct one year diploma course.

## IMPROVEMENT OF BUILDINGS

The building in front of the Library is going to be renovated at a cost of Rs. 22 lakes which will be used for the benefit of reasearch students / scholars. Similarly, the book section of this Library will be repaired at a cost of Rs. 2. 80 lakhs.

## CATALOGUING

There were 20 catalogues in Tamil Manuscripts. Now 5 more catalogues have been completed. Around 150 german books available in the Rajah's Collection were also catalogued with the help of a german scholar.

The Library is leaping forward in many directions.

# தணிகைக் கலம்பகம்

பதிப்பாசிரியர் :

**புலவர் ச. திலகம்,** பி. லிட்.,
தமிழ்ப்பண்டிதர்,
தமிழ்த்துறை,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

# முன்னுரை

" இருந்தமிழே உன்னால் இருந்தேன்—இமையோர்
விருந்தமிழ்த மென்றாலும் வேண்டேன் " (தமிழ்விடு தூது)

இமையவருலகத்து அமுதினும் தமிழ் இனிமையுடையது. அமுதமுண்டார் சாவார் என்பது தொன்மொழி. அந்த அமுதமும் வேண்டேன் இனிய தமிழ் மொழி இருக்க என்கிறார் ஒரு புலவர்.

புலவர்கள் தங்களது புலமையினை நன்கு வெளிப்படுத்துவதற்காகத் தமிழ்ச் சங்கத்தை மதுரையில் அமைத்து, ஒவ்வொரு புலவரும் தாம் தாம் செய்த பாடல்களையும், நூல்களையும் இச்சங்கத்தில் அரங்கேற்றிப் பெருமை பெற்றனர். புலவர்கள் அயல்மொழிகளையும் பயின்று அவற்றிலுள்ள சிறந்த நூல்களைத் தழுவித் தமிழில் நூலியற்றும் பொழுது தமிழ் மொழியின் சிறப்பும், தமிழ் நாட்டின் பண்பாடும் முதல் நூல்களின் தரமும் சிறிதும் குன்றாத வகையில் இயற்றினர்.

அங்ஙனம் தோன்றிய நூல்கள் தொடர்நிலைச் செய்யுட்கள், சிறு காப்பியங்கள், சிறு பிரபந்தங்கள் முதலாய பலவகை நூல்களாகும். இவை இடைக்காலத்தில் தோன்றின. ஆழ்வார்கள், நாயன்மார்கள் போன்ற சமயக் குரவர்களும் இவ்விடைக்காலத்திலேயே தோன்றிப் பக்திச்சுவை சொட்டச் சொட்டப் பாடல்களைப் பாடினார். இவ்வாறு இலக்கியச் சுவையுணர்விலும் சமய ஈடுபாட்டிலும் சிறந்து விளங்கிய பாடல்களே பிரபந்தங்கள் எனப் பட்டன.

பிரபந்தம் என்னும் வடசொல் தமிழில் மேன்மை பொருந்திய யாப்பு டைய நூல் என்று பொருள்படும். இப்பிரபந்தங்கள் சிற்றிலக்கிய வகையைச் சாரும். தமிழில் சிற்றிலக்கியங்கள் 96 வகைப்படும். இவற்றுள் கலம்பகமும் ஒன்றாகும். கலம்பகத்தை எண்வகை வனப்புகளுள் விருந்து என்னும் வகை யைச் சேர்ந்த பிரபந்தமாக முன்னையோர் கொண்டுள்ளனர். விருந்தாவது புதிதாகத் தாம் வேண்டியவற்றால் பல செய்யுளும் தொடர்ந்துவரச் செய்வ தாகும்.

கலம்பகம் என்ற சொல்லுக்குக் கலவை என்பது சொற்பொருள் (கலம் பகம்—பல மலர்களாலான மாலை)

" களிவண்டு மிழற்றிய கலம்பகம்
புனைந்த அலங்கலந் தொடையல் "

என்பது தொண்டரடிப் பொடியாழ்வார் வாக்கு. இவர் இங்கே சுட்டும் கலம் பகம் என்பதற்குப் பலவகை மலர்கள் என்பது பொருள். பல வகையான மலர்களைச் சேர்த்துக் கட்டிய மாலை "கதம்பம்" எனப்படும். "கதம்பம்" எனவும் வடமொழியில் இது வழங்கும்.

" பல்பூமிடைந்த படலைக்கண்ணி" என வரும் பெரும்பாணாற்றுப் படை அடிக்கு (174) உரை கண்ட நச்சினார்க்கினியர் பல பூக்கள் கலந்து நெருங்கிய கலம்பகமாகிய மாலை என்று விளக்கம் தருகிறார். கலம்பக இலக்கியத்திற்குக் கலம்பக மாலை என்றும் ஒரு பெயருண்டு.

பலவகை நிறமும் வடிவமும் மணமும் கொண்ட மலர்களால் கட்டப் பெற்ற கதம்பமலர் மாலை போன்று இந்த இலக்கிய வகையில் இடம் பெற்றுள்ள பாக்களும் அவற்றின் பொருள்களும் பல்வேறு வகைகளில் அமை கின்றன. எனவே இந்த இலக்கியப் பெயர் உவமையாற் பெற்ற பெயராகும். உறுப்பமைதி கலம் 10 பகம் 8 ஆகப் 18 உறுப்புக்களாகும்.

பா, பாவினங்களுள் பெரும்பாலானவற்றையும் கலம்பக இலக்கியத்துள் காணலாம். பொருள்களை நோக்கினால் அகம், புறம் என்றும் இருவகைப் பொருள்களும் காணப்படுகின்றன. நகை முதலிய ஒன்பான் சுவைகளும் இதன் கண் மிளிர்தல் காணலாம்.

பாடல் தொகையிலும் கலம்பகங்களுக்குள்ளே வேறுபாடு உண்டு. தேவர்களுக்கு நூறு, முனிவர்க்குத் தொண்ணூற்றைந்து, அரசர்க்குத் தொண்ணூறு, அமைச்சர்க்கு எழுபது, வணிகர்க்கு ஐம்பது, வேளார்க்கு முப்பது என்னும் எண்ணிக்கை அளவில் பாடல்கள் பாடுதல் வேண்டும் எனப் பாட்டியல் நூல்கள் வரையறுக்கின்றன.

" தேவர்க்கும் முனிவர்க்கும் காவல்அர சர்க்கும்
நூறுதொண் ணூற் றைந்துதொண் ணூறே

ஒப்பில் எழுபது அமைச்சிய லோர்க்கு
செம்பிய வணிகர்க் கைம்பது முப்பது
வேளா ளர்க்குள விளம்பினர் செய்யுள்."

அமைச்சர் என்பதற்குப் பதிலாக "அரசனால் ஏவப்பெற்றவர்களுக்கு எழுபது" என நவநீதபாட்டியல் தெரிவிக்கிறது. பல கலம்பக இலக்கியங்களை நோக்கும்போது இவ்வரையறை தவிர்ந்து வருதலும் காணப்படுகிறது.

கலம்பக நூல்களிலே 18 பொருள்கள் சிறப்பாக அமையவேண்டும் என்பது பழைய மரபு. புயம், தவம், வண்டு, அம்மானை, பாண்மதங்கு, கைக்கிளை, சித்து, ஊசல், கிளி, மடக்கு, ஊர், மறம், காலம், தழை, இரங்கல், சம்பிரதம், கார் தூது என்னும் அடைவில் பதினெட்டினை வெண்பாப்பாட்டியல் தருகிறது.

"வைக்கும் தவம்புயம்வண் டம்மானை பாண்மதங்கு
கைக்கிளைசித் தூசல் கிளிமடக்கூர் — மிக்கமறம்
காலம் தழை இரங்கல் சம்பிரதம் கார் தூது
கோலும் கலம்பகத்தின் கூறு."

மேலே சுட்டிய உறுப்புகளின் மேலாகக் கலம்பக இலக்கியங்களில் வெவ்வேறு புதிய பொருள்களும் பாடு பொருளாகக் கொள்ளப்பட்டு உள்ளன. பிச்சியார், கொற்றியார் என்பவற்றைப் போலவே வலைச்சியார், இடைச்சியார், கீரையார், யோகினியார் என்னும் பொருள்கள் எழுந்துள்ளன. புயவகுப்பினைப் போலவே சிலர் திருவடி வகுப்பும் பாடியுள்ளனர். இவற்றிற்கு மேலும் ஆற்றுப்படை, பள்ளு, சிலேடை, மடல், வெறிவிலக்கு என்பவற்றையும் கலம்பக உறுப்புகளாக ஒருசிலர் கொண்டுள்ளனர்.

**கலம்பக நூல்களின் பொயரமைதிகள் :**

கலம்பகங்கள் தெய்வங்களையும் அரசர்களையும் சான்றோர்களையும் பாட்டுடைத் தலைவர்களாகக்கொண்டு தோன்றியுள்ளன. எனினும் பக்தியெழுச்சியின் காரணமாகத் தெய்வங்களின் மேல் பாடப்பெற்ற இலக்கியங்களே மிகுதியாயுள்ளன. தெய்வங்களைக்குறித்து எழுந்த கலம்பகங்களுக்கு அத்

தெய்வப் பெயர்களோடு சார்த்திப் பெயர் சூட்டுவதோடு தெய்வங்கள் எழுந்தருளி யுள்ள ஊர்ப்பெயரைச் சார்த்தியும் வழங்கப்படுகின்றன.

உதாரணமாக மதுரைக்கலம்பகம், திருவரங்கக்கலம்பகம் முதலியன வற்றைக் கூறலாம். தெய்வத்தின்பெயர், அரசர் பெயர், ஞானியோர், மற்றும் தலங்கள் பற்றியும் பாடப்பெறும் கலம்பகங்கள் அந்தந்த நூலின் தலைவர் பெயருடன் சேர்த்துக் கூறப்படுகின்றன ஆளுடையபிள்ளையார் திருக்கலம் பகம், சிவஞானபாலையசுவாமிகள் கலம்பகம், அம்பலவாணதேசிகர் கலம்பகம முதலியன இதற்குச் சான்லாகும். முனிவரைத் தேவரைப் போல வைத்துப் பாடியதற்கு எடுத்துக்காட்டாக மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர் கள் பாடிய அம்பலவாணதேசிகர் கலம்பகம் விளங்குகிறது. இதில் 100 செய்யுட்கள் உள்ளன. இறைபக்தி பாடு பொருளாக அமைந்த கலம்பகங்கள் மேல் தெய்வப்பெயர் சுட்டுவதை விடத் தலப்பெயர் சுட்டுவதே மிகுதி.

நூறு என்னும் பேரெல்லையைக் கடந்தும் சில கலம்பக இலக்கியங்கள் காணப்படுகின்றன. இரட்டையர் பாடிய திருவாமாத்தூர்க் கலம்பகத்திலும், படிக்காசுப்புலவர் பகர்ந்த புள்ளிருக்கு வேளூர்க்கலம்பகத்திலும் 101 பாடல்கள் உள, குமரகுருபரசுவாமிகள் அருளிய மதுரைக்கலம்பகத்தில் 102 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. உதீசித்தேவர் தந்த திருக்கலம்பகத்தில் 110 பாடல்களைக் காணலாம்.

இவ்வாறாகக் கலம்பக உறுப்புகள் 18 என்னும் வழக்கிற்குக் குறைவாக வும் கூடுதலாகவும் உறுப்புகளைப் புலவர்கள் கலம்பக நூல்களில் வைத்துப் பாடியுள்ளனர் என்பது தெரியவருகிறது. திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகத்தில் 18 உறுப்புகள் உள. பதினெட்டினும் குறைந்த உறுப்புகள் ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், திருவாமாத்தூர்க்கலம்பகம், நந்திக்கலம்பகம் முதலியவற்றில் காணப்படுகின்றன. ஆசாரியன் திருவடியினை 1946-இல் அடைந்த அபிநவ காளமேகம் அனந்தகிருஷ்ணய்யங்கார் பாடிய திருப்பேரைக் கலம்பகத்தில் 26 உறுப்புகள் இடம்பெற்றுள்ளன.

கலம்பகத்தில் இடம்பெறும் பாடுபொருள்களையும் பா வகைகளையும் நோக்குமிடத்து இப்பிரபந்தம் அந்தாதி, அம்மானை முதலியவற்றிற்குப் பின்னர்த் தோன்றிய இலக்கியம் என்பது விளங்குகிறது.

கடவுளைத் துதித்துப் பாடிய கலம்பக நூல் வரிசையில் தலப்பெயர் கொண்ட நூல்களுள் ஒன்று தணிகைக்கலம்பகமாகும். இந்நூல் திருத்தணிகைச் சந்நிதி முறையில் ஒன்றாக வைத்து எண்ணப்படுகிறது. இதன் ஆசிரியர் கந்தப்பதேசிகர் ஆவார்.

## தணிகைத் திருத்தலம்:

தணிகை என்று சொல்லப்படும் திருத்தணிகை என்னும் தலம் சென்னைக் கருகே அரக்கோணத்திலிருந்து வடக்காக 16 கி. மீ தொலைவில் அமைந் துள்ளது. இவ்வூருக்கு மின்சார இருப்புப் பாதையும் அமைக்கப்பட்டுள்ளது. ஆந்திரா, தமிழ்நாடு எல்லையில் இவ்வூர் அமைந்துள்ளதால் வணிகமையமாக வும் இது விளங்குகிறது. இது முருகனின் அறுபடை வீடுகளுள் ஒன்று. இனி இத்தலத்தின் சிறப்பினைச் சிறிது காண்போம்.

## தணிகைப் பெருமை:

விண்ணுலகத்தை எள்ளி நகையாடினார் போன்று சிறப்புடன் விளங்கு வதும், ஒன்பது கோள்களும தந்நிலை மாறி மழை மறுத்த போதும் ஆற்று மலையில் இருந்து ஊறும் நீர் நாட்டின் வளத்தை மேம்படுத்தும். அத்தகைய வளம் பொருந்தியதுமாகிய தொண்டைநாட்டில் திருமுருகப்பெருமான் திருக் கோயில் கொண்டருளிய திருத்தணிகை ஒப்பற்ற பெருமையுடையதாகும்.

இத்தணிகையானது ஒப்பற்ற இந்திரனுடைய விண்ணுலகத்தைப் போலவும், நான்முகனுடைய சத்தியலோகத்தைப் போலவும், திருமாலுடைய வைகுண்டத்தைப்போலவும், சிவபெருமானுடைய சிவலோகத்தைப் போலவும், சிறந்து விளங்குவதாகும். மேலும் நான்முகன் திருமால் சிவபிரான் என்னும் மும்மூர்த்திகளைப் போல் சிறப்பினையுடையது. இத்தணிகைமலையின் சிறப்பினைப் பிறர் சொல்லக்கேட்டாலும் இம்மலையை அடைந்து முருகக் கடவுளைப் போற்றி வழிபடுவோம் என்னும் நோக்கத்தோடு திருத்தணிகை மலையை நோக்கிப் புறப்பட்டாலும் அவ்வாறு புறப்பட்டவர்களுடைய தீவினை முற்றும் நீங்கும் என்பர்.

## திருத்தணிகைக்கு வழங்கும் பிற பெயர்கள்:

பொன்னுலகத்தில் உள்ள செல்வங்களெல்லாம் தன்னிடத்திலே நிறையப் பெற்ற காரணத்தால் இவ்வூர் **சீபூரணகிரி** என்று பெயர் பெற்றது. அடியார்களுடைய விருப்பங்களை ஒரு கணப்பொழுதில் நிறைவேற்றுதலால் **தணிகாசலம்** என்று பெயர் பெற்றது. எல்லாவற்றிற்கும் மூலகாரணனாகிய சிவபெருமானே முருகக்கடவுளை மூல காரணன் என்று தொழுதபடியால் **மூலாத்திரி** என்று பெயர் பெற்றது. கருங்குவளைமலர் நாள்தோறும் மலர்தலான் **அல்லிகாத்திரி** என்று பெயர் பெற்றது. இக்காரணத்தினால் **நீலோற்லகிரி**, **உற்பலகிரி**, **கல்லாரகிரி**, **காவிமலை**, **நீலகிரி**, **குவளைச்சிகரி** எனப் பலவாறு கூறுதலும் உண்டு. கற்பத்தின் இந்நகர் அழியாமையால் **கற்பசித்** என வழங்குதலும் உண்டு.

சூரபதுமனோடு செய்த போரினால் உண்டாகிய சினமுந் தணியப் பெற்ற இடமாதலால் **செருத்தணிகை** எனவும், திருத்தணிகை எனவும் கூறப் பெறும். முருகக்கடவுள் பிரணவப்பொருளைச் சிவபெருமானுக்கு உரைத்தருளிய இடமாகையால் **இந்திரநகரி** எனவும், நாரதர் விருப்பமுற்ற இடமாகையால் **நாரதப்பிரியம்** எனவும், அகோரன் எனனும் தவத்தினன் வீடு பெற்ற நகராகையால் அகோரகைவல்யப்ரதம் எனவும்; கந்தக்கடவுள் வீற்றிருப்பதால் **கந்தகிரி** எனவும், இப்பதிக்குப் பெயர்கள் உள்ளன. இதன் வரலாறுகள் கச்சியப்ப முனிவர் அருளிய தணிகைப்புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இங்கிருக்கும் விநாயகர், முருகன் வள்ளியை மணக்க யானை உருவில் வந்து உதவியரென்னுங் காரணத்தால் ஆபத்சகாய விநாயகர் என்னும் பெயர் உடையவராவார்.

## இந்நூலில் கூறப்படும் தணிகைமலைச் சிறப்பு:

தணிகைமலையில் உரையும் முருகப்பெருமானைப் பராவும், சிறப்புரைக்கும் சிற்றிலக்கியமாகிய இந்நூலில் தணிகைமலையின் சிறப்புகள் பலபடப் பேசப்பெறுவது இயல்பன்றோ. அவ்வகையில் நூல் முழுதும் தணிகைமலை அழகுறப் படம்பிடிக்கப்பெற்றுச் சொல்லோவியங்களாகக் காட்டப்பெற்றுள்ளன.

அவ்வாறான பகுதிகள் வருமாறு:—

மூவர் தொழும் திருத்தணிகை ... 1
பணிமலரி வெயில் விரீபலகிரி ... 1
மறத்தியர் பாடல் தொகுந்தணிகாசலம் ... 6
பொருப்பர் கைவிற்கும் கலைக்கும் கலைமான்மாய்
தணிகைச்சயிரம் ... 15
வரைக்குறவர் சூழ்தணிகை ... 20
மானார் நடஞ்செய்தணிகை ... 21
செல்லையொன்றிய மதில் தணிகை ... 22
நற்பதரும தரும் ... 39
காரிகையார் எதிர்நோக்க மயிலாடக் கல்லருவி முழக்கங்
காட்டப் பேரிகைபோல் முகிலார்க்குந் தணிகை ... 19
கள்ளுலாம் பூங்குவளை பூப்போதும் கபத்துள் நாளும்
விள்ளுமால் வரை ... 36
வயலினமார் தணிகை ... 43
மன்றல் கமழும் திருத்தணிகை ... 44
மணிகையார்ந்தருவி தாழ்தணிகைமால்வரை ... 46
கொள்ளியின் மலரும் அள்ளிதழ்க் காந்தள் குலங்களை
அருக்கனும் மதியும் கோவரா வனாமன்றஞ்சி
நாடோறும் குலவரையருகிலே நடக்கும் தெள்ளிய
தணிகைப்பதி ... 52
உற்றவருக்கருள் நற்றணிகைப்பதி ... 57
மழைக்கணங்களார் தணிகை ... 61
விமலனார் அளித்திடும் பண்ணுலாவு திருத்தணிகை ... 64
மாதங்கத்தைச் சாய்க்கும் அரிவாழ் தணிகை ... 67
பணிகாசலரும் தணிகாசலம் ... 69
கற்றோர்கள் போற்றும் தணிகை ... 71
காயுங்கதிர்கால் மணியருவி கறங்கும் தணிகை ... 72
மேகஞ்சூழ் தணிகாசலர் ... 84

**இந்நூலில் கூறப்படும் முருகனது சிறப்புகள் சில:**

குமரப்பெருமானாகிய முருகனை முழுமுதற் கடவுளாகக்கொண்டு முகிழ்த்த சமயம் கௌமாரம் என்பதை அனைவரும் அறிவர். முருகப்பெருமானின் மகத்தான திருவிளையாடல்கள், சிறப்புச்செயல்கள் எண்ணிலாதவை. அவற்றுள் பலவற்றை இந்நூல் எடுத்தியம்புகிறது. அவற்றுள் சிலவற்றை இவண் நூற்செய்யுள் தொடர்களாலேயே தொகுத்துக் காண்போம்,

| | | |
|---|---|---|
| நீர்கொண்ட சடைமுடியோன்.........எழுஞ்சுடர் | — | 1 |
| தானவரை வேரறுத்து.........நின்திருவடியே | — | 1 |
| வேதாகமங்கள்.........தணிகைச் சண்முகவா | — | 2 |
| தூன் தாமரை மலர்ப்பதம்.........வள்ளலே | — | 4 |
| யார் கொல்.........வாழ்வான் | — | 20 |
| மாந்தரொடு விண்ணோர் வணங்குந் தணிகாசலனார் | — | 23 |
| மானவரும் வானவரும் வணங்கிப் போற்ற வர முதவும் | | |
| தணிகைவரை வள்ளல் | — | 37 |
| புய வகுப்புப் பாடல் | — | 42 |
| அன்று சூரர் வாதனை.........வரதன் | — | 44 |
| கடிக்குடங்கை.........தணிகைவேந்தே | — | 48 |
| சார்ந்தாரை.........சிகாமணி | — | 68 |
| பகலாயிரம் அன்ன சேயோன் | — | 77 |
| அகமலர.........குருபரனே | — | 93 |
| குருபரன் நீ.........ஒங்கலானே | — | 94 |

**நூலாசிரியர் வரலாறு:**

இந்நூலின் ஆசிரியரான கந்தப்பதேசிகர் கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்களுள் ஒருவர். இவர் ஊர் தொண்டைமண்டலத்திலுள்ள திருத்தணிகையாகும். சங்கம மரபில் தோன்றிய இவர் வீர சைவைத் சமயத்தைச் சார்ந்தவர். திருத்தணிகைப்புராணம் பாடிய கச்சியப்பமுனிவரின் மாணாக்கர். பிற்காலத்தில் சிறந்த புலவர்களாகவும் விளங்கிய விசாகப் பெருமாள் ஐயரும் இவர்தம் புதல்வராவர்.

கந்தப்பையர் வீரசைவராயினும், முருகக்கடவுள் மீது பேரன்பு கொண்டு விளங்கினார். முருகன்மீது தோத்திர நூல்கள் இயற்றுவதை இவர்தம் கடமையாகக் கொண்டிருந்தார் எனத்தெரிகிறது. தாம் பிறந்த ஊராகிய திருத்தணிகையில் வீற்றிருக்கும் முருகக்கடவுள் மீது பேரன்பு கொண்டு விளங்கினார். இவர் முருகன்மீது திருத்தணிகை அந்தாதி, திருத்தணிகைக் கலம்பகம், திருத்தணிகை பிள்ளைத்தமிழ், திருத்தணிகை உலா, தயாநிதிமாலை, ஐங்கரமாலை, வேல் பத்து, மயில்பத்து, மலைப்பத்து, சீர் பாதப் பத்து முதலிய பத்து நூல்களை இயற்றியுள்ளார். இவையனைத்தும் திருத்தணிகைச் சந்நிதி முறை என்னும் பெயரில் தொகுக்கப்பட்டு ஒன்றாக வெளியிடப்பட்டுள்ளன. மேலும் முருகன் தாலாட்டு, சிலேடை வெண்பா, வெண்பா அந்தாதி முதலிய பிரபந்தங்களையும் திருத்தணிகைத் தலபுராணத்தையும் இயற்றியுள்ளார்.

பழமலை அந்தாதி, திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி முதலிய கடினமான சில் பிரபந்தங்களுக்கு உரை எழுதியுள்ளார்.

## இந்நூலின் சிறப்புகள்

இலக்கிய வளமும் பக்தி நலமும் கலந்த இத்தணிகைக் கலம்பக நூற் சிறப்புகள் பலவாகும்; அரிய கருத்துமணிகளும் பலவாகும்,

அறுபடை வீடுகளாம் தலங்களைப்பற்றி இந்நூல்.

" குன்றுதோ றாடல்பரங் குன்றலைவா யேரகஞ்சீர்
துன்றுபழ முதிர்சோலை தொகுமாவினன் குடியாய்த் "
(பா. எ. 1)

எனப் பதிவு செய்துள்ளது. இதில் குன்றுதோறாடல் எனும் அமைவில் திருத்தணிகை சுட்டப்பெற்றுள்ளது.

தருமங்கள் செய்வதாலும் தவங்கள் பல இயற்றினாலும் முருகப்பெருமானின் திருநாமத்தை உச்சரிக்கத் தவறினால் முத்திப்பேறு முகிழ்க்காது என்பதனை,

" தருமங்கள் பலசெயினும் தவந்தான் மிகச்செயினும்
முருகனென்று மொழிந்திலரேல் முத்திநல மிழந்தவரே "
(பா. எ. 1)

என இந்நூல் அருமையாக எடுத்துரைக்கின்றது.

பிற சமயக் கதைகளைச் சிந்தை செய்யாமல் முருகப்பெருமானின் புகழைச் சொல்லித் துதிப்போர்க்கு எண்வகைச் சித்திகளும் எளிதில் வசமாகும் என்பதனை,

" கருப்புகழாம் பிறசமயக் கதைகேளா தனுதின முன்
திருப்புகழை உரைப்போர்க்குச் சித்தியெட்டும் எளிதாமே "
(பா. எ. 1)

என் இந்நூல் கூறுகின்றது. இப்பாடலடியில் "திருப்புகழை" என்னும் சொல் லாட்சி முருகப்பெருமானின் சிறந்த புகழை எனவும் அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழை எனவும் நயமுற அமைந்துள்ளமை எண்ணத்தக்கது.

தணிகைப்பெம்மானே என்போர்க்குப் பொருள்,குலம், புவி, புகழ், அருள், அழகு, அறிவு முதலியன உரிமையாம் என்பது இந்நூலுணர்த்தும் மெய்ம்மை யாகும். (பா. எ. 14)

தணிகைத்தேவன் அணியுந் திருப்பூச்சு, வறியோரை வேந்தராக்கும், மண்ணோரை விண்ணவராக்கும், சினத்தோரை சாந்தராக்கும், அவத்தோரைத் தவத்தோராக்கும் என அழகுற எடுத்துரைக்கின்றது இந்நூல். (பா. எ. 49)

தெய்வயானையை மணந்தது மட்டுமன்றி, தினைப்புனத்தில் விருத்த வேடம்பூண்டு வள்ளியை மணந்தவன்; மாமரமாக நின்ற சூரனை அழித்தவன்; திருமாலுக்கு மருகனானவன், உமையம்மையிடமும், கார்த்திகைப்பெண்களிட மும் பாலுண்டவன். வானவர்க்குக் குருவானவன் (பா. எ. 65) என்றெல்லாம் முருகப்பெருமானின் பெருமைகளை இந்நூல் எடுத்து மொழிகின்றது.

வேலை என்னும் சொல்லை வேல்(வேல் + ஐ), வேலை(கடல்) என இரு பொருள் காட்டுமாறு ஓரடியில் அமைத்து,

" பிறழும் வேல்பிடித்து மென்றன்
பிறவி வேலை நீக்கிடாய் " (பா. எ. 74)

எனச் சுழலும் வேலைப் பிடித்தவனை வழிபட்டால், பிறவி வேலை (கடல்) யிலிருந்து அவன் காப்பான் என்பதை அழகுற நூல் உரைக்கின்றது.

கல்வி கற்றால், முருகனின் திருப்புகழையே நாடோறுங் கற்பதாக அது அமையவேண்டும்; இறந்தாலும் உடலம் பெருமானின் தலத்திலே பொருந்த வேண்டும் என்று பக்தி நிலையின் உயர் வெளிப்பாட்டை இந்நூல் மொழிகின்றது. (பா. எ. 75)

இவ்வாறு மிகப்பல அருஞ்செய்திகளைத் தன்னகத்தே கொண்டு பக்தி நிலையில் நின்றும், இலக்கிய அழகுணர்வை வெளிப்படுத்தியும் இந்நூல் எழிலுறு படைப்பாக இலங்குகின்றது.

## யாப்பமைதி

இந்நூல் கலம்பகம் என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது. கலம்பகப் படைப்புகள் பல்வகை யாப்புகளிலும் பாக்களைப் பெற்றுப் பளிச்சிடுவது வழக்கம். இந்நூலும் அவ்வாறே அமைந்துள்ளது. இந்நூல் வெண்பா, மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா, கட்டளைக் கலித்துறை, கழிநெடில் ஆசிரிய விருத்தம், இரட்டை ஆசிரிய விருத்தம், கலித்துறை, கலிவிருத்தம், கலித்தாழிசை, நேரிசை ஆசிரியப்பா, கட்டளைக் கலிப்பா, வஞ்சி விருத்தம், வஞ்சித்துறை, சந்த விருத்தம் ஆகிய யாப்பு வடிவங்களில் பாக்களைப்பெற்று ஒளிர்கிறது.

## நிறைவுரை

தணிகைவேலவனின் தனிப்பெருஞ் சிறப்புகளைச் சாற்றும் அழகிய இலக்கியமாக இப்பனுவல் திகழுகின்றது. இன்று கிடைத்தற்கரிதாக இந்நூல் உள்ளது. இந்நூற்பதிப்புக்கு அடிப்படையாக அமைந்தது இந்நூலகத் தமிழ்த்துறையில் இடம்பெற்றுள்ள கையெழுத்துப் பிரதியாகும். இக்

கையெழுத்துப்பிரதியும் இதுபோன்ற வேறுசில பிரதிகளும் அருட்செல்வர் உயர் திரு பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் இந்நூலகத்திற்குப்பிரதிசெய்து கொள் வதற்காக அளித்த சுவடிகளிலிருந்து பெயர்த்து எழுதப்பெற்றவையாகும். அருட்செல்வர் அவர்களுக்கு முதற்கண் என் நன்றியை உரித்தாக்குகின்றேன். இந்நூல் பருவ இதழ்ப் படைப்பு மற்றும் தனிநூல் வெளியீட்டுத் திட்டத்தின் அடிப்படையில் வெளிவர அனுமதி அளித்து, வெளியீட்டாளர் முகவுரை வழங்கிச் சிறப்பித்த தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவரும் நூலக இயக்குநரு மான உயர்திரு சி. கோசலராமன், இ. ஆ. ப., அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவன செய்த நூலக நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும் நூலக வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன். நூலைச் செப்பமாக அச்சிட்டளித்த சரசுவதி மகால் நூலக அச்சகப்பிரிவினருக்கும் இந்நூற்பணிகளுக்கு உதவிய ஏனை யோருக்கும் என் நன்றி.

சமய அன்பர்களும் இலக்கிய அன்பர்களும் இந்நூலைப் பயின்று மகிழ்வர் என நம்புகின்றேன்.

தஞ்சாவூர்
14—7—2001.

ச. திலகம்,
தமிழ்ப்பண்டிதர்.

# தணிகைக் கலம்பகம்

### வெண்பா

நலம்பகமுன் னான்குடைய நற்றணிகை வேலோன்
கலம்பகத்தைப் பாடவழி காட்டுஞ்—சிலம்பகஞ்சேர்
வாலிபத்தி கண்டெதிர்ந்தோர் வன்மைதந்தோன் மைந்தனென்றும்
வாலிபத்தன் வாலிபத்தன் வந்து.

அரும்பத உரை :

இது விநாயகரைத் துதிக்கும் காப்புச் செய்யுள்.

நல்அம்பகம்—அழகிய கண்கள்; சிலம்பு—மலை; வாலிபத்தி—கிட்கிந்தை அரசனாகிய வாலியின் பக்தி; தந்தோன்—தந்தவனாகிய சிவ பெருமான்; மைந்தன்—மகனாகிய வினாயகன்; வாலிபத்தன்—என்றும் வாலிபனாக இருப்பவன்; வாலிபத்தன்—தூய யானை முகத்தவன். வந்து பாட வழிகாட்டும் எனக்கூட்டுக.

### மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

நீர்கொண்ட சடைமுடியோ னெற்றிவிழி களிற்பிறந்து
சீர்கொண்ட சரவணத்தின் செங்கமல மிசைவளர்ந்து
கார்த்திகையின் முலைப்பாலுங் கவுரிமுலைப் பாலுமுண்டு
ஆர்த்ததிரைக் கடலிடைச்சென் றசுரர்குலங் களைத்துலைத்துந்
தேவர்சிறை தனைமீட்டுத் தெய்வமடப் பிடிமணந்து
மூவர்தொழுந் திருத்தணிகை முதுகிரியி லெழுஞ்சுடரே !

இவை மூன்றுந் தரவு

தணி-

தீராத பவப்பிணியின் றிருக்கனைத்தும் நீகடைக்கண்
பாராத போதொருவர் பாற்றுவது தானுண்டோ
வேராரும் பயிர்வாட்டும் வெங்கோடை விசும்பின்மழை
நீராரப் பெயினன்றி நீங்கிடுமா றெங்ஙனே.

பூமிமுத லண்டமெலாம் பொருந்தியிடுஞ் சராசரங்கள்
நீமனத்தி லொருநிமிட நினைக்கவளர்ந் தோங்கிடுமே
காமருவும் புனற்கறையிற் கருவுயிர்த்துச் சேய்மையுறு
மாமைதன்பார்ப் பைக்கருதி னன்றியது வளராதே.

தருமங்கள் பலசெயினுந் தவந்தான மிகச்செயினு
முருகென்று மொழிந்திலரேல் முத்திநல மிழந்தவரே
பிரமன்சங் கரன்மாயன் பினுந்தேவர் யார்க்குமுனைக்
குருவென்று நான்மறையுங் கூசாமற் கூப்பிடுமே.

இவை ஆறுந்தாழிசை.

உலகொரு நொடியினில் வலம்வரு மயிலினை
அலைகட லொடுமலை கெடவிடு மயிலினை
மணிகணில் கணிலென் வறைதரு கழலினை
பணிமணி வெயில்விரி பலகிரி மருவினை
அடியொடு நடுமுடி வறிவரு மருவினை
பொடியணி யடியவர் புகழ்தரு முருவினை.

இவையாறடியராகம்

குன்றுதோ றாடல்பரங் குன்றலைவா யேரகஞ்சிர்
துன்றுபழ முதிர்சோலை தொகுமாவி னன்குடியாய்த்
தானவரை வேரறுத்துச் சயந்தனுறு துயர்நீக்கி
வானவரைப் புரந்துசசி மங்கிலியந் தந்தளித்தோய்.
நாரணன்வா சவன்பரம னான்முகநால் வெலற்கரிய
சூரனுட றுணித்துமயில் கட்டுவா ரணஞ்செய்தோய்
பொருகாற்றி லலைகருகிற் பூதமிடர் செயுங்கீரன்
முருகாற்றுப் படையியம்ப முன்வந்து தோன்றினையே

மட முனிந்து செந்தமிழை வளர்த்துமலை யத்திருந்த
குடமுனிக்குப் பேரின்பங் கொடுத்ததுநின் றிருவடியே
சுருப்புகழாய் பிறசமயக் கதைகேளா தனுதினமுன்
றிருப்புகழை யுரைப்போர்க்குச் சித்தியெட்டு மெளிதாமே.

இவை ஆறும் இருமடித்தாழிசை

மாலைநீந்துநி வேலையேந்துநி
வாழ்வதாக்குநீ தாழ்வுபோக்குநீ
மறைகளாயினை குறைகள் போயினை
வனநிலாவினை புன்முலாவினை
மதிநிறுத்தினை துதிபொறுத்தனை
மலமறுத்தனை நலமுறுத்தினை.

தொண்டர்கள் புகழ்தரு சுப்பிர மணிய
மண்டில மதிமுக வள்ளி நாயக
யுன்றிரு வடியை யுளந்தனி லிருத்திப்
பன்மலர் தூவிப் பணிகுவன் யானே
இறந்தும் பிறந்து மிருவினைக் கயிற்றில்
யாப்புறு முடலி னாசையைத் துறந்து
மன்பொடு கெழீஇ இன்னருள் புரிந்தும்
மேலாம் வாழ்வு பெற்றவர்
காலாற் பணிப்பதென் கைகளாற் செயலே.

இது சுரிதகம்

**(அ-உரை.)** நீர்கொண்ட சடைமுடியோன்-சிவபெருமான். சரவணம்-சரவணப் பொய்கை; கார்த்திகை—கார்த்திகைப் பெண்டிர் அறுவர். கவுரி—உமாதேவி. தெய்வமடப்பிடி—இந்திரன் மகனாகிய தேவயானை. முதுகிரியில் எழுஞ்சுடர்—முதிய மலையாகிய தணிகைமலையில் விளங்கிச் சுடர் வீசும் முருகப்பெருமான்; திருக்கு—குற்றம், துன்பம். வெங்கோடை—வெம்மை மிகுந்த வேனிற்காலம் கடுமை. சராசரங்கள்—நடப்பனவும் நிற்பனவுமாகிய அறுவகை உயிரினங்கள். பார்ப்பு—குஞ்சுகள். ஆமை மனத்தால் நினைக்க குஞ்சுகள் கருவுயிர்க்கும் கருத ளௌரும். முருகு—முருகக்கடவுள். கூப்பிடும்—கும்பிட்டு வாழ்த்தும், துதிக்கும். அயிலினை—வேற்படையை உடையை.

கழலினை—பாதங்களை உடைய. பலகிரி—பல மலைகள். பொடி—திருநீறு. தானவர்—அசுரர். சயந்தன்—இந்திரன் மகன். சசி—இந்திராணி. சூரன்—பத்மாசூரன். வாரணம்—சேவல். மலயம்—பொதியமலை. மறைகள்—வேதங்கள். புனம்—தினைப்புனம். மலம்—ஆணவம், கன்மம், மாயை என்னும் முக்குற்றங்கள். மண்டிலம்—வட்டம். யாப்புறும்—கட்டுண்டிருக்கும். கெழீஇ—பொருந்தி.

### வெண்பா

வேதாக மங்கள் மிருதிபுரா ணங்களெல்லாம்
தாதா வெனுந்தணிகைச் சண்முகவா—வாதா
பணிகடம்பை யஞ்சும் பரவைநிதம் பத்தாட்
கணிகடம்பை நீங்கு மலர்.

**(அ-உரை)** மருதி—ஸ்மிருதி. வேதவிளக்க நூல்கள். தாதா—வள்ளல். (2)

### கட்டளைக் கலித்துறை

அலரம்பை யேந்து மனங்கற்கு மைத்துன ரந்தணிகை
இலரம்பை மைந்தருக் குத்தூது கெல்லாம் விடும்பொழிற்
பலரம்பை யின்கனி மாங்கனி கோதிடும் பைங்கிளியே
நலரம்பை யாமெங்க ணங்கையும் வாருவ ணன்னெஞ்சமே.

**(அ-உ ரை.)** அலர் அம்பு—மலர்க்கணை. அனங்கன்—மன்மதன். பல் அரம்பையின் கனி—வாழைக்கனி. அரம்பை—எம்முடைய மகள். வாடுவள்—தணிகைப் பெருமானை நினைந்து வாட்டமுறுகின்றாள் ஆதலின் தூது செல்வாய். இது செவிலி தன் மகள் வருத்தங்கண்டு கிள்ளையைத் தூது செல்ல வேண்டும் எனத் தூதுவிடும் அகப்பொருள் துறைப்பாட்டு. (3)

## கழிநெடில் விருத்தம்

நெஞ்சமு ருக்கும் வஞ்சியர் களப
நெடுமுலை யணைதர நினையே
நின்றிருத் தணிகை மலையணை தரற்கு
நித்தலும் நினைத்திடல் வேண்டும்

வஞ்சகம் புரியு மவரலங் கார
வறும்புகழ் வேண்டிலேன் வேண்டும்
வரம்பெறு மருண கிரிநினை முன்னாள்
வழுத்தலங் காரமும் புகழுந்
தஞ்சகப் படைப்பின் றருக்கினா லணைந்துன்
றாமரை மலர்ப்பதம் பணிபாச்
சதுமுகன் சிரங்கள் குழிந்திடப் புடைத்துச்
சகமெலா நொடியினிற் படைத்து
மஞ்சகஞ் சூழுஞ் வேங்கட வரையின்
வந்தக லாதுவிற் றிருந்து
வள்ளியோ னாகி யுள்ளினோர்க் கருளும்
வளளலே வள்ளிநா யகனே.

**(அ-உரை)** வஞ்சியர்—வஞ்சிக்கொடிபோலும் மகளிர். களபம்—நறுமணச்சாந்து. அருணகிரி—திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர். அலங்காரம்—கந்தரலங்காரமாகிய பாமாலை. புகழ்—திருப்புகழ்ப் பாடல். புடைத்து—குட்டி. மஞ்சு—வெண்மேகம். இப்பாட்டினுள் இந்நூலாசிரியர் திருவேங்கட மலையில் விளங்கும் தெய்வம் சுப்பிரமணியக்கடவுளே என்று குறிப்பிடுகின்றார். (4)

சுடறுரு மகத்திரு டிலையு மாறுபோ
லிடரிலை நினைப்பணிந் தேத்து வோர்தமக்
குடலுயிர் விரைமல ருரைய துன்பொருட்
டொடர்பினெங் கணுமுருந் தணிகைத் தோன்றலே.

**(அ-உரை)** சுடர்—ஒளி இடரிலை—துன்பங்கள் இல்லை. (5)

நாயக னாகி நீயிருந் திடவு நாயக
னிலாதவே சையர்போற்
றாயகட் டுதித்து மரித்திடுந் தேவர்
தம்மையான் விரும்பிடத் தகுமோ
சாயகந் துரக்கும் வேடர்கள் புயத்திற்
றமதுகட் சாயகந் துரந்து
தோயக முருக்கு மறத்தியர் பாடல்
தொகுந்தணி காசலச் சுடரே.

**(அ-உரை)** அகட்டுதித்து—வயிற்றின்கண்தோன்றி. மரித்திடும்—இறந்துபோகும். சாயகம்—கணை—அம்பு. மறத்தியர்—குறப்பெண்டிர். (6)

## அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

தோன்றிய வகையுங் காயந்
துலைந்திடு வகையு மாவி
மூன்றெனு மலத்தி னாலே
முழுவதும் யானென் றெண்ணிக்
கான்றசோ றெனவி டுத்தி
காதலை யுலகத் தென்றா
னேன்றசீர்த் தணிகை வெற்பி
னெழில்பெறு குமர வேளே

**(அ-உரை)** மூன்றெனும் மலம்—ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலம். யான்—யான் என்னும் செருக்கு. (7)

## கழிநெடில் விருத்தம்

வேளின் கருப்புச் சிலைமலரே
வேத னெழுதும் தலைப்பொறியே
மீளி நமன்கைப் பாசமே
வேறுவேறு நீங்களெனை
நாளுந் துயர்செய் தலைத்தீர்கள்
நான்போய்த் தணிகை வரையிலிவர்ந்
தாளும் பெருமான் றிருமுன்ன
ரறைவே னெனைவிட் டகல்விரே.

**(அ-உரை)** வேள்—காமவேள், மன்மதன். கருப்புச்சிலை—கரும்புவில். வேதன்—பிரமன். தலைப்பொறி—தலை எழுத்து(விதி). வரையிலிவர்ந்து—மலைமேல் ஏறிச்சென்று. ஆளும்பெருமான்—முருகப்பெருமான். (8)

விர வாகுவை முதலிய வொன்பது
வீரர்க்கு முன்றோன்றல்
பேர வாகுவை யூர்ந்திடு கரிமுகப்
பிள்ளைக்குப் பின்றோன்றல்

ஆர வாகுவை பிரண்டினோ டிரண்டினோன்
அருட்டணி கையினெஞ்சே
சேர வாகுவை யாம்பழி நீங்கிநற்
சிவகதி பெறலாமே.

**(அ-உரை)** வீரவாகு—சிவனருளால் தோன்றிய ஒன்பது வீரர்களுள் முதல்வனாகிய வீரவாகு என்னும் கடவுள். கரிமுகப்பிள்ளை—விநாயகக் கடவுள். ஆரவாகு—நீண்ட கைகள். குவையாம்பழி—குவியலாகச் சேர்ந்துள்ள பாவங்கள். சிவகதி—பிறவாத நிலை. (9)

## மறம்—விருத்தம்

மேலா மரசன் றூதனென
விளம்பு மொருவ யாந்தணிகை
வேலன் றனக்கு வள்ளிதனை
விரும்பிக் கொடுத்த வேடர்காண்
மாலா யெங்கள் குலமகளை
வதுவை பேச நினைவிடுத்த
மன்னன் குருபத் தினியுடனே
மருவுந் தூர்த்தன் றன்குலமோ
சாலா மடந்தை யுருவாகித்
தாழ்ந்த காலி லாமுடவன்
தன்னைக் கூடி யொருகுரங்கு
தனைப்பெற் றெடுத்தோன் சிறுகுலமோ.
வேலா மகத்தி லொருவீர
னிரக் குறைந்த கரமுடையோ
னிழிபாங் குலமோ வெருவாம
லியம்பாய் தியங்கி மயங்காதே.

**(அ—உரை.)** மாலாய்—மயங்கி. வதுவை—திருமணம். குருபத்தினி—தாரை. மன்னன்—சந்திர குலத்தவன். மறம் என்பது கலம்பக உறுப்புக்களில் ஒன்று. ஒரு மன்னர் வேடர்குலமகள் ஒருத்தியை விரும்பி மணம் பேசத் தூதுவரை அனுப்பியவிடத்து மறக்குலத்துவேடன் தன் குலப்பெருமையையும் மன்னனது குலச்சிறுமையையும் கூறித் தனது வீரந்தோன்ற மறுத்துக் கூறுதல். (10)

காதலா யொருமயிலிற் களித்தேறுந்
தணிகைவரைக் கந்தன் யார்க்கு
நாதனே யெனத்தெளிந்த வருணகிரி
நாதனுமுன் னவின்ற பாவை
யோதுவார் திருப்புகழென் றுலகிலுள்ளோ
ரதற்குநிக ருண்டோ மற்றைச்
சாதலார் விண்ணவர்க டம்புகழைத்
திருப்புகழாய்ச் சாற்றி டாரே.

**(அ—உரை.)** யார்க்கும் நாதன்—தேவர்க்கும் மூவர்க்கும் மற்றெல்லார்க்கும் தலைவன். பாவை—பாக்களை, திருப்புகழ்ப் பாக்களை. (11)

சாற்றுங் கோள்தென் றணிகையில்
வேளோன் சரணத்தைப்
போற்றுங் கோள்புது மாமல
ரிட்டுப் புகழ்மின்கள்
பாற்றுங் கோள்நும் பாலினடந்தார்
பசிநோயை
மாற்றுங் கோளுல கத்தினி லோடு
மனமன்றே.

**(அ-உரை)** வேளோன்—முக்க வேளாகிய இறைவன். சரணம்—திருவடி. பாற்றுங்கோள்—(காப்பாற்றுங்கள்) பசி நோயை நீக்குங்கள். (12)

## எழுசீர்க்கழி நெடில் விருத்தம்

அன்றுநில மன்றுபுன லன்றுகன லன்றுவளி
அன்றுவெளி யன்று நவகோள்
துன்றுபுல னன்றுபொறி யன்றுமன மன்றுடரு
வனறுமுயி ரன்று துகடீர்
குன்றுதொறு நின்றுசுரர் சென்றுதொழ வந்தவுணர்
குன்றவயி லொன்று விடுநீ
தென்றணிகை யங்கிரியி னன்றுபர மன்செவிதி
ருந்தமொழி கின்ற பொருளே.

(அ-உ.) நிலம், புனல், கனல், வளி, வெளி-என்று ஐம்பெரும் பூதங்கள், வளி—காற்று. வெளி—ஆகாயம். நவகோள்கள்—ஒன்பது கிரகங்கள். துகடீர்—குற்றம் நீங்கிய. சுரர்—தேவர்கள். செவி திருந்த மொழிகின்ற பொருள்—சிவனுக்குப் பிரணவ மந்திரத்தைக் கூறிய முருகக்கடவுள். (13)

வெண்பா

பொருளுங் குலமும் புவியும் புகழும்
அருளு மழகு மறிவுந்—தெருளுந்
தணிகையா யன்பருளந் தங்குவாய் வைவே
லணிகையா யென்பவர்க்கே யாம்.

(அ-உரை) வைவேல் அணிகையா—கூரிய வேலை ஏந்திய கையை யுடைய முருகனே என்பவர்க்கு பொருள் முதலியவெல்லாம் வாய்க்கும். (14)

தலைவி துன்பந் தலைவர்க்குப் பாங்கி உரைத்தல்
(கட்டளைக் கலித்துறை)

ஆங்கலைக் குங்கலைக் குஞ்சம்ப ராரி யடுகணைக்குங்
கோங்கலைக் குங்குங்கலை யத்தன தாளச்சங் கொண்டுவிடம்
போங்கலைக் குங்கலைக் குங்கணக் கில்லைய் பொருப்பர்கைவிற்
றாங்கலைக் குங்கலை மான்பாய் தணிகைச் சயிலத்தனே.

(அ-உரை.) ஆங்கு அலைக்கும் கலைக்கும்—கடலலைக்கும், திங்களின் கலைக்கும். சம்பராரி—மன்மதன். கணை—மலரம்புகள். கோங்கு அலைக்கும்—கோங்கமுகையினை வருத்தும். குங்கலையத்தனத்தாள்—குங்குமம் பூசிய தனத்தினையுடைய தலைவி. கணக்கில்லை—அளவில்லை. பொருப்பர்—மலைவேடர்கள். கைவிற்கலைக்கும் கலைமான்—கைவில்லால் வெருட்ட வெருண்டோடும் கலைமான்கள். தணிகைச்செல்வன்பால் காதல்கொண்டு வருந்தும் தலைவியின் துன்பத்தை பாங்கி அத்தலைவனிடம் கூறுவதாக அமைந்த அகப்பாட்டுறைப் பாடல். (15)

## சந்த விருத்தம்

சயில மோடியுந் தாழ்சடை நீடியும்
பயிலு மாதவத் தாற்பய னுண்டுகொல்
மயிலுஞ் சேவலுஞ் வாழ்தணி கைப்பரன்
செயலதி யாவுமெ னத்தெளி யார்கட்கே.

(அ-உரை) சயிலம்—மலை பயனுண்டுகொல்—பயனுண்டோ தெளியார்—அறிந்து தெளியமாட்டாதார் —16

## தாழிசை விருத்தம்

கேடி றிருத்தொண் டெனக்களித்தான்
    கிளத்தென் சொலைத்தே னெனக்களித்தா
நாடுங் குருவாம் படிக்குவந்தா
    நாலாம் பதவிதரற்கு வந்தான்
நீடுந் தணிகைக் கருமயில
    னீங்கா தணிகைப் பொருமயிலன்
பாடற் கிசைந்து நடிப்பாரே
    படர்நோய் வாய்மண் ணடிப்பாரே.

(அ-உரை) கிளத்தென்சொலை—கூறுகின்ற என் சொற்களை தேனென—தேன்போல களித்தான்—சுவைத்தான் நாலாம் பதவி—சாயுச்சியம் என்னும் பதவி பொரும் அயிலன்—போரிடும் வேற்படையை உடையவன் நடிப்பார்—சவந்து ஆடுவார் வாய்மண் அடிப்பார்—நோயின் வாயில் மண்ணிட்டு நிரப்புவார் என்றவாறு. இப்பாட்டு இறுதி இரண்டடிக்காக அமைந்த பாட்டு (17)

## ஐயம்—கலித்துறை

பாரோ வமருல கோமல ரோமலை யோபணிக
ளூரோ விடந்தெரிந் தோதற் கரிதுவெய் யோன்கடவுந்
தேரோடும் வீதித் தணிகையஞ் சாரல் சொற்பொழில்வாய்
காரோ குழலயிற் கண்ணோ வெனநிற்கும் காரிகைக்கே.

(அ-உரை) பார்—மண்ணுலகம் அமருலகு (அமரருலகு) தேவலோகம் மலர்—இலக்குமி மலரில் உறைபவளாதலின் மலரோ என்றான் மலை—அர மகளிர் வாழும் மலை பணிகளூர்—நாகலோகம் வெய்யோன்—சூரியன் நடவும்—செலுத்தும் கார்—மேகம் அயில்—ஐயம் என்பது மலைச் சாரலிற் காணும் ஒரு தலைவியைக் கண்டு அவள் அழகு சாயல் முதலியவற்றைக் கண்டு இவள் தெய்வமகளோ மானிட மகளோ என்று தலைவன் ஐயுறும் துறை (18)

## குறுங்கழிநெடில் விருத்தம்

காரிகையா ரெதிர்நோக்க மயிலாடக்
கல்லருவி முழங் காட்டப்
பேரிகைபோன் முகிலார்க்குந் தணிகையாய்
நீ யிவரப் பெற்றி டாயேற்
றூரிகையா லெழுதருநின் னூர்தியினுங்
கடிதுலகைத் துருவி யோடிச்
சாரிகையா மெனத்திரியு மெனதுமனப்
பரிமாவைத் தடுப்பார் யாரே

(அ-உரை) கல்லருவி—மலையினின்று விழும் நீர் அருவி முழவம்—மத்தளமுழக்கம் பேரிகை—பெருமுரசு முகில்—கார்மேகம் ஆர்க்கும்—ஆரவாரம் செய்யும் இவர்தல்—மேலேறிச் செலுத்துதல் ஊர்தி—வாகனம் ஈண்டுமயில் பரிமா—குதிரை இது தலைவி தன் மனத் தடுமாற்றத்தைத் தலைவனிடம் கூறும் துறை. (19)

## வெண்பா

யார்கொ லுலகெல்லா மிமைக்குமுனஞ் சூழ்ந்திட்டான்
யார்கொ லழி யாச்சூர னாவியட்டான்—யார்கொல்
வனக்குறவர் சூழ்தணிகை வாழ்வா னவனே
எனக்குறவு தாய்தந்தை யே

(அ-உரை) கொல்—ஐயப்பொருள்தரும் இடைச்சொல் ஆவி—உயிர் மடியச் செய்தவன் அவனே—அம்முருகப் பெருமானே (20)

## கலித்துறை

தந்தனந் தந்தன மென்றிசை பாடச் சலசமுகைத்
தந்தனந் தந்தன மானார் நடஞ்செய் தணிகைவெற்பிற்
றந்தனந் தந்தன முங்கண்டி லாக் கந்தர் தாளெனக்கே
தந்தனந் தந்தன மென்றா ரினியொரு தாழ்வில்லையே.

(அ—உரை) சலசம்—தாமரை தனந்தந்தன — நகிலாகத்தந்தன தந்தனம்-தம்தனமும் எங்கள் நகிலையும் தந்தோம் தந்தனம் தந்தனம்— கொடுத்தோம் கொடுத்தோம் தாழ்வு—குறைவு (21)

## அளவடி விருத்தம்

இல்லையும் பொருளையு மெமதென் றெண்ணுவிர்
வல்லைவந் திடர்செயு மறலிக்கென் செய்வீர்
செல்லையொன் றியமதிட் டணிகைச் செல்வனை
யொல்லைவந் தனை செயா வுலகின் மாந்தரே

(அ—உரை) இல்லையும்—இல்லாளோடும் மக்களொடும் வாழ்வதையும் பொருளையும்—யற்றுமுள்ள செல்வங்களையும் வல்லை வந்து—விரைவாக வந்து மறலி—எமன் செல்—மேகம் ஒல்லை—உடனே விரைந்து செயா—செய்யாத (22)

## அம்மானை

மாந்தருடன் விண்ணோர் வணங்குதணி காசலனார்
போந்துதலை யோட்டிலிரப் போன்மகன்கா ணம்மானை
போந்துதலை யோட்டிலிரப் போன்மகனே யாமாகில்
காந்திவிடு மாடகப்பொற் காசுண்டோ வம்மானை
கல்லார வெற்படைந்தால் காசரிதோ வம்மானை

(அ-உரை) விண்ணோர்—தேவர்கள் தலை ஓட்டில் இரப்போன்— பிரமன் தலை ஓட்டினை ஏந்தி யாசிக்கும் சிவன் காந்திவிடும்—ஒளி வீசும் ஆடகப் பொன்—உயர்ந்த ஆடகம் என்னும் பெயருடைய பொன் வெற்பு— மலை அம்மானை என்பது ஒரு வகை மகளிர் விளையாட்டு அம்மானைக் காய்களைக் கொண்டு விளையாடுதல் அப்பொழுது ஒருத்தி ஒரு வினாவை

எழுப்ப ஒருத்தி விடை சொல்வதாக அமையும் அகத்துறை புறத்துறைப் பாட்டு. (23)

## நேரடி வெள்ளை விருத்தம்

### வெறி விலக்கு

மானைத் துரத்தா வொருவன் கொலைதா
னேனப் பகையம் புலியே யினிநீர்
கோனைத் தணிகா புரியிற் குலவுந்
தேனைக் கொணாநீர் சிதையுந் துயரே.

**(அ-உரை)** மான்—கலைமான். ஒருவன்—வேடன். பகை அம்புலியே-(இத்தலைவிக்கு) பகை நிலாவே. தேனைக் கொணரீர்—தேனைக் கொண்டு வாருங்கள். சிதையும் துயர்—இவள் துன்பம் நீங்கும்.

வெறி விலக்கு என்பது தலைவியின் தாயும் செவிலியும் அவர் உடம்பு வேறுபாட்டையும் மெலிவையும் கண்டு இது தெய்வக்குற்றமோ என்று எண்ணி வெறியாடிக் குறி சொல்லும் வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்த எண்ணும்போது தோழி அதனை விலக்கி தலைவி மெலிவை நீக்குதற்கு வழி இது என்று கூறுதல். இஃதோர் அகத்துறை. (24)

### வெண்பா

துயரம் படையாவென் றோகையிடத் தேவண்
டயரம் படையாம லாள்வாய்—யுயரு
மணிகா சலம்புமுலை வள்ளிமண வாளா
தணிகா சலத்துறைவேந் தா.

**(அ-உரை)** என்றோகையிடத்தே—என் மகளிடத்தே. வண்டு அயர் அம்பு அடையாமல் ஆள்வாய்—வண்டு மொய்க்கும் மன்மதனுடைய மலர் அம்புகள் இவளை அடையாமல் ஆட்கொள்வாயாக. மணிகாசலம்பும் — மணி மாலையும் காசுமாலையும் திகழும். (25)

### காலம்

## கழிநெடில் விருத்தம்

தாதுவளர் கொன்றையலர் தூற்றுங் காலந்
தமை நினைக்கப் பிறருமலர் தூற்றுங் காலங்

கோதுபட மாமதியு முறுக்குங் காலங்
குலவியயிண் மாமதியு முருக்குங் காலம்
பாதகவேள் வாங்கியவிற் கணம்பெய் காலம்
பைங்குவளை யாகியவிற் கணம்பெய்காலம்
மாதணிகை யிறையகல மயலாங்காலம்
வண்டணிகை யிறையகல மயலாங்காலம்.

**(அ-உரை)** அலர்—மலர். அலர்—மகளிர் தூற்றும் பழிமொழி. மாமதியும்—சிறந்த அறிவும். உருக்கும்—உருகச்செய்யும். மாமதியும்—பெரிய நிலாவும். முருக்குங்காலம்—அழகுசெய்யும் காலம். பாதகவேள்—துன்பம் செய்யும் மன்மதன். விற்கணம்—வில்லின் மலரம்புக் கூட்டம். பைங்குவளை விற்கணம் பெய்காலம்—பசிய குவளை மலராகிய விற்கண் அம்பு பெய்யும் காலம். இறை அகலம் மயல் ஆங்காலம். அகலம்—மார்பு. மயல் மயக்கம். இறை அகல மயல் ஆம்காலம்—தலைவன் நீங்க வருந்தும் காலம். காலம்—வேனிற்காலம். (26)

## இடையூறு கிளத்தல்

### கலித்துறை

காலிலை யாம்பணி காலும ணித்தணி காசலத்தின்
பாலிலை யாறிடைப் பாவைநல் லாயல்குற் பாற்கடனமே
லாலிலை மீதுவை குந்தனங் காட்டினை யாங்கதற்கு
மேலிலை யாங்கயி லாயத் திருக்கை விளக்குகவே.

**(அ-உரை)** காலிலையாம்பணி—கால்களில்லாத பாம்பு. காலும்மணி—கக்கும் நாகரத்தினம். இலையாறு—வழியில்லை. தனங்காட்டினை—மார்பகத்தைக் காட்டி நின்றாய். கயிலாயம்—இமையம் (இமையம் ஈண்டுக் கண்களை உணர்த்தும்) இடையூறு கிளத்தல் என்பது. இயற்கைப் புணர்ச்சியின் தலைவி நாணத்தால் கண்களை பொத்தி நிற்குமிடத்துத் தலைவன் உன் முகத்தைக் கைகள் மறைக்கின்றன. அவற்றை விலக்குக என வேண்டுதல். இதனை நாணிக் கண் புதைத்தல் என்றும் கூறுவர். இடையூறு—துன்பம். கிளத்தல்—சொல்லுதல். (27)

## கலிவிருத்தம்

விளக்கி னொளிக்கு விருப்புறு விட்டில்
வனத்தி னயற்பெண் வனப்பை நினைத்தே
யிளைத்து நிலத்தி னிறக்க வழக்கோ
களித்ததிருத்தணி கைப்பதி யானே.

(அ-உரை) விட்டில்—விட்டில் பூச்சிகள் வனத்தின்—சோலையின் கண். வனப்பை—அழகினை இறக்க—மடிந்து போக. (28)

## ஆசிரிய விருத்தம்

பதியே பிரமம் பசுநீயே பாச முடலாம் பாசத்தா
லுதியா மரியா வுழல்கின்றா யொருவிப் பாசம் பதியாக
மதிநீ யென்று மழியாத வகையி தென்றாரணங்கள்
துதியே பெருகுந் தணிகைவரைத் தோன்று ஞான சூரியனே.

(அ-உரை) பதி—கடவுள் பசு—உயிர் (ஆன்மா) பாசத்தால் உதியா மரியா உழல்கின்றாய்—பாசமென்னும் கட்டினால் பிறந்தும் இறந்தும் துன்புறுகின்றாய். ஒருவி—நீங்கி பதியாக—இறைவனொடு கூடி நிற்க மதி—எண்ணுக ஆரணங்கள்—வேதங்கள். —29

## பாகனொடு கூறல்

### கலித்துறை

சூரியன் தேர்ப்பரி பாகனுன் னாண்மைக்குத் தோற்றனனென்
றியாரு மறிதரப் பங்கனென் றேசுவன் யான்வலவ
நாரியின் கண்ணைப்பு தூவத் தணிகைநன் னாட்டிலிந்தக்
கார்விரைந் தோடுமுன் றேர்விரைந் தோடக் கடாவிடினே

(அ-உரை) பாகன்—தேர் ஓட்டும் சாரதி ஏசுவன்—பழிப்பேன் நாரி—பெண் கார்—மேகம் கடாவிடின்—செலுத்துவாயானால்.

பாகனொடு கூறல் என்பது வினை முற்றி மீண்டு வரும் தலைவன் பாகனை விரைந்து தேரைச் செலுத்துமாறு கூறுதல். (30)

வருங்களநாடி மறுகல்

## அறுசீர் விருத்தம்

கடாவு மணிப்பொற் சவண்சுழற்றிக்
காவற் புனத்தா லோவென்னும்
படாமென் முலையார் வாய்க்குரலும்
பைந்தாட் டினையின் காய்க்குரலும்
விடாது கவர்ந்து தணிகயிற்போய்
மீளுந் தொழிலே மிகுங்கிளிகா
ளுடாதுண் ணாத விவனொடுங்காத்
துறைந்தா ரெங்கே மறைந்தாரே.

**(அ-உரை)** கவண்—பறவை விலங்குகளை விலக்கக் கயிற்றில் வைத்துச் சுழற்றி வீசும் கல்லெறியும் கருவி ஆலோவென்று—ஆலோலம் ஆலோலம் என்று பைந்தாட்டினை—பசியதாள்களையுடைய தினை குரல்—கதிர்கள் உறைந்தார்—தங்கியிருந்தவர். **(31)**

## வண்டுவிடு தூது

### வெண்பா

மறையாக மங்கடொழு மன்னன் றணிகைக
கிறையாக மின்றணைய வேண்டும்—துறையாகச்
செந்தேனுண் ணுந்தேனே சென்றேதூ தங்கவனைத்
தந்தேனென் றாவளிநீ தான்.

**(அ-உரை)** மறை—வேதம். இறையாகம் — தலைவனுடைய மார்பு. அணைய—கூட. செந்தேனுனுந்தேனே—செவ்விய தேனையுண்ணும் வண்டுகளே. தந்தேனென்று—கொண்டு வந்து கொடுத்தேன் என்று. ஆவளி—பறந்து சுழல்வாக. வண்டு விடுதூது என்பது. தலைவனிடம் தன் காதலைச் சொல்லி வருமாறு வண்டினைத் தூது விடுவது. **(32)**

## இடைச்சியைப் பழித்தல்

### கலிப்பா

தானந்தா னென்றவருந் சாற்றுதணி கைக்கிரிமேல்
வானந்தா னென்னுமிடை வல்லியிடை மெல்லியலே
மோனந்தா னாகாதுன் மோர்க்குடம்பின் பாகவிலை
நீ நந்தா தேசொலிள நீர்க்குடமுன் னாம்விலையே.

**(அ—உரை)** வல்லியிடை—கொடிபோன்ற இடை. மோகனந்தா னாகாது—நீ பேசாதிருத்தல் ஆகாது. மோர்க்குடத்தின் விலையைப் பின்பு கூறலாம். முதலாவதாக இளநீர்க்குடம் விலை என்ன என்று கூறு என ஒரு காமுகன் கூறுவதாக அமைந்தப் பாட்டு.

இடைச்சியைப் பழித்தல் என்பது கலம்பகத்தின் உறுப்பாக வரும் ஒரு துறை. இளநீர்க்குடம்—தனத்திற்கு உவமமாகக் கூறப்பட்டது. —*33*

### கலிவிருத்தம்

விலையி லாமணி மேவுந் திருத்தணி
மலையி னான்றனை வஞ்சர்தந் நோயெலாந்
துலையில் யாந்தொழு வோம்பின்பென் பார்கட
லலையி லாப்பொழு தாடநின் றார்களே.

**(அ-உரை)** விளையிலாமணி என்றது—தணிகை முருகக் கடவுளை ஆடநின்றார்கள்—முழுகிநீராட நின்றார்கள். —*34*

### விருத்தம்

### இரதவாதம்

கள்ளுலாம் பூங்குவளை முப்போது
முப்போதுங் கயத்துள் நாளும்
விள்ளுமால் வரைத்தணிகை இறைக்கடிமைச்
சித்தர்யாம் மெய்யாய்க் கேள்நீ

கொள்ளிபோற் சுடும்பசிக்குக் கூழொருகை
வாரப்பா துவலையத்தி
லுள்ள நீள் வரையனைத்து முருக்கை சேர்
கனகமென வுரைப்போம் நாமே.

(அ—உரை) கள் — தேன் கயத்துனாளும் — குளத்தில் தோன்றும், விள்ளும்—கூறப்படும். இறை—கடவுள். கூழ்—உணவு. வாரப்பா—அப்பனே வார்ப்பாயாக. வரையனைத்தும்—மலைகளை எல்லாம். கனகம்—பொன். உரைப்போம்—செய்வோம். இரதவாதம்—இரசவாதம். கல்லையும் இரும்பு முதலியவற்றையும் பொன்னாகச் செய்யும் வித்தை. கலம்பக உறுப்புக்களுள் இது ஒன்று. (35)

## தழைகொடு வினாதலிற் தலைவி கையுறை யேற்றமை பாங்கி தலைமகற் குரைத்தல்

### வெண்பா

உரைத்தா லுயிரெனவே யொற்றினாள் கண்ணில்
வரைத்தா மெனுமுலைமேல் வைத்தா—ளரைத்துருட்டித்
தின்னாளி தன்றிச் செயாததிலைத் தென்றணிகை
மன்னாநின் பூந்தழையெம் மான்,

(அ—உரை) வரை—மலை. செயாதநிலை—செய்யாததில்லை. பூந்தழை—பசுந்தழை, தலைவன் தன் காதலைப் புலப்படுத்தக் கையுறையாகத் தந்த தழையைத் தோழி தலைவியரிடம் அளித்த போது அவள் அதனைப் பெரு விருப்போடு வாங்கி மகிழ்ந்தமையைத் தோழி தலைவனிடம் கூறுவதாக வரும் ஓர் அகப்பொருட்டுறை. கையுறை ஏற்றல்—மகிழ்தல் எனப்படும். (36)

### ஊசல்—எண்சீர் விருத்தம்

மானவரும் வானவரும் வணங்கிப் போற்ற
வரமுதவுந் தணிகைவரை வள்ளல் கூறும்
ஞானமறச் கலமிவரா வுயிர்கள் யாவும்
நாடோறு நனிவிரும்பித் தாஞ்செய் கின்ற

ஈனமுறு மிருவினையாந் திரைகள் வீச
வில்லாறு பவக்கடலூ டலைவ ரென்னப்
பானலென விழிமடவீ ரிரண்டு பாலும்
பாங்கியர்கள் நின்றாட்ட வாடி ரூசல்.

(அ-உரை) மானவர்—ஈண்டு மானுடர் என்னும் பொருளில் நின்றது. ஞானமரக்கலம்—ஞானமாகிய மரக்கலம். இவரா—செலுத்தி. ஈனமுறு இருவினை—தாழ்வைச் செய்யும் இருவினைகள். திரைகள்—அலைகள். பருவக் கடல்—பிறவியாகிய கடல். பானல்—நீலோற்பவமலர். ஆடீர் ஊசல்—உஞ்சலாடுவீர்களாக. ஊசல் என்பது இக்கால வழக்கு. கலம்பக உறுப்புக்களுள் இதுவும் ஒன்று. (17)

## கழிக்கரைப் புலம்பல்

## மடக்குத்தாழிசை விருத்தம்

ஊச லஞ்சல மனத்தியே மிகவு
மூச லஞ்சல மனத்தியே
யொருவி லஞ்செய்கரும் பெண்ணையே
மதனொருவி லஞ்செய்கரும் பெண்ணையே
வாசம் விழ்ந்தமலைத் தென்றலே யிடையின்
வாசம் விழ்ந்தமலைத் தென்றலே
வளைமுன் போக்கிய திருக்கையே கழலும்
வளைமுன் போக்கிய திருக்கையே
பாச மாங்கொடியே நெய்தலே புணரும்
பாச மாங்கொடிய நெய்தலே
பார்ப்பி னாண்டரு மினாரையே யினியென்
பார்ப்பி னாண்டரு மினாரையே
காச ரும்பியவம் புன்னையே பிறர்சொல்
காச ரும்பியவம் புன்னையே
கந்த னோடிவரத் தணிகையே விரகங்
கந்த னோடிவரத் தணிகையே.

(அ-உரை) ஊஞ்சல்—ஊஞ்சல் மனத்தியே, தடுமாற்றமில்லாத மனத்தை உடையவளே! ஒரு வில் அம் செய்கரும் பெண்ணையே—நீங்காத

வயலிடத்துள்ள பனை மரமே. மதன் ஒரு வில் செய்யும் அம் செய் கருமை என்னையே—மன்மதன் ஒரு வில் செய்யும் அம்பின் செயலை எண்ணுவாயாக. திருக்கையே—குற்றத்தையே வளைமுன் போக்கியது இருகையே. கொடிய நெய்தல்—நெய்தல் நிலம். புணரும்பாசமரம் கொடிய நெய்தலே—ஒன்றோ டொன்று பிணைந்த கொடியை உடைய நெய்தல் மலர்க்கொடியே. பார்ப்பின் நாண தரும் மினாரையே—பார்த்தால் நாண நதரும் மின் போன்ற பெண்டிரையே காசரும்பியவம் புன்னையே — காசு போன்ற மலர்கள் அரும்பிய புன்னை மரங்களே. பிறர்சொல்காசருப்பிய வம்பு உன்னை. பிறர் சொல் குற்றம் அரும்பிய புதுமை உன்னையே. கந்தன் ஒடிவரத் தணிகையே—தணிகை மலை. விரகங் கந்தனோடு கூடிவரத் தணிவாயாக. (38)

## அறுங்கழிநெடில் விருத்தம்

தணிகையென் றொருகா லோதிற் சாலோக பதவி யெய்துந்
தணிகையென் றிருகா லோதிற் சாமிப பதவி சாருந்
தணிகையென் றுரைக்கின் முக்காற் சாருப நண்ணுஞ்செய்வேள்
தணிகையென் றுரைக்கி னாற்காற் சாயுச்சிய மடைவர் தாமே.

**(அ-உரை)** ஒரு காலோதின்—ஒருமுறை கூறினால். சாலோகம்—சாமீபம் சாருபம், சாயுச்சியம் என்பன படிப்படியாக இறைவனை அடையும் பதவிகள். **(39)**

## அறுசீர் ஆசிரிய விருத்தம்

தாங்குமயில் வாகனமோ வுமைகுறங்கோ
கந்தமா தனமோ தீமை
நீங்குமறை மின்சிரமோ வல்லிபடர்
திணைப்புனமோ நிலமி தின்னும்
ஓங்கிவளர் பன்னகமோ வென்னகந்தா
னெந்நாளு மொழியா துற்றாய்
தேங்குபுனற் சடைமுடியோ னளித்ததிருத்
தணிகைவரைத் தேவர் தேவே.

**(அ-உரை)** உமை—உமாதேவியார். குறங்கு—துடை. கந்தமாதனம்—ஒரு மலைநாடு. மறையின் சிரம்—வேதத்தின் முடி. வல்லி—குறமாதாவாகிய வள்ளியம்மை. பன்னகம்—பாம்பு. என்னகம்—எனது நெஞ்சம். **(40)**

## கலித்துறை

தேவேந் திரனுதவுந் தெய்வ யானைத் திருக்கணவ
கோவேந் திரவி முடிசேர் தணிகைக் குமரவொரு
மாவேந் திரமென வல்வினை யாலிங்ஙன் வந்துதித்துச்
சாலேந் திரமென நின்திரு நாமத்தைச் சாற்றிலமே.

(அ-உரை) உதவும்—மகளாகப் பெற்று வழங்கும். இரவி முடி—சூரியன உச்சி. (41)

## புயவகுப்பு

இலகார முத்தினொடு மன்னியொளிர் கின்றன
விசைநிடி யெத்திசையு நண்ணிவசை சிந்தின
பலதான வக்கொடியர் வென்னிட முனிந்தன
பயனாகு நற்புலவர் பன்னுகவி யொன்றின
மலர்நில மூப்பொழுது மூன்னுறவ ணிந்தன
மகமேரு வெற்புமுத லெந்நகமு மஞ்சின
தலமேழி ரட்டியுறு மன்னவர்ப ணிந்தன
தணிகாச லக்கடவுள் பன்னிருபு யங்களே.

(அ-உரை) இலகாரப்—இலங்குகின்ற மாலை. விசை—வேகம். நண்ணி—நெருங்கி. தானவக்கொடியர்—அசுரர்களாகிய பொல்லாதவர்கள். வென்னிட—புறமுதுகு கொட்டித் தோற்றோட. முனிந்தன—சினந்தன. பன்னுகவி—கூறிய பாக்கள். மேருவெற்பு—மேருமலை. புயவகுப்பு என்பது தலைவனின் புஜங்களின் வலிமையையும் வெற்றி முதலியவற்றையும் வகுத்துக் கூறும் ஒரு கலம்பக உறுப்பு. (42)

## அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

### மேகத்தோடு கூறல்

புயலினங்கா ளென்மீது பழியிலையா தலினுமக்குப்
புகன்றேன் முன்னர்
வயலினமார் தணிகையைச்சூழ் றுல்லையினி
ரெனக்குமுன மருவு வீரேல்

துயருறுமோர் கொடியிடையாற் பல்மினும்போ
மிருவில்லாற் றுலையு மோர்வில்
பயமுறுமோ ரிரண்டம்பா னீர்கொடுபோ
மம்பெல்லாம் பறிபோ மன்றே.

**(அ-உரை)** புயலினங்கள்—மேகக் கூட்டங்கள். புகன்றேன்—சொன்னேன். வயலினமார்—வயல் கூட்டம் நிறைந்த. மருவுவீரேல்—செல்வீராயின். பலமினும்போம்—பல மின்னல்கள் போய்விடும். இருவில்—கண்களின் புருவமாகிய வில் இரண்டு. தொலையும்—தோற்கும். ஓர்வில்—வானவில்லாகிய ஒரு வில். இரண்டம்பு கண்களாகிய இரண்டு அம்புகள். அம்பெல்லாம் மழைத்தாரைகளாகிய அம்புகளெல்லாம். பறிபோம்—அழியும். மேகத்தோடு கூறல் என்பது தலைவி மேகத்தைப் பார்த்துக் கூறுவதாக அமையும் ஒரு கலம்பக உறுப்பு. (43)

## அறுசீர் ஆசிரிய விருத்தம்

அன்று சுரர்வா தணைதவிர்க்கும்
அசுரர் குலம்வே ரறவடர்க்கும்
குன்று பொடியாம் படிதுளைக்கும்
குகையுட் படுங்கி ரணைவிடுக்கும்
என்றும் அடியார் உளத்திருக்கும்
இரவி சதகோ டியிற்சிறக்கும்
மன்றல் கமழுந் திருத்தணிகை
வரதன் குடங்கைத் தனிவேலே.

**(அ-உரை)** சுரர்—தேவர்கள். வாதனை—துன்பம். அடர்க்கும்—கொல்லும். குன்று—மலை. பொடியாம்படி—துகளாகும் வண்ணம். விடுக்கும்—விடுதலையாக்கும். இரவி—சூரியன். சதகோடி—நூறுகோடி. மன்றல்—நறுமணம், வேல் விருத்தம்—முருகனது வேலாயுதத்தின் ஆற்றலைச் சிறப்பித்துக் கூறும் விருத்தப்பாடல்.

### வெண்பா

வேலேந்துங் கையான் வியன்றணிகை யண்ணலிரு
காலேந்துங் கைகளே கைகளவ—னாலேந்து

நன்னாவே நாவவனை நாடுமன மேமனமென்
றன்னான் மறைபகரு மால்.

( அ-உரை) இருகால்—முருகன் திருவடிகள். நூல்—திருப்புகழ் முதலிய முருகனைப் பற்றிய நூல்கள். பகரும்—கூறும். ஆல்—அசை. (45)

## அகவல்

மாலயன் றொழுதிடு மாலயம் பலவினு
மேவிய சிவனமர் வெள்ளிமால் வரையினும்
மந்தமா ருதந்தவழ் கந்தமா தனமுங்
கருப்பரங் குன்றிடு திருப்பரங் குன்றமும்
நந்திலம் படுபனைச் செந்திலம் பதியுந்
நாவினன் குடியுறு மாவினன் குடியும்
மருவே ரகங்கொளுந் திருவே ரகமுந்
துன்றுதோ றாடல்செய் குன்றுதோ றாடலு
மழைமுதிர் சோலைசூழ் பழமுதிர் சோலையு
மணிகையார்ந் தருவிதாழ் தணிகைமால் வரையு
மற்றுள வரையினும் வாழ்தரு முருகா
வீறு மதிநிக ராறு முகவ
முறிதழ்க் கமல நேரா றிருவிழிப்
பன்னிரு வரைநிகர் பன்னிரு புயவ
கன்னிய ரிருவர் கலந்தணை மார்ப
வறுசமை யத்தரு முறுசமை யத்த
தேவ தேவநின் றிருவடி பணிகுவன்
குழற்சை வலமுங் குலவுகட் குவளையுந்
திருமுகக் கமலமுஞ் செவ்வாய்க் குமுதமுந்
துணைச்செவி வள்ளையுந் துவரிதழ்ப் பவளமுங்
கந்தரச் சங்கமுங் கவின்றவண் முத்தமும்
உந்தியஞ் சுழியும் ஒளிர்தன வெற்பும்
அருகிடைக் கொடியும் அல்குற்பை நாகமும்
முழந்தா ளலவனு முன்கால் வராலும்
பஞ்சடி யாமையும் பரந்திடு மாதர்
அழகெனும் இனியமெய் யாங்கட வழுந்தி

இருவினைத் திரைகள் பொருதூறித் தலைப்ப
விரகக் கொடுவளி யரியெழுந் தெரியக்
காமன் விடுங்கணைக் கராவுமங் காப்பத்
திகைத்திடு வேனை நின செங்கையாற் பற்றி
யெடுத்தருட் புணைசேர்த் திகலற நடாத்தி
யற் கடற்கே செலு மாற்றொடு புணரிய
விக்கரை மருவா தென்னை நா தாந்தமெ
னக்கரை மேல்விடுத் தானா அ
மெய்க்கமலக்கழல் விடுதந் தருளே.

(அ—உரை) மால்—திருமால். அயன்—பிரமன். வெள்ளிமால் வரை—கைலாயமாகிய பெரிய மலை. மந்த மாருதம்—தென்றற்காற்று. கந்தமாதனம்-முருகன் விளங்கும் மலைநாடு. கருப்பரம் குன்றிடும் கருவில்-பிறத்தலைக் குன்றச்செய்யும். நந்து—நத்தைகள். தாவினன்குடி—தா இல்—நன்குடி. தா—குற்றம். இல்—இல்லாத. ஆவினன்குடி—பழநித்தலம். மழை மேகம்—பெய்யும் மழை. அணிகை—அணிதல். வரை—மலைகள். மதிநிகர்—பூரண நிலாவை ஒக்கும். ஆறிருவிழி—பன்னிரண்டு கண்கள். புயனே—புஜங்களை உடையவனே. கன்னியர் இருவர்—வள்ளி தேவயானை. அறுசமயம்—கணாதம் முதலிய ஆறு சமயங்கள், உறும்—வந்து பொருந்தும். குழல் சைவலம்—மயிர்க்கற்றையாகிய பாசி. கட்குவளை—கண்ணாகிய குவளை மலர். வள்ளை—வள்ளைப்பூ. துவரிதழ்—சிவந்த வாயிதழ். கந்தரம்—கழுத்து. கவின்ற—அழகிய. தனவெற்பு—தனங்களாகிய மலை. அலவன்—நண்டு. வரால்—காதல் வேட்கை. வளி—காற்று. அரி—நெருப்பு. அராவும் அங்காப்ப—பாம்பும் வாய்திறக்க. அருட்புணை—அருளாகிய தெப்பம். இகல்—பகை, மாறுபாடு. அற்கடல்—இருட்கடல். நாதாந்தம்—நாதமுடிவு. ஆனாது—நீங்காமல், விடுதந்தருளே—முத்தியாகிய வீட்டினைத் தந்தருள்வாயாக. (46)

## கட்டளைக் கலித்துறை

அருளார் கலியளித் தென்னைமின் னார்கருப் பாசயத்தி
னிருளார் கலிதவிர்த் தாளுந் தணிகை யிறைவர்தந்தே
ருருளார் கலித்த தவரும்வந் தார்தந்த வும்பன்மிசைப்
பொருளார்கல் யாண மூஞ் செய்வதுண் டாநமர் பூங்கொடியே.

(அ-உரை) அருளார்கலி—அருளாகியகடல். மன்னார்—பொருந்தார். இருளார்கலி—இருட்கடல். தவரும்—தவசியரும். உம்பல்—வெள்ளை யானை. கல்யாணம்—திருமணம். (47)

## அறுசீர் ஆசிரிய விருத்தம்

கொடிக்குரம் பையிலுற் றாலுங்
குயிற்குரல் கொடிக்குண் டாமோ
மிடிக்குடம் பான வென்னுண்
மேவினு நினையான் காணேன்
கடிக்குடங் கைசேர் நெல்லிக்
கனியின்ஞா னத்தை வேணி
முடிக்குட முனிவன் காதின்
மொழிதிருத் தணிகை வேந்தே.

(அ-உரை) கொடி—காக்கை. குரம்பை—கூடு. குயிற்குரல்—குயிலின் இனிய குரல் கொடிக்குண்டோ காக்கைக்கு உண்டாமோ? மிடி—வறுமை துன்பம். கடிக்குடங்கை—கடிய உள்ளங்கை. வேணி—சடை. குட முனிவன்—அகத்திய முனிவன். (48)

## அறுசீர் ஆசிரிய விருத்தம்

வேந்த ராக்கும் வறியோரை
விண்ணோ ராக்கும் மண்ணோரைச்
சாந்த ராக்குஞ் சினத்தோரைத்
தவத்தோ ராக்கு மவத்தோரைக்
காந்த மீர்க்கு மிரும்பெனவென்
கருத்தை யடியா ரடிகூட்டுஞ்
சேர்ந்த வாழ்க்கைத் திருத்தணிகைத்
தேவ னணியுந் திருப்பூச்சே.

(அ—உரை) வறியோரை வேந்தராக்கும்—மண்ணோரை விண்ணோராக்கும், சினத்தோரை சாந்தராக்கு—சாந்தர்-பொறுமையுடையோர். அவத்தோரைத் தவத்தோராக்கும். அவம்—வீண். திருப்பூச்சு—திருநீற்றுப்பூச்சி.

## தாழிசை விருத்தம்

பூசலை யுற்றாய் சங்கணி யுற்றாய் பொறியற்றாய்
வாசமு மற்றா யன்ன மு மற்றா மரைமொட்டே
யாசிலெ ழுத்தா றார்தணி கைப்பா லமர்வேட்டுப்
பாசறை யுற்றா ராசையு னக்கோ பகராயே.

**(அ-உரை)** பூசல்—சிறுசண்டை, பகை. சங்கணி—சங்காகியகலன். பொறி—மெய்ம் முதலிய ஐம்பொறிகள். அன்னம்—உணவு. பொறி—வண்டு. அன்னம்—அன்னப்பறவை. அமரர்—போர். (50)

## கலித்துறை

பகலோ டிரவற்ற விடந்தனைப் பாவி யேன்கண்
டிகலார் மலமற் றிருக்கும்வகை யென்று சொல்லா
சகமூரு மென்னெஞ்சப் பரியொடு தாவின் மஞ்ஞை
சுகமூர் தணிகைக் குறமாதினைக் கள்ளி யானே.

**(அ—உரை)** இகலார்மலம்—பகை செய்யும் மும்மலங்கள். என்று—எந்நாள். சகம்—உலகம். பரி—குதிரை. மஞ்சை—மயில். (51)

## இரட்டையாசிரிய விருத்தம்

கள்ளியின் மலரார் கிள்ளிமே லணிவார்
காஞ்சிரங் கனியையார் நுகர்வார்
கரும்பெனத் தழைபேய்க் கரும்பையார் கறிப்பார்
கருங்கட னிரையார் குடிப்பார்
உள்ளினங் கலைபோல் வெள்ளிபொன் மலையாய்
ஓங்குறத் தாங்கிவாழ்ந் திடினும்
உற்றவர்க் குதவா உலோபர்வந் திருவை
உலகிடத் தெவர்விரும் பிடுவார்
கொள்ளியின் மலரு மள்ளிதழ்க் காந்தட்
குலங்களை யருக்கனும் மதியுங்
கோணரா விசைமென் றஞ்சிநா டோறுங்
குலவரை யருகிலே நடக்கும்

தெள்ளிய தணிகைப் பதியினி லடைந்தோர்
தேடியே காசெலா நொடியில்
தெட்டியே பறித்தோர் பட்டிமண் டபத்திற்
சேர்த்திடுஞ் செட்டியா னவனே.

(அ-உரை) ஆர்—யார் கறிப்பார்—மெல்லுவார் ஓங்குற—பெருக்கமுற உலோபர்—கஞ்சமணம் படைத்தவர் திரு—செல்வம் கொள்ளியின் மலரும்—நெருப்பைப் போலப் பூக்கும் அருக்கன்—சூரியன் மதி—சந்திரன் கோளரா—இறையைக் கவ்விக்கொள்ளும் பாம்பு குலவரை—குலமலை செட்டி என்ற முருகப் பிரானை. (52)

கலித்துறை

யானே யவனவன் யானே யெனக்கொண் டிருந்துமவன்
தானே பன் மாயங்கள் செய்தே யொளிக்கிற் றடுப்பவர்யார்
மானேய யாகிய நெஞ்சே தியங்கி மயங்குவ தென்
கானேய் கடம்பன் தணிகா சலன்செயல் கண்டனமே.

(அ-உரை) தியங்கி—திரிபுற்று கான்—காடு கடம்பன்—கடம்ப மரத்தினை உடைய முருகன் கண்டனம்—கண்டோம். (53)

## எண்சீர் ஆசிரிய விருத்தம்

கண்டமலை பயந்தாரும் பண்டமலை பயந்தாருங்
கருந்திணைமா வேற்றாரும் வருந்திணைமா வேற்றாருந்
தண்டலையா ரானாரும் விண்டலையா றானாருந்
தானவர்நா டளியாரும் வானவர்நா டளியாருங்
கொண்டகல்லா ரத்தாரும் விண்டகல்லா ரத்தாருங்
குலவுமுக மாறாரும் புலவுமுக மாறாரும்
புண்டரும் மயிலாரும் மெண்டரும் மயிலாரும்
பொருத்தணிகை வரையாருந் திருத்தணிகை வரையாரே.

(அ-உரை) கண்டு—அமலை பயந்தாரும் அமலை—பார்வதி பயந்தார்—பெற்றவர் பண்டமலை பயந்தாரும்—பண்டங்களாகிய மலையை வழங்கியவரும் கருந்திணைமா ஏற்றாரும்—தினைப்புனத்தில் கரிய

யானையை ஏற்றவரும் வருந்தினைமா வேற்றோரும்—வந்ததினைமாவை ஏற்றாரும். தண்டலையார்—அழகிய குளிர்ந்த சோலை சூழ்ந்த ஊரினர் தண்டலை என்னும் ஊர். மின் தலை ஆறு ஆனாரும்—தலை ஆறு உடையவரும் தானவர்—அசுரர் அளியார்—அருளாதவர் வானவர்—தேவர் அளியார்—தந்து கருணை செய்தவரும் கல்லாரம் ஆறாரும்—விளங்கும் ஆறு முகத்தினை உடையவரும். புலவு முகம் மாறாரும்—போரில் புலால் முக வேலினை மாறாதவரும் புண் தரும் அயலாரும்—புண்ணைச் செய்யும் வேலாயுதத்தினை உடையவரும். எண் தரும் மயிலாரும்—எண்ணந்தரும் மயில் வாகனத்தை உடையவரும். பொருத்து அணிகை வரையாரும்—அணிகளை அணிதலை நீக்காதவரும் திருத்தணிகை வரையாரே—திருத்தணிகை மலையிருப்பவரே. **(54)**

### வெண்பா

வரையாய் தண்ணிகை வரையா யிவளைப்
புரையாகு நீயிரவிற் போந்தாற—கரைகாணா
மின்னிடையும் பொய்யென்பர் வில்வேடர் சேமித்து
வென்னிடையும் பொய்யென்ப ரே.

**(அ—உரை)** வரையாய்—மணந்துகொள்வாயாக திருத்தணிகை மலையாய் இவளை—இம்மங்கையை. புரையாகும்—தீமையாகும். கரை காணா மின்னிடையும்—அளவற்ற மின்னலையும். என்னிடையும்—என்னுடைய மருங்குழலும். பொய் என்பர்—இல்லை என்பர். **(55)**

### வாமம்—விருத்தம்

பொய்யிலறு சமையங்கட் கிறையா னென்னப்
பொருந்தாறு முகம்படைத்த தணிகை வேந்தன்
கையிலகு சத்திசம யத்திற் கேற்கும்
கள்ளுடன்மாங் கிசமெனவே கருதி யன்றோ
செய்யசிவன் றிருப்பணங்கா டகலா துற்றான்
திருமாலுங் குடமுகந்தான் மதன்மீ னேற்றான்
ஐய்னொடு புரந்தரன்வா ரணம்வ ளர்த்தார்
அயனுமரைப் பங்கயமேல் விழைவுற் றானே.

(அ-உரை) பொய் இவறும்—பொய்மையை நீங்கும். இறை—கடவுள். கைமாலகுசத்தி—கையில் விளங்கும் சக்தி. கள்—மது. மாங்கிசம்—புலால். திருப்பனங்காடு—ஒரு தலம். குடமுகந்தான்—குடக்கூத்தாடுதலை உவந்தான். மீன் ஏற்றான்—மீனக்கொடியை ஏற்றான். புரந்தரன்—இந்திரன். அயன்—பிரமன். மரைப்பங்கயம்—தாமரை மலர். விழைவு—விருப்பம்.

வாமம்:— கலம்பக உறுப்புக்களுள் ஒன்று.

வாமம்:— சக்தி மதம். (56)

## கொற்றி

## நெடில் விருத்தம்

உற்றவ ருக்கரு ணற்றணி கைப்பதி யூடேகு
மற்றிவள் கொங்கை நகக்குறி யும்பிறை வகிரும்போல்
நெற்றி யிடுந்திரு நாமமு நீவிநெ டுஞ்சூலங்
கொற்றியெ னுந்திரு நாமமு நீலிகொ ளும்பேரே.

(அ—உரை) உற்றவர்—வந்து வழிபடுவோர். நகக்குறி—நகத்தால் கீறிய வடு. வகிர்—தலை வகிடு. திருநாமம்—நெற்றியிலிடும் வைணவக் குறி. கொற்றி—போரில் வெற்றியை விளைவிப்பவள். கொற்றி என்பது கலம்பக உறுப்புகளுள் ஒன்று. திருநாமம் இட்டுக்கொண்டு சூலம் ஏந்தி ஆடுபவள் கொற்றி எனப்படுவாள். (57)

## பிச்சியார்

## கட்டளைக் கலிப்பா

பேர்பெ ருந்தணி கைப்பொருப் பிச்சியார்
பெண்க ளேச நடந்திடும் பிச்சியார்
ஏர்கொள் வீடெங்கு மேற்பர் பதத்தையே
இசையுங் கஞ்ச மிவர்தம் பதத்தையே
வார்த ருங்குழ லாமஞ்சு வர்க்கமே
வந்த ணைந்தவர்க் காமஞ்சு வர்க்கமே
சீர்கொள் பூதிமெய் யென்றுந் தரிப்பரே
செப்பும் வேடங்கள் மற்றுந் தரிப்பரே.

**(அ-உரை)** பொருப்பிச்சி—மலையில் வாழ்பவள். பிச்சியார்—பிச்சை ஏந்தும் வேடமணிந்தவள். ஏற்பர் பதத்தையே—பிச்சையாக ஏற்பார் சோற்றினை. இசையும் கஞ்சம் இவர்தம் பதத்தையே — இவர்தம் பாதங்களை ஒக்கும் தாமரை. குழல்—கூந்தலிடும் கொண்டை. அஞ்சுவர்க்கம்—ஐவகை வந்து அணைந்தவர் காமம் சுவர்க்கமே. பூதி—திருநீறாகிய விபூதி தரிப்பர்-இட்டுக்கொள்வார். வேடங்கள் மற்றும் தரிப்பர். வேறு வேறு வேடங்களையும்தாங்குவார். பிச்சி என்பது சைவ சமயச்சின்னங்களை அணிந்து பிச்சை ஏற்கும் வேடமிட்டு ஆடுபவளைக் குறிக்கும். கலம்பக உறுப்புகளுள் ஒன்று. 58

## எழுசீர்க் கழிநெடிலடி விருத்தம்

தரித்த சக்க ரத்தை யேல தனது மார்ம தாணியாய்ப்
பொருத்தி மாய னோட வன்று பொருது தாரு கன்றனை
யரைக்க ணத்தி லற்று விழ வங்கை வேலெ றிந்தவன்
திருத்த ணிப்பொ ருப்பி னின்ற தேவ னெங்க டேவனே.

**(அ-உரை)** சக்கரம்—சக்கரப்படை. மதாணி—மார்பணி. மாயன்—திருமால். பொருது—போரிட்டு. தாருகன்—ஓர் அசுரன். இற்றுவீழ—வெட்டுண்டு வீழ. வேல் எறிந்தவன்—முருகப்பிரான். (59)

## சிந்தடி விருத்தம்

தேவராலுந் திருத்தணி கேசனைப்
பூவறாவடி போற்றிப் பணிகலாப்
பாவராலைப் படுகரும் பென்னவே
யாவர்மாதர்த மல்குற் புழைக்கணே.

**(அ-உரை)** பூவறாவடி—மலர்கள் நீங்காத பாதங்கள். பாவர்— பாவமுடையவர். ஆலைப்படுகரும்பு—ஆலையில் இட்ட கரும்பு. ஆவர்—ஆவார்கள்.
(60)

## எண்சீர் ஆசிரிய விருத்தம்

புழைக்கை யானையோர் பார்வை யாக்கிமுன்
போத வேவிடுத் தாத ரத்துடன்
தழைத்த கான்மனும் வல்லி யங்குசத்
தான மாவிரண் டணையக் கண்டுவந்

திழைத்த மாதவத் தெய்வ யானைசே
றெழிற்பு யங்களாந் தறியிற் பூட்டினான்
மழைக்க ணாங்களார் தணிகை வேடனாஞ்
மைத்தி றத்தையார் புகல வல்லரே.

(அ-உரை) புழைக்கை—துளையுடைய துதிக்கை. ஆதரம்—அன்பு தழைத்த—செழித்த. கான்மனும்—(கால்மன்னனும்) காற்றரசன் (வாயுதேவன்) தறி—யானைகட்டும் முளை. புகலவல்லார்—சொல்லவல்லவர். (61)

## அறுசீர்க் கழிநெடிலடி விருத்தம்

வல்லைவரு மொருமாவி லரைமாவின்
மேலிருகால் வைத்தான் மற்றுஞ்
சொல்லுமறை மாலையமர் முந்திரிகை
மேல்வைத்தான் றோகை யென்றும்
வெல்லுறுங்குக் குடமென்று மாங்கதற்குப்
பெயர்புனைந்தான் விரும்பி வாழும்
இல்லமென தகமுமறை முடியுமெழிற்
றணிகையுமாய் இடங்கொண்டானே.

(அ-உரை) வல்லை வரும் ஒருமா — விரைந்து வரும் ஒரு யானை. அரைமா - பிளவுற்ற மாமரம். அரைமாவை அமர் முந்திரிகைமேல் வைத்தான்—பாதி மாமரத்தை அமரும் முந்திரிகை மேல் வைத்தான். தோகை என்றும்—மயில் என்றும், குக்குடமென்றும்—சேவல் என்றும். பெயர் புனைந்தான்—பேர் வைத்தான். எனதகம்—என்நெஞ்சம். மறைமுடி—வேதசிரம். (62)

## வண்டோச்சி மருங்கணைதல்

## கலித்துறை

கொண்ட லுலாவுந் தணிகா சலன்பதங் கூமலர்போல்
வண்டர்க ளேயொரு காரிகை யோதி மயங்குகின்றீர்
துண்டம தாமெல் லினவுஞ் சினந்தலைச் சொல்லுவதென்
கண்டம தாகு மிடையின நீர்தலைக் கணுறுநீனே

**(அ-உரை)** கொண்டல்—மழை மேகம். வண்டர்களே—தேன் வண்டுகளே! ஓதி—கூந்தல். மயங்குகின்றீர்—மொய்க்கின்றீர். வல்லின மெல்லினம் சொல்லுதல்—நயமாகச் சொல்லுதல். கண்டமதாகும்—முறிந்துவிடும். இடை—இடுப்பு. நீர் தலைக்கண் கூறினே—நீயிர் அவள் தலையிடத்தே உற்றால். உங்களுடைய கனந்தாங்காமல் இடை முரிந்து விடும் என்பது கருத்து. வண்டோச்சி மருங்கணைதல் இயற்கைப் புணர்ச்சியின் போது தலைவியை நெருங்க நினைக்கும் தலைவன் அவள் தலையில் மொய்க்கும் வண்டினை ஓச்சுபவன் போல வண்டினிடம் பேசி நெருங்குதல். கலம்பக உறுப்பினுள் இதுவும் ஒன்று **(63)**

## எழுசீர்ச் சந்த விருத்தம்

கண்ணி லார்க ளறுவ ரோர்க யத்தை நாடு மாறுபோ
லெண்ணி லாறு சமயர் தாமு மென்கொ னின்னை யுணர்வதே
வெண்ணி லாமு டித்த வேணி விமல னாரளித்திடும்
பண்ணு லாவு தணிகை யம்ப திக்குள் வாழு முருகனே.

**(அ-உரை)** கண்ணிலார்—குருடர். கயம்—குளம். நாடுமாறு போல்—தேடிச்செல்வது போல. ஆறுசமயர்—கணாதம் முதலிய அறுவகைச் சமயத்தார். என்கொல் நின்னை உணர்வதே. எவ்வாறு உன்னை உணர்வார்கள். வெண்ணிலா முடித்த வேணி விமலன்—நிலவை முடியிலே சூடிய சடையை உடைய சிவனாகிய விமலன். **(64)**

## நெடில் விருத்தம்

முருக னென்று தினைப்புனத்தில்
முதிர்கூன் கிழவ னாகினையே
மொழிய மநாதி சைவனென்று
மூன்னோர் கொக்கை மடித்தனையே
பரமன் மைந்த னென்றுகடற்
பள்ளி மருக னாகினையே
பரையின் முலைப்பா லுண்டுபின்னும்
பன்மீன் முலைப்பா லுண்டனையே

குருவென் றிருந்தும் வானவர்தங்
குருவின் மொழியன் று கந்தனையே
குலமாந் தெய்வ யானையன் றிக்
குறமா தினையு மணந்தனையே
தருவ தன்றி யேற்றறியா
தவனீ கழுநீ ரேற்றனையே
தக்க தோவிங் குனக்கிவைசொற்
றணிகா சலத்தி லறுமுகனே.

(அ-உரை) கிழவனாயினையே—வள்ளியை மணக்கக் கிழவனாகத் தோன்றினையே. கொக்கை மடித்தனையே—கொக்கு—மாமரம். மாமரமாகி நின்ற சூரனை மடியச் செய்தாயே. கடற்பள்ளி—திருப்பாற்கடலிலே பள்ளிகொள்ளும் திருமால். பரை—உமாதேவி. பன்மீன்—கார்த்திகைப் பெண்டிர். வானவர்தங்குரு—வியாழன் (பிருகஸ்பதி) கழுநீர்—செங்கழுநீர் மலர். தக்கதோ—பொருந்துவதோ. (65)

## தாழிசை விருத்தம்

அறுமு கந்தனி லொருமு கந்தனை
யடிய னேற்குற வாக்கிடீர்
அம்ப கம்பனி ரண்டி லொன்றிலென்
னாண வங்கெட நோக்கிடீர்
வெறிகொள் பன்னிரு கையி லொன்றிலென்
வெம்ப வக்கடல் தடுத்திடீர்
விளங்கு மாறுசெவ் வாயி லொன்றினில்
விடு சேர்மொழி கொடுத்திடீர்
செறியு மாறிரு செவியி லொன்றிலென்
செய்தி யாவையுங் கேட்டிடீர்
செய்ய மார்பமோ ராறி லொன்றிலென்
செந்த மிழ்த்தொடை சூட்டிடீர்
தறுகண் வேடர்க ளுதவு மின்கொடி
தனமு மன்பர்கள் மனமுநீள்
தணிகை யங்கிரி முடியு நண்பு
தழைத்த செங்கல்வ ராயரே.

**(அ-உரை)** அம்பகம்—கண்கள். ஆணவம்—ஆணவமலம். நோக்கிடீர்—நோக்குவீராக. வெறி—நறுமணம். பவக்கடல்—பிறவிக்கடல். வீடுசேர் மொழி—முக்தியடையும் வாசகம். செய்தி—எண்ணங்கள். கேட்டிடீர்—கேட்பீராக. செந்தமிழ்த் தொடை—செந்தமிழ்ப் பாமாலை. மின் கொடி—வள்ளி. (66)

## தலைவன் கற்சுரத்தெளிமை செப்பல்

### கலித்துறை

செங்கற் சுடிகை யராவிரு
பாலுந் திருவிளக்காய்க்
கங்குற் பொழுதிந்தக் கற்சுர
நீந்தினன் கன்னியிடைச்
சிங்கத்தைச் சாய்க்கு முலையானைக்
கடுணை செய்திடமா
தங்கத்தைச் சாய்க்கு மரிவாழ்
தணிகையஞ் சாரலினே.

**(அ-உரை)** செங்கற் சிடிகை—மாணிக்கமணி ஒளிவீசும் தலைச்சூட்டு. அரா—நாகப்பாம்பு. கற்சுரம்—கற்கள் நிறைந்த பாலை நிலவழி. இடைச் சிங்கம்—இருப்பாகிய அரிமா. மாதங்கம்—யானை. அரி—சிங்கம். (67)

### வெண்பா

சார்ந்தாரைச் செல்வந் தணவா தருளுமன்பு
தீர்ந்தாரை நல்குரவிற் சேர்விக்குஞ்—சேர்ந்தாரைத்
தாழ்வெய்த வொட்டாத் தணிகா சலத்திலென்றும்
வாழ்தெய் வசிகா மணி.

**(அ—உரை)** தரவாது—நீங்காது, கெடாது. நல்குரவு—வறுமை. சிகாமணி—முடிமணி. (68)

### வஞ்சித்துறை

மணிகா சலருந்
தணிகா சலம்வாழ்
வணிகா சலமோ
துணிகா சலரே.

(அ—உரை) மணிகாசலரும்—இரத்தினங்களும் பொன்னும் விளையும் வணிகாசலமோ—வாணிகமலையோ. (69)

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

காசல ருந்தணி கேசர் திருப்புகழ் கட்டுரை செய்திடுநாள்
வாசவன் முற்பிற தேவர்க டாளுறும் வல்லிபொடித்தலா
னீச வரக்க ரெனுங்கருங் கானக நீறு கலந்தது நாம்
பேசின விப்பொழு தேழ்பிற விக்கடல் பேரற வற்றிடுமே.

(அ-உரை) காசு—ஒளி. கட்டுரை செய்தல்—எடுத்துக் கூறுதல். வாசவன்—தேவன். நீச அரக்கர்—தாழ்ந்த அசுரர்கள். நீறு கலந்தது—சாம்பரானது. (70)

### வெண்பா

வற்றாச் சுனையில் மலராத பைங்கழுநீர்
குற்றா தலரியுங் குமரேசா—கற்றோர்கள்
போற்றுந் தணிகைப் பொருப்பாவென் றீவினைகள்
மாற்றும் வகையோது வாய்.

(அ-உரை) குற்றாது—கொய்யாமல். ஓதுவாய்—கூறுவாயாக. (71)

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

வாயுன் புகழே துதித்திடவு
மனதுன் வடிவே நினைத்திடவுந்
தூய நின்றாள் கரந்தொழவுந்
துணைத்தாள் கோயில் வலம்வரவு

நீயுங் கிவையே யெனக்கருள்வாய்
நிலம்பொன் மாதர் வேண்டிலன்யான்
காயுங் கதிர்கான் மணியருவி
கறங்குந் தணிகைப் பெருமானே.

(அ-உரை) துதித்திடவும்—புகழ்ந்து பாடவும் கரந்தொழவும்—கைகள் கூப்பித் தொழவும், துணைத்தாள்—இரு பாதங்கள் நிலம், பொன் மாதர் வேண்டிலன்—மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்னும் மூன்றையும் வேண்டிலேன் காயும் கதிர்கால் மணி—ஒளிவீசும் இரத்தினங்கள் கறங்கும்—வழ்யும் தணிகை—தணிகைமலை

## விருத்தம்

பெரிய குன்ற மட்டு நெஞ்சென்
கரிய குன்ற மட்டிலாப்
பிறழும் வேல்பி டித்து மென்றன்
பிறவி வேலை நீக்கிடாய்
வரியும் வேத னைத்த டுத்து மாறன்
வேத னைத்தடாய்
வணிக னென் றி ருந்து மென்னுள்
மருவு காசை மாற்றிலாய்
அரியு மஞ்ச வரனு மஞ்ச
அயனு மஞ்ச வும்பரோ(டு)
அண்டர் கோனு மஞ்ச வண்ட
மாயி ரத்தோ டெட்டினுந்
திரியும் வஞ்ச வாணை யேசெ
லுத்து சூர னஞ்சவுழன்
சிறிது கண்கள் கடைசி வந்த
தென்ற ணிகைக் குமரனே.

(அ-உரை) பெரிய குன்றம் அட்டும்—பெரிய குன்றுருவாகிய அசுரனைக் கொன்றும் பிறழும் வேல் பிடித்தும்—பிறழ்கின்ற வேலாயுதத்தைக் கைக்கொண்டும் என்றன் பிறவி வேலை நீக்கிடாய்—எனது பிறவியாகிய கடலை நீக்காதிருக்கின்றாய் வேலை—கடல் வரியும்—எழுதும் வேதனைத்

தடுத்தும்—பிரமனைத் தடை செய்தும். மாரன் வேதனைத் தடாய்—மன்மதன் செய்யும் துன்பத்தைத் தடுக்காமலிருக்கிறாய். என்னுள் மருவு காசை மாற்றிலாய்—என் உள்ளத்தில் சேரும் குற்றங்களை மாற்றாதிருக்கின்றாய். காசு—குற்றம் அரி—திருமால் அரன்—சிவன் அயன்—பிரமன் உம்பர்—தேவர்கள் அண்டர்கோன்—தேவேந்திரன் அஞ்ச—நடுங்கும்படி அண்டம்—உலகம் ஆணை செலுத்தும்—ஆட்சி செய்யும் சூரன்—பத்மாசூரன். அஞ்ச—நடுங்கிச்சாய. கண் சிவந்த—கோபித்த (73)

## கழிநெடில் விருத்தம்

குமரா திருமால் மருகா முருகா கொடியோரைச்
சமரா டியமா மயிலா வயிலா தணிகேசா
அமரா பதிகா வலவா தொலைவா மலமுமன்றே
நமர்கா ளுரையீர் நலமார் கதிநாம் பெறலாமே.

**(அ—உரை)** கொடியோரை—கொடிய அசுரர்களை சமராடிய—போரிட்டு வென்று மயிலா—மயில் வாகனத்தை உடையாய் அயிலா—வேலாயுதத்தை உடையாய் —அமராபதி—இந்திரலோகம் வலவா—வெற்றியுடையவனே தொலைவா மலமுமன்றே—எமது மும்மலத்தையும் தொலைத்திட வருவாயாக என்று நமர்காள்—நம்மவர்களே உரையீர்—வேண்டிக்கொள்ளுங்கள் நலமார் கதி—நன்மையெல்லாம் நிறைந்த பேரின்பநிலை. 74

## நெடில் விருத்தம்

பெற்றாலு மினியொருவ ரெனைத்தணிகை
வரையகத்தே பெறவும் வேண்டு
முற்றாலு மருந்தவங்க ளவ்வரைக்கே
யுறல்வேண்டு முயர்ந்த கல்வி
கற்றாலு மமதுதிருப் புகழுமுதே நாடோறுங்
கற்க வேண்டுஞ்
செத்தாலு மிவ்வுடல மத்தலமீ
துறவேண்டுஞ் சேந்த னாரே.

**(அ-உரை)** பெற்றாலும்—மகவாகப் பெற்றாலும். அத்தலம்—தணிகாசலம். சேர்ந்தனரே—செவ்வேளாகிய முருகக்கடவுளே. (75)

### வெண்பா

சேந்த விரலுகிராற் செவ்வரியாழ் வாசித்துப்
போந்திச்சைகள் பேசும் பொய்ப்பாணா—நாந்தரைமேன்
மட்கலமொப் பாயினோம் வண்டணிகை யூரற்குப்
பொற்கலமொப் பார்க்கே புகல்.

**(அ-உரை)** விரல்—உகிர், விரல் நகங்கள். செவ்வழியாம்—செவ்வழிப்பண்ணமைத்த யாழ். பொய்ப்பாரை—பொய் பேசும் பாணனே. மட்கலம்—மண்பாண்டம். பொற்கலம்—பொன்னாலாகிய குடம் முதலியன. புகல்—சொல்வாயாக. (76)

### கலித்துறை

புகலா யிரவும் பகலுந் தணிகைப் பொருப்பிலெழும்
பகலா யிரமன்ன சேயோன் புகழையிப் பாழ்வயிற்றுக்
கிகலா யிரந்திரந் தெய்ப்பது நீங்கிலை யென்று நல்லோர்
நகலா யிரங்கவு நாண முறாயெந்த நாளுநெஞ்சே.

**(அ—உரை)** தணிகைப் பொருப்பு—தணிகை மலை. பகல்—சூரியன். சேயோன்—முருகன். இகலா—பகையாக. நகலா இரங்கவும்—சிரித்து இரக்கச்செய்யவும். நாண முறாய்—வெட்கமடை யாருக்கிறாய். நாளும்—எப்பொழுதும். (77)

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

நாளே பிரம மென்பாரும் நானே பிரம மென்பாருங்
கோளே பிரம மென்பாருங் குணமே பிரம மென்பாருந்
தாளே யூழைப் பிரமமெனச் சாற்றுவோருந் தணிகைவரை
வேளே பிரம மென்னாமல் வீணே பிறப்பி னுழல்வாரே.

**(அ-உரை)** நாளே—நட்சத்திரங்களே. பிரமம் என்பாரும்—பரம்பொருளாகிய பிரமம் என்று சொல்வாரும். கோளே—நவக்கிரகங்களே. குணம்—முக்குணம். (இராசதம், தாமதம், சாத்விகம்) தாளே—முயற்சியே. ஊழை—விதியை சாற்றுவோர். (78)

## தாழிசை விருத்தம்

உழலுமொரு கொக்கையட்டோர் கொக்கடியி லிருந்தோ
ரொருமயிலை யிவர்ந்தன்றிச் சேவலைக்கைப் பிடித்தார்
அழகியசெம் படன்மகனா யாலைவாய் நின்றார்
ஆரலின்பா லாசைகொண்டோர் பொய்கையிடத் திருந்தார்
குழவியெனப் பொலிந்துகுறிஞ் சிக்கிழவ னானார்
கொடுவேங்கை யாகியொரு குறமானைப் புணர்ந்தார்
தழையுடுக்கும் வேடரொடு மலைகடொறுஞ் சரிந்தார்
சாற்றில்வசை யாந்தணிகைச் சண்முகர்தஞ் செயலே.

**(அ-உரை)** கொக்கையட்டோர்—மாமரமாகி நின்ற சூரனைக் கொன்றழித்தவர். இவர்ந்து—ஊர்ந்து சேவலைக் கைப்பிடித்தார்—சேவற்கொடியைப் பிடித்தவர். செம்படன்—செம்படவன், மீன் பிடிப்பவன் ஆரலின் பால் ஆசை கொண்டு—கார்த்திகை விண்மீன்களின்பால் பற்றுக் கொண்டு பொய்கை—சரவணப்பொய்கை குறிஞ்சிக் கிழவன்—குறிஞ்சி நிலத் தலைவன் வேங்கை—வேங்கை மரம் குறமான்—வள்ளிநாயகி சரிந்தார்—நடந்தார், ஆடினார் சாற்றில் வசையாம்—சொன்னால் வசைமொழியாகும். 79

### வெண்பா

தஞ்செயலே யாவுமெனச் சாற்றித் தணிகையிறை
நஞ்செயலைப் போக்கி நலமளித்தான்—நெஞ்சமே
என்னோ வுலகத்தில் யானெனதென் றேயின்னு
மன்னோ இடந்தழிகு வாய்.

**(அ-உரை)** யான் எனது என்பது ஆணவமலமும். மாயாமலமும் இடந்தழிகுவாய்—வீணே கிடந்து அழிகின்றாய். 80

### விருத்தம்

ஆயவென் னுளமாய் கோயிலின் மருவு
மருட்டனி காசல வமரர்
நாயக சிரமோ ராறுடை யார்க்கு
நற்சிர மைந்தினோ னுயரில்

தூயவன் அவனில் நாற்சிர முடைய
சுருதிவா னவனுயர் குவனால்
மாயையா நுலகத் தோர்சிரத் தவரு
மற்றவர்க் குயர்ச்சியா குவரே.

(அ-உரை) சிரமோரா றுடையோர் — ஆறுமுகப்பெருமான். நாற்சிரம் ஐந்தினோன் — சிவபெருமான் அவனில் — அவனைவிட நற்சிரமுடைய சுருதி வானவன் — நான்கு தலைகளையுடைய வேதியனாகிய பிரமன். மாயையால் உலகம் — மாயையால் நிறைந்த இவ்வுலகம். ஓர் சிரந்தவர் — ஒருதலையை யுடைய மானிடர் 81

## சந்த விருத்தம்

ஆகு வாகன னோடொரு மாங்கனிக்
கன்றம ராடியநா
ளேக நாயகனிவ்வுல கைச்சுழன்
றிக்கண முன்வருவோர்க்
கீகு வேன்கனி யென்னலு மேமயி
லேறி யிமைப் பொழுதில்
வேக மாய்வரு நின்கழ றந்தருள்
மெய்த்தணி காசலனே.

(அ—உரை) ஆகுவாகனன் — மூஷிக வாகனனாகிய விநாயகன் அமராடிய — சண்டையிட்ட ஏகநாயகன் — சிவபெருமான் இவ்வுலகைச் சுழன்று — இவ்வுலகத்தைச் சுற்றி ஈகுவேன் — தருவேன் கனி — மாம்பழம் கழல் தந்தருள் — அடியிணை அருள் தருவாயாக. (82)

## விருத்தம்

காசி கரஞ்சிமுத லாந்த லங்கண்மிகு
காதல் கொண்டுநட மேருகடி
மீச னார்கயிலை வாச னார்ந கையி
லெழில்கொண் முப்புர மழிந்ததால்

தேசு லாந்தணிகை வாச னார்முருகர்
செய்ய வாயிலிள முறுவலான்
மாசு லாவியிடு மெனது முப்புரமும்
வலிய ழிந்திமையின் மாயுமே,

(அ-உரை) காஞ்சி—காஞ்சிபுரம். தேசுலாந் தணிகை—ஒளிவிளங்கும் தணிகைமலை. இளமுறுவல்—புன் சிரிப்பு. எனது முப்புரம்—என்னைப் பற்றியுள்ள மும்மலங்கள். இமையின்—இமைப்பொழுதின் கண். (83)

## சந்த விருத்தம்

மேகஞ் சூழ்தணி காசலர் வீதிமேவும தங்கிதன்
பாக னாகிய செஞ்சொலாற் பண்ம றந்தனர் விஞ்சைய
ராகு மாடலி னானட மரம்பை தப்பினள் சக்கர
வாக மாமுலை யாற்றுற வைத்து றந்தனர் முனிவரே.

(அ—உரை) மதங்கி—முழவின் தாளத்திற்கு ஏற்படும் மதங்கள் குலப்பெண். பாகன்—பக்கத்தவன் (கணவன்) விஞ்சையர் விச்சாதர லோகத்தினர் ஆடலினால் நடம் அரம்பை தப்பினள்—ரம்பை தாளம் தப்பினாள் சக்கரவாகம்—இசைப்பறவை துறவு—துறவொழுக்கம் (84)

## தாழிசை விருத்தம்

முனிவோர்தொழுந் தணிகாசலர் முன்பேகுதுமென்றே
மொழிந்தேதெழுந் தனனங்கதன் முன்பேவினைமலைதா
னினியேதர ணயில்கொன்றிடு மென்றேயழிந் ததுவா
லிவ்வாறு பிறப்பாங்கட லேமுங்கிழிந் ததுபின்
னுனிமூலம லச்சூர்மர மோங்குக்கிளை யுடனே
யொடிந்தேவிழுந் ததுமற்றதற் கொருநற்றுணை
தனிமாயையின் வலிசிந்தின நமர்கா ளவனகரிற்
றங்கா தலி னடைவார்செயல் சாற்றற்கெளி தாமே.

(அ—உரை) முன்பேகுதுமென்றே — முன்னதாகச்செல்வோமென்று அங்கதன் முன்பு—அங்கே அதற்கு முன்பாக வினைமலைதான்—ஊழ்வினையாகமலை. நனியேது—மிகுதல் ஏது அரண் அயில் கொன்றிடும்—

அப்பாதிலை முருகனது வேல் கொன்றுவிடும். இழிந்தது—நீங்கியது இவ்வாறு பிறப்பாகிய கடல் ஏழும் நீங்கியது. மூலமலச்சூர்மரம் தூங்கும் கிளையுடனே ஒடிந்தே விழுந்தது—மூல மலமாகிய ஆணவமலம் என்னும் மலம் கன்மம், மாயை என்னும் கிளைகளுடன் ஒடிந்து விழுந்தது. தனி மாயையின் வலி சிந்தின—தனித்த மாயா மலத்தின் வலிமை நீங்கின. அவன் நகரில்—முருகனுடைய நகரத்தில். காதலின் அடைவார்—பக்தியோடு செல்ப வர் செயல் சொல்லுதற்கு எளிதாகுமோ? (85)

### வஞ்சித்துறை

தாமதங்க டவிர்ந்துநின்
னாமமென்று நவின்றிடற்
கோமெனும் பொருளோதிடா
யேழுறுந்தணி கேசனே

**(அ-உரை)** தாமதங்கள் தவிர்ந்து—காலந்தாழ்தலைவிட்டு, நாமம்—திருப்பெயர் நவின்றிட—சொல்ல ஓம் என்னும் பொருள் ஓதுவாயாக. ஏழுறும் தணிகேசனே—இன்பந்தந்து பாதுகாப்பான் தணிகை ஈசன். (86)

### வெண்பா

நேற்றிருந்தா ரின்றைக்கு நீறான ரென்னுமறம்
பார்த்துமுடன் மிதாசைப் பட்டாயே—தூர்த்தநெஞ்சே
யென்று தணிகேச னிருகழற்கன் பாகுவையோ
நின்றெனக்குச் சற்றுரைசெய் நீ

**(அ-உரை)** நீறானார்—மடிந்து சாம்பரானார்கள் தூர்த்த நெஞ்சே—சுடுதலைச் செய்யும் நெஞ்சமே சற்றுரை செய் நீ—சிறிதே சொல்வாயாக (87)

### விருத்தம்

நீயுமொரு விண்மகளை மணம்புரிந்த
செயலறிந்தே னின்பி தாமுன்
போயொருவிண் மகளைமணம் புரிந்ததனா லஃதன்றிப்
பொருப்ப றின்ற

நாயகியாம் வள்ளிதனை மணந்தனைநீ யவனுமொரு
நகம தாமென்
றாயைமணம் புரிதலினாற் றந்தையைப்போ லுனக்குமிரு
தாரம் வாய்த்த
தாயறு மீன்முலையுண் டொருகுளத்தில்
வளர்தணிகை யமர ரேறே.

(அ-உரை) விண்மகள் — தேவமகள். (தெய்வயானை) பொருப்பரீன்ற — மலைவாழும் வேடர்கள் பெற்ற. அவனும் — நின் பிதாவாகிய சிவனும். நகம் — மலை. ஆயை — தாயாகிய பார்வதியை. வாய்த்தது — அமைய நேர்ந்தது. ஆறுமீன் — கார்த்திகை விண்மீன்கள். ஒருகுளம் — சரவணப் பொய்கை. (88)

## எழுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

ஏறாகி மாதரெழில்கண்டு கூடு
மிடமெங்கு நாடி யுழலா
வேறாகி யுன்ற னடியா ரினத்தை
விழைவேனை ஆள்வ திலையோ
மாறாகி மந்தி மரமேறி யந்தி
மதிவாங்கி யோங்கு பலவின்
றாறார் பழங்கள் சுளைகீன் றருந்து
தணிகா சலத்தி னிறையே.

(அ-உரை) ஆண் மகனாகி. நாடியுழலா — தேடித்திரிந்து. மந்தி — பெண் குரங்கு. அந்திமதி — பிறைச்சந்திரன். பலவின் — பலாமரத்தின் கண். தாறு — பழத்தாறு. சுளைகீன்றருந்தும் — பலாச்சுளையைப் பிளந்து அருந்தும்.

## கலித்துறை

கடக்குஞ் சரறிக ரென்மன தண்டங் கடந்திமைப்பி
னடக்குஞ் சரமென நில்லா நிறுத்தவு நானறியே
னடக்குஞ் சரச மெனக்குரை யாய்புக ழட்டதிக்கு
நடக்குஞ் சரவண மன்னா தணிகைநன் னாட்டினனே.

(அ-உரை) கடக்குஞ் சரநிகர் என்மனது—மதம் பொருந்திய யானை ஒக்கும் என் நெஞ்சு. அண்டங்கடந்து—உலகத்தைக் கடந்து. இமைப் பின் நடக்கும்—இமைப்பொழுதில் நடந்து செல்லும். சரமென—அம்பு போல. நானறியேன்—நான் அறியமாட்டேன். நடக்கும் சரசம்—இயல பாக நடக்கும் முறையை. அட்டதிக்கும்—எட்டுத்திசைகளிலும் நடக் கும்—விரிந்து செல்லும். சரவண மன்னா—சரவணப் பொய்கையில் உதித்த மன்னவனே. (90)

## சித்து—நெடில் விருத்தம்

நாடருநீள மலைகளைப் பிசைந்து நுகர்ந்திடுவோம்
நன்றெழு வாரியுங் கரகம்பெய்து குடித்திடுவோம்
நீடு மெழுவகை லோகங்களைத் தூக்கி நிறுப்போம்
நிலத்தையு மோரடி யாக்கிநிலாக் கலையைத் தரிப்போம்
பாடுறு வேதனைக் கமலக் கண்ண னாக்கிடுவோம்
பன்னரி யைப்பரி யாகப் படைப்போ மிவ்வுலகில்
தேடருஞ் சித்தணி கைவரைச் செவ்வே டன்னருளால்
சிவனைநொடித் தான்மலையிற் றெளிவிப போறாமே.

(அ-உரை) நீளமலை—நீண்ட மலைகளை. நுகர்ந்திடுவோம்—உண்போம். வாரியும்—கடலையும். கரகம் பெய்து குடித்திடுவோம்—கையில் வைத்து அருந்திடுவோம். எழுவகை லோகம்—ஏழு உலகம். தூக்கி நிறுப்போம்—தூக்கி எடை போடுவோம். தரிப்போம்—சூடிக்கொள் வோம். வேதனை—பிரமானை. கமலக்கண்ணன்—திருமால். பன்ன ரியை—பல நரிகளை. பரியாகப் படைப்போம்—குதிரைகளாகச் செய்துவிடு வோம். நொடித்தான் மலை—சிவபெருமான் நடனமாடும் மலை. சித்து—சித்தர்களில் திறங்களைக் கூறுவது. கலம்பக உறுப்புகளுள் ஒன்று. (91)

## கழிநெடில் விருத்தம்

தெளியாப் புனலைத் தேற்றுவித்தாற்
றெளிய வுரைக்கு மாறதுபோல்
விளியா தெனைச்சூ ழாணவத்தை
விளியக் கடைக்கண் சிறிதளித்தான்

வளியா ருலக முன்றினுந்தான்
மகிமை முகிழ்ப்ப வைகறொறு
நளியார் குவளை முன்றலரு
நகத்தான் றணிகை யகத்தானே

**(அ-உரை)** தெளியாப்புனல்—கலங்கியிருக்கு நீர் தேற்றுவித்து—தேற்றாமரத்தின் விதை விளியாது—மடியாமல் விளிய—சாவ கடைக்கண் சிறிதளித்தான—கண்ணோடி அருள் புரிந்தான் விளியாருலகம்—காற்றுச் சூழ்ந்து நிறைந்த இவ்வுலகம். வைகறொறு—வைகல்தொறும்—நாள்தோறும். நளி—செறிவு குவளை—குவளை மலர் நகத்தான்—மலையினான்.
—92

## அளவடி விருத்தம்

அகமலர விழியிரண்டு மருவிசொரி தரநினைது
முகமலர்ரா மூவிரண்டு மொழிந்துருகும் படியருளாய்
நகமலருங் கயிலைதனை நற்கீரற் கன்றளித்துச்
சகமலரும் புகழ்படைந்த தணிகைவரைக் குருபரனே.

**(அ-உரை)** அருவி சொரிதர— அருவிபோல ஆனந்தக் கண்ணீர்வழிய நகமலரும்—மலையில் மலர்ந்து விளங்கும். சகம்—உலகம். (93)

## நெடில் விருத்தம்

குருபரனி தாருகனை யடுதலினாற்
சக்கரங்கைக் கொண்டான் மாயன்
வரமுறுமோர் வெண்கரியை யளித்ததனாற்
பெண்கரியை வலாரி யீந்தான்
பிரமனைமுன் சிறைசெயலாற் பரமனுந் தாழ்ந்
துபதேசம் பெற்றானின்போ
லொருவருநே ரிலைநினக்குத் திரிகூட
மாந்தணிகை யோங்க லானே.

**(அ-உரை)** தாருகன்—தாருகாசுரன். சக்கரம்—சக்கராயுதம் மாயன்—திருமால். வெண்கரி—வெள்ளை யானை. பெண்கரி—தெய்வ

யானையாகிய பெண் யானை. வலாரி—தேவேந்திரன். நிகரிலை—ஒப்பில்லை. தணிகையோங்கல்—தணிகை மலை. (94)

## கலித்துறை

ஓங்கா ரத்திற் பிறர்தீங்கை நாளு முரைத் தெனது
தீங்கா யிரமுங் கரந்தேனை யாண்டனன றென்றணிகை
நீங்காத வேல னிஃதறிந் தென்றனை நீடுலகிற்
பாங்கார் குறத்தித் திருடனென் றேசும் பயனறிந்தே.

(அ-உரை) ஓங்காரம்—அகங்காரம். கரந்தேனை—மறைத்தேனை. பாங்கார் குறத்தி—பக்கத்தில் இருக்கும் வள்ளி நாயகி. ஏசும் - பழிக்கும். பயனறிந்து—பயன்பாட்டினை நினைந்து. (95)

## சிந்தடி விருத்தம்

பயன்பெறுமு வுலகினிலா வழகுற் றாலும்
பரமனுதற் கட்டீயா லருவ மானாய்
நயந்திடுசா பங்கருப்புப் பூவம் பேந்தி
நாணமிகுத்த வண்டர்குண மடுத்து நின்றாய்
உயர்ந்துபிடித் திடுந்துவச மீன மாகி
உறுபடைபெண் கூட்ட மதா மதனா னீதான்
வியர்ந்ததிருத் தணிகைவரைச் செவ்வே ளைப்போல்
மேலாகாய் வேளெனும்பேர் படைத்து மாதோ.

(அ-உரை) அழகுற்றாலும்—அழகுபெற்றிருந்தாலும். பரமன்—சிவபெருமான். நுதற்கட்டீயால் அருவமானாய்—நெற்றிக்கண் எழுப்பிய நெருப்பால் உருவம் அழிந்து அருவமானாய். நெற்றிக்கண் எழுப்பிய நெருப்பால் உருவம் அழிந்து அருவமானாய். சாபம்—வில். புருவமேந்தி—மலரம்புகளை ஏந்தி. நாண்—கயிறு. வண்டர்—வண்டு. துவசம்—கொடி. உறுபடை—பெரிய சேனை. மன்மதனே நீ வேள் என்னும் பெயர் படைத்திருந்தாலும் செவ்வேளைப்போல மேலவனாகமாட்டாய். (96)

### வெண்பா

மாதரையு மாதரையு மாதரையும் வேண்டி நும்போ
லாதரையும் பாடு மவப்புலவீர்—பூதரையாள்
சேயாந் தணிகைவரைச் செவ்வேளைப் பாடிலென்று
மாயாத செல்வமருள் வான்.

(அ-உரை) மாதரையும்—பெரிய நிலத்தையும். மாதரையும்—மகளிரையும். மாதரையும்—அழகையும். வேண்டி—பெற விரும்பி. நும்போல் ஆதரை—உம்மைப் போன்ற சாமான்யரை அனுப்புவீர். வீண் புலவர்களே! பூதரையாள் சேய்—பூமிதேவியாகிய உமையம்மையின் மகனாகிய முருகன். பாடில்—பாடித்துதித்தல். மாயாத—அழியாத செல்வம். அருள்வான—அழிவில்லாத செல்வத்தை வழங்குவான். (97)

### கலித்துறை

வானமளந்தது மாயோன் றிருவடி மாயனுந்தித்
தான மளந்தது நான்முகன் சேவடித் தாழ்புவியோ
மேன மளந்தது வெள்ளிவெற் போனடி யேனல்வளர்
கான மளந்தது தென்றணி காசலன் காலடியே.

(அ-உரை) வானமளந்தது மாயன் திருவடி—வானத்தை ஓரடியால் அளந்தது வாமனனாகிய திருமாலின் திருவடி. உந்தித்தானம்—வயிறாகிய இடம். நான்முகன்—பிரமன். தாழ்புவி—பாதாள உலகம். ஏனம்—வராகம், பன்றி. வெள்ளி வெற்போன்—சிவபெருமான். ஏனல்வளர் கானம்—திணைவிளையும் புனம். தணிகாசலன் காலடி—தணிகையில் விளங்கும் முருகப்பெருமான் திருவடி. (98)

### மருட்பா

அடிவண் டறைபயிலு மங்கண் மைக் கும்பூ
முடிவண் டறைகுழலின் மொய்க்கும் வடிவநிழல்
காட்டு மாத லிற்றணிகை
நாட்டில் வாழ்தரு நங்கைமற் றிவளே.

(அ-உரை) அடிவணை நறை பயிலும்—பாதங்கள் நிலத்திலே படிந்துள்ளன. ஆங்கண் இமைக்கும்—அழகிய கண்கள் இமைத்தலைச் செய்யும். பூமுடி—பூக்கள் முடியில் உள்ளன. வண்டறை குழலின் மொய்க்கும்—கூந்தலில் வண்டுகள் மொய்க்கும். வடிவநிழல் காட்டும்—வடிவ நிழல் சாய்ந்து காட்டும். ஆதலினால் இவள் மானிட மகளே எனத் தலைவன் ஐயந்தீர்த்தது. இது துணிவு என்னும் அகப்பொருள் துறை. (99)

## நெடில் விருத்தம்

ஏறும் புகழ்சேர் தென்றணி கைக்கோ னிருதாளுங்
கூறும் பெரியோர் சேவடி நெஞ்சு குறித்திட்டோர்
வீறுங் கமலத் தந்தண னறியா வீடெய்தி
நீறும் படிநீ வினையின கன்றிடு நீராரே.

(அ-உரை) ஏறும் புகழ்—ஓங்கும் புகழ். வீறும் கமலத்து. அந்தணன் பிரமன். வீடு—முத்திவீடு. நீறும் படித் தீவினை யகன்றிடும் சாம்பராய்ப் போகும்படி பழவினைகள் அகன்றுவிடும். நீரார்—தன்மையராவர். (100)

தணிகைக் கலம்பகம் முற்றிற்று.

# செய்யுள் முதற்குறிப்பு


| | | பாட்டு எண் | பக்க எண் |
|---|---|---|---|
| **அ** | | | |
| அகமலர | ... | 93 | 45 |
| அடிவண்டரை | ... | 99 | 47 |
| அருளார் கலியளித் | ... | 47 | 24 |
| அலரம்பை | ... | 3 | 4 |
| அறுமுகந்தனி | ... | 66 | 33 |
| அன்றுசுரர் | ... | 44 | 22 |
| அன்று நிலமன்று | ... | 13 | 8 |
| **ஆ** | | | |
| ஆகுவகன | ... | 82 | 40 |
| ஆங்கலைக் | ... | 15 | 9 |
| ஆய்வென் | ... | 81 | 39 |
| **இ** | | | |
| இல்லையும் | ... | 22 | 12 |
| இலகார முத்தினொடு | ... | 42 | 21 |
| **உ** | | | |
| உரைத்தாலுயிரெனவே | ... | 36 | 18 |
| உழலுமொரு | ... | 79 | 39 |
| உற்றவருக்கரு | ... | 57 | 29 |
| **ஊ** | | | |
| ஊசலஞ்சல | ... | 38 | 19 |
| **ஏ** | | | |
| ஏறாகி | ... | 89 | 43 |
| ஏறும் | ... | 100 | 48 |

| | | பாட்டு எண் | பக்க எண் |
|---|---|---|---|
| **ஓ** | | | |
| ஓங்காரத்திற் | ... | 95 | 46 |
| **க** | | | |
| கடக்குஞ் | ... | 90 | 43 |
| கடாவுமணிப்பொற் | ... | 31 | 16 |
| கண்டமலை | ... | 54 | 27 |
| கண்ணிலார்களறுவ | ... | 64 | 32 |
| கள்ளியின் | ... | 52 | 26 |
| கள்ளுலாம்பூங்குவளை | ... | 25 | 17 |
| **கா** | | | |
| காசலருந் | ... | 70 | 35 |
| காசிகாஞ்சி | ... | 83 | 40 |
| காதலாயொரு | ... | 11 | 8 |
| காரிகையாரெதிர் | ... | 19 | 11 |
| காலிலையாம்பணி | ... | 27 | 14 |
| **கு** | | | |
| குமரா | .. | 74 | 37 |
| குருபரனீ | ... | 94 | 45 |
| **கே** | | | |
| கேடிறிருத்தொண்டைகை | ... | 17 | 10 |
| **கொ** | | | |
| கொடிக்குரம்பை | ... | 48 | 25 |
| கொண்டலுலாவுந் | ... | 63 | 31 |
| **ச** | | | |
| சயிலமோடியுந் | ... | 16 | 10 |
| **சா** | | | |
| சார்ந்தாரை | ... | 68 | 34 |
| சாற்றுங்கோள் | ... | 12 | 8 |

| | | பாட்டு எண் | பக்க எண் |
|---|---|---|---|
| **சு** | | | |
| சுடருறு | ... | 5 | 5 |
| **சூ** | | | |
| சூரியன் தேர்ப்பரி | ... | 30 | 15 |
| **செ** | | | |
| செங்கற்கடிகை | ... | 67 | 34 |
| **சே** | | | |
| சேந்த | ... | 76 | 38 |
| **த** | | | |
| தஞ்செயலே | ... | 80 | 39 |
| தணிகையென்றொரு | ... | 39 | 20 |
| தந்தனந்தந்தன | ... | 21 | 12 |
| தரித்தசக்கரத்தை | ... | 59 | 30 |
| **தா** | | | |
| தாங்குமயில் | ... | 40 | 30 |
| தாதுவளர் | ... | 26 | 13 |
| தாமதங்க | ... | 86 | 42 |
| தானந்தானென்றவருந் | ... | 33 | 17 |
| **து** | | | |
| துயரம்படையாவென் | ... | 25 | 13 |
| **தெ** | | | |
| தெளியாப்புனலைத் | ... | 92 | 44 |
| **தே** | | | |
| தேவராலுந் | ... | 60 | 30 |
| தேவேந்திரனுதவுந் | ... | 41 | 21 |
| **தோ** | | | |
| தோன்றிய | ... | 7 | 6 |

| | | பாட்டு எண் | பக்க எண் |
|---|---|---|---|
| **ந** | | | |
| நலம்பகமுன் | ... | 1 | 1 |
| **நா** | | | |
| நாடருநீள | ... | 91 | 44 |
| நாயகனாகி | ... | 6 | 5 |
| நாளேபிரம | ... | 78 | 38 |
| **நீ** | | | |
| நீயுமொரு | ... | 88 | 42 |
| நீர்கொண்ட | ... | 1 | 1 |
| **நெ** | | | |
| நெஞ்சமுருக்கும் | ... | 4 | 1 |
| **நே** | | | |
| நேற்றிருந்தா | ... | 87 | 42 |
| **ப** | | | |
| பகலோடிரவற்ற | ... | 51 | 26 |
| பதியே பிரமம் | ... | 29 | 15 |
| பயன்பெறுமுவல | ... | 96 | 46 |
| **பா** | | | |
| பாரோவமருல | ... | 18 | 10 |
| **பு** | | | |
| புகலாயிரவும் | ... | 77 | 38 |
| புயலினங்காளென் | ... | 43 | 21 |
| புழைக்கை | ... | 61 | 30 |
| **பூ** | | | |
| பூசலையுற்றரிய் | ... | 50 | 26 |

| | | பாட்டு எண் | பக்க எண் |
|---|---|---|---|
| **பெ** | | | |
| பெரிய | ... | 73 | 36 |
| பெற்றாலு | ... | 75 | 37 |
| **பே** | | | |
| பேர்பெருந்தணிகைப் | ... | 58 | 29 |
| **பொ** | | | |
| பொய்யிலறு | ... | 56 | 28 |
| பொருளுங் | ... | 14 | 9 |
| **ம** | | | |
| மணிகா | ... | 69 | 35 |
| மறையாக | ... | 32 | 16 |
| **மா** | | | |
| மாணவரும், வானவரும் | ... | 37 | 18 |
| மாதரையு | ... | 97 | 47 |
| மாந்தருடன் | ... | 23 | 12 |
| மாலயன்றொழுதிடு | ... | 46 | 23 |
| மானைத்துடடிச | ... | 24 | 13 |
| **மு** | | | |
| முருகனென்று | ... | 65 | 32 |
| முனிவோர்தொழுந் | ... | 85 | 41 |
| **மே** | | | |
| மேகஞ்சூழ் | ... | 84 | 41 |
| மேலாமரசன் | ... | 10 | 7 |

| | | பாட்டு எண் | பக்க எண் |
|---|---|---|---|
| **யா** | | | |
| யார்கொலுலகெல்லா | ... | 20 | 11 |
| யானேயவனவன் | ... | 53 | 27 |
| **வ** | | | |
| வரையாய் தணிசை | ... | 55 | 28 |
| வல்லைவரு | ... | 62 | 31 |
| வற்றாக் | ... | 71 | 35 |
| **வா** | | | |
| வாயுன் | ... | 72 | 35 |
| வானமளந்தது | ... | 98 | 47 |
| **வி** | | | |
| விலையிலாமணி | ... | 34 | 17 |
| விளக்கினொளிக்கு | ... | 28 | 15 |
| **வீ** | | | |
| வீரவாகுவை | ... | 9 | 6 |
| **வே** | | | |
| வேதாகமங்கள் | ... | 2 | 4 |
| வேந்தராக்கும் | ... | 49 | 25 |
| வேலேந்துங்கையான் | ... | 45 | 22 |
| வேளின் கருப்பு | ... | 8 | 6 |

பரஞ்சோதியார்

இயற்றிய

# சிதம்பரப் பாட்டியல்


பதிப்பாசிரியர் :

**முனைவர் ய. மணிகண்டன்,**

தமிழ்ப்பண்டிதர்,

தமிழ்த்துறை,

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

# சிதம்பரப் பாட்டியல்-பதிப்பு முகவுரை

**சிதம்பரப் பாட்டியல் :**

தமிழ் இலக்கண நூல்களுள் ஒன்று 'சிதம்பரப் பாட்டியல்' எனும் இந்நூல். யாப்பு— பாட்டியல் ஆகிய இலக்கணங்களை ஒருசேரத் தொகுத்துரைப்பதாக இந்நூல் அமைந்துள்ளது.

**ஆசிரியர் :**

சிதம்பரப் பாட்டியலை இயற்றிய புலவர் பெருமகனார் **பரஞ்சோதியார்** ஆவார். பதினாறாம் நூற்றாண்டில் 'சிதம்பர புராணம்' எனும் நூலை இயற்றிய புராணத் திருமலைநாதர் எனும் புலவர்மணியின் மைந்தரே இப் பரஞ்சோதியார். சைவ மரபினர் எனப் பரஞ்சோதியார் அறியப்பெறுகிறார்.

**நூலமைப்பு :**

நூலின் தொடக்கத்தில் பாயிரப்பகுதி நான்கு வெண்பாக்களையும் ஓர் எண்சீர் ஆசிரியவிருத்தப் பாடலையும் பெற்றுள்ளது. அவற்றையடுத்து நூல் **47** எண்சீர் ஆசிரியவிருத்தப் பாக்களைக் கொண்டு திகழ்கின்றது.

1. உறுப்பியல
2. செய்யுளியல்
3. ஒழிபியல்
4. பொருத்தவியல்
5. மரபியல்

எனும் ஐந்து இயல்களைப் பெற்றுள்ள இப்பாட்டியல் நூல் உறுப்பியலில் 6 விருத்த நூற்பாக்களையும், செய்யுளியலில் 5 விருத்த நூற்பாக்களையும், ஒழிபியலில் 5 விருத்த நூற்பாக்களையும், பொருத்தவியலில் 11 விருத்த நூற்பாக்களையும், மரபியலில் 20 விருத்த நூற்பாக்களையும் கொண்டுள்ளது. இந் நூலின் நான்காம் ஐந்தாம் இயல்களான பொருத்தவியல், மரபியல் ஆகியன பாட்டியல் இலக்கணங்களைப் பகர்வனவாகும்

விருத்த நூற்பாக்கள் ஆங்காங்கு மகடூஉ முன்னிலைத் தொடர்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உரை :

சிதம்பரப் பாட்டியலின் யாப்பிலக்கணங் கூறும் முதல் மூன்று இயல் களுக்கும் பழைய உரையொன்று உள்ளது. உரையாசிரியர் பெயர் அறியப் பெறாத இவ்வுரையை நூல் ஆசிரியரோ அல்லது அவரின் நேர்மாணாக்கரோ செய்திருக்கலாம் என்பார் மு. அருணாசலம் (தமிழ் இலக்கிய வரலாறு—16 : 2 ப. 186)

சிதம்பரப் பாட்டியலை முதலில் பதிப்பித்த அறிஞர் மு. இராகவையங் கார் (1911), பின்னர்ப் பதிப்பித்த கி. இராமானுஜையங்கார் (1932) ஆகியோரும், இலக்கிய வரலாற்று நூலில் விரிவாகப் பேசிய மு. அருணாசலமும் குறிப்பிடாத பின்னிரண்டு இயல்களுக்கான உரையொன்று அப்பகுதிகளின் மூலத்துடன் 1908ஆம் ஆண்டிலேயே சுவடியின் அடிப்படையில் ஆரணி மேடிகை சென்ன கேசவுலு நாயுடு அவர்களால் பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளது, என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னை மூன்று இயல்களுக்கான உரையின் அமைப்பிலிருந்து பின்னைய இரண்டு இயல்களுக்கான உரையின் அமைப்பு வேறுபட்டுள்ளது. எனவே இரு உரைகளையும் வேறு வேறு புலவர்களே வரைந்துள்ளனர் எனலாம்.

**பதிப்பு :**

1908, 1911, 1932 ஆம் ஆண்டுகளில் சிதம்பரப் பாட்டியல் பதிப் புள்ளது.

1908ஆம் ஆண்டில் சிதம்பரப் பாட்டியலின் பின்னிரண்டு இயல்களான பொருத்தவியல், மரபியல் ஆகியன மட்டும் உரையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

இப்பதிப்பு "பாட்டியற்கொத்து" எனும் நூலில் இடம்பெற்றுள்ளது. **பு. சிவபாத முதலியார்** என்பார் அளித்த ஏட்டுப் பிரதியின் அடிப்படையில் ஆ. மே. சென்ன கேசவலு நாயுடு அவர்களால் இப்பதிப்பு ஆக்கப்பட்டுள்ளது.

1911ஆம் ஆண்டு மு. இராகவையங்காரால் பதிப்பிக்கப்பெற்ற சிதம்பரப் பாட்டியல், ஐந்தியல்களுக்கான மூலத்துடனும் முதல் மூன்றியல்களுக்கான பழைய உரையுடனும் மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பாக மலர்ந்தது.

1932இல் இராகவையங்கார் பதிப்பில் ஏட்டுச்சுவடியின் அடிப்படையில் மேலும் சில திருத்தங்கள் செய்து கி. இராமானுசையங்கார் சிதம்பரப் பாட்டியலைப் பதிப்பித்துள்ளார். இப்பதிப்பும் மதுரைத் தமிழ்ச்சங்கப்பதிப்பே யாகும்.

**இந்நூற்பதிப்பு :**

நமது நூலகத் தமிழ்த்துறைச் சுவடிகளின் அடிப்படையிலும், மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பு, ஆரணி மேடிகை சென்ன கேசவலு நாயுடு பதிப்பு ஆகியவற்றின் துணையுடனும் இப்பதிப்பு உருவாக்கப் பட்டுள்ளது. முதல் மூன்று இயல்களுக்கு இப்பதிப்பில் இடம்பெற்றுள்ள உரை பரவலாக அறியப் பெற்ற பழைய உரையேயாகும். பின்னை இரண்டு இயல்களுக்கான உரை சென்ன கேசவலு நாயுடு அவர்கள் பதிப்பித்தளித்த, திரு பு. தெய்வசிகாமணி முதலியார் குமாரர் சிவபாத முதலியார் அவர்களின் சுவடியில் இடம்பெற்ற உரையே இப்பதிப்பில் இடம் பெற்றுள்ளது.

முதல் முறையாக ஐந்து இயல்களுக்கும் உரை ஒருசேர இடம்பெறுமாறு அமைக்கப்பட்டுள்ளமை இப்பதிப்பின் தனிச்சிறப்பாகும்.

உரையில் மேற்கோள்களாக இடம்பெற்றுள்ள இலக்கண நூற்பாக்களும் இலக்கியப் பாடல்களும் இடம்பெற்றுள்ள மூலநூல் குறித்த விவரங்கள் இப் பதிப்பில் பக்கந்தோறும் அடிக்குறிப்பாய் அளிக்கப்பெற்றுள்ளன. நூற்பா முதற்குறிப்பு அகரநிரலும் நூலிறுதியில் இடம்பெற்றுள்ளது.

**நிறைவு :**

பருவ இதழை அணிசெய்யும் இப்பதிப்பினை ஆய்வாளரும் அறிஞர் களும் நன்கு பயன்படுத்திக்கொள்வர் என்பது பதிப்பாசிரியரின் நம்பிக்கை.

**ய. மணிகண்டன்**

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| * | காப்பு, பாயிரம் | 1 |
| 1. | உறுப்பியல் | 2—24 |
| 2, | செய்யுளியல் | 25—64 |
| 3. | ஒழிபியல் | 65—96 |
| 4. | பொருத்தவியல் | 97—105 |
| 5. | மரபியல் | 106—114 |
| * | நூற்பா முதற்குறிப்பு அகர நிரல் | 115,116 |

# சிதம்பரப் பாட்டியல்

## மூலமும் உரையும்

### காப்பு

நினைத்தவர்க்கும் அன்றி நினைக்குமவர் தம்மை
நினைப்பவர்க்கும் முத்தி நிரம்பும் — அனைத்துமாம்
ஆரணத்து முன்னவனும் அம்பிகையும் பெற்றமத
வாரணத்தின் பாத மலர்.

### பாயிரம்

பாடலாம் செந்தமிழைப் பாடி அரனருளைக்
கூடலாம் இன்பநலம் கொள்ளலாம் — பேடனாய்
நாட்டியசீர்ப் பாவினங்கள் நாடும் சிதம்பரப்
பாட்டியலைக் கற்றார் பயன்.

பாடு முறைமைக்கும் பன்னு தமிழ்தெளிந்து
சூடும் பனுவற்குச் சொற்பொருள்கள் — நாடுதற்கும்
எண்ணிலராய் நின்றாரும் இந்நூல் வினவினரேல்
கண்ணிலான் காட்சியது காண்.

பூமன்னு பொழில்வெண்ணை மெய்கண்டான் கச்சிப்
புகழ்புனைதத் துவஞான ப்ரகாசமாய் வந்து
பாமன்ன உரைபொன்ன அவனருளால் அவன்றன்
பதம்பரவிச் சிதம்பரப்பாட் டியல்எனப்பேர் வகுத்தான்
மாமன்னு சிதம்பரபு ராணமுத னூலும்
மதுரையுலா வும்பகர்ந்தோன் மருவுகுல மைந்தன்
தேமன்னு புராணகலை பலதெரிபு ராணத்
திருமலைநா யகன்அருளின் தேசுபூண் டோனே.

சிதம்பரப் பாட்டியலைச் செய்தான் தமிழாற்
சிதம்பர புராணமுதற் செய்து — விதம்பெறுசீர்
சேர்ந்த புராணத் திருமலைநா தன்தவத்தாற்
சார்ந்தபரஞ் சோதிஎன்பான் தான்.

நூல்

# 1. உறுப்பியல்

1 பூமேவு திசைமுகனும் செங்கணெடு மாலும்
புத்தேளிர் கணங்களுமா தவத்தோரும் போற்றத்
தேமேவு குழலுமையாள் கண்டுவப்ப மன்றில்
திருநடஞ்செய் பேரொளியைச் சிந்தைதனில் வைத்துக்
காமேவு கிளியென்னக் கொழுஞ்செழுந்தே னென்னக்
கடலமுத மென்னமிளிர் கனித்துவர்வாய் மாதே
பாமேவு தமிழ்ப்பொதியக் குறுமுனிவன் கூறும்
பாட்டியலைச் சுருக்கமதாய்ப் பகர்ந்திடுவன் யானே.

உரை: 'பூமேவு......பகர்ந்திடுவன்யான்' என்றது தற்சிறப்பு;

*"வணக்கம் அதிகாரம் என்றிரண்டும் சொல்லச்*
*சிறப்பென்னும் பாயிர மாம்"**

என்றாராகலின். *(1)*

## யாப்பின் உறுப்புகள், எழுத்து அசை ஆகியன

2 யாப்புவிதி எழுத்துஅசைசீர் பந்தம்அடி தொடைபா
இனம்இவையிற் குறில்நெடில்ஒற்று உயிர்மெய்உயிர் ஆய்தம்
கோப்புடைக்குற் றுகரம்குற் றிகரம்ஐஔ காரக்
குறுக்கமே வல்லினமெல் லினமொடுஇடை யினமே
நீப்பரிய உயிரளபுஒற் றளபுஅசையின் எழுத்தாம்
நெடில்குறில்கள் தனித்தும்ஒற்றை அடுத்தும்வரின் நேராய்
சாய்ப்பரிய குறிலிணைகள் குறில்நெடில்கள் தனித்தும்
தமதுடன்ஒற் றடுத்தும்வரின் நிரைஅசையும் ஆமே.

உரை: 'யாப்புவிதி.........எழுத்தாம்' என்றது, யாப்பினது விதி எழுத்து முதல் எட்டாம் என்றவாறு.

---

*யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள் நூற்பா (ப. 11)

அவற்றுள்; **எழுத்தாவன:—** குறிலெனவும் நெடிலெனவும் மெய்யெனவும் உயிர்மெய்யெனவும் உயிரெனவும் ஆய்தமெனவும் குற்றியலுகரமெனவும் குற்றியலிகரமெனவும் ஐகாரக்குறுக்கமெனவும் ஔகாரக் குறுக்கமெனவும் வல்லினமெனவும் மெல்லினமெனவும் இடையினமெனவும் உயிரளபெடையெனவும் ஒற்றளபெடையெனவும் வரும்.

இவற்றுள், **குறிலாவன:—** அ இ உ எ ஒ என ஐந்தாம்; **நெடிலாவன:—** ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என ஏழாம்;

**மெய்யாவன:—** க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் எனப் பதினெட்டாம்.

**உயிர்மெய்யாவன:—** இவற்றின்மேல் உயிர் ஏறியவை; க கா கி கீ கு கூ கெ கே கை கொ கோ கௌ என வரும். இப்படியே பதினெட்டொற்றின் மேலும் பன்னிருயிரும் ஏற, இருநூற்றொருபத்தாறெழுத்தாம்.

**உயிராவன:—** அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ எனப் பன்னிரண்டாம்.

**ஆய்தமாவன:—** எஃகு கஃசு கஃடு கஃது கஃபு கஃறு என வரும்.

**குற்றியலுகரமாவன:—** நாகு காசு காடு காது காபு காறு என நெடிற் கீழும், நாக்கு காச்சு காட்டு காத்து காப்பு காற்று என நெடிலொற்றின் கீழும், வரகு முரசு முருடு மருது துரபு கவறு எனக் குறிலிணைக் கீழும், அரக்கு பொரிச்சு தெருட்டு குருத்து பொருப்பு சிரற்று எனக் குறிலிணையொற்றின்கீழும், அசோகு பலாசு மலாடு கொடாது புதாபு விராறு எனக் குறினெடிற் கீழும், தமாக்கு தடாச்சு பனாட்டு கெடாத்து புதாப்பு விராற்று எனக் குறினெடிலொற்றின் கீழும், கக்கு கச்சு கட்டு கத்து கப்பு கற்று எனக் குற்றொற்றின்கீழும் **குற்றியலுகரம்** வந்தவாறு கண்டுகொள்க.

இனி, **குற்றியலிகரம்** வருமாறு:— நாகியாது காசியாது காடியாது காதியாது காபியாது காறியாது எனவும் பிறவு மேற்கூறியவாறும், கேண்மியா சென்மியா எனவும் வரும். பிறவும் வருவன இவ்வாறொட்டிக்கொள்க.

இனி, **ஐகாரக்குறுக்கமாவன:—** ஐப்பசி மைப்புறம்; மடையன் உடைவாள்; குவளை தவளை திணை பனை என மூவிடத்தும் முறையே குறுகி வந்தன.

இனி, **ஔகாரக் குறுக்கமாவன:—** மௌனம் மௌவி கௌவை என முதற்கட் குறுகினவாறு.

**வல்லினமாவன:—** க ச ட த ப ற. **மெல்லினமாவன:—** ங ஞ ண ந ம ன. **இடையினமாவன:—** ய ர ல வ ழ ள.

இனி, **உயிரளபெடையாவன:—** வாஅகை ஈஇகை ஊஉகம் ஏஎரி ஐஇயல் ஓஒதை ஔஉவியம் என **முதனிலையளபெடை** வந்தவாறு. படாஅகை செலீஇயர் உழூஉகம் பரேஎரி வளைஇப விரோஒதம் மனௌஉகம் என **இடைநிலையளபெடை** வந்தவாறு. குராஅ குரீஇ குழூஉ எனேஎ விளைஇ அரோஒ அநௌஉ என **இறுதிநிலையளபெடை** வந்தவாறு.

**ஒற்றளபெடை** வருமாறு:— மங்ங்கலம் மஞ்ஞ்சு மண்ண்டு பந்ந்து அம்ம்பு மின்ன்னு தெவ்வ்வர் மெய்ய்யர் செல்ல்க கொள்ள்கை எஃஃகு எனக் குறிற்கீழும், அரங்ங்கம் முரஞ்ஞ்சு முரண்ண்டு பருந்ந்து அரும்ம்பு முரன்ன்று குரவ்வ்வை அரய்ய்யர் குரல்ல்கள் திரள்ள்கள் வரஃஃது எனக் குறிலிணைக்கீழும், அளபெடை வந்தவாறு. பொன்ன் "மடங்ங் (கலந்த")) என **இறுதிநிலையளபெடை** வந்தவாறு.

இவற்றுக்குப் பிற சூத்திரம்:—

> "யாப்பும்,
> பாட்டுந் தூக்குந் தொடர்புஞ் செய்யுளை
> நோக்கிற் றென்பர் நுணங்கி யோரே" *

---

* "யாப்பெனப் படுவ தியாதென வினவின்
தூக்கும் தொடையும் அடியுமிம் மூன்றும்
நோக்கிற் றென்ப நுணங்கி யோரே" —நற்றத்தனார். யா. வி ப. 16

"தூக்கும் பாட்டும் பாவும் ஒன்றென
நோக்கிற் றென்ப நுணங்கி யோரே" —பல்காயனார், யா. வி. ப. 17

"யாப்பும்
பாட்டும் தூக்கும் தொடர்பும் செய்யுளை
நோக்கிற் றென்ப நுணங்கி யோரே" —யா. கா. 1 உரைமேற்கோள்

" எழுதப் படுதலின் எழுத்தே அவ்வெழுத்து
அசைத்திசை கோடலின் அசையே அசைஇயைந்து
சீர்கொள நிற்றலில் சீரே சீரிரண்டு
தட்டு நிற்றலில் தளையே அத்தளை
அடுத்து நடத்தலின் அடியே அடியிரண்டு
தொடுத்துமுத லாயிற் றொடையே அத்தொடை
பாவி நடத்தலிற் பாவே பாவொத்து
இனமாய் நடத்தல் இனமெனப் படுமே " [1]

" பந்தந் தளையின் பாற்பெய ராகும் " [2]

" அ இ உ எ ஒக்குறில் ஐந்தே " [3]

" ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில் " [4]

" ககர முதல னகர இறுவாய்ப்
பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப " [5]

" மெய்உடம்பு உறுப்புஒற்று இவைதாம் ஒருபொருள்
செய்யும் என்று செப்பினர் புலவர் " [6]

" உயிர்ஈ ராறே மெய்ம்மூ வாறே
அம்மூ வாறும் உயிரொ டுயிர்ப்ப
இருநூற் றொருபத் தாறுயிர் மெய்யே. " [7]

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள் நூ. 1
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள் கா. 1

2 ?

3 நன்னூல் நூ 64.

4 நன்னூல் நூ. 65.

5 தொல்காப்பியம் நூன் மரபு நூ. 9
பாடவேறுபாடு: " னகார இறுவாய்ப்
பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப "
—தொல். இளம்பூரணர் உரைப்பாடம்

6 யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள் கா. 4

7 பல்காயம், யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள் நூ. 2
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள் கா. 4

" அகர முதல ஔகார இறுவாய்ப்
பன்னிரண் டெழுத்தும் உயிரென மொழிப "[1]

" குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே. "[2]

" அஃகேனம் ஆய்தம் தனிநிலை புள்ளி
ஒற்றிப் பால ஐந்தும் இதற்கே. "[3]

" நெடிலே குறிலிணை குறினெடில் என்றிவை
ஒற்றொடு வருதலொடு குற்றொற்று இறுதியென்று
ஏழ்குற் றுகரக் கிடனென மொழிப "[4]

" எழுவகை இடத்துங் குற்றிய லுகரம்
வழுவின்றி வருஉம் வல்லாறு ஊர்ந்தே. "[5]

" வல்லெழுத் தாறோ டெழுவகை யிடத்தும்
உகரம் அரையாம் யகரமோ டியையின்
இகரமுங் குறுகும் என்மனார் புலவர். "[6]

" இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில்
அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே. "[7]

---

1 தொல்காப்பியம் நூன்மரபு நூ. 8.
பாடவேறுபாடு: '' ஔகார இறுவாய்ப்
பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப ''
—தொல். இளம்பூரணர் உரைப்பாடம்

2 தொல்காப்பியம், மொழிமரபு நூ. 5.

3 யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள் கா. 4

4 யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள் கா. 4

5 யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள் கா. 4

6 அவிநயனார் நூற்பா, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள் நூ. 2
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள் கா. 4

7 நன்னூல் நூ. 91.

" ஐஔ வென்னு மாயீ ரெழுத்திற்கு
இகர வுகரம் இசைநிறை யாகும் "[1]

" ஙஞண நமன வயலள வாய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே "[2]

" மாத்திரை வகையால் தளைதம[3] கெடாநிலை
யாப்பழி யாமையென் றளபெடை வேண்டும். "[4]

" கண்ணிமை கைந்நொடி யளவே மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே. "[5] [6]

" உன்னல் காலே யூன்ற வரையே
முறுக்கல் முக்கால் விடுத்த லொன்றே "[7]

" மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே
குறிலோ டையெளக் குறுக்க மொற்றள
பரையொற் றிஉக் குறுக்க மாய்தங்
கால்குறண் மஃகா னாய்த மாத்திரை "[8]

என வரும். பிறவுமன்ன.

---

1 தொல்காப்பியம் மொழிமரபு நூ. 9.

2 நன்னூல் நூ. 92.

3 பாடவேறுபாடு : தளைதபக்

4 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள் நூ. 3
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள் கா. 4

5 பாடவேறுபாடு : கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே.
—தொல். இளம். உரைப்பாடம்.

6 தொல்காப்பியம் நூன்மரபு நூ. 7.

7 யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள் கா. 4

8 நன்னூல் நூ. 99.

" நெடில்குறில்கள் தனித்தும்ஒற்றை யடுத்தும்வரின் நேராம்
சாய்ப்பரிய குறிலிணைகள் குறில்நெடில்கள் தனித்துந்
தமதுடன்ஒற் றடுத்தும்வரின் நிரையசையும் ஆமே "

என்றது நெட்டெழுத்துத் தனியே வரினும், குற்றெழுத்துத் தனியே வரினும், நெட்டெழுத்து ஒற்றடுத்து வரினும் குற்றெழுத்து ஒற்றடுத்து வரினும் நேரசையாம்; குறில் இணைந்துவரினும் குறினெடில் இணைந்து வரினும், குறிலிணை ஒற்றடுத்துவரினும் குறினெடில் ஒற்றடுத்துவரினும் நிரையசையாம் என்றவாறு.

ஆ—என நெட்டெழுத்துத் தனியே வந்த நேரசை. ழி—எனக் குற்றெழுத்துத் தனியே வந்த நேரசை. செல்—எனக் குற்றெழுதது ஒற்றடுத்து வந்த நேரசை. போர்—என நெட்டெழுத்து ஒற்றடுத்து வந்த நேரசை. சின—எனக் குறில் இரண்டிணைந்து வந்த நிரையசை. தை—எனக் குறினெடில் இணைந்து வந்த நிரையசை. எழில்—எனக் குறிலிணை ஒற்றடுத்து வந்த நிரையசை. சுலாம்—எனக் குறினெடில் ஒற்றடுத்து வந்த நிரையசை.

இவற்றுக்குஉதாரணம்:—

" செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ இடைநுழையு மதியம்போன்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே." [1]

எனவரும். இதில் நேர்நிரை கண்டுகொள்க.

" அசையும் " என்ற உம்மையால், நேர்பசை நிரைபசை என்னும் இரண்டுங்கூட்டி அசை நான்கென்பாருமுளர். (2)

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள் நூ. 15, 20, 32, 76, 86

யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள் கா. 11, 15, 21, 32

## சீர், சீர் வாய்பாடுகள், தளை

3 நிரல்இயற்சீர் நேர்நேர்தே மாநிரைநேர் புளிமா
நிரைநிரையே கருவிளமே நேர்நிரைகூ விளம்பின்
வருநேர்காய் வெள்ளைநிரை வரில்கனிவஞ் சிச்சீர்
மற்றுநேர் நிரைவரில்தண் ணிழல்நேர்நேர் தண்பூப்
பரவுநிரை நேர்நறும்பூ நிரைநிரைவந் தக்கால்
பகருநறு நிழல்ஆம்ஈ ரெட்டுஇவைநா லசைச்சீர்
விரவுவஞ்சி நாள்மலர்ஓ ரசைச்சீர்ஈ ரசைச்சீர்
மேவியபோல் தளைதமக்கு விளங்கிமரு விடுமே.

" நிரல்இயற்சீர் ... நேர்நிரை கூவிளம் " என்றது, இந்த ஈரசைச்சீர் நான்கும் ஆசிரியச்சீர் என்றவாறு. நேர்நேர் நிரைநேர் நிரைநிரை நேர்நிரை எனவும், தேமா புளிமா கருவிளம் கூவிளம் எனவும் வரும்.

" பின்வரும் நேர் காய் வெள்ளை " என்றது, அவை நிரலே நிற்க, பின்னே வரும் நேர், நேர்நேர்நேர்: தேமாங்காய்: பிறவுமன்ன; இவை நாலும் வெண்சீர் என்றவாறு.

" நிரைவரில் கனி வஞ்சிச்சீர் " என்றது, இப்படியே பின்னே நிரை நாலும் வந்தால் நேர்நேர்நிரை: தேமாங்கனி; பிறவுமன்ன; இவை நாலும் வஞ்சிச்சீர் என்றவாறு.

" மற்றும் நேர்நிரைவரில்...பகருநறுநிழல் " என்றது, அவ்வாறு பின்னே நேர்நிரைவந்தால் நேர்நேர்நேர்நிரை: தேமாந்தண்ணிழல்: பிறவுமன்ன. அப்படிப் பின்னே நேர்நேர் வந்தால் நேர்நேர்நேர்நேர்: தேமாந்தண்பூ: பிறவுமன்ன. பின்னே நிரைநேர் வந்தால் நேர்நேர்நிரைநேர்: தேமாநறும்பூ: பிறவுமன்ன. பின்தான் நிரைநிரை வந்தால் நேர்நேர்நிரைநிரை: தேமாநறுநிழல்: பிறவுமன்ன. இவை பதினாறு பொதுச்சீரும் வஞ்சி.

" நாள்மலர் ஓரசைச்சீர் " என்றது, நாள் எனவும் மலர் எனவும் வருமிவையிரண்டும் ஓரசைச்சீர் என்றவாறு. ஆகச் சீர் முப்பது. இந்த ஓரசைச்சீருக்குத் தளை ஆசிரியச் சீருக்குரைத்த தளையெனக் கொள்க.

" நிரல் " என்பதனையும் " பின் " என்பதனையும் எல்லாவற்றிற்கும் தீபமாக ஒட்டிக்கொள்க.

" இயற்சீ ராசிரி யச்சீ ரகவற்
சீரென மொழிப சிறந்திசி னோரே." *

வாய்பாடு :—

நேர்நேர்—தேமா
நிரைநேர்—புளிமா
நிரைநிரை—கருவிளம்
நேர்நிரை—கூவிளம்
இவை ஆசிரியச்சீர்.

நேர்நேர்நேர்—தேமாங்காய்
நிரைநேர்நேர்—புளிமாங்காய்
நிரைநிரைநேர்—கருவிளங்காய்
நேர்நிரைநேர்—கூவிளங்காய் இவை வெண்சீர்.

நேர்நேர்நிரை—தேமாங்கனி
நிரைநேர்நிரை—புளிமாங்கனி
நிரைநிரைநிரை—கருவிளங்கனி
நேர்நிரைநிரை—கூவிளங்கனி இவை வஞ்சிச்சீர்.

நேர்நேர்நேர்நிரை—தேமாந்தண்ணிழல்
நிரைநேர்நேர்நிரை—புளிமாந்தண்ணிழல்
நிரைநிரைநேர்நிரை—கருவிளந்தண்ணிழல்
நேர்நிரைநேர்நிரை—கூவிளந்தண்ணிழல் எனவும்;

நேர்நேர்நேர்நேர்—தேமாந்தண்பூ
நிரைநேர்நேர்நேர்—புளிமாந்தண்பூ
நிரைநிரைநேர்நேர்—கருவிளந்தண்பூ
நேர்நிரைநேர்நேர்—கூவிளந்தண்பூ எனவும்;

நேர்நேர்நிரைநேர்—தேமாநறும்பூ
நிரைநேர்நிரைநேர்—புளிமாநறும்பூ
நிரைநிரைநிரைநேர்—கருவிளநறும்பூ
நேர்நிரைநிரைநேர்—கூவிளநறும்பூ எனவும்;

* ?

நேர்நேர் நிரை நிரை —தேமா நறுநிழல்
நிரைநேர் நிரை நிரை —புளிமா நறுநிழல்
நிரை நிரை நிரை நிரை —கருவிள நறுநிழல்
நேர் நிரை நிரை நிரை —கூவிள நறுநிழல்
எனவும் வரும்; இவை பொதுச்சீர்.

நாள் மலர் என்பன ஓரசைச்சீர்.

இவற்றிற்கு உதாரணம் :—

"குன்றக் குறவன் காதன் மடமகள்
வரையர மகளிர் புரையுஞ் சாயலள்
ஐயள் அரும்பிய முலையள்
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே." 1

இவ்வாசிரியப்பாவினுள் நான்காசிரியவுரிச்சீரும் வந்தவாறு கண்டு கொள்க.

"பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்
உன்னேனென் றாழலக்கை பற்றினேற்—கென்னோ
மனனொடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்
புனனாடன் பேரே வரும்" 2

இவ்வெண்பாவினுள் வெண்பாவுரிச்சீர் நான்கும் வந்தவாறு கண்டு கொள்க.

"சுறமறிவன துறையெல்லாம்
இறவின்பன வில்லெல்லாம்
மீன்றிரிவன கிடங்கெல்லாம்
தேன்றாழ்வன பொழிலெல்லாம்
எனவாங்கு

---

1 ஐங்குறுநூறு 255, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 11
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 9

2 முத்தொள்ளாயிரம் 104, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 12
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 9

தண்பணை தழீஇய விருக்கை
மண்கெழு நெடுமதில் மன்னலை ஹரே." [1]

இவ்வஞ்சிப்பாவினுள் வஞ்சியுரிச்சீர் நான்கும் வந்தவாறு கண்டுகொள்க.

" அங்கண்வானத் தமரரசரும்
வெங்களியானை வேல்வேந்தரும்
வடிவார்கூந்தல் மங்கையரும்
கடிமலரேந்திக் கதழ்ந்திறைஞ்சச்
சிங்கஞ்சுமந்த மணியணைமிசைக்
கொங்கவிரசோகின் குளிர்நிழற்கீழ்ச்
செழுநீர்ப்பவளத் திரள்காம்பின்
முழுமதிபுரையு முக்குடைநிழல்
வெங்கண்வினைப்பகை விளிவெய்தப்
பொன்புனைநெடுமதில் புடைவளைப்ப
வனந்தசதுட்டய மவைவெய்த
நனந்தலையுலகுட னவைநீங்க
மந்தமாருத மருங்கசைப்ப
அந்தரதுந்துபி நின்றியம்ப
இலங்குசாமரை யெழுந்தலமர
நலங்கிளர்பூமழை நனிசொரிதர
இனிதிருந்(து)
அருணெறி நடாத்திய வாதிதன்
திருவடி பரவுதும் சித்திபெறற் பொருட்டே" [2]

இக்குறளடி வஞ்சிப்பாவினுள் பொதுச்சீர் பதினாறும் அடிதோறும் வந்தவாறு கண்டுகொள்க.

" நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்" [3]

இவ்வெண்பாவினுள் "இலர்" என நிரையசைச் சீராயினவாறு கண்டுகொள்க.

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 12
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 22

2 திருப்பாமாலை, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 13, 95
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 9

3 திருக்குறள் 1072, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 14
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 9

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்" [1]

இவ்வெண்பாவினுள் 'நீர்' என நேரசைச் சீராயினவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன. இனி, ஓரசைச்சீருக்குத் தளை வருமாறு:—

"உரிமை யின்க ணின்மையால்
அரிமதர் மழைக் கண்ணாள்
செருமதி செய் தீமையாள்
பெருமை கொன்ற வென்பவே" [2]

இம்முச்சீரடி வஞ்சி விருத்தத்துள் 'மழை' 'செய்' என்னும் அசைச் சீர்கள் இயற்சீரே போலக்கொண்டு, வருஞ்சீர் முதலசையோடொன்றாமலும் ஒன்றியும் வந்தமையால், முறையே இயற்சீர் வெண்டளையும் ஆசிரியத்தளையு மாயின. (3)

## தளை வகைகள்

4 மருவுவிளம் முன்னர்நிரை நிரையொன்றா சிரியம்
மாமுன்நேர் வரின்நேரொன் றாசிரியத் தளையாம்
விரவியகாய் முன்னர்நேர் வெண்சீர்வெண் டளையாம்
மீட்டும்காய் முன்னர்நிரை கலித்தளையாம் மின்னே
கருதுகனி முன்னர்நேர் ஒன்றாத வஞ்சி
கனிமுன்நிரை ஒன்றியவஞ் சித்தளையாம் மாமுன்
நிரையும்விளம் முன்நேரும் இயற்சீர்வெண் டளையாம்
நிழல்கனியாம் பூக்காயாம் நிகழ்பொதுச்சீர்த் தளைக்கே.

என்பது சூத்திரம். விளமென நிற்ப நிரையென வருவது நிரையொன்றாசிரியத்தளை; மாவெனநிற்ப நேரென வருவது நேரொன்றாசிரியத்

---

1 திருக்குறள் 1121, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 14
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 9

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 15
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 11

தளை; காயென நிற்ப நேரென வருவது வெண்சீர்வெண்டளை; காயென நிற்ப நிரையென வருவது கலித்தளை; கனியென நிற்ப நேரென வருவது ஒன்றாத வஞ்சித்தளை; கனியென நிற்ப நிரையென வருவது ஒன்றிய வஞ்சித்தளை; மாவென நிற்ப நிரையென வருவதும் விளமென நிற்ப நேரென வருவதும் இயற்சீர் வெண்டளை; தண்ணிழற்சீருக்கும் நறுநிழற்சீருக்கும் கனிச்சீருக்குரைத்தாங்குத் தளைகொள்க; தண்பூச்சீருக்கும் நறும்பூச்சீருக்கும் காய்ச்சீருக்கு உரைத்த தளையே கொள்க.

இவற்றுக்கு உதாரணம் :—

" திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை கடுப்பப்
பண்ணமைந் தவர்தேர் சென்ற வாறே " 1

இது நிரையொன்றாசிரியத்தளையும் நேரொன்றாசிரியத்தளையும் வந்த செய்யுள்.

" பொன்னார மார்பின் "

—இது வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் வந்த செய்யுள்.

" செல்வப்போர்க் கதக்கண்ணன் "

—இது கலித்தளையான் வந்த செய்யுள்.

" சுறமறிவன துறையெல்லாம் "

—இஃது ஒன்றிய வஞ்சித்தளையும் ஒன்றாத வஞ்சித்தளையும் வந்த செய்யுள்.

நாலசைப் பொதுச்சீருக்குத் தளை முன்னர்க் காட்டிய ' அங்கண் வானத்து ' என்னும் வஞ்சிப்பாவினுட் கண்டுகொள்க. (4)

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 19

யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 11

## 15

## அடி, தொடை வகைகள்

### பாக்களின் அடிச்சிறுமை, பெருமைகள்

5 நிகழ்இருசீர் குறளடிமுச் சீர்சிந்து நாற்சீர்
நேர்ஒடுஅள வடிஐஞ்சீர் நெடிலடிஆறு ஆதி
திகழ்தருசீர் கழிநெடில்வெள் ளடிஇரண்டு மூன்றுஆ
சிரியம்வஞ்சி மூன்றுகலி நான்குஇழிபு பெருமை
அகல்பொருள்மட்டு எழுத்துஅசைசீர் அடிஅந்தம் ஆதி
யாம்அந்தா தித்தொடையே அடிமுழுதும் ஒருசொல்
புகல்வதுஇரட் டைத்தொடையாம் மோனைமுத லாகப்
புகன்றதொடை புகலாது புகல்வதுசெந் தொடையே.

"நிகழ்இருசீர் ..அகல்பொருள்மட்டு" —என்பதற்கு உதாரணம் வருமாறு :—

"திரைத்த சாலிகை
நிரைத்த போனிரந்
திரைப்ப தேன்களே
விரைக்கொண் மாலையாய்" [1]

இஃது அடிதோறும் இருசீராதலால், **குறளடி**யான் வந்த செய்யுள்,

"இருது வேற்றுமை யின்மையாற்
சுருதி மேற்றுறக் கத்தினோ
டரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடங் கையினாய்" [2]

இஃது அடிதோறும் முச்சீராதலால், **சிந்தடி**யான் வந்த செய்யுள்.

---

1 சூளாமணி—744, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 24
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 13

2 சூளாமணி—742, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 24
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 13

"தேம்பழுத் திரியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரிய
மாம்பழக் கனிகளு மதுத்தண் டீட்டமுந்
தாம்பழுத் துளசில தவள மாடமே." 1

இஃது அடிதோறும் நாற்சீராதலால் அளவடியான் வந்த செய்யுள்.

"வென்றான் வினையின் றொகையாய விரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த உணர்வின்னொழி யாது முற்றுஞ்
சென்றான் திகழுஞ் சுடர்சூழொளி மூர்த்தி யாகி
நின்றான் அடிக்கீழ்ப் பணிந்தார்வினை நீங்கி நின்றார்." 2

இஃது அடிதோறும் ஐஞ்சீராதலால் நெடிலடியான் வந்த செய்யுள்.

"இரைக்கு மஞ்சிறைப் பறவைக
ளெனப்பெயர்ந் தினவண்டு புடைசூழ
நுரைக்க ளென்னுமக் குழம்புக
ளகழ்ந்தெழ நுடங்கிய விலயத்தால்
திரைக்க ரங்களிற் செழுமலைச்
சந்தனத் திரள்களைக் கரைமேல்வைத்
தரைக்கு மற்றிது குணகடற்
றிரையொடு பொருதல தவியாதே." 3

இஃது அறுசீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

---

1 சூளாமணி—49, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 24
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 13

2 சூளாமணி—1, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 24
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 13

3 சூளாமணி—877, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 25
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 13

" கணிகொண்ட லர்ந்த நறுவேங்கை யோடு
கமழ்கின்ற காந்த ளிதழால்
அணிகொண்ட லர்ந்த வனமாலை சூடி
அகிலாவி குஞ்சி கமழ
மணிகுண்ட லங்க ளிருபாலும் வந்து
வரையாக மீது திவளத்
துணிகொண்டி லங்கு சுடர்வேலி னோடு
வருவானி தென்கொல் துணிவே." 1

இஃது **எழுசீர்க் கழிநெடிலடி**யான் வந்த செய்யுள்.

" மூவடிவி னாலிரண்டு சூழ்சுடரும் நாண
முழுதுலகு மூடி முளைவயிரம் நாறித்
தூவடிவி னாலிலங்கு வெண்குடையின் நீழற்
சுடரோயுன் வடிபோற்றிச் சொல்லுவதொன் றுண்டாற்
சேவடிகள் தாமரையின் சேயிதழ்கள் தீண்டச்
சிவந்தனவோ சேவடியின் செங்கதிர்கள் பாயப்
பூவடிவு கொண்டனவோ பொங்கொளிகள் சூழ்ந்து
புலன்கொளா வாலெமக்கெம் புண்ணியர்தங் கோவே." 2

இஃது **எண்சீர்க் கழிநெடிலடி**யான் வந்த செய்யுள்.

" இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியி னெதிர்ந்த தாரையை
இலங்கு மாழியின் விலங்கியோன்
முடங்கு வாலுளை மடங்கன் மிமிசை முனிந்து சென்றுடன்
முரண்ட ராசனை முருக்கியோன்
வடங்கொண் மென்முலை நுடங்கு நுண்ணிடை மடந்தை சுந்தரி
வளங்கொள் பூண்முலை மகிழ்ந்தகோன்
தடங்கொள் தாமரை யிடங்கொள் சேவடி தலைக்கு வைப்பவர்
தமக்கு வெந்துயர் தவிர்க்குமே." 3

இஃது **ஒன்பதின்சீர்க் கழிநெடிலடி**யான் வந்த செய்யுள்.

---

1 சூளாமணி—1327, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 25
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 13

2 சூளாமணி—1904, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 25
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 13

3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 25
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 13, 29

"கொங்கு தங்கு கோதை யோதி மாத ரோடு
கூடி நீடு மோடை நெற்றி
வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத
நாத வென்று நின்று தாழ
அங்க பூர்வ மாதி யாய வாதி நூலி
னீதி யோது மாதி யாய
செங்கண் மாலை காலை சென்று சேர்நர் சேர்வர்
சோதி சேர்ந்த சித்தி தானே." [1]

இது **பதின்சீர்க் கழிநெடிலடி**யான் வந்த செய்யுள். பிறவும் வந்துழிக் கண்டுகொள்க.

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்"

இஃது இரண்டடியான் **வெண்பாவிற்குச் சிறுமை** வந்தவாறு.

"முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலையன் ஒள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே" [2]

இது மூன்றடியான் **ஆசிரியப்பாவிற்குச் சிறுமை** வந்தவாறு.

"செல்வப்போர்"—இது நான்கடியாற் **கலிப்பாவிற்குச் சிறுமை** வந்தவாறு.

"செங்கண்மேதி கரும்புழக்கி
அங்கணீலத் தலரருந்திப்
பொழிற்காஞ்சி நிழற்றுயிலும்
செழுநீர்
நல்வயற் கழனி யூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே." [3]

இது மூன்றடியான் **வஞ்சிப்பாவிற்குச் சிறுமை** வந்தவாறு. பிறவுமன்ன.

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 25
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 13

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 32, 73
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 15

3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ, 15.
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 15

இனி, "எழுத்துஅசை சீர்......செந்தொடையே" என்பதற்கு உதாரணம். **அந்தாதித்தொடை** வருமாறு:—

" உலகுடன் விளக்கும் ஒளிதிக ழவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி யறிவன்
ஆசனத் திருந்த திருந்தொளி யறிவனை
அறிவுசே ருள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர் தன்னிய
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே." 1

இது **நான்கந்தாதித் தொடையும்** வந்த செய்யுள். இனி **இரட்டைத்தொடை செந்தொடைகள்** வருமாறு:—

" ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்
விளக்கினிற் சிறெரி ஒக்குமே ஒக்கும்
குளக்கொட்டிப் பூவின் நிறம்." 2

இஃது ஓரடிமுழுதும் வந்தமொழியே வந்தமையால் **இரட்டைத்தொடை.**

" பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலினம் அகவும் நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே." 3

---

1 திருப்பாமாலை, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 52
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 18
தொல்காப்பியம், செய்யுளியல் நூ. 98, இளம். மேற்கோள்

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 51, 53
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 18
தொல்காப்பியம், செய்யுளியல். நூ. 91, பேரா., இளம். மேற்கோள்

3 தமிழ்நெறி விளக்கம்—17, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 50
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 18
தொல்காப்பியம், செய்யுளியல், நூ. 100, பேராசிரியருரை மேற்கோள்

இது மோனை முதலாகிய தொடையின்றி வந்தமையாற் **செந்தொடை**; பிறவுமன்ன. **(5)**

## தொடை வகைகள், தொடை விகற்பங்கள்

6 தொடைஎழுவாய் எழுத்துஒன்றின் மோனைஇயைபு இறுதி
சொல்லிரண்டாம் எழுத்துஒன்றின் எதுகைபொருள் மொழிகள்
உடன்முரணின் முரண்அளபு வருதல்அடி அளவே
உயர்இருசீர் இணைதல்இணை முதலொடுமூன் றாஞ்சீர்
அடைபொழிப்பு நடுஇருசீர் அகறல்ஒரூஉ அடியின்
அடர்தருமுச் சீர்கூழை முதல்அயற்சீர் நீங்கல்
கெடலருமேற் கதுவாயே ஈற்றயற்சீர் நீங்கல்
கீழ்க்கதுவாய் சீர்முழுதும் கிடைத்திடில்முற் றாமே.

"தொடைஎழுவாய் எழுத்து ஒன்றின் மோனை" — என்றது, அடிதோறும் முதலெழுத்து ஒன்றிவரத்தொடுப்பது **அடிமோனைத்தொடை**. "இயைபு இறுதி" என்றது, அடிதோறும் இறுதியெழுத்து ஒன்றிவரத்தொடுப்பது **அடியியைபுத்தொடை**. "சொல்லிரண்டாம் எழுத்து ஒன்றின் எதுகை" என்றது, அடிதோறும் இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது **அடியெதுகைத்தொடை**. "பொருள் மொழிகள்உடன் முரணின் முரண்" என்றது, பொருளானேயாயினும், சொல்லானேயாயினும் அடிதோறும் முதன்மொழிக்கண் மறுதலைப் படத் தொடுப்பது **அடிமுரண்தொடை**. "அளபு வருதல் அடிஅளவே" என்றது, அடிதோறும் முதன்மொழிக்கண் அளபுவரத் தொடுப்பது, **அடியளபெடைத் தொடை**. "உயர்இருசீர் இணைதல்இணை ..........சீர்முழுதும் கிடைத்திடில் முற்றாமே" என்றது, முன்சொன்ன மோனை இயைபு எதுகை முரண் அளபு என்னும் இவ்வைந்தினும் இணை பொழிப்பு ஒரூஉ கூழை மேற்கதுவாய் கீழ்க்கதுவாய் முற்று என்னும் இவை ஏழுங்கூட்டி உறழ முப்பத்தைந்து தொடையாம்; எ-று. வரலாறு:- இணைமோனைத்தொடை, பொழிப்புமோனைத்தொடை, ஒரூஉமோனைத்தொடை, கூழைமோனைத்தொடை, மேற்கதுவாய் மோனைத் தொடை, கீழ்க்கதுவாய் மோனைத்தொடை, முற்றுமோனைத்தொடை எனவும், இவ்வாறே இயைபு எதுகை முதலியவற்றோடு ஒட்டியும் ஆகத் **தொடை முப்பத்தைந்தாமாறு** கண்டுகொள்க.

" மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடையின்
மாயோள் இன்னுயிர்ப் புறத்திறுத் தற்றே. " 1

இஃது அடிதோறும் முதலெழுத்தொன்றிவரத் தொடுத்தமையால் **அடிமோனைத்தொடை.**

" இன்னகைத் துவர்வாய்க் கிளவியும் அணங்கே
நன்மா மேனிச் சுணங்குமார் அணங்கே
ஆடமைத் தோளிக் கூடலும் அணங்கே
அரிமதர் மழைக்கணும் அணங்கே
திருநுதற் பொறித்த திலகமும் அணங்கே. " 2

இஃது அடிதோறும் இறுதியெழுத்தொன்றிவரத் தொடுத்தமையால் **அடியியைபுத்தொடை.**

" தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியு
மாம்பழக் கனிகளும் மதுத்தண் டட்டமுந்
காம்பழுத் துளசில தவள மாடமே. " 3

இஃது அடிதோறும் இரண்டாமெழுத்தொன்றிவரத் தொடுத்தமையால் **அடியெதுகைத்தொடை.**

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 35, 37
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 18, 41

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 40
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 18

3 சூளாமணி—49, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 24
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 13

"இருள்பரந் தன்ன மாநீர் மருங்கில்
நிலவுக்குவித் தன்ன வெண்மணல் ஒருசிறை
இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னின் அன்ன நுண்டா திறைக்கும்
சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணும் உடையவால் அணங்கே." 1

இஃது அடிதோறும் முதற்சீர் மறுதலைப்படத் தொடுத்தமையால் **அடிமுரண்தொடை.**

"ஆஅ அளிய அலவன்றன் பார்ப்பினோ
டிஇர் இரைகொண் டீரளைப் பள்ளியுள்
தூஉம் திரையலைப்பத் துஞ்சா திறைவன்தேர்
மேஎ வலைப்பட்ட நம்போல் நறுநுதால்
ஓஒ உழக்கும் துயர்." 2

இஃது அடிதோறும் அளபெடுத்தொன்றி வரத் தொடுத்தமையால் **அடியளபெடைத்தொடை.**

இனி **இணைமோனை** முதலாகிய தொடை வருமாறு:

"அணிமலர் அசோகின் தளிர்நலம் கவற்றி
அரிக்குரற் கிண்கிணி அரற்றும் சீறடி
அம்பொற் கொடிஞ்சி நெடுந்தேர் அகற்றி
அகன்ற அல்குல் அந்நுண் மருங்குல்
அரும்பிய கொங்கை அவ்வளை அமைத்தோள்
அவிர்மதி யனைய திருநுதல் அரிவை
அயில்வேல் அனுக்கி அம்பலைத்(து) அமர்த்த
கருங்கயல் நெடுங்கண் நோக்கமென்
திருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே." 3

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 38
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 18

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 41
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 18

3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 35
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 20

இதனுள் **இணைமோனை** முதலாகிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

"மொய்த்துடன் தவழும் முகிலே பொழிலே
மற்றதன் அயலே முத்துறழ் மணலே
நிழலே இனியதன் அயலது கடலே
மாதர் நகிலே வல்லே இயலே
வில்லே நுதலே வேற்கண் கயலே
பல்லே தவளம் பாலே சொல்லே
புயலே குழலே மயிலே இயலே
அதனால்
இவ்வயின் இவ்வுரு இயங்கலின்
எவ்வயி னோரும் இழப்பர்தம் நிறையே." 1

இதனுள் **இணையியைபு** முதலாகிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

"பொன்னின் அன்ன பொறிசுணங் கேந்திப்
பன்னருங் கோங்கின் நன்னலங் கவற்றி
மின்னவிர் ஒளிவடந் தாங்கி மன்னிய
நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி
என்னையும் இடுக்கண் துன்னுவித் தின்னடை
அன்ன மென்பெடை போலப் பன்மலர்க்
கன்னியம் புன்னை இன்னிழல் துன்னிய
மயிலேய் சாயல் வாணுதல்
அயில்வேல் உண்கணெம் அறிவுதொலைத் தனவே." 2

இதனுள் **இணையெதுகை** முதலாய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 40
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 20

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 36
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 23

"சீறடிப் பேரகல் அல்குல் ஒல்குபு
சுருங்கிய நுசுப்பிற் பெருகுவடந் தாங்கிக்
குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து
சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைநின்
வெள்வளைத் தோளும் சேயரிக் கருங்கணும்
இருக்கையும் நிலையும் ஏந்தெழில் இயக்கமும்
துவர்வாய்த் தீஞ்சொலும் உவந்தனை முனியா(து)
என்றும் இன்னணம் ஆகுமதி
பொன்திகழ் நெடுவேற் போர்வல் லோயே." 1

இதனுள் **இணைமுரண்** முதலான எழுவிகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

"தாஅட் டாஅ மரைமலர் உழக்கிப்
பூஉக் குவளைப் போஒ தருந்திக்
காஅய்ச் செந்நெற் கதிர்த்துப் போஒய்
மாஅத் தாஅள் மோஒட் டெருமை
தேஎம் புனலிடைச் சேஒர் பாஅல்
மீஇன் ஆஅர்ந் துகளுஞ் சீஇர்
ஏஎ றாஅ நீஇன் நீஇர்
ஊரன் செய்த கேண்மை
ஆய்வளைத் தோளிக் கலரா னாவே" 2

இதனுள் **இணையளபெடைத்தொடை** முதலாகிய எழுவிகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க. (6)

(தொடை முற்றும்)

உறுப்பியல் முற்றும்.

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 38
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 20

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 41
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 20

## 2. செய்யுளியல்

7. ஆர்வெண்பா அகவல்கலி வஞ்சிப்பா நான்கின்

அளவடிவெண் பாச்செப்பல் இசைமுச்சீர் அந்தம்

கூர்காசு பிறப்புநாள் மலர்முடிவுஈ ரடிவெண்

குறள்குறள்வெண் பாஇரண்டாய் ஓர்ஆசுஈர் ஆசு

நேருகினும் தனிச்சொல்பெற்று ஒன்றிரண்டு விகற்பம்

நேரிசைவெண் பாத்தனிச்சொல் இன்றிஅடி நான்காய்ப்

பார்விகற்பம் ஒன்றுபல இன்னிசைவெண் பாஅப்

படிஅடிஈ ராறுவரும் பஃறொடைவெண் பாவே.

என்பது சூத்திரம்.

"**ஆர்வெண்பா அகவல்கலி வஞ்சிப்பா நான்கின்**" எ—து. **வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா** எனப் பா நான்காம். ஆறென்னும் விதப்பினால் **இனமாவன:- தாழிசை, துறை. விருத்தம்** என வரும். அவையாவன:— வெண்பா, வெண்டாழிசை, வெண்டுறை, வெள்விருத்தம் எனவும்; ஆசிரியப்பா, ஆசிரியத் தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம் எனவும்; கலிப்பா, கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம் எனவும்; வஞ்சிப்பா, வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம் எனவும் வரும். இவற்றிற்குதாரணம் முன்னர்க்காட்டுதும்.

"**அளவடி வெண்பாச் செப்பல்இசை முச்சீர் அந்தம் கூர் காசு பிறப்பு நாள் மலர் முடிவு**" என்பது நான்கு பாவினுள் வெண்பாவாவது, அளவடியுஞ் செப்பலோசையும் முடிவிலடி முச்சீருங் காசு பிறப்பு நாள் மலரென்னும் முச்சீருள் முடிவிற் சீரும் பெற்று வருமென்பது—வெண்பாக்களுக்குப் பொதுவிலக்கணம்.

"**ஈரடி வெண்குறள்**" என்பது இரண்டடியாய் வருவது **குறள் வெண்பாவாம்.**

"**குறள்வெண்பா இரண்டாய் ஓர்ஆசு ஈர்ஆசு நேருகினும் தனிச்சொல்பெற்று ஒன்றிரண்டு விகற்பம் நேரிசைவெண்பா**" என்பது குறள்வெண்பா இரண்டாய் ஓராசு பெற்றும் ஈராசு பெற்றும், உம்மையால் ஓராசும் ஈராசும் பெறாதுமாய், எடுத்த எதுகைக்கேற்ற தனிச்சொற் பெற்று ஒருவிகற்பமாகியும் இருவிகற்ப மாகியும் வருவன **நேரிசைவெண்பா.**

"**தனிச்சொல்இன்றி அடி நான்காய்ப் பார் விகற்பம் ஒன்று பல இன்னிசை வெண்பா**" என்பது, தனிச்சொல்லின்றி நாலடியாய் ஒரு விகற்பமும் பல விகற்பமுமாகி வருவன **இன்னிசை வெண்பா.**

"**அப்படி அடி ஈராறு வரும் பஃறொடை வெண்பா**" என்பது இன்னிசை வெண்பாப் போலத் தனிச்சொல்லின்றி ஒரு விகற்பமும் பலவிகற்பமும் பெற்று ஐந்தடி முதலாகப் பன்னிரண்டடியளவும் வருவன **பஃறொடைவெண்பா** என்றவாறு.

இவற்றிற்கு உதாரணம் :—

"**பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்**
**உன்னேனென் றூழுக்கை பற்றியேற்—கென்னோ**
**மனனொடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்**
**புனனாடன் பேரே வரும்.**" [1]

இஃது அளவடியானுஞ் செப்பலோசையானும் வந்தமையால் **வெண்பா.**

"**இன்னகைத் துவர்வாய்க் கிளவியும் அணங்கே**
**நன்மா மேனிச் சுணங்குமார் அணங்கே**
**ஆடமைத் தோளிக் கூடலும் அணங்கே**
**அரிமதர் மழைக்கணும் அணங்கே**
**திருநுதற் பொறித்த திலதமும் அணங்கே**" [2]

இஃது அளவடியானும் அகவலோசையானும் வந்தமையால் **ஆசிரியப்பா.**

"**அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்**
**பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்**
**புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்**
**பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநம் காதலர்**
**வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி;**

இது **தரவு.**

---

1 இந்நூலின் 11ஆம்பக்க அடிக்குறிப்பு எண் 2ஐக் காண்க.

2 இந்நூலின் 21ஆம் பக்க அடிக்குறிப்பு எண் 2ஐக் காண்க.

அடிதாங்கும் அளவன்றி அழலன்ன வெம்மையால்
கடியவே கனங்குழாய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவும் உரைத்தனரே;

இன்பத்தின் இகந்தொரீஇ இலைதீந்த உலவையால்
துன்புறூஉந் தகையவே காடென்றார் அக்காட்டுள்
அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவும் உரைத்தனரே;

கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலால்
துன்னரூஉந் தகையவே காடென்றார் அக்காட்டுள்
இன்னிழல் இன்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவும் உரைத்தனரே.

இவை மூன்றும் **தாழிசை.**

எனவாங்கு.

**(தனிச்சொல்)**

இனைநலம் உடைய கானஞ் சென்றார்
புனைநலம் வாட்டுநர் அல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழில் உண்கணும் ஆடுமால் இடனே" [1]

இது **சுரிதகம்**

இஃது அளவடியானும் துள்ளலோசையானும் வந்தமையால் **கலிப்பா.**

"சுறமறிவன துறையெல்லாம்
இறவின்பன வில்லெல்லாம்
மீன்றிரிவன கிடங்கெல்லாம்
தேன்றாழ்வன பொழிலெல்லாம்
எனவாங்குத்

1 கலித்தொகை 11, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 27
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 22

தண்பணை தழீஇய இருக்கை
மண்கெழு நெடுமதில் மன்ன னூரே." [1]

எனவும்,

"தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடுத்தோண்மேல்
பன்னலத்த கலந்தொலையைப் பரிவெய்தி
என்னலத்தகை இதுவென்னென எழில்காட்டிச்
சொன்னலத்தொகைப் பொருள்கருத்தி னிற்சிறந்தாங்(கு)
எனப்பெரிதும்
கலங்கஞர் எய்தி விடுப்பவுஞ்
சிலம்பிடைச் செலவுஞ் சேணிவந் தற்றே." [2]

எனவும், இவை, குறளடி சிந்தடியானுந் தூங்கலோசையானும் வந்தமையால் **வஞ்சிப்பா** எனவரும்.

இனி **வெண்பா**வுக்கு வரலாறு:—

"அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரங் கொண்டு—தெரியிற்
கரிய வரைநிலையார் காய்ந்தாலென் செய்வார்
பெரிய வரைவயிரங் கொண்டு." [3]

இது **காசு** என முடிந்தது.

"உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்(கு)
அச்சாணி அன்னார் உடைத்து." [4]

இது **பிறப்பு** என முடிந்தது.

---

1 இந்நூலின் 12-ஆம் பக்க அடிக்குறிப்பு எண் 1ஐக் காண்க.

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 26, 90
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 22

3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 60
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 23

4 திருக்குறள் 667, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 59
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 23

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்" [1]

இது **நாள்** என முடிந்தது.

"பொன்னார மார்பில் ......... வரும்"

இது **மலர்** என முடிந்தது.

அடைவே **காசு பிறப்பு நாள் மலர்** எனவும் ஈற்றடி முச்சீரும் வந்தவாறு கண்டுகொள்க.

இனி '**பாலொடுதேன்**' எனவும், '**உருவுகண்டெள்ளாமை**' எனவும், ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத்தானும் வந்தமையாற் **குறள்வெண்பா.**

"தடமண்டு தாமரையின் தாதா டலவன்
இடமண்டிச் செல்வநளைக் கண்டு—பெடைநெண்டு
நாழிக் கதவடைக்கும் புத்தூரே பொய்கடிந்து
ஊழி நடாயினான் ஊர்" [2]

எனவும்,

"அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரங் கொண்டு—தெரியிற்
கரிய வரைநிலையார் காய்ந்தாலென் செய்வார்
பெரிய வரைவயிரங் கொண்டு" [3]

எனவும், இவை இரண்டு குறள்வெண்பா நடுவு முதற்றொடைக்கேற்ற தனிச்சொல்லால் அடிநிரம்பி இரண்டு விகற்பத்தானும் ஒரு விகற்பத்தானும் வந்தமையால் **இருகுறள்நேரிசைவெண்பா.**

---

1 திருக்குறள் 667, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 59
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 23

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 60
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 23

3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 60
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 23

" கருமமும் உள்படாப் போகமுந் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா—ஒருநிலையே
முட்டின்று மூன்று முடியுமேல் அஃதென்ப
பட்டினம் பெற்ற கலம் " 1

எனவும்,

" வஞ்சியே னென்றவன்றன் ஊருரைத்தான் யானுமவன்
வஞ்சியான் என்பதனால் வாய்நேர்ந்தேன்—வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியேன் என்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ. " 2

எனவும்,

ஓரசையானும் ஈரசையானும் ஆசிட்டு இருவிகற்பத்தானும் ஒருவிகற்பத்தானும் வந்த இருகுறணேரிசை வந்தவாறு கண்டுகொள்க

இனி:—

" வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாணாள்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார். " 3

இது, நான்கடியாய்த் தனிச்சொலின்றி ஒருவிகற்பத்தால் வந்த **இன்னிசைவெண்பா.**

---

1 நாலடியார், அறிவுடைமை 10, யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா 23

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 60
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள். கா. 23

3 நாலடியார், அறன்வலியுறுத்தல் 9, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 57
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 24

"இன்னாமை வேண்டின் இரவெழுக—இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க—வெல்வது
வேண்டின் வெகுளி விடல்." [1]

இஃது அடிதோறும் ஒரூஉத்தொடைவிரவிப் பலவிகற்பத்தான் வந்த இன்னிசைவெண்பா.

"இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையான்
மருவுமின் மாண்டார் அறம்." [2]

இஃது இருவிகற்பத்தால் வந்த இன்னிசைவெண்பா.

பிறவுமன்ன.

"சேற்றுக்கா னீலஞ் செருவென்ற வேந்தன்வேல்
கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயல்போல்
தோற்றந் தொழில்வடிவு தம்முள் தடுமாற்றம்
வேற்றுமை இன்றியே ஒத்தன மாவேடர்
ஆற்றுக்கால் ஆட்டியர் கண்." [3]

இஃது ஐந்தடியான் வந்த ஒருவிகற்பப் பஃறொடைவெண்பா.

---

1 யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 24

2 நாலடியார், அறன் வலியுறுத்தல் 6,
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 24

3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 62
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 24
தொல்காப்பியம், இளம்பூரணருரை, செய்யுளியல் நூ. 114

" பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெருவில்
என்னொடு நின்றார் இருவர் அவருள்ளும்
பொன்னோடை நன்றென்றாள் நல்லளே பொன்னோடைக்
கியானைநன் றென்றாளும் அந்நிலையள் யானை
எருத்தத் திருந்த இலங்கிலைவேற் றென்னன்
திருத்தார்நன் றென்றேன் தியேன்." 1

இஃது ஆறடியான் வந்த பலவிகற்பப் பஃறொடை வெண்பா.

" வையக மெல்லாம் கழனியாம்; வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள்;-செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு;--வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள்;-சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாம்;-கட்டியுள்
தானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சி யகம்" 2

இது பலவிகற்பத்தான் வந்த பஃறொடைவெண்பா. (1)

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 62
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 24
தொல்காப்பியம் இளம்பூரணருரை, செய்யுளியல் நூ. 114

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 62
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 24

8 பலஅடியாய் அளவிலவாய் ஒரூஉ எதுகை இரண்டாம்
பாதங்கள் தொறும்பெறினும் வெள்ளடிகுன் றாவாம்
கலிவெண்பா நேரிசை இன்னிசைபோல் மூன்று அடியேல்
கருதப்பேர் சிந்தியல்ஒப்பு ஈரடிசெந் துறைஈற்று
இலகுஅடிகுன் றுதல்குறட்டா ழிசைஅடிமூன் றாய்ச்சிந்து
ஈற்றடியாய் இறல்வெண்டா ழிசைஅடிமூன்று ஈறுஏழ்
குலவாழ் அந் தங்குறையும் வெண்டுறைநான் கடியும்
கொண்டுஅடிகள் தொறும் தனிச்சொல் பரவல்வெளி விருத்தம்.

**" பல அடியாய் அளவிலவாய் "** *என—து பலவடிகளாலும் பஃறொடை வெண்பா முதலான வெண்பாக்கள் போல அடிவரையறுத்துச் சொல்லாமல் அளவிலாத அடிகளையுடைத்தாய்;*

**" ஒரூஉ எதுகை இரண்டாம் பாதங்கள் தொறும் பெறினும் "** *என—து இரண்டாமடிகள்தோறும் தனிச்சொல்லாகிய ஒரூஉவெதுகையைப் பெறினும்.*

**" பெறினும் "** *என்பதனால் ஒரூஉவெதுகை பெறாமலுமாய்;*

**" வெள்ளடி குன்றாவாம் கலிவெண்பா "** *என—து வெள்ளடிக்குச் சொன்ன இலக்கணங்களிற் குறையாமல் வருவது* **கலிவெண்பா;**

**" நேரிசை இன்னிசைபோல் மூன்று அடியேல் கருதப் பேர் சிந்தியல் "** *என—து நேரிசை வெண்பாப் போலத் தனிச்சொற்பெற்றும் இன்னிசை வெண்பாப் போலத் தனிச்சொலின்றியும், மூன்றடியாய் வருமாயின் அவ்வப்பெயராலே நேரிசைச் சிந்தியல் வெண்பாவென்றும், இன்னிசைச் சிந்தியல் வெண்பாவென்றும் கொள்க. " பெயர் கருது " என்பதனால், அவைபோல ஒரு விகற்பமும் பல விகற்பமும் கொள்க.*

**" ஒப்பு ஈரடி செந்துறை "** *என—து இரண்டடியும் தம்முள் ஒத்துவருவது வெண்செந்துறை;*

**" ஈற்றுஇலகுஅடி குன்றுதல் குறட்டாழிசை "** *என—து பல சீராய் ஈற்றடி குறைந்து வருவது* **குறட்டாழிசை;** *(இவ்விரண்டுங் குறட்பாவினம்.)*

**" அடிமூன்றாய்ச் சிந்து ஈற்றடியாய் இறல் வெண்டாழிசை "** *என—து மூன்றடியாய் முடிவிலடி முச்சீராய் முடிவது வெண்டாழிசை,*

"அடிமூன்று ஈறுஏழ் குலவடி அந்தம் குறையும் வெண்டுறை" எ---து மூன்றடி முதலாய் ஏழடியிறாய் முடிவிலடி குறைந்து வருவது வெண்டுறை.

"நான்கடியும் கொண்டு அடிகள்தோறும் தனிச்சொல் பரவல் வெளிவிருத்தம்" எ---து நான்கடியும் மூன்றடியும் பெற்று அடிதோறும் இறுதியொருசொல் தனிச்சொல்லாய் வருவது வெளிவிருத்தம். எ---று. உம்மையான் மூன்றடியுங் கொள்ளப்பெற்றது.

உதாரணம்:---

" சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில்நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா வடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா இல்லிரே
உண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
அடற்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீர் ஊட்டிவா என்றாள் எனயானும்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்(டு)
அன்னா யிவனொருவன் செய்ததுகாண் என்றேனா
அன்னை யலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்." [1]

என்னும் பாட்டும் மடல் போல்வன பிறவும் தனிச்சொல்லின்றி வந்த கலிவெண்பா.

---

1 கலித்தொகை 51

யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 15

யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 31

" வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம்
வட்காற்மேற் செல்வது வஞ்சியா—முட்கா(து)
எதிரூன்றல் காஞ்சி எயில்காத்தல் நொச்சி
அதுவளைத்தல் ஆகும் உழிஞை—அதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கார்
செருவென் றதுவாகை யாம். " [1]

என்னும் பாட்டு முதலாயின போல்வன பிறவுந் **தனிச்சொற் பெற்று வந்த கலிவெண்பா.**

" நற்கொற்ற வாயில் நறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றும்வண் டார்ப்பப் புடைத்தாளே—பொற்றேரான்
பாலைநல் வாயின் மகள் " [2]

எனவும்,

" அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து
செறிந்தார்க்குச் செவ்வ னுரைப்பச்—சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு. " [3]

எனவும், இவை மூன்றடியால் நேரிசை வெண்பாப்போல் இரண்டாமடியினிறுதி தனிச்சொற் பெற்று இரு விகற்பத்தானும் ஒரு விகற்பத்தானும் வந்தமையால் **நேரிசைச் சிந்தியல் வெண்பா.**

---

1 பழைய செய்யுள், வீரசோழியப் பெருந்தேவனாருரை மேற்கோள், கா. 106

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 59, 95
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 25
தொல்காப்பியம் இளம்பூரணருரை, செய்யுளியல் நூ. 114

3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 59
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 25

" நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
பறநாட்டுப் பெண்டி ரடி." 1

எனவும்,

" சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை." 2

எனவும், இவை, மூன்றடியால் இன்னிசைவெண்பாப் போலத் தனிச் சொல்லின்றி ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத்தானும் வந்தமையால் **இன்னிசைச் சிந்தியல் வெண்பா.**

" முல்லை முறுவலித்துக் காட்டின மெல்லவே
சேயிதழ்க் காந்த ளுடுப்பின்ற போயினார்
திண்டேர் வரவுரைக்குங் கார்." 3

இதுவும் பலவிகற்பத்தான் வந்த **இன்னிசைச் சிந்தியல் வெண்பா.**

" ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை." 4

எனவும்,

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 59
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 25
தொல்காப்பியம், இளம்பூரணருரை, செய்யுளியல் நூ. 114

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 59, 95
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 25
தொல்காப்பியம் இளம்பூரணருரை செய்யுளியல், நூ. 114

3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 59
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 25

4 முதுமொழிக்காஞ்சி 1, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 19, 37, 63
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 26

" கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே. " [1]

எனவும், இவை, ஒழுகியவோசையும் விழுமிய பொருளும் பெற்று, இரண்டடியுந் தம்முளொத்து வந்தமையால் **குறள்வெண்செந்துறை.**

" நண்ணுவார்வினை நையநாடொறு நற்றவர்க்கர சாயஞானநற்
கண்மணிவாரவடியோ யடைவார்கள் கற்றவரே. " [2]

எனவும்,

" நீலமாகடல் நீடுவார்திரை நின்றபோற் பொங்கிப் பொன்று மாங்கவை
காலம்பல் காலஞ்சென்றபின் செல்வர் யாக்கை கழிதலுமே. " [3]

எனவும, இவை, பலசீராய் ஈற்றடி குறைந்து இரண்டடியாய் வந்தமையால் **குறட்டாழிசை.** (உரைத்த இரண்டுங் குறட்பாவினமே.)

" நண்பரி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர். [4]

இது, மூன்றடியாய் ஈற்றடி முச்சீராய்ப் பிறதளைவிரவி வெண்பாப் போல முடிந்தமையால் **வெண்டாழிசை.**

---

1 கொன்றைவேந்தன் 1, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 63
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 26

2, 3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 64
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 26

4 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 15, 66
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 27

" குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலைமேற் பாய
அழலெரியின் மூழ்கினவால் அந்நோ அரியான் றயல்வாழ் மந்தி
கலுழ்வனபோல் நெஞ்சயர்ந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாடன் நீப்பனோ வல்லன்." 1

இது, நான்கடியாய் ஈற்றடியிரண்டுஞ் சீர்குறைந்து வந்த **ஒரொலி வெண்டுறை.**

" ஆவா வென்றே அஞ்சினர் ஆழ்ந்நார்—ஒருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டார்—ஒருசாரார்
மாமா வென்றே மாய்ந்நனர் நீந்தார்—ஒருசாரார்
ஏகீர் நாகீர்! என்செய்தும் என்றார்—ஒருசாரார்." 2

எனவும்,

" கொண்டல் முழங்கினவால் கோபம் பரந்தனவால்—என்செய்கோயான்
வண்டு வரிபாட வார்தளவம் பூத்தனவால்—என்செய்கோயான்
எண்டிசையும் தோகை பரியைந்தகவி ஏங்கினவால்—என்செய்கோயான்." 3

எனவும், அடிதோறும் நாற்சீராய் நான்கடியாலும் மூன்றடியாலும் வந்து அடிதோறும் இறுதியிலே ஒருசொல்மேல தனிச்சொல்லாக வந்தமையால் **வெளிவிருத்தம்.** (2)

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 15, 67
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 27

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 37, 68
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 27, 41

3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 95
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 27

## ஆசிரியப்பாவின் வகையும் இனமும்

9 பரவுஅகவல் அகவலிசை அளவடிஈற் றயலில்
பாதமுச்சீர் நேரிசைஎவ் வடியும்அள வொத்தல்
அருநிலைமண் டிலர் இடைச்சீர் குன்றல்இணைக் குறளாம்
ஆதிநடு அந்தம்உ றின் அடிமறிமண் டிலஆ
சிரியம்மூன் றடிஒத்தல் தாழிசைநான் கு அடியாய்ச்
சீரிடையில் குறைதல்இடை மடக்கல்ஈற் றயலின்
மருவடிநை வதுதுறைநான் கடிஒத்துஆறு ஆதி
வளர்சீர்கள் பலவருதல் ஆசிரிய விருத்தம்.

என்பது சூத்திரம்.

" **பரவுஅகவல்......நேரிசை** " என்பது, அகவலோசையும் அளவடியும் உடைத்தாய் ஈற்றயலடி முச்சீராய் வருவது **நேரிசையாசிரியப்பா;**

" **எவ்வடியும் அளவொத்தல் அருநிலைமண்டிலர்** " என்பது, எல்லாவடியுந் தம்முள் ஒத்துமுடிவது **நிலைமண்டிலவாசிரியப்பா;**

" **இடைச்சீர் குன்றல் இணைக்குறளாம்** " என்பது, இடையிடையே இருசீரடியானும் முச்சீரடியானும் வருவது **இணைக்குறளாசிரியப்பா;**

" **ஆதி நடு அந்தம் உறின் அடிமறிமண்டில ஆசிரியம்** " என்பது, எல்லா வடியும் முதல்நடு இறுதியாக உச்சரித்தாலும் பொருள் ஒத்து முடிவது **அடிமறி மண்டில ஆசிரியப்பாவாம்;**

" **மூன்றடி ஒத்தல் தாழிசை** " என்பது, மூன்றடியுந் தம்முளொத்து வருவது **ஆசிரியத்தாழிசை;**

" **நான்கடியாய்ச் சீர் இடைகுறைதல் இடைமடக்கல் ஈற்றயலின் மருவடி நைவது துறை** " என்பது, நான்கடியாய் இடையிடை சீர்குறைந்தும் இடைமடக்கியும் ஈற்றயலடி குறைந்தும் வருவது **ஆசிரியத்துறை;**

" **நான்கடி ஒத்து ஆறு ஆதி வளர்சீர்கள் பலவருதல் ஆசிரியவிருத்தம்** " என்பது, நான்கடியுந் தம்முளொத்து அடிதோறும் அறுசீர் முதலான சீரை யுடைத்தாய் வருவது **ஆசிரியவிருத்தம்** என்றவாறு.

இவற்றிற்கு உதாரணம் :

" அணிமலர் அசோகின் தளிர்நலங் கவற்றி
அரிக்குரற் கிண்கிணி அரற்றும் சீறடி
அம்பொற் கொடிஞ்சி நெடுந்தேர் அகற்றி
அகன்ற அல்குல் அந்நுண் மருங்குல்
அரும்பிய கொங்கை அவ்வளை அமைத்தோள்
அவிர்மதி யனைய திருநுதல் அரிவை
அயில்வேல் அனுக்கி அம்பலைத்(து) அமர்த்த
கருங்கயல் நெடுங்கண் நோக்கமென்
திருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே " 1

இஃது ஈற்றயலடி முச்சீரான வந்தமையால் **நேரிசை ஆசிரியப்பா.**

" வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே." 2

இஃது அளவடியாய் எல்லாவடியுந் தம்முள் ஒத்து வந்தமையால் **நிலைமண்டில ஆசிரியப்பா.**

" நீரின் தண்மையுந் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீருஞ்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாவே." 3

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 35
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 20

2 குறுந்தொகை 18, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 53, 74
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 28

3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 72
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 28
தொல். செய். இளம்பூரணருரை, பேராசிரியருரை நூ. 66

" சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயு மன்னே
அம்பொடு வேல்நுழை வழியெல்லாந் தானிற்கு மன்னே
நரந்த நாறுந் தன்கையாற்
புலவு நாறும் என்றலை தைவருமன்னே
அருந்தலை இரும்பாணர் அகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவன்
அருநிறத் தியங்கிய வேலே
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப் பாடுநரு மில்லைப்
பாடுநருக்கொன் றீகுநரு மில்லை.
பனித்துறைப் பகன்றை நறைக்கொள் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்(று)
ஈயாது வீயும் உயிர்தவப் பலவே. " 1

இவை இடையடிகள் ஒரு சீரும் இரு சீருங் குறைந்து வந்தமையால் **இணைக்குறளாசிரியப்பா.**

" சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
வாரல் எனிலே யானஞ் சுவலே
சாரல் நாட நீவர லாறே. " 2

இஃது எல்லாவடியும், முதல்நடு இறுதியாக, உச்சரித்து, **அடிமறிமண்டிலம்** ஆமாறு கண்டுகொள்க.

---

1 புறநானூறு 235, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 72
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 28

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 73, 95
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 28
தொல். செய். இளம்பூரணருரை மேற்கோள், நூ. 113

" கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமேல் அவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி !"

" பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி !"

" கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமேல் அவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி " 1

இவை மூன்றடியாய் ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்தமையால் **ஆசிரியத்தாழிசை.**

" வானுற நிமிர்ந்தனை வையகம் அளந்தனை
பான்மதி விடுத்தனை பல்லுயிர் ஓம்பினை
நீனிற வண்ணனின் நிறைகழல் தொழுதவம் " 2

இது தனியே வந்த ஆசிரியத்தாழிசை.

" கொன்றார்ந் தமைந்த குருமுகத் தெழினிறக் குருதிக்
கோட்டின விருந்நாட் பெருங்கைக்
குன்றாமென வன்றாமெனக் குமுறா நின்றன
கொடுந்தொழில் வேழம்;

---

*1 சிலப்பதிகாரம் 17:1—3, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ 75*

*யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா 29*

*2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 75*

*யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 29*

வென்றார்ந் தமைந்த விளங்கொளி மிளம்பிறைத்
துளங்குவா ரிலங்கெயிற் றழலுளைப் பருஉத் தா
ளதிரும் வானென வெதிருங் கூற்றெனச்
சுழலா நின்றன சுழிக்கண் யாளி;

சென்றார்ந் தமைந்த சிறுநுதி வள்ளுகிர்ப்
பொறிபொருத் தெறுழ்வலிப் புலவுநா றழல்வாய்ப்
புனலாமெனக் கனலாமெனப்
புகையா நின்றன புலிமானேற்றை;

என்றாங் கிவையிவை மரியங்கலி னெந்திறத்
திரிவரல் வேண்டலந் தனிவர லெனத்தலை
விலக்கலி னிறுவரை மிசைபொறி குறும்பிடை
மிதுவென் னெவ்வது நோவார் காவிர
விடைக்கண வுளமது கற்றோரது கற்பன்றே. ' 1

இது நான்கடியாய் முதலடியும் மூன்றாமடியும் பதினான்கு சீராய் ஏனையடியிரண்டும் பதினாறு சீராய் இடையிடை குறைந்துவந்த **ஆசிரியத்துறை.**

" இரங்கு குயில்முழவா இன்னிசையாழ் தேனா
அரங்கம் அணிபொழிலா ஆடும்போலும் இளவேனில்
அரங்கம் அணிபொழிலா ஆடு மாயின்
மரங்கொல் மணந்தகன்றார் நெஞ்சமென் செய்த திளவேனில். " 2

இது நான்கடியாய் இடையிடை குறைந்து இடைமடக்காய் வந்த **ஆசிரியத்துறை.**

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 16, 25, 76
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 29

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 52, 76, 95
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 29

" கரைபொரு கான்யாற்றங் கல்லதர் எம்முள்ளி வருதிராயின்
அரையிருள் யாமத் தடுபுலி யேறஞ்சி யகன்று போக
நரையுரு மேறுநுங் கைவேலஞ்சு நும்மை
வரையர மங்கையர் வௌவுத லஞ்சுதும் வாரலையோ. " [1]

இது நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வந்த **ஆசிரியத்துறை.**

" இரைக்கும் அஞ்சிறைப் பறவைகள் " [2]

இஃது அறுசீர்க் கழிநெடிலடியான் வந்த **ஆசிரியவிருத்தம்.**

" கணிகொண் டலர்ந்த " [3]

இஃது எழுசீர்க் கழிநெடிலடியான் வந்த **ஆசிரியவிருத்தம்.**

" இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியின் " [4]

இஃது ஒன்பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த **ஆசிரியவிருத்தம்.**

" கொங்கு தங்கு கோதை யோதி மாதரோடு " [5]

இது பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த **ஆசிரிய விருத்தம்.** (3)

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 76
தொல்காப்பியம், இளம்பூரணருரை மேற்கோள், செய்யுளியல் நூ. 175
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 29

2 சூளாமணி 877, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 25
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 13

3 சூளாமணி 1327, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 25
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 13

4, 5 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள் நூ. 25
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 13

## கலிப்பா வகை

10 ஆசுஇல்இசை துள்ளல்அள வடிகலிப்பாத் தரவுஒன்(று)
அடைவில்தா ழிசைமூன்றும் தனிச்சொல்சுரி தகமாம்
மாசுஇலநே ரிசையொத்தா ழிசைக்கலிப்பா அளவே
மன்சிந்து குறள்அடித்தா ழிசைப்பின்பு வருமேல்
ஏசில்அம்போ தரங்கஒத்தா ழிசைக்கலிப்பா; இவற்றோ(டு)
இடைஅரா கம்வரில்வண் ணகஒத்தா ழிசையே;
பேசியவெண் பாஇயைந்து சிந்தடியீற் றடியாய்ப்
பிறதளைதன் றளையோசை பெறுவதுவெண் கலிப்பா.

"ஆசுஇல்இசை துள்ளல் அளவடி கலிப்பா" எ—து, துள்ளலோசை யினையும் அளவடியினையும் உடையது **கலிப்பா**.

"தரவு ஒன்று அடைவில் தாழிசை மூன்றுந் தனிச்சொல் சுரிதகமாய் மாசுஇல நேரிசையொத்தாழிசைக்கலிப்பா" எ—து, தரவொன்றும் தாழிசை மூன்றுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமுமாய் வருவது **நேரிசையொத்தாழிசைக் கலிப்பா;**

"அளவே மன்சிந்து குறள்அடித் தாழிசைப் பின்பு வருமேல் ஏசில் அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பா" எ—து, முன்போலத் தரவுந் தாழிசையும், பின்பு நாற்சீரடியானும் முச்சீரடியானும் இருசீரடியானும் வந்த அம்போதரங்கமும் உடைத்தாய்த் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்றுவருவது **அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பா.**

"இவற்றோ(டு) இடை அராகம் வரில் வண்ணக ஒத்தாழிசையே" எ—து, இந்த அம்போதரங்க உறுப்பையும் உடைத்தாய்த் தாழிசைக்கும் அம்போதரங்கத்துக்கும் இடையே அராக உறுப்பைப் பெற்றுவருவது **வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா.**

"பேசிய வெண்பா இயைந்து சிந்தடி ஈற்றடியாய்ப் பிறதளை தன்றளை யோசை பெறுவது வெண்கலிப்பா" எ—து, வெண்பாவின் நடைத்தாய் ஈற்றடி சிந்தடியாய்த் தன்றளையாகிய கலித்தளையையும் பிற தளையையும் பெற்றுக் கலியோசையினையுடைத்தாய் வருவது **வெண்கலிப்பா** எ—று.

இவற்றிற்கு உதாரணம் :—

வாளொடுங்கண் பனிகூர வண்ணம்வே றாய்த்திரிந்து
தோணெடுந் தகைதுறந்து தூய்பாங்கர் பசப்பினவாய்
பூணொடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ;

இது **தரவு.**

தூருடைய கடுங்கடங்கள் செலற்கரிய என்பவால்
சீருடைய நலந்தொலையப் பிரிவரோ பெரியவரே;

சேறுடைய கடுங்கடங்கள் செலற்கரிய என்பவால்
நாறுடைய நலந்தொலைய நடப்பரோ நல்லவரே;

சிலம்படைந்த வெங்கானஞ் சீரிலவே என்பவால்
புலம்படைந்த நலந்தொலையப் போவரோ பொருளிலரே;

இவை மூன்றுந் **தாழிசை.**

எனவாங்கு,

**(தனிச்சொல்)**

அருளெனும் இலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னெடுந் தேரொடுந் தானையிற் பொலிந்தே" 1

இது **சுரிதகம்.**

இது, தரவு மூன்றடியாய்த் தாழிசை மூன்றும் இரண்டடியாய்த் தனிச்சொற்பெற்று மூன்றடியாசிரியச் சுரிதகத்தால் இற்ற **நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பா.**

கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் தொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைய
அழல்விரி சுழல்செங்கண் அரிமாவாய் மலைந்தானைத்
தாரொடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
ஆர்புனல் இழிகுருதி அகலிடம் உடனனைப்பக்
கூருகிரால் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்;

இது **தரவு.**

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 82

யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 30

முரசதிர வியன்மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்லர்
அடியொடு முடியிறுப்பப்புண் டார்ந்தவண் நிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ;

கலியொலி வியனுலகங் கடந்துட னனிநடுங்க
வலியியல் அவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணாதார் உடம்போடு மறம்பிதிர வெதிர்கலங்கிச்
சேணுயர் நெடுவிசும்பிற் சிதைத்ததுநின் சினமாமோ;

படுமணி இனநிரைகள் பரந்துடன் இரிந்தோடக்
கடுமுரண் எதிர்மலைந்த காரொலி எழிலேறு
வெரிநொடு மருப்பொசிய விழ்ந்துதிறல் வேறாக
எருமலி பெருந்தொழுவில் இறுத்ததுநின் விறலாமோ;

இவை மூன்றுந் தாழிசை.

இலங்கொளி மரகத எழில்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅல் நின்னிறம்;

விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையும் நின்னுடை;

இவை பேரெண்.

கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை;
தண்சுடர் உறுபகை தவிர்த்த ஆழியை;
ஒலியியல் உவணம் ஓங்கிய கொடியினை;
வலிமிகு சகடம் மாற்றிய அடியினை;

இவை அளவெண்.

போரவுணர்க் கடந்தோய் நீஇ;
புணர்மருதம் பிளந்தோய் நீஇ;
நீரகல மளந்தோய் நீஇ!
நிழறிகழும் படையோய் நீஇ.

இவை இடையெண்.

ஊழி நீஇ; உலகு நீஇ; உருவு நீஇ; அருவு நீஇ;
ஆழி நீஇ; அருளு நீஇ; அறமு நீஇ; மறமு நீஇ;

இவை சிற்றெண்.

எனவாங்கு,

(தனிச்சொல்)

அடுதிறல் ஒருவநிற் பரவுதும் எங்கோன்
தொடுகழற் கொடும்பூட் பகட்டெழில் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வேல் அச்சுதன்
தொன்றுமுதிர் கடலுலகம் முழுதுடன்
ஒன்றுபுரி திகிரி உருட்டுவோன் எனவே.[1]

இது **சுரிதகம்.**

இஃது எட்டும் பதினாறுமென்று சொல்லப்பட்டவை குறைந்து முச்சீரடி நான்கும் இருசீரடி யெட்டுமாய் வந்த அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா. எட்டும் பதினாறுமென்பன குறையாமல் வந்தவாறு, **யாப்பருங்கலவிருத்தியுட்** கண்டுகொள்க.

விளங்குமணிப் பசும்பொன்னின் விரித்தமைத்துக் கதிர்கான்று
துளங்குமணிக் கனைகழற்கால் துறுமலர் நறும்பைந்தார்ப்
பரூஉத் தடக்கை மதயானைப் பகட்டெழில் தெரிகுஞ்சிக்
குரூஉக்கொண்ட மணிப்பூணோய்! குறையிரந்து முன்னாட்கண்
மரபாத வனப்பினையாய் மகிழ்வார்க்கும் அல்லார்க்கும்
தாயாகித் தலையளிக்குந் தண்டுறை ஊரகேள்;

இது **தரவு.**

காட்சியாற் கலப்பெய்தி எத்திறத்துங் கதிர்ப்பாகி
மாட்சியாற் பிரியாத மரபொத்தாய் கரவினாற்
பிணிநலம் பெரிதெய்திப் பெருந்தடந்தோள் வனப்பழிய
அணிநலந் தனியேவந் தருளுவதும் அருளாமோ;

அன்பினால் அமுதளைஇ அறிவினாற் பிறிதின்றிப்
பொன்புனை பூணாகம் பசப்பெய்தப் பொழிலிடத்துப்
பெருவரைத்தோள் அருளுதற் கிருளிடைத் தமியையாக்
கருவரைத்தோள் கதிர்ப்பிக்குங் காதலுங் காதலோ;

பரங்கனையே வரயிலாய் பல்காலும் வந்தொழுகுந்
தேங்காத கரவினையுந் தெளியாத இருளிடைக்கட்
குடவரைவேய்த் தோளிணைகள் குளிர்ப்பிப்பான் தமியையாய்த்
தடமலர்த்தார் அருளுநின் தகுதியுந் தகுதியே;

இவை மூன்றுந் **தாழிசை.**

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 83
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 30
தொல் செய். பேராசிரியருரை மேற்கோள், நூ. 146

தாதுறு முறிசெறி தடமலர் இடையிடை
　　தழலென விரிவனபொழில்;
போதுறு நறுவிரை புதுமலர் தெரிதரு
　　கருநெய்தல் விரிவனகழி!
தீதுறு திறமறு கெழுநனி துணையொடு
　　சினையொடு பிணைவனதுறை;
மூதுறும் ஒலிகலி நுரைதரு திரையொடு
　　கழிதொடர் புடையதுகடல்;

இவை நான்கும் **அராகம்.**

கொடுந்திறல் உடையன சுறவேறு கொட்பதனால்
இடுங்கழி இரவருதல் வேண்டாவென் றுரைத்திலமோ;

கருநிறத் தெறுழ்வலிக் கராம்பெரி துடைமையால்
இருநிறத் தொருகானல் இராவாரல் என்றிலமோ;

இவை **நாற்சீர் ஈரடி இரண்டு அம்போதரங்கம்.**

நாணொடு கழிந்தன்றால் பெண்ணரசி நலத்தகையே;
துஞ்சலும் ஒழிந்தன்றால் தொடித்தோளி தடங்கண்ணே;
அரற்றொடு கழிந்தன்றால் ஆரிருளும் ஆயிழைக்கே;
நயப்பொடு கழிந்தன்றால் நனவினும் நன்னுதற்கே;

இவை **நாற்சீர் ஓரடி நான்கு அம்போதரங்கம்.**

அத்திறத்தா லசைந்தன தோள்;
　　அலர்தற்கு மெலிந்தன கண்;
பொய்த்துரையால் புலர்ந்த முகம்;
　　பொன்னிறத்தாற் போர்த்த முலை;
அழலினால் அசைந்த நகை;
　　அணியினால் ஒசிந்த திடை;
குழலினால் அவிர்ந்த முடி;
　　குறையினாற் கோடிற்று நிறை;

இவை **முச்சீர் ஓரடி எட்டு அம்போதரங்கம்.**

உட்கொண்ட தகைத்தொருபால்; உலகறிந்த அலத்தொருபால்;
கட்கொண்டல் துனித்தொருபால்; கழிவெய்தும் படித்தொருபால்;
பரிவுறூஉந் தகைத்தொருபால்; படர்வுறூஉம் பசப்பொருபால்;
இரவுறூஉந் துயரொருபால்; இளிவந்த எழிற்றொருபால்;
மெலிவுறூஉந் தகைத்தொருபால்; விளர்ப்புவந் தடைந்தொருபால்;
பொலிவுசென் றகன்றொருபால்; பொறைவந்து கூர்ந்தொருபால்;
காதலிற் கதிர்ப்பொருபால்; கட்படாத் துயரொருபால்;
ஏதிலர்ச்சென் றணைந்தொருபால்; இயனாணிற் செறிவொருபால்:

இவை இருசீர் ஓரடிப் பதினாறு அம்போதரங்கம்.

எனவாங்கு,

(தனிச்சொல்)

இன்னதிவ் வழக்கம் இத்திறம் இவள்நலம்
என்னவும் முன்னாள் துன்னாய் ஆகிக்
கலந்தவ ணிலைமை ஆயினு நலந்நகக்
கிளையொடு கெழீஇய தளையவிழ் கோதையைக்
கற்பொடு காணிய வாமே
பொற்பொடு பொலிகநும் புணர்ச்சி தானே.[1]

இது சுரிதகம்.

இது, தரவு தாழிசை அராகம் அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகம் என்னும் ஆறுறுப்பும் குறைவின்றி வந்த வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா.

வானார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பணுங்கக்
கோனார்ந்த பூணாகங் குழைபுரளக் கோட்டெருத்தின்
மாலைதாழ் கூந்தலார் வரன்முறையால் வந்தேத்தச்
சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தஞ் சொன்முறையால்
மனையறமுந் துறவறமும் மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்
வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடுகட் டிவையுரைத்த
தொன்மைசால் மிகுகுணத்துத் துறவரசைத் தொழுதேத்த
நன்மைசால் வீடெய்து மாறு."[2]

இது, கலித்தளைதட்டுக் கலியோசை தழுவி வந்தமையால் வெண்கலிப்பா.

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள். நூ. 84
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 31

2 யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 31

"ஏர்மலர் நறுங்கோதை எருத்தலைப்ப இறைஞ்சித்தண்
வார்மலர்த் தடங்கண்ணார் வலைப்பட்டு வருந்தியவென்
தார்வரை அகல்மார்பன் தனிமையை அறியுங்கொல்
சீர்மலி கொடியிடை சிறந்து." 1

இஃது ஆசிரியத்திரையசைத் தளையான்வந்த **வெண்கலிப்பா.** (4)

## கொச்சகக்கலி, கலிப்பா இனம், வஞ்சிப்பா, வஞ்சிப்பா இனம்

11\. பெறுதரவு தரவிணையே சிலபலதா ழிசையால்
பிறழ்விலவும் மயங்கினவும் அப்பெயர்க்கொச் சகமாம்
இறுதிநீண்(டு) அளவொத்தல் பலவடிதா ழிசையே;
எழில்ஐஞ்சீர் அடிநான்கு கலித்துறைநே ரடிநான்(கு)
உறுதல்கலி விருத்தம்இசை தூங்கல்அடி குறள்சிந்(து)
ஒடுதனிச்சொல் பெற்றுஅகவல் இறும்வஞ்சி இருசீர்
அுறை அடிநான்(கு) ஒருமூன்று தாழிசைஆங் கவற்(று)ஒன்(று)
ஆய் துறைமுச் சீரடிநான் காம்வஞ்சி விருத்தம்.

என்பது சூத்திரம்.

"பெறுதரவு தரவிணையே......கொச்சகமாம்" என்—து. தரவொன்றே வந்தால் தரவுகொச்சகக் கலிப்பா எனவும், தரவிரண்டாய் வந்தால் தரவிணைக் கொச்சகக் கலிப்பா எனவும், சில தாழிசை வந்தால் சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா எனவும், பல தாழிசை வந்தால் பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா எனவும், பலவடியும் மயங்கி வந்தால் மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா எனவும் பெயராம்.

"இறுதிநீண்டு......தாழிசையே" என—து, பலவடியாய் எல்லாவடியுந் தம்முள் அளவொத்து ஈற்றடி நீண்டுவருவது **கலித்தாழிசை.**

"எழில்ஐஞ்சீர்......கலித்துறை" என—து, ஐஞ்சீரால் வரும் நாலடியை யுடையது **கலித்துறை.**

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 85
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 31

"நேரடி நான் தருதல் கலிவிருத்தம்" எ—து, நாற்சீர் நாலடியாய் வருவது கலிவிருத்தம்.

(இனி, வஞ்சிப்பாவுக்கு வருமாறு)

"இசை தூங்கல் அடி..... அகவலிற்றாய் வஞ்சி" எ—து. தூங்கல் ஓசையினை உடைத்தாய், இருசீரடியினையும் முச்சீரடியினையும் உடைத்தாய்த் தனிச்சொற்பெற்று ஆசிரியச் சுரிதகத்தான் முடிவது **வஞ்சிப்பா**. ('குறள் சிந்தொடு' என்னும் விதப்பினால், குறளடி வஞ்சிப்பாவென்றும் சிந்தடி வஞ்சிப்பாவென்றும் பெயர் வழங்கும் என்க.)

"இருசீர் அரை அடி.....தாழிசை" எ—து, இருசீர் நாலடியாய் ஒரு பொருண்மேல் மூன்றடுக்க வருவது **வஞ்சித்தாழிசை**.

"ஆங்கவற்று ஒன்றாஅய் துறை" எ—து. அந்தத் தாழிசையொன்று தனியே வருவது **வஞ்சித்துறை**.

"முச்சீரடி நான்காய் வஞ்சிவிருத்தம்" எ—து, முச்சீர் நாலடியாய் வருவது **வஞ்சிவிருத்தம்** எ—று.

இவற்றுக்கு முறையே உதாரணம் வருமாறு:—

"செல்வப்போர்க் கதக்கண்ணன்......மருமம்பாய்ந் தொளித்ததே" [1]

இது, சுரிதகமில்லாத **தரவுகொச்சகக்கலிப்பா**.

"கூடநிலைக் கண்புறவிற் கோவலர் எடுத்தார்ப்பக்
கடநிலைப் பெருங்கொடியிற் றகையேறு மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிறொரீஇக் காங்குவலந் தோன்றப்போய்க்
கலையினொடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப

எனவாங்கு,

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 20, 32, 78, 86

2 யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 11, 15, 21, 32

ஆவொடு புல்லிப் பெரும்புகல் முனையும்
காலுடைத் தவர்தேர் சென்றவாறே." [1]

இது தனிச்சொற் பெற்றுச் சுரிதகத்தாலிற்ற **தரவுகொச்சகக்கலிப்பா.**

"வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனாம்
கொடிபடு வரைமாடக் கூடலார் கோமானே;

இது **தரவு.**

எனவாங்கு,

**(தனிச்சொல்)**

துணைவளைத்தோள் இவள்மெலியத் தொன்னலந் தொடர்புண்டாங்
கிணைமலர்த்தார் அருளுமேல் இதுவதற்கோர் மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரே;

இது **தரவு.**

அதனால்,

**(தனிச்சொல்)**

செவ்வாய்ப் பேதை இவள்திறத்
தெவ்வா றாங்கொலிஃ தெண்ணிய வாறே?." [2]

**—சுரிதகம்.**

இஃது, இடையிடை தனிச்சொற்பெற்றுச் சுரிதகத்தாலிற்ற **தரவிணைக் கொச்சகக் கலிப்பா.** இனிச் சுரிதகமில்லாததூஉம் வந்தவழிக் கண்டுகொள்க.

"பருஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்றிக்
குருஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழப்
படைப்பரிமான் தேரினொடும் பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே;

இது **தரவு.**

ஆங்கொருசார்,

---

*1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 22, 86*
*யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 21, 32, 38*

*2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 86*
*யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 32*

உச்சியார்க் கிறைவனாய் உலகமெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனாப் பாவித்தார்
வச்சிரங்கைக் காணாத காரணத்தான் மயங்கினரே;

ஆங்கொருசார்,

அக்காலம் அணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனாப் பாவித்தார்
சக்கரங்கைக் காணாத காரணத்தாற் சமழ்த்தனரே;

ஆங்கொருசார்,

**(தனிச்சொல்)**

மால்கொண்ட பகைதணிப்பான் மாத்தடிந்து மயங்காச்செங்
கோல்கொண்ட சேவலங் கொடியவனாப் பாவித்தார்
வேல்கண்ட தின்மையால் விம்மிதராய் நின்றனரே!

இவை மூன்றும் **தாழிசை.**

அதாஅன்று,

**(தனிச்சொல்)**

கொடித்தேர் அண்ணல் கொற்கைக் கோமான்
இன்புகழ் ஒருவன் செம்பூட் சேஎய்
என்றுநனி யறிந்தனர் பலரே; தானும்
ஐவருள் ஒருவனென் றறியல் ஆகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே." 1

இது **சுரிதகம்.**

இஃது, இடையிடையே தனிச்சொற்பெற்று, நேரிசையொத்தாழிசைக் கலிப்பாவிற் சிறிது வேறுபட்டுத் தன்றளையான் வந்தமையாற் **சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா.**

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 86
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 32
வீரசோழியம், யாப்பு, பெருந்தேவனாருரை மேற்கோள், கா. 12

" தண்மதியேர் முகத்தாளைத் தனியிடத்து நனிகண்டாங்
குண்மதியும் உடனிறையும் உடன்றளர முன்னாட்கண்
கண்மதியோர்ப் பிவையின்றிக் காரிகையின் நிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தநின் பேரருளும் பிறிதாமோ;

இது தரவு.

இளநலம் இவன்வாட இரும்பொருட்குப் பிரிவாயேல்
தளநல முகைவெண்பல் தாழ்குழல் தளர்வாளோ;

தகைநலம் இவள்வாடத் தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநலம் இவள்வாடி வருந்தியில் இருப்பாளோ;

அணிநலம் இவள்வாட அரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநலம் மகிழ்மேனி மாசொடு மடிவாளோ;

நாம்பிரியேம் இனியென்று நன்னுதலைப் பிரிவாயேல்
ஓம்பிரியேம் எனவுரைத்த உயர்மொழியும் பழுதாமோ;

குன்றளித்த திரள்தோளாய் கொய்புனத்துக் கூடியஞான்(று)
அன்றளித்த அருண்மொழியால் அருளுவதும் அருளாமோ;

சில்பகலும் ஊடியக்கால் சிலம்பொலிச்சீ றடிபரவிப்
பல்பகலும் தலையளித்த பணிமொழியும் பழுதாமோ;

இவை ஆறும் தாழிசை.

எனவாங்கு,

(தனிச்சொல்)

அரும்பெறல் இவளினும் தரும்பொருள் அதனினும்
பெரும்பெறல் அரியன வெறுக்கையும் அற்றே

அதனால்,

விழுமிய தறிமதி வாழி
கெழுமிய காதலில் தரும்பொருள் சிறிதே." 1

இது சுரிதகம்.

இது, நான்கடித் தரவும் ஈரடித் தாழிசையாறும் தனிச்சொல்லும் ஆசிரியச் சுரிதகமுமாய் வந்தமையாற் பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா.

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 86
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 32

"மணிகிளர் நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்
நுரைநிவந் தவையன்ன நொய்ப்பறைய சிறையன்னம்
இரைநயந் திறைகூரும் ஏமஞ்சால் துறைவகேள்;

மலையென மழையென மஞ்செனத் திரைபொங்கிக்
கனலெனக் காற்றெனக் கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி இறக்கலா
தெழுமுந்நீர் பெயர்ந்தோடும் ஏமஞ்சால் துறைவகேள்;

இவையிரண்டுந் **தரவு.**

கொடிபுரையும் நுழைநுசுப்பிற் குழைக்கமர்ந்த திருமுகத்தோன்
தொடிநெகிழ்ந்த தோள்கண்டுந் துறவலனே என்றியால்;

கண்கவரு மணிப்பைம்பூட் கயில்கவைஇய சிறுபுறத்தோள்
தெண்பனிகண் உகக்கண்டுந் திரியலனே என்றியால்;

நீர்பூத்த நிரையிதழ்க்கண் நின்றொசிந்த புருவத்தோள்
பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே என்றியால்;

கனைவரல்யாற் றிருகரைபோற் கைநில்லா துண்ணெகிழ்ந்து
நினையுமென் நிலைகண்டும் நீங்கலனே என்றியால்;

வீழ்சுடரில் நெய்யேபோல் விழுமநோய் பொறுக்கல்லாத்
தாழுமென் நிலைகண்டுந் தாங்கலனே என்றியால்;

கலங்கவிழ்ந்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் நிலைகண்டும் போகலனே என்றியால்;

இவை ஆறுந் **தாழிசை.**

அதனால்,

**(தனிச்சொல்)**

அடும்பம லிறும்பின் நெடும்பணை மிசைதொறுங்
கொடும்புற மடலிடை ஒடுங்கின குருகு;

செறிதரு செருவிடை எறிதொழில் இளையவர்
நெறிதரு புரவியின் மறிதருந் திமில்;

அரசுடை நிரைபடை விரைசெறி முரசென
நுரைதரு திரையொடு கரைபொருங் கடல்;

அலங்கொளி ரவிர்சுடர் இலங்கொளி மறைநொறுங்
கலந்தெறி காலொடு புலம்பின பொழில்;

இவை நான்கும் **அராகம்.**

விடாஅது கழலுமென் வெள்வளையுஞ் செறிப்பாய்மன்
கெடாஅது பெருகுமென் கேண்மையும் நிறுப்பாயோ;

ஒல்லாது கழலுமென் ஒளிவளையுஞ் செறிப்பாய்மன்
நில்லாது பெருகுமென் நெஞ்சமும் நிறுப்பாயோ;

தாங்காது கழலுமென் தகைவளையுஞ் செறிப்பாய்மன்
நீங்காது பெருகுமென் நெஞ்சமும் நிறுப்பாயோ;

மறவாத அன்பினேன் மனதிற்கு மாறுரையாய்
துறவாத தமருடையேன் துயர்தீரு மாறுரையாய்;

காதலார் மார்பின்றிக் காமக்கு மருந்துரையாய்
ஏதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்;

இணைபிரிந்தார் மார்பின்றி இன்பக்கு மருந்துரையாய்
துணைபிரிந்த தமருடையேன் துயர்தீரு மாறுரையாய்;

இவை ஆறும் **தாழிசை.**

எனவாங்கு,

**(தனிச்சொல்)**

பசைபோன் றதுதுறை. பரிவா யினகுறி
நகையிழந் ததுமுகம் நலிநா ணிற்றுளம்
தகையிழந் ததுதோள், தலைசிறந் ததுதுயர்
புகைபரந் ததுமெய், பொறையாகின் றென்னுயிர்.

இவை **இருசீர் ஓரடி எட்டம்போதரங்கம்.**

அதனால்,

**(தனிச்சொல்)**

இனையது நிலையால் அனையது பொழுதால்
இனையல் வாழி தோழி துணைவரற்
பனியொடு கழிக உண்கண்
என்னொடு கழிகஇத் துன்னிய நோயே." 1

இது, தரவிரண்டுந் தாழிசையாறும் தனிச்சொல்லும் அராகம் நான்கும் பெயர்த்தும் ஆறு தாழிசையும் தனிச்சொல்லும் எட்டம்போதரங்கவுறுப்பும் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்று நான்கடியாய் ஈற்றுக்கலிக்கு ஓதப்பட்ட ஆறுறுப்பும் மிக்குங் குறைந்தும் பிறழ்ந்தும் மயங்கியும் வந்தமையால் **மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.**

இனி ஆசிரியத்தினோடும் வெண்பாவினோடும் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா வருமாறு:—

"காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்
தாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனோ டொழுகலான்
நீணாக நறுந்தண்டார் தயங்கப்பாய்ந் தருளினாற்
பூணாகம் உறத்தழீஇப் போதந்தான் அகனகலம்
வருமுலை புணர்ந்தன என்பதனால் என்தோழி
அருமழை தரல்வேண்டின் தருகிற்கும் பெருமையளே;

அவனுந்தான்,

ஏனல் இதணத் தகிற்புகை உண்டியங்கும்
வானூர் மதியம் வரைசேரின் அவ்வரைத்
தேனின் இறாலென ஏணி இழைத்திருக்குங்
கானக நாடன் மகன்;

சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
வள்ளி கீழ்விழா வரைமிசைத் தேன்தொடா
கொல்லை குரல்வாங்கி ஈனா மலைவாழ்நர்
அல்ல புரிந்தொழுக லான்;

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 86

யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 32

காந்தள் கடிகமழுங் கண்வாங் கிருஞ்சிலம்பின்
வாங்கமை மென்றோள் குறவர் மடமகளிர்
தாம்பிழையார் கேள்வர்த் தொழுதெழலால் தம்மையருந்
தாம்பிழையார் தாம்தொடுத்த கோல்;

எனவாங்கு,

அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
என்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்;

அவரும்,

தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்(து)
ஒருபக லெல்லாம் உருத்தெழுந் தாறி
இருவர்கட் குற்றமும் இல்லையால் என்று
தெருமந்து சாய்த்தார் தலை;

தெரியிழாய் நீயுநின் கேளும் புணர
வரையுறை தெய்வம் உவப்ப உவந்து
குரவை தழீஇயாம் ஆடக் குரவையுட்
கொண்டு நிலைபாடிக் காண்;

நல்லாய்,

நன்னாள் தலைவரும் எல்லை நமர்மலைத்
தந்நாண்தாம் தாங்குவார் என்னோற் றனர்கொல்;
புனவேங்கைத் தாதுறைக்கும் பொன்னறை முன்றில்
நனவிற் புணர்ச்சி நடக்குமா மன்றோ
நனவிற் புணர்ச்சி நடக்கலும் ஆங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமாம் அன்றோ;

விண்டோய்கல் நாடனும் நீயும் வதுவையுள்
பண்டறியா தீர்போற் படர்கிற்பீர் மற்கொலா ?
பண்டறியா தீர்போற் படர்ந்தீர் பழங்கேண்மை
கண்டறியா தேன்போற் கரக்கிற்பென் மற்கொலோ;

மைதவழ் வெற்பன் மணவணி காணாமற்
கையாற் புதைபெறூஉங் கண்களும் கண்களோ!
என்னைமன், நின்கண்ணாற் காண்பென்மன் யான்;
நெய்தல் இதழுண்கண் நின்கண்ணா கென்கண்மன்;

எனவாங்கு,

நெறியறி செறிகுறி புரிதிரி பறியா அறிவனை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை அறியுஞ் சான்றவர் இனமாக

வேய்புரை மென்றோள் பசலையும் அம்பலும்
மாயப் புணர்ச்சியும் எல்லாம் உடனீங்கச்
சேயுயர் வெற்பனும் வந்தனன்
பூவெழில் உண்கணும் பொலிகமா இனியே" [1]

இஃது, ஆசிரியத்தினோடும் வெண்பாவினோடும் வந்த **மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.**

"கொய்தினை காத்தும் குளவி அடுக்கத்தெம்
பொய்தற் சிறுகுடில் வாரல்நீ ஐய! நலம்வேண்டின்;

ஆய்தினை காத்தும் அருவி அடுக்கத்தெம்
ஆசில் சிறுகுடில் வாரல்நீ ஐய! நலம்வேண்டின்;

மென்றினை காத்தும் மிகுபூங் கமழ்கானற்
குன்றச் சிறுகுடில் வாரல்நீ ஐய! நலம்வேண்டின்;" [2]

இவை இரண்டடியாய் ஈற்றடி மிக்கு ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வந்தமையாற் **கலித்தாழிசை.**[3]

---

1 கலித்தொகை 39, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 86

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 87
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 33

3 'கலியொத்தாழிசை' என்பது யாப்பருங்கல விருத்தியுரைப்பாடம்.

" வாள்வரி வேங்கை வழங்கும் சிறுநெறியெம்
கேள்வரும் போழ்தின் எழாஅல்வாழி வெண்டிங்காள்
கேள்வரும் போழ்தின் எழாலாய்க் குறாலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்." [1]

இஃது ஈற்றடி மிக்கு ஏனையடி மூன்றும் ஒத்துவந்த **கலித்தாழிசை.**

" பூண்ட பறையறையப் பூதம் மருள
நீண்ட சடையான் ஆடுமே
நீண்ட சடையான் ஆடும் என்ப
மாண்ட சாயல் மலைமகள் காணவே காணவே." [2]

இஃது ஈற்றடிமிக்கு, இரண்டாம் அடி குறைந்து, முதலடியும், மூன்றாம் அடியும் ஒத்துவந்த **கலித்தாழிசை.**

" யானும் தோழியும் ஆயமும் ஆடும் துறைநண்ணித்
தானும் தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புள்ளும் கைதையும் எல்லாம் கரியன்றே?" [3]

எனவும், " வென்றான் வினையின் " எனவும், இவை ஐஞ்சீர் நான்கடியாய் வந்தமையாற் **கலித்துறை.**

" வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலின்
ஆய்தலி னொண்சுட ராழியி னான்றமர்
வாய்தலி னின்றனர் வந்தென மன்னன்முன்
நீதலை சென்றுரை நீள்கடை காப்போய் " [4]

எனவும்,

---

*1, 2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 87*
*யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 33*

*3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 28, 88, 95*
*யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 33*

*4 சூளாமணி 65, யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 33*

" நேம்பழுத் தினியநீர் மூன்றும் " [1]

எனவும், நாற்சீரடியால் வந்தமையாற் **கலிவிருத்தம்.**

இனி வஞ்சிப்பாவுக்கு வரலாறு :—

" பூந்தாமரைப் போதலமரத் ...... " [2]

இது நாளுமென்னுந் தனிச்சொற் பெற்றுச் சுரிதகத்தாலிற்ற **குறளடி வஞ்சிப்பா.**

" கொடிவாலன குருநிறத்தன குறுந்தாளன
வடிவாளெயிற் றழலுளையன வள்ளுகிரன
பணையெருத்தின் இணையரிமான் அணையேறித்
துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனாகி
எயினடுவண் இனிதிருந் தெல்லார்க்கும்
பயில்படுவினை பத்தியினாற் செப்பியோன்
புணையெனத்
திருவுறு திருந்தடி திசைதொழ
வெருவுறும் நாற்கதி வீடுநனி எளிதே. " [3]

இது, " புணையென " என்னுந் தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தாலிற்ற **சிந்தடி வஞ்சிப்பா.**

"தொன்னலத்தின்" என்பது, "பெரிதும்" எனுந் தனிச்சொற் பெற்றது. இதுவுமது.

---

1 சூளாமணி 49, யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 33

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 9, 15, 21, 90
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 9, 34

3 திருப்பாமாலை, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 90
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், நூ. 34

“ மடப்பிடியை மதவேழந்
தடக்கையான் வெயின்மறைக்கு
மிடைச்சுர மிறந்தோர்க்கே
நடக்குமென் மனனேகாண்.

பேடையை யிரும்போத்து
வேடையான் வெயின்மறைக்குங்
காடக மிறந்தோர்க்கே
யோடுமென் மனனேகாண்.

இரும்பிடியை யிகல்வேழம்
பெருங்கையான் வெயின்மறைக்கும்
அருஞ்சுர மிறந்தோர்க்கே
விரும்புமென் மனனேகாண். ” 1

இவை ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வந்தமையால் **வஞ்சித்தாழிசை.**

“ மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தனர் காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய் ” 2

என்பதும், “ திரைத்த சாலிகை ” என்பதும், இருசீர் நான்கடியாய் வந்த **வஞ்சித்துறை.**

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 95
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 34

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள் நூ. 28
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 34

" சோலை ஆர்ந்த சுரத்திடைக்
காலை யார்கழல் ஆர்ப்பவும்
மாலை மார்பன் வருமாயின்
நீல உண்க ணிவள்வாழுமே. " [1]

என்பதும்,

" இருது வேற்றுமை யின்மையால் " [2]

என்பதும், முச்சீர் நான்கடியாய் வந்த வஞ்சிவிருத்தம்.

(வஞ்சியினம் முற்றும்.)

செய்யுளியல் முற்றும்.

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 28
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 34

2 சூளாமணி 742, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 24
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள் கா. 13

# 3. ஒழிபியல்

12 ஆந்தளைசீர் கெடில்இகர உகரத்தேய்வு ஒற்றும்
ஆம்அலகு பெறாஅளவுஐ ஔக்குறுமை குறிலாம்
ஏய்ந்தஉயிர் ஓரளபும் ஈரளபும் ஆகி
ஈரசையாம் மூவசையாம் ஒற்றளபு குறில்நேர்
சேர்ந்துஅசையாம் ஒற்றுஇலையேல் ஒற்றாம் ஒற்றளபாம்
செறிவுஇல்சீர் ஒற்றும்மூ வொற்றும்ஓர்ஒற் றாம்முன்
சார்ந்தகுறில் விட்டிசைக்கின் நேராம்வெண் பாவெண்
டளைஅலது மயங்காது மயங்கிடும்எப் பாவும்.

என்பது சூத்திரம்.

"ஆந்தளைசீர் கெடில்இகர உகரத்தேய்வு ஒற்றுஞ்ஆம்" என்பது, தளையும் சீரும் கெட வந்த இடத்துக் குற்றியலிகரமுங் குற்றியலுகரமும் ஒற்றாம்; உம்மையால் ஒற்றல்லாமலுமாம்;

"தளைசீர் கெடில்" என்பதனை முதனிலைத் தீபமாக்கிக் கொள்க, மேல்வருவனவற்றிற்கும் ஒக்கும்.

"அலகு பெறா அளவு" எ—து. உயிரளபெடை ஒரோவிடங்களிலே நீக்கப்படும்.

"ஐஔக் குறுமை குறிலாம்" எ—து, ஐகாரக்குறுக்கமும் ஔகாரக் குறுக்கமும் குற்றெழுத்தாம்;

"ஏய்ந்தஉயிர் ஓரளபும் ஈரளபும் ஆகி ஈரசையாம் மூவசையாம்" எ—து, உயிரளபெடையானது. ஓரளபெழுந்தால் ஈரசையாம்: ஈரளபெழுந்தால் மூவசையாம்;

*"செய்யுட்கள் ஓசை சிதையுங்கால் ஈரளபும்,*
*ஐயப்பா டின்றி யணையுமாம்"* [1]

என மாபுராணமுடையாரும்,

---

1 *மாபுராண நூற்பா, நன்னூல் மயிலைநாதர் உரைமேற்கோள், எழுத்தியல் நூ. 37*

" வெண்பா முதல யாப்பெவற் றினுக்கும்
ஓரள பார்த்துஞ் சந்தஞ் சிதைந்திடின்
ஈரள பேற்றுதல் இசைநிறைக் கியல்பே " [1]

என **அவிநயனாரும்** கொண்டாரென்க.

**' ஒற்றளபு குறில்நேர் சேர்ந்துஅசையாம் '** எ—து. ஒற்றளபெழுந்தாற் குற்றெழுத்தாம்; அன்றி முன்னின்ற எழுத்துடனே கூடி நிரையசையாய் நில்லாது குற்றெழுத்தின் மாத்திரையைப் பெற்று, நேரசையாகவே நிற்கும்;

**' ஒற்றுஇலையேல் ஒற்றாம் ஒற்றளபாம் '** எ—து, ஒற்றில்லாத இடத்து ஒற்று உண்டாக்கலாம்: அந்த ஒற்றிலும் அமைதி பிறவாத போது தோற்றினவொற்றையே அளபாக்கலாம்;

" —மைதீரொற்
றின்றியும் செய்யுட் கெடினொற்றை யுண்டாக்கு
குன்றுமேல் ஒற்றளபுங் கொள் " [2]

என்பதனுட் கண்டுகொள்க.

**"செறிவுஇல்ஈர் ஒற்றும் மூவொற்றும் ஓர் ஒற்றாம்"** எ—து. அந்நியமாய் ஈரொற்று வந்தாலும் மூவொற்று வந்தாலும் ஓரொற்றாகவே நிற்கும்.

" ஈரொற் றாயினும் மூவொற் றாயினும்
ஓரொற் றியல என்மனார் புலவர் " [3]

என்னுமிதனுட் காண்க.

**" முன் சார்ந்த குறில் விட்டிசைக்கில் நேராம் "** எ—து, ஆதியிலே விட்டிசைத்துக் குற்றெழுத்து வந்தால் நேரசையாம்.

**"வெண்பா வெண்டளை யலது மயங்காது மயங்கிடும் எப்பாவும்"** எ—து, வெண்பாவுக்கு வெண்டளையொழிந்து வேற்றுத்தளை வாராது; மற்ற மூன்று பாக்களுக்கும் எல்லாத்தளையும் மயங்கியும் வழங்கும். இவை **யாப்பருங்கலத்துள்** காண்க. எ—று.

---

1 அவிநய நூற்பா

2 மாபுராண நூற்பா, நன்னூல்-மயிலைநாதர் உரைமேற்கோள், எழுத்தியல் நூ—37

3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 3
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 36

'ஆந்தளைசீர்' என்னும் விதப்பினால் ('விதப்புக்கிளவி வேண்டியது விளைக்கும்' என்பதினாற்) குற்றியலிகரம் ஆரியம்போல ஈரெழுத்து ஓரெழுத்து என்ன வருதலால் ஒற்றென்றார். அன்றிக் குற்றியலுகரத்தை ஒற்றென்றது என்னையோவெனின், முன்னம் அசையினால் என்றார்; அவற்றுள் நேர்பசையும் நிரைபசையும் சீரன்றோவென்னிற் சீரன்று. குற்றியலுகரம் ஒற்றியல்பாதலாற் குற்றியலுகரத்தை நீக்கில் ஓரசையாம்; அஃதெற்றுக்கோவெனில் வெண்பா முடிவு ஓரசையாகிய நாள் மலர் போலக் காசு பிறப்பு—உகரமின்றி முடியாது; அஃது எங்ஙனேயென்னில்,

**"உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்(கு)**
**அச்சாணி அன்னார் உடைத்து"** [1]

என்பதன்றி, 'உடைத்' என்னில் ஆகாது. அருளு, புல்லுவென்னும் முற்றியலுகரமும் குற்றியலுகரத்தைப் போலக் கொள்க. என்னை?

"இருவகை யுகரமொ(டு) இயைந்தவை வரினே
நேர்பும் நிரைபும் ஆகும் என்ப" [2]

"ஒற்றெழுத் தியற்றே குற்றிய லுகரம்" [3]

"குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும்
ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே" [4]

என்று தொல்காப்பியத்துட் சொன்னமையும்,

"உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்
யவ்வரின் இய்யாம் முற்றுமற் றொரோவழி" [5]

என்று நன்னூலிற் சொன்னமையும்,

---

1 திருக்குறள்—667

2 தொல்காப்பியம், செய். நூ. 4

3 தொல்காப்பியம், செய். நூ. 7

4 தொல்காப்பியம், செய். நூ. 9

5 நன்னூல், உயிரீற்றுப் புணரியல், நூ. 14

" மாவாழ் புலிவாழ் சுரமுள வாக மணியிறுவாய்
ஓவா தளபெடுத் தூஉவுங் கெழூஉவும் உதாரணமா
நாவாழ் பெரும்புகழ் நற்றத்தர் யாப்பில் நடந்ததுபோல்
தேய்வாம் உகரம்வந் தாலியற் சீருக்குச் செப்பியதே " 1.

என்று காரிகையுரைச் சூத்திரத்துட் சொன்னமையுமன்றிக்

" குற்றிகரம் குற்றுகரம் என்றிரண்டும் ஆய்தமும்
ஒற்றும் இவைநான் குடனகற்றிக்—கற்றோர்
உயிருமுயிர் மெய்யுமென ஓதினார் ஆய்ந்து
செயிர்தீர்ந்த செய்யுள் அடிக்கு " 2

என்பதற்கு உதாரணம்,

" மட்டுத்தான் தோய்ந்து மதஞ்சேர்ந்து விட்டுக்
களியானை கொண்டுவா வென்றான் களியானைக்
கியாரே யெதிர்நிற் பவர் " 3

என்று காட்டினமையுங் கண்டுகொள்க.

இனி உதாரணம் :—

" சிறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்கால் நாளைப்
பெறுநன்றி மன்னும் பெரிதென்—றுறுநன்றி
தானவாய்ச் செய்வதூஉந் தானமன் றென்பவே
வானவாம் உள்ளத் தவர் " 4

" அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல் " 5

என்னும் வெண்பாவினுள் குற்றியலிகரத்தை ஒற்றாக்கிற் சீர் சிதையாது.

---

1 யாப்பருங்கலக் காரிகையுரைச் சூத்திரம், கா. 25
யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள் நூ. 57

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 36, 62

3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 95

4 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 4, 95
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், நூ. 36

5 திருக்குறள்—254

"கொன்றுகோடுநீடு குருதிபாயவும்
சென்றுகோடுநீடு செழுமலைபொருவென
வென்றுகோடுநீடு விறல்வேழம்
என்றுமூடுநீடு பிடியுளபோலும்

அதனால்,

ஈண்டிடை இரவிவண் நெறிவரின்
வண்டுண் கோதை உயிர்வா ழலளே." 1

என்னுங் குறளடிவஞ்சிப்பாவினுள் ஆறசைச்சீரும் வந்தமையாற் குற்றுகரங்களை ஒற்றாகத் தள்ளச் சீர் சிதையாது.

"வாய்ந்த உயிர்ப்பின் வருமெழுத்தின் வர்க்கத்தொற்
றேய்ந்து புகுது மியல்புமா—மேய்ந்த
விறுதி வருமெழுத்தா மீறரா மோரோர்
மறுவில்பதங் கெட்டு வரும்." 2

இவ்வெண்பாவினுள், குற்றுகரங்கொள்ளச் சீர் சிதையாது. "தடமண்டு" என்பதனுள்ளுங் குற்றுகரம் ஒற்றலாதவாறு கண்டுகொள்க.

"பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்
சொல்லுக்குத் தோற்றின்னந் தோற்றிலவால்—நெல்லுக்கு
நூறேறொநூ றென்பாள் நுடங்கிடைக்கும் மென்முலைக்கும்
மாறேறமால் அன்றளந்த மண்" 3

"இடைநுடங்க ஈர்ங்கோதை பின்றாழ வாட்கண்
புடைபெயரப் போழ்வாய் திறந்து—கடைகடையின்
உப்போஒ வெனவுரைத்து மீள்வாள் ஒளிமுறுவற்
கொப்போநீர் வேலி யுலகு" 4

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள் நூ. 4
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 36
தொல்காப்பியம், செய்யுளியல் பேராசிரியருரை மேற்கோள், நூ. 46

2 ?

3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 4
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 36

4 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 4
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 36

என்பவற்றில், நூறோநூறெனவும், உப்போவெனவும், பண்டமாற்றின்கண் வந்த அளபெடையை நீக்கி, நெட்டெழுத்தாகவே கொள்ளச் சீர் சிதையாது.

"அன்னையையான் நோவ தவமால் அணியிழாய்!
புன்னையையான் நோவன் புலந்து" 1

எனவும்,

"பிறிந்த விருந்த பெருமா னுரையை
அறிந்தேன் மௌனமொழி யால்" 2

எனவும், ஐகாரக்குறுக்கமும் ஔகாரக் குறுக்கமும் குற்றெழுத்தான வாறுங் காண்க.

"ஏஎர் சிதைய வழாஅல் எலாஅநின்
சேஎயரி சிந்திய கண்" 3

எனவும்,

"உறாஅஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு" 4

எனவும், ஓரளபெடையும் ஈரளபெடையும் வந்தவாறு காண்க.

"கண்ண் கருவிளை கார்முல்லை கூரெயிறு
பொன்ன் பொறிசுணங்கு போழ்வாய் இலவம்பூ
மின்ன் நுழைமருங்குல் மேதகு சாயலாள்
என்ன் பிறர்மகளா மாறு" 5

எனவும்,

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 9
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 36

2 —

3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 2
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 37

4 —

5 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 3, 95
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள் கா. 36
தொல்காப்பியம், உவமவியல், பேராசிரியருரை மேற்கோள், நூ. 3

" அம்ம் பவள்ள் வரிநெடுங்கண் ஆய்வஞ்சிக்
கொம்ம் பவள்ள் கொடிமருங்குல் கோங்கின்
அரும்ம் பவண்முலை ஒக்குமே ஒக்குங்
கரும்ம் பவள்வாயிற் சொல்." 1

" எஃஃ கிலங்கிய கையரராய் இன்னுயிர்
வெஃஃகு வார்க்கில்லை வீடு" 2

எனவும், ஒற்றளபெடை ஒரு மாத்திரை பெற்று நேரசையாயினவாறு காண்க.

" அம்பொ ரைந்து டைய்ய காம னைய னென்ன வந்தண
னம்பு நீர ரல்லர் நன்கு ரங்கு நீர ராபினுந்
தங்கு ரவ்வர் தாங்கொ டுப்பி னெஞ்சு நொந்து தாழ்வர்தாம்
பொங்க ரவ்வ வல்கு லாரெ னப்பு கன்று சொல்லினார்" 3

என்பதனுள், " குரவ்வரென " ஒற்றில்லாதவிடத்து ஒற்றுண்டானது கண்டுகொள்க.

" பிலிமஞ்ஞை நோக்கி" என்பதனுள் ஒற்றில்லாது தோற்றின ஒற்றே அளபானது கண்டுகொள்க.

" கார்க்கடல், பேய்க்குணவு" என்பவற்றுள் அந்நியமான ஈரொற்றும் ஓரொற்றாயினவாறு காண்க.

" உண்ணானொளிநிறான்" 4

எனவும்,

---

1 பொய்கையார் பாடல், யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 3
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 7

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 3
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 36

3 —

4 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 7
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 37

"அஅவனும் இஇவனும் உஉவனுங் கூடியக்கால்
எஎவனை வெல்வா ரிகல்" [1]

எனவும்,

"ஏவல் குறிப்பே தற்சுட் டல்வழி
யாவையுந் தனிக்குறில் முதலசை யாகா" [2]

என்பதனால், முதற்கண் தனிக்குறில் நேரசையாயினவாறு காண்க.

"குலாவணங்கு வில்லெயினர் கோன்கண்டன் கோழி
நிலாவணங்கு நேர்மணல்மேல் நின்று—புலாலுணங்கல்
கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மையோ நீபிறர்
உள்ளம் புகாப்ப துரை." [3]

என்பதனுள், வெண்பா சீர்தளை சிதைந்தவாறு காண்க.

"குடநிலைத்தண்புறவில்" [4]

என்னுங் கலிப்பாவினுள்ளும் மற்றுங் கொச்சகக் கலிப்பாவினுள்ளும் ஆசிரிய வுரிச்சீரும், வெண்சீரும், வஞ்சியுரிச்சீரும் வந்து, வெண்டளையும் ஆசிரியத் தளையுங் கலித்தளையும் வஞ்சித்தளையும் மயங்கிவந்தமை கண்டுகொள்க.

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 7
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 37

2 மயேச்சுரர், யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 7
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 37

3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 22
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 38

4 யாப்பருங்கலக் விருத்தியுரை மேற்கோள், நூ. 22, 86
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 21, 32, 38

"நெடுவரைச் சாரற் குறுங்கோட்டுப் பலவின்
விண்டுவார் தீஞ்சுளை வீங்கு கவுட்கடுவன்
உண்டுசிலம் பேறி ஓங்கிய இருங்கழைப்
படித மாக்களிற் பயிற்று மென்ப
மடியாக் கொலைவில் என்னையர் மலையே." 1

இவ்வாசிரியத்துள் தன்சீரும் வெண்சீரும் விரவி வந்தவாறு கண்டுகொள்க.

"மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும்" 2

எனவும், "தொன்னலத்தின்" எனவும் வரும் வஞ்சிப்பாக்களுள்ளும் பிறவற்றுள்ளும், வெண்சீரும் தன்சீரும் ஆசிரியச்சீரும் விரவி வெண்டளையுந் தன்றளையுங் கலித்தளையும் ஆசிரியத்தளையும் மயங்கிவந்தவாறு கண்டு கொள்க. (1)

13 மயங்கும்அடி எப்பாவும் வெண்பாவுக்(கு) அன்றி
மன்இனமுந் தளையுப்மயங் கிவரும்அ ஆ ஐஔ
நயங்கொள்ளும் இஈஎ ஏஉ ஊ ஒஓ
ஞணனநம வசதஅனு மோனைமெய்யு மோனை
இயங்கும்இனம் நெடில்வருக்கம் வரில்எதுகை மோனை
யரலழஒற்று ஆசிடையிட்டு உயிரும்இரண் டடியும்
தயங்கியமூன் றாமெழுத்தும் எதுகைகடை யிணைபின்
சார்கூழை இடைப்புணரும் முரண்தொடைக்குஞ் சாற்றே.

என்பது சூத்திரம்.

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 22
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 38

2 புறநானூறு--2, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 15
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 38

"மயங்கும்அடி எப்பாவும் வெண்பாவுக்(கு) அன்றி" எ—து எல்லாப்பாக்களுக்கும் ஒருபாவிலடி ஒருபாவிற்புக மயங்கும்; வெண்பாவில், வேற்றுப் பாவினடி வாராது;

"மன்இனமுந் தளையும் மயங்கிவரும்" எ—து. தாழிசை, துறை, விருத்தம் என்று சொல்லப்பட்ட நாலு பாவினங்கட்கும் இன்னதளையென்னும் நியமமில்லாமல் மயங்கி வரப்பெறும்; தளையுமென்ற உம்மையால் அடியும் மயங்கப்பெறும்;

"அ ஆ ஐ ஔ, நயங்கொள்ளும் இ ஈ எ ஏ உ ஊ ஒ ஓ, ஞ ண ன ந ம வ ச த அனுமோனை" எ—து, அ ஆ ஐ ஔ எனவும், இ ஈ எ ஏ எனவும், உ ஊ ஒ ஓ எனவும், ஞ ண ன ந ம வ எனவும் ச த எனவும் வரும். இவை தம்முள் ஒன்றுக்கொன்று அனுவாக வந்தமையால் அனுமோனையாம்;

"மெய்யு மோனை"[1] எ—து, ஆதியிலே உயிர் நின்றாலும் மெய் நின்றாலும் நின்றவடியே மோனையாய்வரில் மெய்ம்மோனையாம்.

"இயங்கும் இனம் நெடில் வருக்கம் வரில் எதுகை மோனை"[2] எ—து. இனவெழுத்தே வந்தால் இனவெதுகையென்றும் இனமோனையென்றும், நெடிலெழுத்தே வந்தால் நெடிலெதுகையென்றும் நெடின்மோனையென்றும், வருக்கவெழுத்தே வந்தால் வருக்கவெதுகையென்றும் வருக்கமோனையென்றும் பெயர். இனமென்றது, வல்லின மெல்லின மிடையினம்.

"ய ர ல ழ ஒற்று ஆசிடையிட்டு உயிரும் இரண்டடியுந் தயங்கிய மூன்றாமெழுத்தும் எதுகை" எ—து.

*"ய ர ல ழ என்னும் ஈரிரண் டொற்றும்*
*வரன்முறை பிறழாது வந்திடை உயிர்ப்பின்*
*ஆசிடை எதுகையென் றறியல் வேண்டும்"*[3]

---

1 "இங்கே 'யகரந் தீபமாக உகரத்தொடுங்கூடி யனுவாம்" என்று ஓலைச் சுவடியிற் காணப்படுகிறது.

2 "இங்கே, "உம்மையால்அனுமோனைக்குச் சொன்ன அடியினாலு மோனையாம்" என்று ஓலைச்சுவடியிற் காணப்படுகிறது-
எனும் இரு குறிப்புகள் மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பில் காணப்பெறுகின்றன.

3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 37
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 41

எனக் கண்டுகொள்க. இடையிட்டு எதுகை வந்தால், இடையிட்டெதுகையாம். எதுகையிலே உயிர்வந்தால் உயிரெதுகையாம். இவ்விரண்டடி ஒவ்வோர் எதுகை வந்தால் இரண்டடியெதுகையாம். மூன்றாமெழுத்து அடிதோறும் வந்தால், மூன்றாமெழுத்தொன்றெதுகையாம்.

"கடையிணை பின் சார் கூழை இடைப்புணரும் முரண்தொடைக்குஞ் சாற்றே" எ—து, கடைமுரணுங் கடையிணைமுரணும் பின்முரணுங் கடைக் கூழைமுரணும் இடைப்புணர்முரணும் எனவரும். அவையாவன;— நாலாஞ்சீர் முரணுதல் கடைமுரண். நாலாஞ்சீரும் மூன்றாஞ்சீரும் முரணுதல் கடையிணைமுரண். நாலாஞ்சீரும் இரண்டாஞ்சீரும் முரணுதல் பின்முரண். முதற்சீரொழித்த மூன்றுசீரும் முரணுதல் கடைக்கூழைமுரண்; இரண்டாம்சீரும் மூன்றாம்சீரும் முரணுதல் இடைப்புணர்முரண்; என வரும். உம்மையால் மோனைத்தொடை, எதுகைத்தொடை, இயைபுத்தொடை, அளபெடைத் தொடை: நாலுக்கும் இந்த அஞ்சு தொடையும் வருமெனக்கொள்க.

இனி உதாரணம்:—

"அங்கண் மதியம் அரவின்வாய்ப் பட்டெனப்
பூசல் வாயாப் புலம்புமனைக் கலங்கி
ஏதின் மாக்களும் நோவர் தோழி
ஒன்றும் நோவார் இல்லை
தெண்கடற் சேர்ப்பன் உண்டவென் னலக்கே." 1

இவ்வாசிரியத்துள்,

"அங்கண் மதியம் அரவின்வாய்ப் பட்டெனப்
பொங்கிய பூசல் பெரிது"

என வெள்ளடியானவாறு காண்க.

"இருங்கடல் உடுத்தஇப் பெருங்கண் மாநிலம்
உடைமிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே ஆண்ட ஏமங் காவலர்

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள் நூ. 29
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள். கா. 39

இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடு பதியாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே

அதனால்,

நீயும் கேண்மதி யத்தை வியா(து)
உடம்பொடு நின்ற உயிரு மில்லை
மடங்கல் உண்மை மாயமோ அன்றே
கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்கண்
உப்பிலாஅ அவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா(து)
இழிபிறப்பினோன் ஈயப்பெற்று
நிலங்கலன் ஆக விலங்கு பலிமிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பகம் முழுதுடன் துறந்தே " 1

இவ்வாசிரியத்துள் "உப்பிலாஅ அவிப்புழுக்கல்" எனவும் "கைக்கொண்டு பிறக்குநோக்காது" எனவும், "இழிபிறப்பினோன் ஈயப்பெற்று" எனவும், வஞ்சியடி விரவிவந்தவாறு கண்டுகொள்க.

" குருகுவெண் டாளி கோடுபுய்த் துண்டென
மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது
அருள்பிடி திரிதருஞ் சாரல்
அருளா னாகுநல் ஆயிழை கொடிதே." 2

இவ்வாசிரியத்துள்,

" மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது
தீவழங்கு சுழல்விழிக்கட் சீயஞ்சென் றுழலுமே." 3

என உச்சரித்துக் கலியடியாமாறு கண்டுகொள்க.

---

1 புறநானூறு 363, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 29
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 39

2 & 3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 29
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 39

"நேரிழை மகளிர் உணங்குணாக் கவருங்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை." [1]

என்னுமிவ் வஞ்சிப்பா ஆசிரிய அடியாயினவாறும்,

"வயலாமைப் புழுக்குண்டும் வறளடம்பின் மலர்மிலைந்தும்
கயனாட்டக் கடைசியர்நம் காதலர்தோள் சேர்ந்தனரே." [2]

எனக் கலியடியாமாறும் கண்டுகொள்க.

வஞ்சிப்பாவினுள் வெள்ளடி வருமாறும், கலிப்பாவினுள் மற்றை மூன்று பாவடியும் வருமாறும் யாப்பருங்கலவிருத்தியுட் கண்டுகொள்க. தாழிசை, துறை, விருத்தம் என்று சொல்லப்பட்ட நாலு பாவினங்களுந் தளைமயங்கி வருதற்கு உதாரணம் முன்னர்க் காட்டியவற்றுள்ளும், பிறவற்றுள்ளுங் கண்டு கொள்க. அனுமோனைக்கும் மெய்ம்மோனைக்கும் முன்னர்க் காட்டியவற்றுள்ளும் பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க.

இனவெதுகை மூன்றாவன :—

"தக்கார் தகவிலர் என்ப(து) அவரவர்
எச்சத்தாற் காணப் படும்." [3]

இது வல்லின எதுகை.

"அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு" [4]

இது மெல்லின எதுகை.

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு" [5]

இஃது இடையின எதுகை.

"ஆவாவென்றே......ஒரு சாரார்" [6]

இது நெடிலெதுகை.

1 பட்டினப்பாலை 22, 23. யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 31, 58
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 39

2 பட்டினப்பாலை 64, 65, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 31
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 39

3 திருக்குறள்—114

4 திருக்குறள்—74

5 திருக்குறள்—299

6 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 37
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 27, 41

"நீடிணர்க் கொம்பர்க் குயிலாலத் தாதூதிப்
பாடுவண் டஞ்சி அகலும் பருவத்துத்
தோடார் தொடிநெகிழ்ந்தார் உள்ளார் படலொல்லா
பாடமை சேக்கையுட் கண்." [1]

இது வருக்கவெதுகை.

இனி மோனை வருமாறு, இவற்றுள் இனமோனை மூன்றாவன:—

"கயலேர் உண்கண் கலுழ நாளும்
சுடர்புரை திருநுதல் பசலை பாயத்
திருந்திழை அமைத்தோள் அரும்படர் உழப்பப்
போகல் வாழி ஐய பூத்த
கொழுங்கொடி அணிமலர் துயங்கப்
பெருந்தண் வாடை வரூஉம் பொழுதே" [2]

இது வல்லினமோனை.

மெல்லினமோனையும் இடையினமோனையும் வந்தவழிக் கண்டு கொள்க.

"ஆர்கலி யுலகத்து" [3]

என்பது நெடின்மோனை.

"பகலே.
பல்பூங் கானல் கிள்ளை ஒப்பியும்
பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇப்
பின்னுப் பிணியவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
பீர்ங்கப் பெய்து தேம்படத் திருகிப்
புனையிர் ஓதி செய்குறி நசைஇப்
பூந்தார் மார்ப! புனத்துட் டோன்றிப்
பெருவரை யடுக்கத் தொருவேல் ஏந்திப்
பேயும் அறியா மாவழங்கு பெருங்காட்டுப்

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 37
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 41

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 37
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 41

3 முதுமொழிக்காஞ்சி 1, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 19
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 41

பைங்கண் உழுவைப் படுபகை வெரீஇப்
பொருதுசினந் தணியாப் பூணுதல் ஒருத்தல்
போகாது வழங்கும் ஆரிருள் நடுநாள்
பௌவத் தன்ன பாயிருள் நீந்தியிப்
பொழுது வருகுவை யாயின்
நற்றார் மார்ப நீண்டவெம் கதுப்பே ' 1

இது வருக்கமோனை.

இனி ஆசிடையெதுகை வருமாறு :—

" காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் எற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையால் திசைபோய துண்டே." 2

இது யகர ஒற்று இடைவந்த ஆசெதுகை.

" மாக்கொடி யானையு மௌவற் பந்தரும்
கார்க்கொடி முல்லையும் கலந்து மல்லிகைப்
பூக்கொடிப் பொதும்பரும் பொன்னின் ஞாழலும்
தூக்கடி கமழ்ந்துதான் துறக்கம் ஒக்குமே." 3

இது ரகர ஒற்று ஆசெதுகை

" ஆவே றுருவின ஆயினும் ஆபயந்த
பால்வே றுருவின அல்லவாம்—பால்போல்
ஒருதன்மைத் தாகும் அறநெறி ஆபோல்
உருவு பலகொளல் ஈங்கு " 4

இது லகர ஒற்று ஆசெதுகை. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள் நூ. 37
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள். கா. 41

2 சீவகசிந்தாமணி 31, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 37
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 41

3 சூளாமணி 35, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 37
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 41

4 நாலடியார் 118, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 37
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 41

"தோடார் எல்வளை நெகிழ நாளும்
நெய்தல் உண்கண் பைதல் கலுழ
வாடா அவ்வரி புதைஇப் பசலையும்
வைகல் தோறும் பைப்பயப் பெருக
நீடார் இவரென நீமனங் கொண்டார்
கேளார் கொல்லோ காதலர் தோழி
வாடாப் பெளவம் அறமுகந் தெழிலி
பருவஞ் செய்யாது வலனேர்பு வளைஇ
ஓடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே" 1

இஃது, இடையிட்டு வந்தமையால் **இடையிட்டெதுகை.**

"துனியொடு மயங்கிய தூங்கிருள் நடுநாள்
அணிகிளர் தாரோய் அருஞ்சுரம் நீந்தி
வடியமை எஃகம் வலவயின் ஏந்தித்
தனியே வருதி நீயெனின்
மையிருங் கூந்தல் உய்தலோ அரிதே." 2

இஃது இரண்டாமெழுத்தின் மேலேறின உயிரொன்றிவந்தமையால் **உயிரெதுகை.**

"துவைக்குந் துளிமுந்நீர்க் கொற்கை மகளிர்
அவைப்பர்தம் பல்லிற் கழகொவ்வா முத்தம்
மணங்கமழ்தா ரச்சுதன் மண்காக்கும் வேலின்
அணங்கும் அமுதமும் அந்நலார் பாடல்." 3

இது, முன்னிரண்டடியும் ஒரெதுகையாய்ப் பின்னிரண்டடியும் வேறோரெதுகையாய் வந்தமையால் **இரண்டடியெதுகை.**

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்" 4

இது, **மூன்றாமெழுத்தெதுகை.**

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 37, 95
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 41

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 36
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 41

3 யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள் கா. 41

4 திருக்குறள்--292

" கயன்மலைந் தன்ன கண்ணிணை கரிதே
நடமுலைத் திரளுந் தனிவடம் வெளிதே
நூலின் நுண்ணிடை சிறிதே
ஆடமைத் தோளிக்(கு) அல்குலோ பெரிதே." 1

இஃது அடிதோறுங் கடைச்சீர் மறுதலைப்படத் தொடுத்தமையாற் **கடைமுரண்.**

" மீன்தேர்ந்து வருந்திய கருங்கால் வெண்குருகு
தேனார் ஞாழல் விரிசினைக் குழூஉம்
தண்ணந் துறைவன் தவிர்பவுந் தவிரான்
தேரோ காண்கலம் காண்டும்
பீரேர் வண்ணமுஞ் சிறுநுதற் பெரிதே." 2

இஃது அடிதோறுங் கடைச்சீரிரண்டும் மறுதலைப்படத் தொடுத்தமையாற் **கடையிணைமுரண்.**

" சாரல் ஓங்கிய தடந்தாள் தாழை
கொய்ம்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து
தமியம் இருந்தன மாக நின்றுதன்
நலனுடைப் பணிமொழி நன்குபல பயிற்றி
வீங்குதொடிப் பணைத்தோள் நெகிழத்
துறந்தோன் நல்லனெம் மேனியோ தீதே." 3

இஃது அடிதோறும் முதற்சீர்க்குப் பின்னும் மூன்றாஞ்சீர்க்குப் பின்னும் மறுதலைப்படத் தொடுத்தமையாற் **பின்முரண்.**

" காவியங் கருங்கட் செவ்வாய்ப் பைந்தொடி
பூவிரி சுரிமென் கூந்தலும்
வேய்புரை தோளும் அணங்குமால் எமக்கே." 4

இது, முதற்சீரொழித்து மூன்றுசீரும் மறுதலைப்படத் தொடுத்தமையாற் **கடைக்கூழைமுரண்.**

---

*1, 2 & 3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 39*
*யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 40*

*4 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 39*
*யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 40*
*தமிழ்நெறி விளக்கம் 6, மேற்கோள்*
*களவியற்காரிகை 28, மேற்கோள்*

"போதுவிரி குறிஞ்சி நெடுந்தண் மால்வரைக்
கோதையிற் றாழ்ந்த ஓங்குவெள் ளருவிக்
காந்தளஞ் செங்குலைப் பைங்கூ தாளி
வேரல் விரிமலர் முகையொடு விரைஇப்
பெருமலைச் சீறூர் இழிதரு நலங்கவர்ந்(து)
இன்னா வாயின இனியோர் மாட்டே." 1

இஃது இடையிருசீரும் மறுதலைப்படத் தொடுத்தமையால், **இடைப்புணர் முரண்**. முரண்டொடைக்குமென்ற உம்மையால் ஒழிந்த தொடைக்கும் அவ்வாறே கொள்க. (2)

14 சாற்றெல்லை இல்லைநெடில் அடிஆதி மோனை;
சார்எழுவாய் எழுத்தும்அலாது அநுமோனை விதியால்.
தேற்றுஎதுகை மோனையுடன் வரில்சிறப்புஎத் தொடையும்.
சீர்இடைஈறு அநுவும்வரும் தொடைகள்பல தளைகள்
தோற்றின்முதல் வந்ததொடை யால்தளையால் பெயராம்
சுருங்குந்தா ழிசைதரவில் தரவடிமூன்று இழிபே
ஏற்றபா இரண்டே,வெண் பாஅகவல் வெண்பா
இடத்தில்வரும் கலி;அகவல் இடத்தில்வரும் வஞ்சி.

என்பது சூத்திரம்.

"சாற்றெல்லை இல்லைநெடில் அடிஆதி மோனை" எ—து, ஐஞ்சீர் முதலான அடிகளிடத்து இணைமோனை முதலானவைகள் இத்தனையாஞ் சீரில் வருமென்னும நியமமில்லை;

"சார்எழுவாய் எழுத்தும்அலாது அநுமோனை விதியால்" எ—து, எழுவாயெழுத்து ஒன்றி வருவதுபோல முன்விதித்த அநுமோனை வந்தாலும் விதியெனக் கொள்க;

"தேற்றுஎதுகை மோனையுடன் வரில் சிறப்பு எத்தொடையும்" எ—து, இயைபுத்தொடையும் முரண்தொடையும் அளபெடைத்தொடையும் முதலாயின தொடை தமது இலக்கணங்களால் முடியும்போது எதுகையுடனும் மோனையுடனும் கூடிவரில் சிறப்புடைத்தென்றவாறு;

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 39
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 40

"சீர் இடை ஈறு அநுவும்வரும்" எ—து, அநுவாகிய மோனை ஆதியிலே வருவதன்றியுஞ் சீரின் இடையிலும் ஈற்றினும் வந்தாலும் மோனையாம்;

"தொடைகள்பல.....பெயராம்" எ—து, தொடைகள் பல விரவி வரினும் முதல் வந்த தொடையாலே பெயராம்; தளைபல விரவினும் பாக்களுக்குச் சிறப்பாக விதித்த தளையே முதல்வரில் அதனாற் பெயராம்;

> "தொடைபல தொடுப்பினுந் தளைபல விரவினும்
> முதல்வந் ததனால் மொழிந்திசிற் பெயரே"[1]

என்னும் **யாப்பருங்கலத்துட்** கண்டுகொள்க;

"சுருங்குந் தாழிசை தரவில்" எ—து, தரவடியிலுந் தாழிசையடி சுருங்கி வரும்;

"தரவடி மூன்று இழிபே" எ—து, தாழிசையுடனே கூடிவருகிற தரவுக்கு மூன்றடிச் சிறுமையாம். அல்லாத தரவுக்குக் கலிப்பாவிற் சிறுமையடியே அடியெனக்கொள்க;

"ஏற்ற பா இரண்டே வெண்பா அகவல் வெண்பா இடத்தில் வரும் கலி; அகவல் இடத்தில் வரும் வஞ்சி" எ—து, பாக்களைத் தொகுத்துச் சொல்லுமிடத்து வெண்பாவும் அகவலும் என இரண்டாம், மற்றப் பாவிரண்டும் எங்ஙன் வந்தனவோ என்னில் வெண்பாவிடத்திலே கலிப்பாவும் ஆசிரியப்பாவினிடத்திலே வஞ்சிப்பாவும் வந்தன;

> "பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்
> ஆசிரி யப்பா வெண்பா என்றாங்
> காயிரு பாவினுள் அடங்கும் என்ப."[2]

> "ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை
> வெண்பா நடைத்தே கலியென மொழிப."[3]

என்னுந் தொல்காப்பியத்திற் கண்டுகொள்க. இவற்றுக்கு உதாரணம் வந்தவழிக் கண்டுகொள்க. (3)

---

1 யாப்பருங்கலம் நூ. 53

2 தொல்காப்பியம், செய்யுளியல், நூ. 103

3 தொல்காப்பியம் செய்யுளியல் நூ. 104

## குறட்டாழிசை, வேற்றொலி வெண்டுறை, கட்டளைக்கலித்துறை, நூற்பா அகவல், மருட்பா

15 இறுகுறளின் சிதைவும்செந் துறைஇழிபும் குறட்டா
ழிசையாம் வேற் றொலிவரினும் வெண் டுறைஒற்றெண்ணா(து)
அறைஅடிநேர் பதினாறு நிரைபதினேழ் எழுத்தாய்,
அடிநான்கு தொறும்வரில்கட் டளைக்கலித் துறையே;
உறுபொருள்சூத் திரங்குறித்த யாப்பிற்றாய் நாற்சீர்
ஓரடியும் பலவும் வரும்நூற்பா அகவல்;
புறநிலைவா யுறைவாழ்த்துச் செவியறிவைக் கிளைகள்
பொருளாய்முன் வெண்பாப்பின் அகவல்வரும் மருட்பா.

என்பது சூத்திரம்.

"இறுகுறளின் சிதைவும் செந்துறை இழிபும் குறட்டாழிசையாம்" எ—து, குறள்வெண்பாச் சந்தஞ் சிதைந்துவரினும், விழுமியபொருளும் ஒழுகிய ஓசையுமின்றி வெண்செந்துறை சிதைந்துவரினும் குறட்டாழிசையின் பாற்படும்;

"வேற்றொலி வரினும் வெண்டுறை" எ—து, முன் வெண்டுறைக்குச் சொன்ன இலக்கணங்களையுடைத்தாய் முன்னோரோசையாய்ப் பின்னோரோசையாய் வருகினும் அது **வேற்றொலி வெண்டுறை.**

"ஒற்றெண்ணா(து) அறைஅடி......கலித்துறையே" எ-து, நாலடியாய் அடிதோறும் ஒற்று எண்ணாமல் உயிரும் உயிர்மெய்யும் எண்ணில் ஆதியிலே நேரசை வந்தாற் பதினாறெழுத்தும் நிரையசை வந்தாற் பதினேழெழுத்தும் உடையதாய் வருவது **கட்டளைக்கலித்துறை.**

*"கட்டளைக் கலித்துறை கலித்துறைப் பாற்படும்"* 1

*"நேரசை யெனவு நிரையசை யெனவும்*
*ஆயிரு பெயரா னடக்குமன் னவையே"* 2

என்னும் **அவிநயத்துட்** கண்டுகொள்க.

---

1 அவிநய நூற்பா

2 அவிநய நூற்பா

"உறுபொருள்.......நூற்பா அகவல்" என்பது, சூத்திரத்தைக் குறித்த யாப்பும் பொருளும் உடைத்தாய் நாற்சீரோரடியானும் பல அடியானும் வரும் நூற்பா அகவல்.

" நூற்பா அகவல் நுணங்க நாடிற்
சூத்திரங் குறித்த யாப்பிற் றாகி
அடிவரை யின்றி விழுமிதின் நடக்கும் " [1]

" சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வ னாடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம் " [2]

" ஆற்றொழுக் கரிமா நோக்கந் தவளைப்
பாய்த்துப் பருந்தின்வீழ் வன்னசூத் திரநிலை " [3]

" நூற்பா அகவல் யாப்புற் றுணரின்
ஆசிரி யத்து ளாகும் என்ப " [4]

என்பனவுங் காண்க.

அகவலுக்கு மூன்றடிச் சிறுமை சொல்லி இதனுள் ஓரடிச்சிறுமை கூறிய வாறென்னையோவெனின் பொருள் முடிவே முடிவாதலானும், 'சில்வகையெழுத்தில்' எனப்பகர்தலானும் ஈண்டிலக்கணம் வேறெடுத்தோதினார்; அது என் போலவென்னில், பொதுப்படக் கலிப்பாவுக்கு நாலடிச் சிறுமை சொல்லித் தரவு கொச்சகக் கலிப்பா அல்லாத கலிப்பாக்களுக்கு மூன்றடிச் சிறுமை கூறுப ஆதலால் அதுபோலவெனக் கொள்க.

"புறநிலை வாயுறைவாழ்த்து.......மருட்பா" என்பது. புறநிலை, வாயுறை, செவியறி, கைக்கிளை என்னும் பொருள் நாலையுங் கொண்டு முன் வெண்பாப் பின்னகவலாய் முடிவது மருட்பா என்றவாறு.

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 77

2 நன்னூல், நூ. 17

3 நன்னூல், நூ. 18

4 ?

இவற்றுக்கு உதாரணம்:—

"வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டையள் அல்லள் படி" [1]

இது குறள்வெண்பாச் சந்தஞ் சிதைந்துவந்த **குறட்டாழிசை.**

"முழங்குதிரைக் கொற்கைவேந்தன் முழுதுலகம் ஏவல்செய முறைசெய் கோமான்
வழங்குதிறல் வாள்மாறன் மாச்செழியன் தாக்கரிய வைவேல் பாடிக்
கலங்கிநின் றோரெலாங் கருதலா காவணம்
இலங்குவாள் இரண்டினால் இருகைவீ சிப்பெயர்த்(து)
அலங்கன்மா லையவிழ்ந் தாடவா டும்மிவள்
பொலங்கொள்பூந் தடங்கட்கே புரிந்துநின் றாரெலாம்
விலங்கியுள் ளந்தப விளிந்துவே றாபவே." [2]

இஃது ஏழடியாய் முதலிரண்டடியும் அறுசீராய்ப் பின்னைந்தடியும் நாற்சீராய் வேறோர் ஓசையாய் வந்தமையால் **வேற்றொலி வெண்டுறை.** இதுவும் வெண்டுறையின் பாற்படும்.

"அந்தமில் பாதம் அளவிரண் டொத்து முடியின்வெள்ளைச்
செந்துறை ஆகும் திருவே அதன்பெயர் சீர்பலவாய்
அந்தம் குறைநவும் செந்துறைப் பாட்டின் இழிபுமங்கேழ்
சந்தம் சிதைந்த குறளும் குறளினத் தாழிசையே." [3]

"மூன்றடி யானும் முடிந்தடி தோறும் முடிவிடத்துத்
தான்றனிச் சொற்பெறும் தண்டா விருத்தம்வெண் டாழிசையே
மூன்றடி யாய்வெள்ளை போன்றிறும் மூன்றிழி பேழுயர்வாய்
ஆன்றடி தாஞ்சில அந்தம் குறைந்திறும் வெண்டுறையே." [4]

இவை ஒற்று நீக்கி அடிதோறும் பதினாறெழுத்தாய் ஐஞ்சீராய் நான்கடியாய் **நேரசையாதியாக வந்த கட்டளைக்கலித்துறை.**

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள் நூ. 64
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 26

2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 22, 67
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 27, 38

3 யாப்பருங்கலக் காரிகை கா. 26

4 யாப்பருங்கலக் காரிகை கா. 27

"அடிவரை யின்றி அளபொத்தும் அந்தடி நீண்டிசைப்பின்
கடிதலில் லாக்கலித் தாழிசை யாகும் கலித்துறையே
நெடிலடி நான்காய் நிகழ்வது நேரடி ஈரிரண்டாய்
விடினது வாகும் விருத்தம் திருத்தகு மெல்லியலே." [1]

இதுவும் அப்படியே நிரையசையாதியாய் வந்தமையான் **நிரையசைக் கட்டளைக் கலித்துறை.**

"குறளடி சிந்தடி இருசீர் முச்சீர்
அளவடி நெடிலடி நாற்சீர் ஐஞ்சீர்
நிரனிறை வகையால் நிறுத்தினர் கொளலே." [2]

என்று சொல்லுதலானும்,

"மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப" [3]

என்று **தொல்காப்பியத்துட்** சொன்னமையானும்,

"நேர்பதி னாறே நிரைபதி னேழென்(று)
ஓதினர் கலித்துறை ஓரடிக் கெழுத்தே" [4]

என்று **பிறருஞ்** சொன்னமையானும் இவை கட்டளைக்கலித்துறையின் பாற்படும்.

"அறம்பொருள் இன்பம்வீ டடைதல்நூற் பயனே" [5]

"சில்வகை யெழுத்திற்......சூத்திரம்" [6]

என்பவை நாற்சீரோரடியும் பல அடியும் வந்த நூற்பா அகவல்.

---

1 யாப்பருங்கலக் காரிகை கா. 33
2 யாப்பருங்கலம் நூ. 24
3 தொல்காப்பியம், செய்யுளியல், நூ. 38
4 யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 1
5 நன்னூல், நூ. 10
6 நன்னூல், நூ. 18

இனி மருட்பா வருமாறு: -

"தென்றல் இடைபோழ்ந்த தேனார் நறுமுல்லை
முன்றில் முகைவிரியும் முத்தநீர்த் தண்கோளூர்க்
குன்றமர்ந்த கொல்லேற்றான் நிற்காப்ப—என்றும்
தீரா நண்பிற் றேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே" ௧

இது,

"வழிபடு தெய்வ நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிக" ௨

என்றமையாற் **புறநிலைவாழ்த்து மருட்பா.**

"பலமுறையும் ஓம்பப் படுவன கேண்மின்
சொலன்முறைக்கட் டோன்றிச் சுடர்மணித்தேர் ஊர்ந்து
நிலமுறையின் ஆண்ட நிகரிலார் மாட்டுஞ்
சிலமுறை அல்லது செல்வங்கள் நில்லா
இலங்கும் எறிபடையும் ஆற்றலும் அன்பும்
கலந்தநம் கல்வியும் தோற்றமும் ஏனைப்
பொலஞ்செய் புனைகலனோ டிவ்வாற னாலும்
விலங்கிவருங் கூற்றை விலக்கலும் ஆகா
வனைத்தாதல் நீயிரும் காண்டிர் நினைத்தகக்
கூறிய வெம்மொழி பிறழாது
தேறிநீர் ஒழுகிற் சென்றுபயன் தருமே" ௩

இது மெய்ப்பொருள் சொன்னமையான் **வாயுறைவாழ்த்து மருட்பா.**

"பல்யானை மன்னர் முருங்க அமருழந்து
கொல்யானைத் தேரோடுங் கோட்டந்து நல்ல
தலையாலங் கானம் பொலியத் தொலையாப்

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 55
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 35

2 தொல்காப்பியம், செய்யுளியல் நூ. 109

3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 55
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 35

படுகளம் பாடுபுக் காற்றிப் பகைவர்
அடுகளம் வேட்டோன் மருக அடுதிறல்
ஆனி நிமிர்தோள் பெருவழுதி என்றூன்றும்
ஈரம் உடையையாய் என்வாய்ச்சொற் கேட்டி.
உடைய உழவரை நெஞ்சனுங்கக் கொண்டு
வருங்கால் உழவர்க்கு வேளாண்மை செய்யல்
மழவர் இழைக்கும் வரைக்கா னிதியீட்டம்
காட்டும் அமைச்சரை ஆற்றத் தெளியல்
படைத்த அரும்பொருள் ஆறின்றி வெளவல்
இனத்தைப் பெரும்பொருள் ஆசையாற் சென்று
பெருங்குழிசி மன்ற மறுக அகழாதி என்றும்
மறப்புற மாக மதுரையார் ஓம்பும்
அறப்புறம் ஆசைப் படேற்க அறத்தால்
நவையார் கொடுநாத் திருத்தி நவையாக
நட்டார் குழிசி சிதையாதி ஒட்டார்
செவிபுதைக்கும் தீய கடுஞ்சொற் கவியுடைத்தாய்க்
கற்றார்க் கினனாகிக் கல்லார்க் கடிந்தொழுகிச்
செற்றார் செறுத்துநிற் சேர்ந்தாரை ஆக்குதி
அற்றம் அறிந்த அறிவினாய் மற்றும்
இவையிவை நீயா தொழுகின் நிலையாப்
பொருகடல் ஆடை நிலமகள்
ஒருகுடை நீழல் துஞ்சுவண் மன்னே." [1]

இது, வியப்பின்றி உயர்ந்தோர்கண் அவிந்தொழுகுதல் கடனென்று அரசர்க்குச் சொன்னமையாற் **செவியறிவுறூஉ மருட்பா.**

"திருநுதல் வேரரும்பும் தேங்கோதை வாடும்
இருநிலம் சேவடியும் தோயும்—அரிபரந்த
போகிதழ் உண்கணும் இமைக்கும்
ஆகும் மற்றிவள் அகலிடத் தணங்கே." [2]

இது, துணிதலை நுதலிய ஒருதலைக் காமமாதலிற் **கைக்கிளை மருட்பா.**

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 55
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள் கா. 35

2 புறப்பொருள் வெண்பா மாலை, 287,
யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 55
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 35

**கூன், சுரிதகம், வகையுளி, விகாரம் முதலியன**

16 வருதனிச்சொல் கூன்பொருளோ(டு) அடிமுன்வரும் அதுவே
வஞ்சிஈற் றினும்ஆம்வெண் பாஅகவல் ஈற்றால்
சுரிதகமாம் வேறும்அடி யால்இசையால் கலையால்
சூழ்எழுத்துஎண் ணால்வகுத்த வகுப்பால்கா ரணத்தால்
பெருகியிடும் காலவழக் கால்பலவாம் செய்யுட்
பெயர் எழுத்து முதல்எட்டு வகைவிரிவுங் குவிவும்
பரவுவகை யுளிவிகா ரம்வண்ணம் மற்றும்
பலவுமடங் காதடக்கிப் பகருவர்சான் றோரே.

என்பது சூத்திரம்.

**"வருதனிச்சொல் கூன்பொருளோ(டு) அடிமுன்வரும் அதுவே வஞ்சி ஈற்றினும் ஆம்"** எ—து, தனிச்சொல்லாகிய கூன் செய்யுட்கண் முதற்கண்ணே பொருள்கொண்டுவரப்பெறும்; அதுவே வஞ்சிப்பாவுக்கிற்றினும் வரப்பெறும்; உம்மையால் வஞ்சிக்கு முதலிலும் இடையிலும் வருமென்பது. பெரும்பான்மையால் விளங்கின தனிச்சொல்தானே கூனாம்;

" அதுவே,
வஞ்சி யிடையினு மிறுதியு நிலவும் " 1

" வஞ்சிப் பாக்களுக் கெங்கணு முறுமே " 2

என்னும் அவிநயத்துட் கண்டுகொள்க.

**"வெண்பா அகவல் ஈற்றால் சுரிதகமாம்"** எ—து, வெண்பாவாலும் அகவற்பாவாலுங் கலிப்பாவுக்குச் சுரிதகம் முடியும்.

**"வேறும் அடியால் இசையால் கலையால் சூழ்எழுத்து எண்ணால்... ......பலவாம் செய்யுட்பெயர்"** எ—து, இங்ஙனங் கூறினமையன்றியும் அடியினாலும், இசையினாலும், கலையினாலும், எழுத்தெண்ணிச் சொல்லுகையாலும், வகுத்துக்கொண்ட வகுப்பினாலும், பொருள்கொண்டு பாடுங் காரணத்தினாலும்,

" பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே " 3

என்னுங் காலவழக்கினானும் பலவகையாக இப்படிச் செய்யுட்கள் பெயர்பெறும்.

---

1 அவிநய நூற்பா
2 அவிநய நூற்பா
3 நன்னூல், நூ. 461

"எழுத்துமுதல் எட்டுவகை.........பகருவர் சான்றோரே" எ—து, எழுத்து, அசை, சீர், பந்தம், அடி, தொடை, பா, இனம்; எட்டு வகையினது விரிவும், குவிவும், வகையுளியும், விகாரமும், வண்ணங்களின் வகையும் வேறு யாப்புக்கு அங்கமான வனப்பும், வாழ்த்தும், வசையும், பொருள்கோளும், குறிப்பு மொழிகளும் இவைபோல்வன பிறவும் பலவும் உண்டாகலான் இதனுள் அடக்கிச் சொல்லில் விரியும்; அந்த விரிவெல்லாம் இதனுள் அடக்கிச் சொல்லுவர் பெரியோர் எ—று. இனி உதாரணம் வருமாறு:—

"உதுக்காண்,
கரந்தாரா வண்கைச் சுவான்மாப் பூதன்
பரந்தானாப் பல்புகழைப் பாடி—இரந்தார்மாட்
டின்மை அகல்வது போல இருணீங்க
மின்னும் அளித்தோ மழை" [1]

இவ்வெண்பாவினுள் முதற்கண் 'உதுக்காண்' எனக் கூன்வந்தவாறு.

"அவரே,
கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே
யானே,
தோடார் எல்வளை நெகிழ வேங்கிப்
பாடமை சேக்கையிற் படர்கூர்ந் திசினே
அன்னள் அளியள் என்னாது மாமழை
மின்னும் பெய்யு முழங்கு
மின்னுந் தோழியென் னின்னுயிர் குறித்தே" [2]

இவ்வாசிரியத்துள், 'அவரே' எனவும், 'யானே' எனவும் கூனாயிற்று.

"உலகினுள்,
பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாவே பிறழினும்
இருந்தகை இருவரைமேல் எரியேபோற் சுடர்விடுமே

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள் நூ. 94
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 43

2 குறுந்தொகை 216, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 94
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 43

**சிறுதகையார் சிறுதகைமை சிறப்பென்னும் பிறப்பின்றி**

**உறுதகைமை பிழைப்பினுமோர் ஒப்பாகித் தோன்றாவே"** 1

இக்கலியடி முதற்கண் 'உலகினுள்' எனத் தனிச்சொல் வந்தவாறு.

**"உலகே,**

**முற்கொடுத்தார் பிற்கொளவும்**

**பிற்கொடுத்தார் முற்கொளவும்**

**உறுதிவழி ஒழுகுமென்ப**

**அதனால்,**

**நற்றிறம் நாடுதல் நன்மை**

**பற்றற யாவையும் பரிவறத் துறந்தே"** 2

இவ்வஞ்சியடி முதற்கண் 'உலகே' எனத் தனிச்சொல் வந்தவாறு.

**"மரவழங்கலின் மயக்குற்றன வழி"** 3

என வஞ்சியடியின் இறுதிக்கண் வழியெனக் கூன்வந்தவாறு.

**"கலங்கழாலிற் றுறை கலக்கானாதே"** 4

என இவ்வஞ்சியடியில் 'துறை' என நடுவுங் கூன் வந்தவாறு.

**"தேரோடத் துகள்கெழுமின தெரு"** 5

என வஞ்சியடியிறுதிக்கண், 'தெரு' என அசை கூனாயிற்று.

**"காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்"** 6

என்னும் கலிப்பாவினுட் 'சிறுகுடியீரே சிறுகுடியீரே' என ஓரடியால் தனிச்சொல் வந்தவாறு. பிறவுமன்ன.

---

1 & 2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 94
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 43

3 & 4 புறநானூறு 345, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 94
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 43

5 பட்டினப்பாலை அடி எண். 47, யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 43

6 கலித்தொகை 39, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 94
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 43

வெண்பாவினாலும் அகவலினாலும் சுரிதகம் முடிவது முன்காட்டிய கலிப்பாக்களுட் கண்டுகொள்க,

அடியாற் பெயர்பெற்றது—கழிநெடில், திருவிருக்குறள் முதலாயின; இவற்றிற் கழிநெடிலாவது ஆசிரியவிருத்தம். திருவிருக்குறளாவது வஞ்சித் துறை.

இசையாற் பெயர் பெற்றது -சந்தத் தாழிசை முதலாயின. இதிற் சந்தத் தாழிசை—ஆசிரியவிருத்தம்.

கலையாற் பெயர்பெற்றது—அச்சுக்கலை முதலாயின. இதல் அச்சுக் கலை இரண்டடியால் வந்தாற் செந்துறை. நாலடியால் வந்தாற் சிரையெண்ணி அறுசீர் முதலானவைகளெல்லாம் ஆசிரியவிருத்தம் என அறிக.

எழுத்தெண்ணாற் பெயர்பெற்றது—கட்டளைக் கலித்துறையாம்.

வருத்த வகுப்பாற் பெயர்பெற்றது—புய வகுப்பு. புயவகுப்பு முதலாயின ஆசிரியவிருத்தத்துள்ளும் ஆசிரியப்பாவினுள்ளும் அடங்கும்.

காரணத்தாற் பெயர்பெற்றது — திருவெம்பாவை முதலாயின; அம்மானை தரவு கொச்சகக் கலிப்பா என்பாரும் உளர். வெண்டளையே வருத லாற் பஃறொடை வெண்பா என்பதும் இது.

கால வழக்காற் பெயர்பெற்றது—வெண்பாவினுள் ஈரடிமுக்கால் முதலா யினவையும், சார முதலாயினவையும் 'பலவாஞ் செய்யுட் பெயர்' என்பதற்குப் பொருள் விரிக்கிற்பெருகும்.

எழுத்து முதல் எட்டுவகை விரிவுங் குவிவும் என்றது: தொகையால் யாப் பாம்; வகையால் எழுத்து முதல் எட்டாம்; விரிவால் எழுத்துக் குறில் நெடில் முதலானவை போல மற்றை ஏழுக்தும் இப்படியே கண்டுகொள்க.

இனி வகையுளி வருமாறு:—

"அருள்நோக்கும் நீரார் அசைசீர் அடிக்கண்
பொருள்நோக்கா தோசையே நோக்கி— மருள்நீங்கக்
கூம்புபவுங் கூம்பா தலர்பவுங் கொண்டியற்றல்
வாய்ந்த வகையுளியின் மாண்பு " 1

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 95
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா 43

**" கடியார்பூங் கோதை கடாயினான் திண்டேர்**
**சிறியாடன் சிற்றில் சிதைத்து " [1]**

இந்த வெண்பாவைக் கடியாரென்றும் பூங்கோதை என்றும் சீர்பிரித்தால் தளைசிதையும்;

" வெள்ளையுட் பிறதளை விரவா; அல்லன
எல்லாத் தளையும் மயங்கியும் வழங்கும் " [2]

என்பதனாற் 'கடியார்பூங் கோதை' என அலகிடிற் சீர்சிதையாது.

**" மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார் " [3]**

இவ்வெண்பாவின் ஈற்றடியை நிலமிசையென்றும் நீடென்றும் வாழ்வாரென்றும் அலகிடில் வாழ்வாரென்பது ஆசிரியச்சீராம். நாள் என வெண்பா முடியுமாதலால் நீடுவாழ் என்றும் வாரென்றும் அலகிடக் கூவிளமென்றும் நாளென்றும் முடியும்.

பிறவும் இவ்வாறே கண்டுகொள்க.

விகாரம் வருமாறு'—

" வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி " [4]

என்னை வலித்தலாவது:—

**" குறுத்தாட் பூதம் சுமந்த**
**அறக்கதிர் ஆழியெம் அண்ணலைத் தொழினே " [5]**

இதனுள் 'குறுந்தாள்' எனற்பாலதனைக் 'குறுத்தாள்' என்றது வலித்தல்.

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 95
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள் கா. 43

2 யாப்பருங்கலம் நூ. 22

3 திருக்குறள்—3, யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 43

4 நன்னூல், நூ. 155

5 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள் நூ. 95
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 43

" தண்டையின் இனக்கிளி கடிவோள்
பண்டையள் அல்லள் மானோக் கினளே " [1]

இதனுள், தட்டையெனற்பாலதனைத் தண்டை என்று மெலித்தவாறு.

" ஆர்த்த அறிவினர் ஆண்டிளைய ராயினும்
காத்தோம்பித் தம்மை அடக்குப—மூத்தொறூஉம்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்
போத்தறார் புல்லறிவி னார் " [2]

இதனுள் "பொத்தறார்" எனற்பாலதனைப் "போத்தறார்" என நீட்டும் வழி நீட்டினவாறு காண்க.

" எருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்
திருத்தார்நன் றென்றேன் தியேன் " [3]

இதனுள், "தீயேன்" எனற்பாலதனைத் "தியேன்" என்றது குறுக்கும் வழிக் குறுக்கினவாறு.

" வெண்மணல் எக்கர் விரிதிரை தந்தநீர்
கண்ணாடி மண்டிலத் தூதாவி ஒத்திழியும்
தண்ணந் துறைவன் தகவிலனே தற்சேர்ந்தார்
வண்ணங் கடைப்பிடியா வாறு. " [4]

இதனுள், "தண்டுறைவன்" எனற்பாலதனைத் "தண்ணந்துறைவன்" என்று விரிக்கும்வழி விரித்தவாறு.

---

1 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 95
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 43

2 நாலடியார் 351, யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 60
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 23

3 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 62, 95
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 24, 43
தொல். செய். இளம்பூரணருரை நூ. 114

4 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 95
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 43

" பூத்தாட் புரவிற் புனைமதில் கைவிட்டார்
காத்தாவிக் காதலர் ஏனையர்—பார்த்துறா
வேண்டார் வணக்கி விறன்மதில்நான் கைக்கோடல்
வேண்டுமாம் வேண்டார் மகன் " [1]

இதனுள், "வேண்டாதாரை வணக்கி" எனற்பாலதனை "வேண்டார் வணக்கி" எனத்தொகுக்கும் வழித்தொகுத்தவாறு.

இனி வண்ணம் வருமாறு:—

" தூங்கேந் தடுக்கல் பிரிதல் மயங்கிசை வைத்துப்பின்னும்
பாங்கே அகவல் ஒழுகல் வலிமெலிப் பாற்படுத்திட்
டாங்கே குறினெடில் வல்லிசை மெல்லிசை யோடிடையுந்
தாங்கா துறழ்தரத் தாம்வண்ணம் நூறுந் தலைப்படுமே " [2]

என்னை ? தூங்கிசைமுதல் ஐந்தையும் முன்வைத்து அதின்பின்னே குறில்முதல் ஐந்தையும் ஒவ்வொன்றின் பேரிலே ஏற்றி அகவல்முதல் நாலையும் பின்னே வைக்கில் அகவல் முதல்நான்கும் தனித்தனியே இருபத்தைந்தாம். இந்த நால்வகையும் அலகிட வண்ணம் நூறாம். (5)

ஒழிபியல் முற்றும்.

---

1 & 2 யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள், நூ. 95
யாப்பருங்கலக் காரிகையுரை மேற்கோள், கா. 43

# 4. பொருத்தவியல்*

## பொருத்தங்கள் பத்து

17 பகர்செய்யுள் மங்கலஞ்சொல் எழுத்துத் தானம்
பால்உண்டி வருணம்நாள் கதியே என்றா
புகரில்கணம் எனப்பத்தும் பிறங்கு கேள்விப்
புலவர்புகழ் முன்மொழிக்குப் புகல்வர் செம்பொன்
சிகரகிரி எனப்பணைத்துப் புடைத்து விம்மித்
திரண்டெழுந்து வளர்ந்திளகிச் செறிந்த கொங்கைத்
தகரமலர்க் குழல்கருங்கண் குமுதச் செவ்வாய்ச்
சரிவளைக்கைக் கொடிஎன்னத் தயங்கும் மாதே. (1)

*இப்பா என்னுதலிற்றோ எனின், இச்சொன்ன பத்துவகைப் பொருத்தமுஞ் செய்யுள் முதன்மொழிக்கு ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்.) *அவையாவன:* மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வருணம், நாள், கதி, கணம் இவை பத்தும் முதன்மொழிக்கியல் என்றவாறு. (1)

## மங்கலம், சொல்

18 மாமணிதேர் புகழ்அமுதம் எழுத்துக் கங்கை
மதிபரிதி களிறுபரி உலகம் சீர்நாள்
பூமலைகார் திருக்கடல்நீர் பழனம் பார்சொல்
பொன்திகிரி பிறவும்முதல் மொழிச்சீர்க்(கு) ஆகும்
நாமவகை யுளிசேர்தல் பொருள(து) இன்மை
நலம்இலதாய் வைத்தல்பல பொருளாய்த் தோன்றல்
ஆம்இனிய சொல்ஈறு திரிதல் போலும்
ஆதிமொழிக்(கு) ஆகாஆ னந்தம் ஆமே.

---

* இவ்வியலுக்கும் அடுத்த இயலுக்கும் தரப்பட்டுள்ள உரை முன்னை இயல்களுக்கான உரையினின்று வேறானது. 1908இல் ஆரணி, மேடிகை, சென்னகேசவுலு நாயுடவர்களால் பதிப்பிக்கப்பெற்ற 'சிதம்பரப்பாட்டியலின் பொருத்தவியல் மரபியல்' அடங்கிய 'பாட்டியற் கொத்து' நூலுள் அவ்வியல்கள் பெற்றுள்ள உரையே இவண் எடுத்தளிக்கப்பெற்றுள்ளது.

இப்பா என்னுதலிற்றோ எனின், செய்யுள் முதல் மொழிக்கு மங்கலச் சொல்லாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) மங்கலச் சொல்லாவன: மா, மணி, தேர், புகழ், அமுதம், எழுத்து, கங்கை, மதி, பரிதி, களிறு, பரி, உலகம், சீர், நாள், பூ, மலை, கார், திரு, கடல், நீர், பழனம், பார், சொல், பொன், திகிரி இவை இருபத்தைந்தும் முதன்மொழிக்காம் என்பது.

'பிறவும்' என்றதனால் அருந்ததி, ஞெண்டு, அறுகடல், சங்கு, தார், விசும்பு, புவி, கயல், முரசு, கவரி, தோகை இவையுமாம் என்றவாறு.

ஆகாச் சொல்லாவன: நாம வகையுளி சேர்தல்—செய்யுள் முதற்பாவினும் ஒருபாச்சொல்லில் அப் பா ஒருவழிச் சீர்சிதைந்தும் ஒருவழிச்சீர் சிதையாமலும் பாடுதல் வகையுளியாம் என்பது.

அதற்கு உதாரணம்

**"கடியார்பூங் கோதை கடாயினான் திண்டேர்**
**சிறியாடன் சிற்றில் சிதைத்து."**

இதனுள், கடியார் என்றும் பூங்கோதை என்றும் புளிமாவாகவும் தேமாங் காயாகவும், கடாயினான் என்று கருவிளமாகவும் இவ்வாறலகிடின் ஆசிரியத் தளையுங் கலித்தளையுந் தட்டும்; வெள்ளைத்தன்மை குன்றிப்போம்; "சீர்களிற் புல்லா தயற்றளை" என்னும் இலக்கணத்தோடு மாறுகொள்ளுமாதலால் இதனைக் கடியார்பூ என்று புளிமாங்காயாகவும், கோதை என்று தேமாவாகவும் அலகிடிற்சீர் சிதையாதாம். பிறவுமன்ன.

பொருளதின்மை—பொருளில்லாமல் வைத்தல்; அது வருமாறு:— இறிஞி முதலாயின என்க. நலமிலதாய் வைத்தலாவது சீரணங்கு மேவுமென்ற சொல் முதலாயின என்க. பல்பொருளாய்த் தோன்றலாவது ஒருசொற் பலபொருளாய்த் தோன்றல்; அஃதாவது அரியென்பது சிங்கமோ வண்டோ என்று ஐயப்படுவது. சொல்வீறுதிரிதல் காரணிசொற்றோன்றனானன்று, கடனன்று, பொன்னன்று இவை முதலாயினஎன்க. இவையெல்லாஞ் சொல்லானந்தக்குற்றம் என்றவாறு.(2)

## எழுத்துப் பொருத்தமும் தானப் பொருத்தமும்

19 ஆனஎழுத்(து) ஒன்பதுஏழ் ஐந்து மூன்றாம்
ஆகா(து)எட்(டு) ஆறுநான்கு ஆதிச் சீர்க்கே
ஊனம்இலா அஆவும் இஈ ஐயும்
உஊவும் எஏயும் ஒஓ ஔவும்
தானம்இதை வகையாம்அந் தாதி தன்னில்
தலைவன்பேர் முதல்எழுத்தில் பாலன் ஆதி
மேல்நிரைஎண் ணில்பால குமார ராசர்
வேண்டிடும்;வேண் டாவிருத்தம் மரணம் தானே. (3)

இப்பா என்னுதலிற்றோ எனின், முதன்மொழிக்கண் வருமெழுத்துந் தானமும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) அவற்றுள் ஆகியவெழுத்தாவன:— ஒற்றுக்கூடின ஒன்பதும், ஏழும், ஐந்தும், மூன்றும் ஆமென்ப; ஆகா எழுத்தாவன:— எட்டு, ஆறு, நான்கு ஆகா என்ப; இரண்டெழுத்துச் சொல்லாதது என்னோவெனின், முன் மொழியாதலான் மூவசைச் சீரின்மையின் மறுக்கப்பட்டன என்க. தானம் ஐந்தாவன:— அ ஆ பாலன், இ ஈ ஐ குமாரன், உ ஊ ஔ ராசன், எ ஏ விருத்தன், ஒ ஓ மரணமென்று சொல்லப்பட்டவையுள், உயிர்க்குறிலான அ இ உ எ ஒ என்னும் ஐந்தினுடன் தமக்கொத்த உயிர்நெடிலான ஆ ஈ ஊ ஏ ஓ என்னும் ஐந்தையும் சேர்த்து, இகரத்துடனே ஐகாரமும், உகரத்துடனே ஔகாரமுஞ் சேர்த்தால் அ இ உ எ ஒ என்றாகும்: அவை பால, குமார, ராச, விருத்த, மரணமாம். இவற்றுள், உயிரும் உயிர்மெய்யென்று சொல்லப்பட்ட தொகையெல்லாம் ஐந்து பங்காய் அடங்கும். உயிர்மெய்கள் ஐந்து பங்காய் அடங்குவது எப்படியென்னில், வருக்கசப்பாடத்தின்படி அகரத்துக்குக் ககரமும், இகரத்துக்குக் கிகரமும், உகரத்துக்குக் குகரமும், எகரத்துக்குக் கெகரமும், ஒகரத்துக்குக் கொகரமும், மற்ற நீண்ட உயிர்மெய்களும், கையும் கௌவும் உயிர் சேர்ந்ததுபோலச் சேர்ந்து, உயிர் பன்னிரண்டும் ஐந்து பங்காயானது போல உயிர்மெய்களெல்லாம் ஐந்துஐந்து பங்காய் அடங்கும். அவையிற்றைப் பாட்டுடைத்தலைவன் பேர்முதலெழுத்து எதுவோ அதுவே பாலனாகக்கொண்டு மங்கலச்சொல்லின் முதலெழுத்தைத் தானத்தடைவே யந்தாதியாய் எண்ணிப் பால குமார ராசன் இவை பொருந்துந் தானம்; விருத்தம் மரணம் இவைபொருந்தாத தானமென்று சொல்லுக என்றவாறு. (3)

## பாலும் உண்டியும்

20 மருவுகுறில் ஆண்நெடில்பெண் அவர்இ வர்க்கா
மயங்கினும்ஆம் வரலாகா பேடுஒற்று ஆய்தம்
உரியகச தநபமவ ஏழோ(டு) ஆதி
உயிர்க்குறில்நான்கு இவைஅமுதம் ஆதிச் சீர்க்கும்
அரியதசாங் கத்தயற்கும் நலம(து) ஆகும்;
அமுதமொழிக்(கு) அல்லாத எழுத்தும் கால்மாத்
திரைஅளவுஅஃ கேனமுடன் மூன்றும் நஞ்சாய்ச்
செப்பும்எழுத்து இவைஎல்லாம் தீதாம் அன்றே.

இப்பா என்னுதலிற்றோவெனின், ஆண் பெண் இருபாலுக்கும் அமுதம் நஞ்சென்னும் உண்டியும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) அவற்றுள், உயிர்க்குறிலும் உயிர்மெய்க்குறிலும் ஆணெழுத்து; உயிர்நெடிலும் உயிர்மெய்நெடிலும் பெண்ணெழுத்தாதலால் ஆண்பாற் புகழுமிடத்து ஆணெழுத்துச் சிறப்பு, பெண்பாற் புகழுமிடத்துப் பெண்ணெழுத்துச் சிறப்பு, **'மயங்கினுமாம்'** என்றதனால் ஆணுக்குப் பெண்ணெழுத்தும் பெண்ணுக்கு ஆணெழுத்தும் வந்தாலும் நன்று.

> "பாவின் கிழத்தி நாமக ளாதலிற்
> பெண்ணெழுத் தல்லது முன்வைத் துரையார்" [1]

என்றார் பிங்கலனார்.

**"வரலாகா பேடொற்று ஆய்தம்"** என்பது ஒற்றும் ஆய்தமும் அலி; இவை முன்மொழிக்கு ஆகா என்க. அமுத எழுத்தாவன: - க ச த ந ப ம வ அ இ உ எ இவை அமுத எழுத்து என்றவாறு. இவை முதற் சீர்க்கு ஆகும்; தசாங்கத்து அயற்கும் ஆம்.

நஞ்செழுத்தாவன:— அமுதவெழுத்து அல்லாத எழுத்தும், மகரக் குறுக்கமும், ஆய்தக் குறுக்கமும், உயிரளபெடையும், ஒற்றளபெடையும், ஆய்தமும் ஆம்; இவை முதன்மொழிக்கண் வைக்கில் தீதாம். **(4)**

---

1 பிங்கல நிகண்டு நூ. 1361

### வருணம்

21 தீதுஇல்உயிர் ஈராறும் முதல்ஒற்(று) ஆறும்
திருமறையோர்க்(கு) அடைவேஒர் ஆறு வேந்தர்க்(கு)
ஏதுஇல்லவ றன-க்கள்வணி கர்க்குஆம்; மற்றை
எழுத்துஉள்ளவை சூத்திரர்க்குஆம் இயம்பு சாதி
ஓதிமன்தன் படைப்புஉயிரே அரன்மால் செவ்வேள்
உம்பர்கோன் பரிதிமதி மறலி நீர்க்கோன்
காதல்அள கேசன்முதல் இவ்வி ரண்டாய்க்
கம்முதல்மூ வாறுஒற்றும் கருதிச் செய்தார்.

இப்பா என்னுதலிற்றோ எனின், வருணமும் தோற்றமும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) அவற்றுள், அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ க ங ச ஞ ட ண இவை பதினெட்டும் அந்தணர்க்காம்; த ந ப ம ய ர இவை ஆறும் அரசர்க்காம்; ல வ ற ன இவை நான்கும் வணிகர்க்காம்; ழ ள இவையிரண்டுஞ் சூத்திரர்க்காம் என்றவாறு.

இனித்தோற்றமாவன:— அயன்படைப்பு உயிர் பன்னிரண்டுமாம்; அரன்படைப்பு க ங; திருமால் படைப்பு ச ஞ; செவ்வேள் படைப்பு ட ண; இந்திரன் படைப்பு த ந; சூரியன் படைப்பு ப ம; சந்திரன் படைப்பு ய ர; இயமன் படைப்பு ல வ; வருணன் படைப்பு ழ ள; குபேரன் படைப்பு ற ன. இவர்கள் ஒன்பதின்மரும் பதினெட்டு மெய்யும் படைத்தாரென்க. (5)

### நாட்பொருத்தம்

22 கருதும்உயிர் அடைவேநான்கு ஐந்து மூன்று
கார்த்திகையே பூராடம் உத்தி ராடம்
உரைதரு க-வ் வரியின்நான்கு இரண்டு மூன்று
மூன்றுஓணம் ஆதிரையே புனர்தம் பூசம்;
இருமைகொள் ச-வ் வரியின்நான்கு ஐந்து மூன்று
இரேவதிஅச் வனிபரணி; ஞகரம் மூன்றும்
வரும்அவிட்டம்; தகரம்இரண்டு ஏழு மூன்று
வளர்சோதி விசாகமே சதயம் மன்னும்.

சதிதிகழ் ந-வ் விலில்ஆறு மூன்று மூன்றும்
தரும்அனுடன் கேட்டையே பூரட் டாதி
திதம்மிகும் ப-வ் வரியின்நான்கு இரண்டோடு ஆறுஉத்
திரம்முதல்மூன் றாம்;ம-வ்வில் ஆறும் மூன்றும்
இதமுடன்மூன் றும்மகம்ஆ யிலியம் பூரம்
யா-உத்தி ரட்டாதி யூயோ மூலம்
உதவிய வ-ம் முதல்நான்கும் ஒழிந்த நான்கும்
உரோகணியாம் மிருகசீ ரிடம்ஆம் பேர்நாள்.

இப் பாவிரண்டும் என்னுதலிற்றோ எனின், பேர்நாள் உணர்த்துதல் நுதலிற்று.

*(இ—ள்.)* அவையாவன:— அ ஆ இ ஈ கார்த்திகை, உ ஊ எ ஏ ஐ பூராடம், ஒ ஓ ஔ உத்திராடம், க கா கி கீ திருவோணம், கு கூ திருவாதிரை, கெ கே கை புனர்பூசம், கொ கோ கௌ பூசம், ச சா சி சீ இரேவதி, சு சூ செ சே சை அசுவநி, சொ சோ சௌ பரணி, ஞ ஞா ஞொ அவிட்டம், த தா சோதி, தி தீ து தூ தெ தே தை விசாகம், தொ தோ தௌ சதையம், ந நா நி நீ நு நூ அனுடம், நெ நே நை கேட்டை, நொ நோ நௌ பூரட்டாதி, ப பா பி பீ உத்திரம், பு பூ அத்தம், பெ பே பை பொ போ பௌ சித்திரை, ம மா மி மீ மு மூ மகம், மெ மே மை ஆயிலியம், மொ மோ மௌ பூரம், யா உத்திரட்டாதி, யூ யோ மூலம், வ வா வி வீ ரோகணி, வெ வே வை வௌ மிருகசீரிடம். ஈகார லகாரம் வந்தால் இகாரமாக ஒட்டிக்கொள்க. (7)

### நாள், கதி

24 பேர்நாள்உற் பவநாளா தல்மூ வொன்பான்
பிரித்துஒன்று மூன்றுஐந்துஏழ் ஆகாது எட்டாம்
கூர்இராசி யும்வயினா சிகமும் ஆகா.
குறில்வன்மை ஈறுஒழிக்கில் வானோர்க்கு ஆகும்
நேர்நெடிலின் முதல்நான்குஈறு இல்லா மென்மை
நிலமக்கள் கதிமுதற்சீர்க்கு ஆகும் ஒஓ
ஏர்மருவு யரல்ழற விலங்காம் மற்றை
எழுத்துநர கக்கதி;முன் இவைவா ராதால்.

இப்பா என்னுதலிற்றோ எனின், நாட்பொருத்தமுங் கதியும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) இறைவன்பேர் நாளாதல் உற்பவித்த நாளாதல் முதல் வைத்துப் பிரபந்த மங்கலச்சீர் மொழிக்கு முதலெழுத்தாக எண்ணி இருபத் தேழு நாளையும் மூவொன்பதாகப் பிரித்து ஒன்றும் மூன்றும் ஐந்தும் ஏழும் ஆகாதநாள்; எட்டாம் இராசியாகிய பதினேழா நாளும் பதினெட்டா நாளும் வைநாசிகமாகிய இருபத்திரண்டா நாளும் இவையாகா என்றவாறு. கதியாவன: அ இ உ எ நான்குயிரும், க ச ட த ப என்னும் வல்லெழுத் தைந்தும் இவை ஒன்பதும் தேவகதி; ஆ ஈ ஊ ஏ என்னும் நான்கு நெட்டுயிரும், ங ஞ ண ந ம என்னும் மெல்லெழுத்து ஐந்தும் ஆக ஒன்பதும் மக்கட்கதி; இவையிரண்டும் முதற்சீர்க்காகும். ஒ ஓ என்னும் உயிரிரண்டும், ய ர ல ழ என்னும் இடையெழுத்து நான்கும், றகரமும் இவை ஏழும் விலங்கின் கதி; ஐ ஔ என்னும் உயிரிரண்டும், வ ள ன என்னும் மூன்றும் ஆய்தமும் இவை ஆறும் நரகர்கதி; இவை இரண்டும் விலக்கப்பட்டன என்றவாறு. (8)

## கணநாட் பொருத்தம்

25 வான்இலகு நேர்குருவே நிரையாம். வெண்சீர்
வரில்நப தவகணம்நாள் பரணி மும்மீன்
ஊனம்மிகு புனர்பூசம் பூசம் வாழ்நாள்
உற்றபுகழ் சூனியநோய் பலன்கள் ஆதம்
தேன்அனையாய்! வஞ்சிச்சீர் அடைவே நான்கும்
திகழ்சர மயகணம்,நாள் சோதி ஆரல்
தானம்உறு கேட்டைசத யந்தான் கேடு
சாவுதிரு மகிழ்ச்சிபலன் தரத்தொ டங்கும்.

இப்பா என்னுதலிற்றோ எனின், சீருங் கணமும் நாளும் வரும்பலம் ஆமாறு உணர்த்திற்று.

(இ—ள்.) இலகு நேர், குரு நிரை, நேரசை இறுதியாகிய மூவசைச்சீர் நான்கும் வெண்பாவுரிச்சீர் எனப்படும். அவையாவன:— நேர் நேர் நேர் தேமாங்காய்; நிரை நேர் நேர் புளிமாங்காய், நிரை நிரை நேர் கருவிளங்காய்; நேர் நிரை நேர் கூவிளங்காய்; இந்த நான்கு சீருக்கும் உரியகணம்: நகணம்,

பகணம், தகணம், சகணம். இந்த நான்கு கணத்துக்கும் நாள்: பரணி மிருகசீரிடம் புனர்பூசம் பூசம். இவை நான்கிற்கும் பலன்: வாழ்நாள் புகழ் சூனியம் நோய் என்பது. தேனனையாய் என்பது மகடூஉ முன்னிலை. நிரையசைச்சீர் இறுதியாகிய மூவசைச்சீர் நான்கும் வஞ்சியுரிச்சீர் எனப்படும். அவையாவன: நேர்நேர்நிரை தேமாங்கனி, நிரைநேர்நிரை புளிமாங்கனி, நிரைநிரைநிரை கருவிளங்கனி, நேர்நிரைநிரை கூவிளங்கனி; இந்நான்கு சீருக்கும் உரியகணம்: செகணம் ரகணம் மகணம் யகணம்; இந்நான்கு கணத்துக்கும் நாள்: சோதி கார்த்திகை கேட்டை சதயம்; இந்நான்கின் பலன்: கேடு சாவு திரு மகிழ்ச்சி என்றவாறு. நகணம் பகணம் மகணம் யகணம் இந்நான்கும் முதன்மொழிக்கு வைக்கப்படும். தகணம், செகணம், சகணம், ரகணம் இந்நான்கு கணமும் விலக்கப்பட்டன. (9)

26 துறக்கம்மதி வான்பரிதி காய்ச்சீர் முன்னும்
சூழ்காற்றுத் தீநிலம்நீர் கனிச்சீர் பின்னும்
நிறுத்துகணம் இவ்விரண்டாம் அகவற் சீரின்
நேர்ஈறு வெள்ளைச்சீர் நிறைவஞ் சிச்சீர்
சிறப்புடைஇவ் விரண்டும்ஆம் கணப்பேர் மற்றும்
திகழ்இயற்சீர் அயன்திருக்கோக் கருடன் முன்னாம்
வெறுத்தபின்னு மாம்என்ப இறைவன் நாட்கு
மேவுகண நாட்பொருத்தம் வேண்டும் மாதோ.

இப்பா என்னுதலிற்றோ எனின், முற்சொன்ன கணத்துக்கு இன்னும் ஒரு விகற்பமுணர்த்திற்று.

(இ—ள்.) இந்திரகணம் சந்திரகணம் அந்தரகணம் சூரியகணம் இந்நான்கு கணத்திற்கும் உரிய சீராவன: தேமாங்காய் புளிமாங்காய் கருவிளங்காய் கூவிளங்காய் என்பது. வாயுக்கணம் தீக்கணம் நிலக்கணம் நீர்க்கணம் இந்நான்கு கணத்திற்கும் உரிய சீராவன: தேமாங்கனி புளிமாங்கனி கருவிளங்கனி கூவிளங்கனி என்பது. இவற்றுள், இந்திரகணமும் சந்திரகணமும் நிலக்கணமும் நீர்க்கணமுமாம்; இந்த நான்கு கணமும் நேர் நேர் தேமா, நிரை நேர் புளிமா, நிரை நிரை கருவிளம், நேர் நிரை கூவிளம்; அன்றியும், இந்த நான்கு சீருக்கு உதாரணமாவன:— அயன்கணம், திருக்கணம், கொக்கணம், கருடகணம்; இவை நான்கும் வைக்கப்பெறும் என்றவாறு. (10)

புறனடை

25 ஆவதுமங் கலத்தேற்ற பரியா யச்சொல்
அடைகொடுத்து முதற்சீருக்கு அடுத்த செய்யுள்
மேவுதலை இடைகடைமங் கலச்சொல் வைத்து
விதிஎழுத்துப் பால்வருணம் மயங்கும் என்ப;
வாவும்ஒரு நற்கதியால் முன்னோர் நூலின்
மங்கலத்தால் நஞ்சுசில அமுதம் ஆகும்;
தூஅமுதம் எனின்கதியில் பழுது போமேல்
தொடர்கலப்பாம் மரபினது தொடக்கம் சொல்வாம்.

இப்பா என்னுதலிற்றோ எனின், வழுவாகாதென்பது உணர்த்திற்று

(இ—ள்.) மங்கலத்துக்கேற்ற பரியாயச் சொல்லால் முதற்சீருக்கு எடுத்த மங்கலச்சொல் செய்யுள் முதலினும் இடையினும் ஈற்றினும் வைத்தல் விதி செய்யுட்கு உரித்தென்பது. இவற்றுள், எழுத்தும் பாலும் வருணமும் மயங்கு மென்பாரும் உளர். இருவகையாகிய நாற்கதியினாலும் மேலோர் சொன்ன நூலின் மங்கலத்தினாலும் சில நஞ்செழுத்து அமுதவெழுத்தாம்; அதிலுங் கதியினாலுஞ் செய்யுளிடம்பாடாகப் பாமரபின் முறையே முதற்றொடங்கிச் சொல்வரென்றவாறு. *(11)*

பொருத்தவியல் முற்றும்.

# 5. மரபியல்

## பிள்ளைத் தமிழ்

28 துறுகொலைநீக் கித்தெய்வக் காப்பாய்ச் சுற்றத்
தொகைஅளவு வகுப்புஅகவல் விருத்தம் தன்னால்
முறைகாப்புச் செங்கீரை தால்சப் பாணி
முத்தம்வா ரானைஅம் புலியி னோடு
சிறுபறைசிற் றில்சிறுதேர் இவை;பின் மூன்றும்
தெரிவையர்க்குப் பெறாகழங்குஅம் மானை ஊசல்
பெறுமூன்று முதல்இருபத் தொன்றுள் ஒற்றை
பெறுதிங்கள் தனில்பிள்ளைக் கவியைக் கொள்ளே.

(இ—ள்.) கொலைநீக்கித் தெய்வங்காப்பாய் வகுப்பினாலும், ஆசிரிய விருத்தத்தினாலும், காப்பு செங்கீரை தால் சப்பாணி முத்தம் வாரானை அம்புலி சிறுபறை சிற்றில் சிறுதேர் இவை பத்தும் ஆண்பாற்காகும்; பெண்பாற்குச் சிறுபறை சிற்றில் சிறுதேர் இவை மூன்றும் நீக்கிக் கழங்கு அம்மானை ஊசல் மூன்றுங் கூட்டிப் பிறந்த மூன்று மாத முதல் இருபத்தொரு மாதத்திற்குள்ளே ஒற்றைப்பட்ட மாதத்திற் பிள்ளைக்கவிக்கொள்வது. (1)

## கலம்பகம்

29 கொண்டபுயம் தவம்மதங்குஅம் மானை காலம்
குறம்களிசம் பிரதம்மறம் பாண்கார் தூது
வண்டுதழை கைக்கிளைசித்து இரங்கல் ஊசல்
மடக்குமருட் பாஅகவல் விருத்தம் வெண்பா
வெண்டுறைவஞ் சித்துறைஆ சிரியம் வஞ்சி
விருத்தப்பா கலியினம்அந் தாதி யாகக்
கண்டவைமுன் ஆதிஒரு போகு வெண்பாக்
கலித்துறைநேர் கூறல்கலம் பகமாம் அன்றே.

(இ—ள்.) முன்னே யொருபோகும் இரண்டாவது வெண்பாவும் மூன்றாவது கலித்துறையும் வர மற்றவை இன்னவிடத்தில் இன்னது ஆகுமென்னும் நியமமில்லாமற் புயவகுப்பு முதலாகவும் மடக்கீறாகவும் மருட்பா முதலாகச் சொன்ன பாவும் இனமும் வர அந்தாதியாகப் பாடுவது கலம்பகமாம். (2)

## கலம்பகச் செய்யுள், பன்மணி மாலை, அந்தாதி, அகப்பொருட் கோவை என்பன

30 அன்புறுதே வர்க்குநூறு; இழிபுஐந்து ஐயர்க்கு;
அரசர்க்குத் தொண்ணூறு வணிகர்க்கு ஐம்பான்;
இன்புறுமுப் பான்உழவர்க்கு; அமைச்சி னுள்ளோர்க்கு
எழுபதுஎனும்; கலம்பகத்துஅம் மானை ஊசல்
முன்புஒருபோகு ஒழித்ததுபன் மணிமா லைப்பேர்;
மொழிவெள்ளை நூறுகலித் துறைநூ றாதல்
நன்குஉறில்அந் தாதி;கலித் துறைநா னூறாய்
நடப்பதுஅகப் பொருட்கோவை நாமம் மன்னோ.

(இ—ள்.) முன்சொன்ன கலம்பகம் தேவர்க்கு நூறு, முனியீச்சுரர்க்குத் தொண்ணூற்றைந்து, அரசர்க்குத் தொண்ணூறு, மந்திரிகட்கெழுபது, வணிகர்க்கைம்பது, உழவர்க்கு முப்பது பாடவேண்டும். கலம்பகத்தில் அம்மானை ஊசல் ஒருபோகு ஒழித்துப்பாடுவது பன்மணிமாலை. வெண்பா வாதல் கலித்துறையாதல் நூறுபாடில் அந்தாதி. அகப்பொருள்மேற் கலித்துறை நானூறு பாடிற் கோவையாம். (3)

## இரட்டைமணிமாலை, இணைமணிமாலை, மும்மணிக்கோவை, ஒலி அந்தாதி, இருபா இருபஃது, பயோதரப்பத்து, நயனப்பத்து என்பன

31 மன்இருபான் வெள்ளைகலித் துறைஇ ரட்டை
மணிமாலை; நூறுவெள்ளை அகவற் பாவால்
பின்னர்க்கலித் துறையதுஇணை மணிமா லைப்பேர்;
பேசுஅகவல் வெள்ளைகலித் துறைமுப் பானால்
சொன்னதுமும் மணிக்கோவை; வகுப்பு முப்பான்
சூழ்ஒலிஅந் தாதி;வெள்ளை அகவற் பாவால்
பன்னும்இரு பாஇருபது; இவைஅந் தாதி;
பயோதரம்,கண் உரைத்திடில்அப் பேர்ப்பத்து ஆமால்,

(இ—ள்.) இரட்டைமணிமாலை முதலியவற்றை இச்சூத்திரத் திறத்தானுணர்க. (4)

## தசாங்கப் பத்து, சின்னப்பூ, விருத்த இலக்கணம்

32 பத்துஇயல்வெண் பாவின்மலை நதிநாடு ஊர்தார்
பரிகளிறு கொடிமுரசு செங்கோல் பாடின்
மெத்துதசாங் கப்பத்தாம்; தசாங்கம் தன்னை
வெண்பாவால் தொண்ணூறுஏழ் பஃது முப்பான்
இத்தகைமை மொழிவதுசின் னப்பூ ஆகும்;
எழில்குடைசெங் கோல்நாடுஊர் வில்வாள் வேல்மா
அத்திதனித் தனிஅகவல் விருத்தம் பத்தால்
அறைவிருத்தம் இலக்கணமாய்; அமுதச் சொல்லாய்!.

(இ—ள்.) இச்சூத்திரத்தால் தசாங்கப் பத்தும் சின்னப்பூவும் விருத்த விலக்கணமும் உணர்க. (5)

## ஊசல், வருக்கமாலை, மும்மணிமாலை, நான்மணிமாலை என்பன

33 சொற்கலித்தா ழிசைஅகவல் விருத்தம் ஆதல்
சுற்றமுடன் தாழிசையாய்ச் சொல்வது ஊசல்;
வற்கஉயிர் கசதநபட மவ–எட் டின்சூழ்
மருவுஅகவல் வரின்வருக்க மாலை; வெள்ளை
நற்கலியின் துறைஅகவல் அந்தா தித்த
நடைமுப்பான் மும்மணிமா லைப்பேர்; மேலோர்
ஒற்கம்இல்ஆ சிரியவிருத் தத்தைக் கூட்டில்
ஒருநாற்பான் நான்மணிமா லைக்குஎன்று ஓதே.

(இ—ள்.) இச்சூத்திரத்தால் ஊசலும், வருக்கமாலையும், மும்மணி மாலையும், நான்மணிமாலையும் உணர்க. (6)

### அலங்கார பஞ்சகம், அட்ட மங்கலம், நவமணிமாலை, ஒருபா ஒருபஃது

34 ஓதும்வெள்ளை கலித்துறைஆ சிரியம் வஞ்சி
உறுவிருத்தம் வகுப்புஐந்தால் உரைக்கில் அம்ம
கோதில்அலங் காரபஞ்ச கப்பேர்; எட்டுக்
குலவுஅகவல் விருத்தம்உறு தெய்வம் காப்பாம்
ஈதுஅட்ட மங்கலம்;இப் படிஒன் பானாம்
ஏத்துநவ மணிமாலை; எப்பாட் டேனும்
தீதில்ஒரு பான்ஒருபா ஒருபஃது என்ப;
செப்பிவைகள் நான்கையும்அந் தாதி தன்னால்.

(இ—ள்.) *இதனால் அலங்காரப்பஞ்சகமும், அட்டமங்கலமும், நவமணி மாலையும், ஒருபாஒருபஃதும் உணர்க.* (7)

### பல்சந்தமாலை, ஆற்றுப்படை, பாதாதிகேசம், கேசாதிபாதம், அங்கமாலை

35 அகவல்விருத் தம்வகுப்புஆ தல்பத்து ஆதி
அந்தம்நூறு ஆகும்பல் சந்த மாலை;
புகழ்அகவ லால்புலவர் பாணர் கூத்தர்
பொருநர்முத லவர்உரைஆற்று எதிர்ப்பா டாகப்
பகருமது ஆற் றுப்படையாம்; கலிவெண் பாவால்
பாதாதி கேசம்கே சாதி பாதம்
மகிழஉரைத் திடில்அந்தப் பேராம்; அந்த
வகைஉரைக்கின் வெளிவிருத்தத்(து) அங்க மாலை.

*இச்சூத்திரத்தால் பல்சந்தமாலையும், ஆற்றுப்படையும், பாதாதிகேசமும், கேசாதிபாதமும் உறுப்புக்களை வெளிவிருத்தத்தால் அவ்வாறு கூறின் அங்க மாலையாமாறும் உணர்க.* (8)

### மங்கலவள்ளை, மெய்க்கீர்த்தி; புகழ்ச்சிமாலை, நாமமாலை, கைக்கிளை

36 மாசில்குல மகளுக்கு வகுப்பு வெண்பா
வருபொருள்ஒன் பான்ஒன்பா னாகப் பாடில்
தேசுஉயர்மங் கலவள்ளை; வேந்தர்க்கு உண்மை
திகழ்கீர்த்தி உரைப்பதுமெய்க் கீர்த்தி; வஞ்சி

பேசுகுணப் பேர்அடுக்கி மடவார்க்கு ஓதில்
பெருப்புகழ்ச்சி மாலை அப் பாஆண் பாற்கு
மாசுஅகல உரைக்கில் அது நாம மாலை;
வரும்காமம் ஒருதலைக்கைக் கிளைய தாகும்.

இச் சூத்திரத்தால் மங்கலவள்ளையும், மெய்க்கீர்த்திமாலையும், புகழ்ச்சி மாலையும், நாமமாலையும், கைக்கிளையும் உணர்க. (9)

## உலா, இன்பமடல்

37 குழமகனை அடையாளம் கலிவெண் பாவால்
கூறி,அவன் மறுகுஅணையக் காதல் கூர்ஏழ்
எழில்பேதை, பதினொன்று பெதும்பை, பன்மூன்று
இயல்மங்கை, பத்தொன்பான் மடந்தை, ஐயைந்து
அழகுஅரிவை, முப்பஃதுஓர் தெரிவை நாற்பான்
ஆம்வயது பேரிளம்பெண் முதலாய் உள்ளோர்
தொழஉலாப் போந்ததுஉலா; தலைவன் பேர்க்குத்
தொடை எதுகை ஒன்றில்இன்ப மடலாய்ச் சொல்லே.

இச் சூத்திரத்தால் உலாவும், வளமடலும் உணர்க. (10)

## உலாமடல், அநுராகமாலை, தூது, எண்செய்யுள்

38 சொன்னமா தரைக்கண்டு கனவில் சேர்ந்தோன்
துணிவன்மடல் என்றதுஉலா மடல்;பாங் கற்குள்
இன்னல்உரைத் திடுதல்அநு ராக மாலை;
இருதிணையை விடல்தூது;இவ் வைந்தும் முற்பாப்
பன்னுபொருள் இடம்காலம் தொழில்முப் பான்நாற்
பான்எழுபான் தொண்ணூறு நூறால் வெண்பா
மன்னுகலித் துறையாதல் புகலப் பேரான்
மாலையும்ஆர்; எண்ணாலும் மருவும் பேராம்.

இச்சூத்திரத்தால் உலாமடலும், அனுராகமாலையும், தூதும், நானாற்பதும், மாலையும் உணர்க. (11)

## வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி நொச்சி உழிஞை தும்பை வாகை மாலைகள், தானைமாலை, தாரகை மாலை

39 மகிழ்நிரைகொள் வதுவெட்சி, கரந்தை மீட்டல்,
மாற்றார்பால் செலல்வஞ்சி. ஊன்றல் காஞ்சி,
பகர்மதிலைக் காக்குமது நொச்சி, சுற்றிப்
படைவளைத்த(து) உழிஞை,பொரல் தும்பை, வென்று
புகழ்படைத்தல் வாகையாது மாலை, பேரால்
போற்றுவது மாலையுமாப் புகல்வர்; தானை
அகலம்உரைப் பதுதானை மாலை, தூசி
அணிவகுப்பில் தாரகைமா லையைச்சொல் ஆய்ந்தே.

இச்சூத்திரத்தால் வெட்சிமுதலிய பத்துமாலையுங் காணக. (12)

## தசபிராதுற்பவம், நாழிகை வெண்பா, செருக்களவஞ்சி, வரலாற்று வஞ்சி, ஆனைத்தொழில்

40 ஆய்ந்ததசப் பிராதுற் பவம்பத் தான
அரிபிறப்புஆ சிரியவிருத் தத்தால் வாழ்த்தில்,
ஏய்ந்திடுநா ழிகைவெண்பா மன்னர்க்கு ஈசர்க்கு
எய்தியநா ழிகைவெண்பா நாலெட் டாய்ச்சொல்
வாய்ந்தசெருக் களவஞ்சி களத்தைக் கூறல்
வரலாற்று வஞ்சிபல வரலாறு ஓதல்
பாய்ந்திடும் மதத்துஆனைத் தொழில்நேர் கொல்லும்
படைக்களிற்றைக் கண்டுஅரசன் பற்றிச் சேர்தல்.

இச்சூத்திரத்தால் தசப்பிரா துற்பவமும், நாழிகை வெண்பாவும், செருக்கள வஞ்சியும், வரலாற்று வஞ்சியும், யானை வஞ்சியும் உணர்க. (13)

## பரணி

41 படைபுக்குஆ யிரம்வேழம் எதிரார் போரில்
படப்போர்செய் தானுக்குக் கடவுள் வாழ்த்துக்
கடைதிறப்புப் பாலைநிலம் காளி கோட்டம்
கழுதுநிலை காளிக்குப் பேய்ச்சொல் பேய்க்குத்

தொடர்காளி சொலல்அதனால் தலைவன் கீர்த்தி
சொல்லல்அவன் சேறல்புறப் பொருள்தோன் றப்போர்
அடுதல்களம் விரும்பல்இவை நாற்சீர் ஆதி
அடிஇரண்டில் ஏறாமல் பரணி பாடே.

இச்சூத்திரத்தால் பரணியென்னும் பிரபந்தம் பாடும் விதமுணர்க.

காப்பியம்

42 பாடுநெறி வணக்கம்வாழ்த்து ஒன்று நாலாய்ப்
பகர்பொருள்முன் வரஇறைவன் வெற்பு வேலை
நாடுநகர் பொருள்பருவம் இருசுடர்பெண் வேட்டல்
நண்ணல்முடி பொழில்புனல்ஆ டல்கள் ளுண்டல்
கூடுமகிழ்வு ஊடல்துனி புதல்வர்ப் பேறு
கூறிடுமந் திரந்தூது செலல்போர் வென்றி
நீடுசந்தித் தொடர்ச்சிசுவை பாவம் தோன்ற
நிகழ்த்துஇயல்பு முதற்பெருங்காப் பியத்துக் கம்மா.

(இ—ள்.) தெய்வ வணக்கம் வாழ்த்து வருபொருளுரைத்தலென்னும் இவற்றிலொன்றும் பலவுஞ் சிறப்புடைத்தாக முன்னே வருதலையுடைத்தாய் அறம்பொருளின்பம் வீடென்னும் நாற்பொருளினையும் பயக்குமொழுகலாற் றினையுடைத்தாய்த் தனக்கு ஒப்பாரு மிக்காருமில்லாத தலைவனையுடைத்தாய் மலைவருணனையுங் கடல் வருணனையும், நாட்டு வருணனையும், நகர வருணனையும் இருது வருணனையும் ஆதித்தோதய வருணனையுஞ் சந்திரோதய வருணனையும் என்றின்ன வருணனையுடைத்தாய்ப் பெண்வேட்டல் மணம் புணர்தல் முடிசூடல் பொழில் நுகர்தல் புனல்விளையாடல் கள்ளுண்டல் கூடுதலின் மகிழ்ச்சி ஊடுதல் புலவி துனியென்னுங் காமமகிழ்ச்சி புதல்வரைப் பெறுதல் மந்திரமிருத்தல் தூதுவிடல் மேற்செலவு செருச்செய்கை வென்றி யெய்துதல் சந்திபோலத் தொடர்வுபட்டுச் சுவையென்னும் அலங்காரமுடைத்தாய் எட்டுவகைப்பட்ட மெய்ப்பாட்டு மேம்பாட்டுக் குறிப்பும் இடைவிடாமற் கேட்போர் மதிக்க இலம்பகமென்றாதல் சருக்கமென்றாதல் பரிச்சேதமென்றாதல் பாகுபட்டு இவ்வகைத்தாய்ப் புலவராற்புனையப்படுந் தன்மையது பெருங் காப்பியம் என்றவாறு. (15)

### சிறுகாப்பியம், காப்பியத்துக்குப் பெயரிடல்

43 அறையும்இதில் சிலகுறைபாடு எனினும் குன்றாது
அறம்பொருள்இன் பம்வீட்டில் குறைபா டாகப்
பெறுவதுகாப் பியமாகும்; புராணம் ஆகும்
பேசின்முதல் நூல்பொருளொடு அளவு தன்மை
செறிமிகுதி செய்வித்தோன் கருத்த னானும்
திகழும்இடு குறியானும் நூற்குப் பேரார்;
உறுகலிவஞ் சிப்பாக்கை யறத்துக்கு ஆகா;
உரைப்பதுஇனி வாழ்த்தினுக்குளப் பாவும் ஆமே.

(இ—ள்.) முன்சொன்னவுறுப்பில் சில குறைந்துவரினும் அறமுதல் நான்கினுங் குறைபாடின்றிவரிற் பெருங்காப்பியத்திற் பிறழ்ந்ததன்றென்பது. அறம்பொருளின்பம் வீடென்னும் நான்கினும் ஒன்றும் பலவுங் குறைந்து வருவது காப்பியமென்றும் புராணமென்றும் கொள்ளப்படும் விதப்பால் பெருங் காப்பியங் காப்பியமென்பன; ஒரு திறச் செய்யுளானும் பலதிறச் செய்யுளானும் உரை விரவியும் பிறபாடை விரவியும் வருதலுடைய; விரவாது செய்யுளான் வருவதே சிறப்புடைத்தென்க. முதனூலானும், பொருளானும், அளவானும், தன்மையானும், மிகுதியானும், செய்வித்தோனானும், கருத்தனானும், இடுகுறி யானும் நூற்குப்பெயராம். அவற்றுள், முதல் நூலாற் பெயர்பெற்றன ஆசிரியப்படலம் பாரத முதலாயின; பொருளாற் பெயர்பெற்றன அகநானூறு, புறநானூறு முதலாயின; அளவாற் பெயர்பெற்றன பன்னிரு படலம், நாலடி நானூறு முதலாயின; தன்மையாற் பெயர் பெற்றன சிந்தாமணி, சூளாமணி, நன்னூல் முதலாயின; மிகுதியாற் பெயர்பெற்றன களவியல் முதலாயின; செய்வித்தோனாற் பெயர்பெற்றன சாதவாகனம், இளந்திரைய முதலாயின; கருத்தனாற் பெயர்பெற்றன அகத்தியம், தொல்காப்பிய முதலாயின; இடுகுறி யாற் பெயர்பெற்றன நிகண்டு, கலைக்கோட்டுத் தண்டு முதலாயின; கையறத் துக்குக் கலிப்பாவும் வஞ்சிப்பாவுமாகா. வாழ்த்துக்கு எல்லாப்பாவுமாம் என்றவாறு. (*16*)

### பாவலன் இலக்கணம்

44 பாடுமுறை தொடர்செய்யுள் தெரிக்க வல்ல
பாவலன்நற் குணம்குலம்சீர் ஒழுக்கம் மேன்மை
நீடுஅழகு சமயநூல் பிறநூல் மற்று
நிகழ்த்துநூல் இலக்கணநாற் கவிஉள் ளானாய்
நாடுஉறுப்பில் குறைவிலனாய் நோயி லானாய்
நாற்பொருளும் உணர்ந்துகலை தெளிந்து முப்பான்
கூடும்வயது இகந்துஎழுபான் வயதில் ஏறாக்
குறியுடைய னாகில்அவன் கவிதை கொள்ளே.

### கவியைக் கேட்டுப் போற்றும் முறை

45 கொள்ளும்இடம் விதானித்துத் தொடையல் நாற்றிக்
கொடிகதலி தோரணம்பா லிகைநீர்க் கும்பம்
துள்ளுபொரி விளக்குஒளிர முரசுஇ யம்பத்
தோகையர்பல் லாண்டுஇசைப்ப மறையோர் வாழ்த்த
வெள்ளைமலர்த் துகில்புனைந்து தவிசின் மேவி
வேறும்ஒரு தவிசுஇருத்திச் செய்யுள் கேட்டே
உள்ளம்மகிழ் பொன்புவிபூண் ஆடை மற்றும்
உதவிஏழ் அடிபுலவ னுடன்போய் மீளே.

### புரவலனுக்குக் கேடு

46 உடம்படச்செய் யான்செய்யுள் பிறர்பால் கூறில்
உற்றதிரு அவனிடைப்போய் ஒதுங்கும்; அன்றித்
திடம்பெறச்செய் யுள்வரைந்து செர்பூச் சூட்டித்
தெருவுமயா னம்புற்றுக் காளி கோட்டத்து
இடம்தனில்அங்கு அவன்தன்னை நினைந்து சுட்டால்
ஈரா று திங்கள்தனில் இறுதி யாவன்;
தொடர்ந்துசெயாது உளம்நொந்தால் சுற்றத் தோடும்
தொலைவன்இஃது உண்மை,அகத் தியன்தன் சொல்லே.

### நற்கவியும் தீக்கவியும்

47 அகத்தியன்சொல் எழுத்துமுதல் குற்றம் செய்யுட்கு
அடையாமல் தொடைகொண்டால் அடையும் செல்வம்
மகத்துயர்நோய் அகலும்;அக லாது சுற்றம்;
வாழ்நாளும் அதிகம்;வழி மரபு நீடும்;
தொகைக்குற்றம் பாட்டுஉறின்செல் வம்போம்; நோயாம்;
சுற்றம்அறும்; மரணம்உறும்; சோரும் காலும்;
சகத்தவர்க்குஈது அன்றியே தேவர்க்கு ஆகில்
தப்பாதுஇப் பலன்கவிதை சாற்றி னார்க்கே.

(இ—ள்.) (44—47) இச் சூத்திரங்களின் பொருளைச் "சொல்லின் முடிவினப்பொருள் முடித்த" லென்னுந் தந்திரவுத்தியாற் காண்க. (17—20)

*மரபியல் முற்றிற்று.*

*சிதம்பரப்பாட்டியல் முற்றும்.*

சிதம்பரப் பாட்டியல்

# நூற்பா முதற்குறிப்பு அகர நிரல்

[எண்: பக்க எண்]


அ

அகத்தியன்சொல் எழுத்துமுதல் 114

அகவல்விருத் தம்வகுப்பு 109

அறையும்இதில் சிலகுறைபாடு 113

அன்புறுதே வர்க்கு நூறு 107

ஆ

ஆசுஇல்இசை துள்ளல்அள 45

ஆந்தளைசீர் கெடில்இகர 65

ஆய்ந்ததசப் பிராதுற்ப 111

ஆர்வெண்பா அகவல்கலி 25

ஆவதுமங் கலத்தேற்ற 105

ஆனஎழுத்து ஒன்பதுஏழ் 99

இ

இறுகுறளின் சிதைவும்செந் 84

உ

உடம்படச்செய் யான்செய்யுள் 114

ஓ

ஓதும்வெள்ளை கலித்துறைஆ 109

க

கருதும்உயிர் அடைவேநான்கு 101

கு

குழமகனை அடையாளம் 110

கொ

கொண்டபுயம் தவம்மதங்குஅம் 106

கொள்ளும்இடம் விதானித்துத் 114

ச

சதிதிகழ்நவ் வினில்ஆறு 102

சா

சாற்றெல்லை இல்லைநெடில் 82

சொ

சொற்கலித்தா ழிசைஅகவல் 108

சொன்னமா தரைக்கண்டு 110

தீ

தீதுஇல்உயிர் ஈராறும் 101

தூ

துறக்கம்மதி வான்பரிதி 104

துறுகொலைநீக் கித்தெய்வக் 106

தொ

தொடைஎழுவாய் எழுத்துஒன்றின் 20

நி

நிகழ்இருசீர் குறளடிமுச் 15

நிரல்இயற்சீர் நேர்நேர்தே 9

ப

பகர்செய்யுள் மங்கலஞ்சொல் 97

படைபுக்குஆ யிரம்வேழம் 111

பத்துஇயல்வெண் பாவின்மலை 108

பரவுஅகவல் அகவலிசை 39

பலஅடியாய் அளவிலவாய் 33

பா

பாடுநெறி வணக்கம்வாழ்த்து 112

பாடுமுறை தொடர்செய்யுள் 113

பூ

பூமேவு திசைமுகனும் 2

பெ

பெறுதரவு தரவிணையே 51

பே

பேர்நாள்உற் பவநாளா 102

ம

மகிழ்நிரைகொள் வதுவெட்சி 111

மயங்கும்அடி எப்பாவும் 73

மருவுகுறில் ஆண்நெடில்பெண் 100

மருவுவிளம் முன்னர்நிரை 13

மன்இருபான் வெள்ளைகலித் 107

மா

மாசில்குல மகளுக்கு 109

மாமணிதேர் புகழ்அமுதம் 97

யா

யாப்புவிதி எழுத்துஅசைசீர் 2

வ

வருதனிச்சொல் கூன்பொருளோ(டு) 90

வா

வான்இலகு நேர்குருவே 103

|| ஶ்ரீ: ||

# கௌமுதிக் கதைகள்


பதிப்பாசிரியர் :

சாஹித்ய ஶிரோமணி

**எஸ். இராஜலக்ஷ்மி,** எம். ஏ.

சம்ஸ்கிருதப் பண்டிதர்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்

# முகவுரை

இந்தியத் துணைக் கண்டத்தில் தோன்றிய தொன்மை வாய்ந்த சமயங்களுள் ஒன்று ஜைனசமயம். அது மகாவீரர் மற்றும் அவரது கொள்கையைச் சார்ந்தவர்களால் நாடெங்கும் பரப்பப்பெற்றது. அவர்கள் சம்ஸ்கிருத மொழிக்கும், தமிழ் மொழிக்கும் இரு கண்களாக விளங்கும் பல நூல்களை யாத்தனர். இம் மதத்தை சமணம், ஜைணம், அர்ஹ மதம், நிகண்ட மதம் என்ற பல்வேறு பெயர்களால் அழைப்பார்கள். "நிகண்ட" என்ற சொல்லுக்கு பவ பதங்களை அறுப்பது என்று பொருள். விருப்பு, வெறுப்பு, ஆகியவற்றைத் துறந்த துறவிகளை "அர்ஹத்" என்ற சொல் உணர்த்துகிறது. இத் தன்மை வாய்ந்த துறவிகள் இம் மதத்தை மக்களிடம் பிரச்சாரம் செய்து பரப்பியதால், இம் மதத்திற்கு "அர்ஹ மதம்" என்ற பெயரும் உண்டு.

ஜைன மதம் இந்தியா முழுவதுமே பரவி இருந்தது. இம் மதத்தைச் சார்ந்த துறவிகள், இலக்கியம், கலை, கலாசாரங்களைப் பேணிக் காத்தவர்கள் எனில் மிகை இல்லை. இம் மதத்தைச் சார்ந்தவர்கள் இயற்றிய இலக்கியங்கள், சாஸ்திரங்கள் மற்றும் பிறநூல்கள் இன்றும் காணக்கிடைக்கின்றன.

இத்தகைய தொன்மை வாய்ந்த ஜைன சமயத் தொடர்புடைய காகிதச் சுவடிகளும், ஓலைச்சுவடிகளும் சரஸ்வதி மகால் நூலகத்தில் பாதுகாக்கப் பட்டு வருகின்றன. அவைகளுள் 'கௌமுதிக் கதைகள்' என்னும் இந்நூல் தற்போது வெளிவருகின்றது. நீதிநெறிகளைக் கதைகள் மூலமாக மாணவர் களுக்குப் போதிப்பதால் அவை, அவர்களின் மனதில் பசுமரத்தாணி போலப் பதியுமென்பது யாவருமறிந்ததே. அதனால்தான் நல்ல கதைகளைச் சொல்லும் போது அதற்குத் தொடர்பான நல்ல கருத்துக்களைச் சொல்வது வழக்கம். இக்கொள்கையைக் கொண்டதே கௌமுதிக் கதைகள் என்னும் நூலாகும். 'கௌமுதி' என்னும் சொல்லிற்கு திருவிழா, நிலவு என்பது பொருள்.

**தீர்த்தங்கரர் :**

ஜைன சமயக் குருமார்கள் தீர்த்தங்கரர் என்ற பெயரால் அழைக்கப் படுகின்றனர். இவர்களால் உருவாக்கி வளர்க்கப்பட்டதே ஜைன சமயம். இம்மதத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்து, இந்தியா முழுவதும் பரப்பிய வர்களே தீர்த்தங்கரர்கள். இவர்கள் இருபத்தி நான்கு பேர்கள். 1, விருஷப தீர்த்தங்கரர். 2. அஜிநாதர். 3. சாம்பவநாதர், 4. அபிநந்தனர், 5. சுமதிநாதர், 6. பதுமநாபர், 7. சுபார்சுவநாதர், 8. சந்திரப்பிரபர், 9. புஷ்பதந்தர்.

10. சீதளநாதர், 11. ஸ்ரீயாம்சநாதர். 12. வசுபூஜ்யர், 13. விமலநாதர், 14. அனந்தநாதர், 15 தர்மநாதர். 16. சாந்திநாதர், 17. குந்துநாதர், 18. அரநாதர், 19. மல்லிநாதர், 20. முனிசுவர்த்தர், 21. நமிநாதர். 22. நேமிநாதர், 23. பார்ஸ்வநாதர், 24. வர்த்தமான மஹாவீரர் ஆகியோர்.

ஜைன மதத்தின் கடைசித் தீர்த்தங்கரராக விளங்கிய வர்த்தமானர், ராகத்வேஷங்களைக் களைந்த காரணத்தால் ஜினர் என்று மக்கள் அழைத்தனர். ஜினரால் பிரச்சாரம் செய்யப்பட்ட காரணத்தால் இம்மதத்தை "ஜைன மதம்" என்றே அழைக்கலாயினர். இருபத்திமூன்றாவது தீர்த்தங்கரராகிய பார்சுவநாதர் கி. மு. 8 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும், 24 ஆவது தீர்த்தங்கரராகிய வர்த்தமான மஹாவீரர், கி. மு. 6 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரென்றும் அறியமுடிகிறது.

விருஷபதேவர் :

ஜைன சமயத்தின் முதலாவது தீர்த்தங்கரரான விருஷப தேவர் மக்களுக்கு நன்னெறி புகட்டி, சிற்பம், ஓவியம் போன்ற கலைகளையும், கல்வியையும் புகட்டினார். மொழிக்குரிய வரிவடிவை விருஷப தேவரே ஏற்படுத்தியவர் என்றும், இவரால் தோற்றுவிக்கப்பட்ட வரிவடிவமே *'ப்ராம்மி லிபி' என்றும் வரலாற்று ஆய்வாளர் M. N. பாசு அவர்கள் 'விசுவகோசம்' என்ற நூலில் கூறியுள்ளார். இதனையே சூடாமணி நிகண்டு, ஆதிநாதர் பிள்ளைத் தமிழ் போன்ற நூல்களில் கீழே கண்டுள்ள வரிகளும் காணப்படுகின்றன.

"வரைவொடு தொழிலே வித்தை
வாணிக முழவே சிற்பம்"
— சூடாமணி நிகண்டு

"இரையினா வெண்ணெழுத் தியம்பு வித்தாயு நீ"
— ஆதிநாதர் பிள்ளைத்தமிழ்

விருஷபதேவர் இல்லறத்தையும், துறவறத்தையும் சமமாகவே கருதியவர். மனித வாழ்விற்கு இவ்விரண்டுமே இன்றியமையாதவை. இல்லறம் மக்கள் உள்ளத்தை பண்படுத்துவல்லது என்றும், துறவறம் ஆன்மீக நெறியில் சென்று, வீடுபேற்றை நல்கவல்லதென்றும் கூறினார். இவர் போதித்த நெறிகளாவன. 1. கொல்லாமை, 2. பொய்யாமை 3. கள்ளுண்ணாமை, 4. பிறன்மனை நயவாமை, 5. மிகு பொருள் வெஃகாமை ஆகிய ஒழுக்க

* நூலகப் பருவ இதழ் — Vol. XLIV. Sanskrit Manuscripts of Jainisam.

நெறிகளைப் போதித்தார். இவருக்குப் பின் வந்த 22 தீர்த்தங்கரர்கள் வரை உள்ளவர்களுக்கான வரலாற்றுச் செய்திகள் அகப்படவில்லை. இருப்பினும் 23 வது தீர்த்தங்கரரான பார்சுவநாதரைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.

**பார்ச்சுவநாதர் :**

பார்ச்சுவநாதர் ஜைன தீர்த்தங்கரர்கள் இருபத்திநால்வருள், இருபத்திமூன்றாமவர். இவரது வரலாறு ஸ்ரீபுராணத்து மணிப்பிரவாள நடையில் அச்சாகியுள்ளது. மேலும் சென்னைப் பல்கலைக் கழக தமிழ் விரிவுரையாளர் வித்வான் மு சண்முகம் பிள்ளை அவர்கள் பதிப்பித்துள்ள அப்பாண்டை நாத வுலாவில் காணப்படுகின்றது. இவரது காலம் 24-வது தீர்த்தங்கரராகிய வர்த்தமான மகாவீரருடைய காலக் கணக்கினை ஒட்டி, கணிக்கப்படுகிறது. வர்த்தமானர் கி. மு. 599-இல் பிறந்து 72 ஆண்டுகள் உயிர் வாழ்ந்து கி. மு. 527 இல் முத்தி பெற்றுள்ளார். இவரது பிறப்புக்கு 245 ஆண்டுகட்கு முன் பார்ச்சுவநாதர் முக்தி பெற்றதாகக் கூறப்படுகிறது. ஆகவே பார்சுவநாதர் முக்தி பெற்றது கி. மு. 772 ஆகும். அவர் 100 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார் என்று கூறுவதனால் அவர் பிறந்தது கி. மு. 872 ஆகும். இவர் தனது 30-வது வயதில் பரிபக்குவமடைந்தார் என்று *"பார்ஸ்வநாத அம்மானை" என்னும் நூலும் பிறவும் கூறுவதனால், இவர் பரிபக்குவம் அடைந்தது கி. மு. 842 ஆக கருதலாம்.

**மகாவீரர் :**

பார்ஸ்வநாதர், தீர்த்தங்கரர் வீடு பெற்ற பின்னர் 250 ஆண்டுகளுக்குப் பின் கி. மு. 559 ஆம் ஆண்டில் மன்னன் சித்தார்த்தன், திரிசலா என்ற தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார் மகாவீரர். இளமையிலேயே கல்வி கேள்விகளில் வல்லவராகத் திகழ்ந்தார். ஆன்மிகத்தில் மிகுந்த நாட்டம் கொண்டிருந்தார் மகாவீரர். பார்ஸ்வநாதரின் கொள்கைகளையே ஆரம்பத்தில் தழுவினாலும், மஹாவீரருக்கு திருப்தி ஏற்படவில்லை. இதனால் சில கடுமையான சமயக் கொள்கைகளை ஆதரித்தார். அவற்றில் ஒன்றுதான், துறவிகள் அறவே ஆசையற்றவராக இருத்தல் வேண்டும் என்பது. இதனால் சமண சமயத்தில் இரு வேறு நெறிகள் தோன்றின. இந்த இரு நெறிகளையும் கைக்கொண்டு, மக்கள் ஒழுகியதால் இரண்டு பிரிவாயிற்று. வெள்ளையாடை அணிந்த துறவிகளை 'ஸ்வேதாம்பர சமணர்' என்றும் திசைகளையே ஆடையாகக் கொண்ட சமணத் துறவிகளை 'திகம்பர சமணர்' என்றும், இருவிதப் பிரிவுகள் ஏற்பட்டன. ஸ்வேதாம்பர சமணர்களின் ஆலயங்களில், அங்குள்ள சிலா விக்ரகங்களுக்கு "வெள்ளை ஆடை" அணிவிக்கப் பெற்றிருக்கும் திகம்பர

* பார்ச்சுவநாதர் அம்மானை — சரசுவதி மகால் வெளியீடு.

சமணர்களின் ஆலய விக்ரஹங்களுக்கு ஆடை இருக்காது. இவையே ஆலயங் களில் உள்ள வேறுபாடுகள்.

ஆயின் சமண சமயத்தினருக்கு உருவ வழிபாட்டில் நம்பிக்கை இருந்த போதிலும், உருவ வழிபாட்டையே ஏற்காத சமணத் துறவிகளும் உண்டு. இவர்களை "ஸ்தானவாசி சமணர்" என்று கூறுவர். ஸ்தானவாசி சமணர் களின் ஆலயங்களில் சிலா விக்ரகங்களுக்குப் பதில், சமண சமய ஆகம நூல் களையே, தீர்த்தங்கரர்களாகவும், அருகக்கடவுளாகவும் வழிபாடு புரிகின்றனர்.

ஆக, சமண சமயத்தில் மூன்று உட்பிரிவுகள் உள்ளன. இம்மூன்று நெறிமுறைகளையும், கடைப்பிடித்து வந்த ஜைனத் துறவிகள் மலைகளிலும், குன்றுகளிலுமே வாழ்ந்துள்ளனர். இத் துறவிகள் வாழ்ந்த இடங்களை 'பாழிகள்' என்றும், 'பள்ளிகள்' என்றும் அழைத்தனர். இவ்விடங்களில் சமண சமயம் போற்றும் தீர்த்தங்கரர்களின் உருவச் சிலைகளும், 'ஸல்லேகனம்' என்னும் கற்பாறைகளில் அமைக்கப்பட்ட முனிவர்களின் படுக்கைகளும், அதில் கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன.

## சமணர்களின் சம்ஸ்கிருத நூல்கள் :

சமணர்கள் தாங்கள் வாழ்ந்த பகுதிகளில் மக்கள் பேசிவந்த மொழி களிலேயே கல்விப் பணியை ஆற்றி வந்தனர். இதனால் பல நூல்களை வட்டார மொழிகளிலேயே இயற்றி வந்துள்ளனர். குறிப்பாக மகாவீரர் வாழ்ந்த காலத்தில் பொது மக்களுக்கே ஜைன மதத்தை முதலில் பரப்பினார். இதனால் மக்கள் அறிந்த மொழியாகிய அர்த்தமாகதி (अर्धमागधि) ப்ராக்ருத மொழியிலேயே மகாவீரரும், அவருடைய சீடர்களும் பிரச்சாரம் செய்தனர். இதன் காரணமாக ஜைன மதத்தின் முதல் நூல்கள் யாவும் (अर्धमागधि) ப்ராகிருத மொழியிலேயே இயற்றப் பெற்றுள்ளன. கி. பி. க்குப் பின்னர் இயற்றப் பெற்ற நூல்கள் யாவும் சம்ஸ்கிருத மொழியிலேயே இயற்றப்பெற்றன. ஜைன சமயத்தின் தொடக்க கால நூல்களை இயற்றிப் புகழ் பெற்ற பண்டிதர் களில் உமாஸ்வாதி, குந்தகுந்தாச்சாரியார், சமந்தபத்ரர் ஆகியோர் குறிப் பிடத்தக்கவர்கள். இவர்களுடைய சம்ஸ்கிருத நூல்களே ஜைன சமயத்திற்கு அஸ்திவார நூல்களாகும்.

உமாஸ்வாதி என்னும் புலவர் உமாஸ்வாமி, திகம்பராச்சாரியார் என்ற வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறார். இவர் இயற்றிய "தத்வார்த்த சூத்திரம்" என்ற நூல், "தத்வார்த்தாதிகமா" என்ற பெயராலும் அழைக்கப்

படுகிறது. இந்த நூலுக்குப் பல புலவர்கள் அறிவுரை, குறிப்புரை, விருத்தியுரை போன்ற பல உரைநூல்களை இயற்றியுள்ளனர் என்று குறிப்பிடுகின்றார் சம்ஸ்கிருத இலக்கிய ஆராய்ச்சியாளர் திரு. த்விஜேந்த்ரநாத்ஜா அவர்கள். 'தேவநந்தி' என்னும் 'பூஜ்யபாதர்' எழுதிய ''ஸர்வார்த்த சித்தி'' என்பது மற்றொரு பாஷ்யமாகும். இதே சூத்திரங்களுக்கு 8 ஆம் நூற்றாண்டில் கர்நாடக மாநிலத்திலுள்ள ''ஸ்ரவண பௌஹோளா என்னும் இடத்தில் வாழ்ந்த சமண சமயப் புலவர் அகளங்க பட்டர் என்பவர் ராஜவார்த்திகம்'' என்ற பெயரில் குறிப்புரை இயற்றியுள்ளார். வித்யாநாதர் என்ற சமணப் புலவர் 'தத்வார்த்தாதிகமா' என்ற நூலுக்கு ''ஸ்லோகவார்த்திகம்'' என்ற குறிப்புரையை இயற்றியுள்ளார். இந்த நூல்கள் அனைத்துமே ஜைன மதத்தின் தத்துவங்களையும், ஜைன தர்மங்களையும், ஆராயும் நூல்களாகும்.

### புராணங்கள் :

ஜைனர்கள் சம்ஸ்கிருத மொழியில் பல புராணங்களையும், பல ஸ்தோத்திர நூல்களையும் இயற்றியுள்ளனர். புராண நூல்களில் தலையாயது மகாபுராணம். இது இரண்டு பிரிவுகளை உடையது. ஆதிபுராணம் என்றும் உத்திரபுராணம் என்றும் அழைக்கப்படுகிறது. இவற்றைத் தவிர, கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் தோன்றியது பத்மபுராணம். இதில் ஸ்ரீராமனுடைய சரித்திரத்தைக் காணலாம். இதனை ஜைன ராமாயணம் என்ற பெயரில் அழைப்பதுமுண்டு. வால்மீகி ராமாயணக் கதைகளுக்கும், இதில் கூறப்பட்டுள்ள கதைகளுக்கும் வேறுபாடுகள் பலவுண்டு. கண்ணனுடைய சரிதத்தைக் கூறும் ஹரிவம்சம் போன்ற புராண நூல்களும் ஜைனர்களின் நூல் வரிசையில் காணப்படுகின்றன.

### காவியங்கள் :

மல்லிசேனர் இயற்றியது நாககுமார காவியம் என்ற நூல் ஆகும். இந்த நாககுமாரன் மகத நாட்டு மன்னராகத் திகழ்ந்தவர். இந்த நூல் 'ஸ்ருத பஞ்சமீ கதை' என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது. மற்றும் தன்ய குமார சரித்திரம், பத்ரபாஹு சரித்திரம், க்ஷத்ரசூடாமணி போன்ற காவியங்களும், ஜைனர்களால் படைக்கப்பட்டுள்ளன. ஒரு சில காவியங்களுக்கு தமிழில் உரை நூல்களும் உள்ளன.

### ஸ்தோத்திரங்கள் :

பாஹுபலி நாதாஷ்டகம், சந்த்ரநாதாஷ்டகம், பார்ச்வநாதாஷ்டகம், சமபத்ரஸ்தோத்திரம், முதலியன.

ஆகவே ஜைன சமயத்தைச் சார்ந்த சம்ஸ்கிருதப் புலவர்கள் சாஸ்திரங்கள் தொடங்கி சிறுசிறு ஸ்தோத்திரங்கள் வரை பல்வேறு நூல்களை இயற்றி சம்ஸ்கிருத மொழியின் வளர்ச்சிக்கும், ஜைன மதத்தின் வளர்ச்சிக்கும் சிறப்பாக பணியாற்றியுள்ளனர்.

**ஜைன மத தமிழ்ச் சுவடிகள்:**

ஸ்ரீபுராணம், நோன்புக் கதைகள், ஜீவதயாஷ்டமி நோன்புக் கதைகள், சௌபாக்ய நோன்புக் கதைகள், தீபாவளி நோன்புக் கதைகள், அட்டாங்க சரிதம், திரிலோகசாரம், லோகசுரூபம், பதார்த்தசாரம், பார்சுவநாதர் அம்மானை, சீவக சிந்தாமணி அம்மானை, மேருமந்திர தோத்திரம், கௌமுதிக் கதைகள் முதலியன. இவை தமிழில் எழுதப்பட்டிருந்தாலும், ஜைனர்களின் சம்ஸ்கிருத மொழிப் பழக்கத்தின் காரணமாக தமிழ் மொழியோடு சம்ஸ்கிருதச் சொற்களை கலந்து எழுதியுள்ளனர். இதனால் இந்நூல்கள் மணிப்பிரவாள நடையில் உள்ளன.

**கௌமுதிக் கதையின் சுருக்கம்:**

முந்தைய பாரத தேசத்திலிருந்த சௌர தேசத்து உத்தர மதுரை என்னும் நகரத்து ராஜாவாயிருந்தவன் பத்மோதயன். இவனது மனைவி ஜாம்பவதி. இவர்களுக்குப் புத்திரன் உதிதோதயன். இவருடைய மந்திரி சம்பின்னமதி. ராஜா உதிதோதயன், வருஷந்தோறும் கார்த்திகை மாசம் பூர்வ பக்ஷத்துப் பௌர்ணமி அன்று வனக்ரீடை பண்ணுவிப்பான். அவ்விடத்தில் புருஷரைத் தவிர, சாதுர்வர்ணத்திலுள்ள ஸ்திரி ஜனங்கள் பாட்டு, நாட்டியம் முதலியவைகளைப் பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் வெகு சிறப்பாகக் கொண்டாடி நகரமடைவது வழக்கம். அதே போல் ஒரு வருடம் கார்த்திகை மாத வளர்பிறைப் பௌர்ணமி நாள் அன்று ராஜா வனக்கிரீடைக்குப் போகவென்று முரசு அரைவித்தான். ஆகவே நகரத்தில் உள்ள பெண்கள் அனைவரும் வனக்கிரீடைக்குச் சென்றனர்.

சந்த்ரோதயமான அளவிலே ராஜா தன்னுடைய மனைவியை நினைந்து நித்திரை இன்றி மந்திரியிடம் வனக்கிரிடைக்கு வருவாயாக எனக்கூற மந்திரியும் தாங்கள் வனக்கிரீடைக்குப் போவது உசிதமல்ல. அரசனே தான் இட்ட உத்தரவை மீறக்கூடாது, மீறிச் செயல் பட்டால் பல விரோதங்கள் ஏற்படும், செங்கோல் முறைமை கெடும் என்றும் பலவாறு எடுத்துச்சொல்லியும் கேட்காததால், நல்ல அறிவுரை வழங்காத மந்திரியினால் ராஜாவுக்கு ஏற்பட்ட விபரீதத்தை கதை ஒன்றின் மூலமாக கூறுகிறான். அக்கதையில்

யமதண்டன் என்பவன் ஏழுநாள் கதையை அந்நாட்டு ராஜாவுக்குக்கூற, அதில் ராஜாவே குற்றவாளியாகிறான் என்பது போல் ஓர் அறிவுரைக் கதையை உதிதோதய மகாராஜனுக்கு மந்திரி கூற, அவனும் மகாமந்திரியே உன்னால் சொல்லப்பட்ட கதையினால் நான் நன்கு தெளிவடைந்தேன். நல்ல அறிவுள்ள மந்திரியில்லாத ராஜாவின் வம்சமும் இராஜ்யமும் நாசத்தை அடையும் என்று அறிந்த ராஜா, மந்திரியைப் பலவிதமாக வாழ்த்தி சந்தோஷிப்பிக்கச் செய்தான்.

ஆதலால் அன்று இரவு நகர சோதனைக்கும், நகரத்திலுள்ள ஆச்சரியங்களையும் காண்போம் என்று கூறி புறப்பட்டார்கள். இவர்கள் செல்லும் வழியில் அஞ்சன சோரன் என்பான் நிழலைப் பார்த்து இது யாரது நிழல் என்று கேட்க, மந்திரியும் வித்தைகளில் பிரசித்தனாகிய "சுவர்ணகுரன்" என்னும் திருடனது என்று சொல்ல, இவன் செல்கின்ற இடம் செல்வோம் என்று ராஜாவும், மந்திரியும் அவன்பின் செல்ல, அவன் சகல குணங்களிலும் சிறந்த அர்ஹதாசர் என்பவரின் வீட்டின் வெளியே உள்ள மரத்தின் மேல் ஏற, ராஜாவும், மந்திரியும் மரத்தின் கீழ் நின்றனர்.

இந்தச் சமயத்தில் அர்ஹதாசர், வீட்டில் உள்ள பெண்களிடம் 'உதிதோதய மகாராஜன்' அறிவித்த வண்ணம் நீங்கள் வனக்கிரீடைக்குப் போகவில்லையா எனக் கேட்க, அவர்களும் நாங்கள் இன்று உபவாசதினமாகையால் ஜினபூஜையும், ஆகமாதி கதைகளைக் கேட்டலும் நன்மை பயப்பதாகும். ஆதலால் நாங்கள் சகஸ்ரகூட சைத்யாலயத்து மகாபூஜையினையும் செய்து, தர்ம கதையினையும் சொல்லி இருப்போம் என்று கூறினார்கள். பின்பு அர்ஹதாசரிடம் தங்களுக்கு இந்த விரதபூஜா கதைகளில் நம்பிக்கை வந்த காரணம் என்ன என்பதைக் கேட்க, அவரும் ஒரு கதையைச் சொல்கிறார், அதனைத் தொடர்ந்து அவரது ஏழு மனைவிகளும் தங்களுக்கு நம்பிக்கை வந்த காரணத்தினைக் கூற, ஒவ்வொருவரும் கூறி முடித்தவுடன் தனக்கு அதில் நம்பிக்கை இல்லை என்று எட்டாவது மனைவியான குந்தலதை கூறுகிறாள், இதனைக் கேட்டுக்கொண்டிருந்த ராஜா, மந்திரி இவர்களுக்கு மிகவும் கோபமாகி இவளுக்குத் தகுந்த தண்டனை கொடுக்கவேண்டும் என்று கருதி, மறுநாள் காலை அர்ஹதாசர் வீட்டிற்குச் சென்று அவரை சிறப்பித்து அவரது மனைவியான குந்தலதையை அழைத்து, இவர்கள் அனைவரும் கூறிய சத்கதையினை கேட்டும் நீ ஏன் நம்பிக்கை இல்லை என்று கூறினாய் எனக் கேட்க, அவளும் நானும் ஜைனனுடைய புத்திரிதான், ஜின மார்க்கத்தைத் தவிர பிற மார்க்கங்கள் எனக்குத் தெரியாது. நான் இதற்கு மறுப்புத் தெரிவித்த காரணம், நித்தியமில்லாத இந்த பாசபந்தங்களில் இருந்து விடுபட்டு,

புத்திரர்கள் கையில் தங்களின் உடைமைகளைக் கொடுத்துவிட்டு தபோவண மேற்க வேண்டும் என்பதே என் கருத்து, என்று கூறிய குந்தலதையது த்ருடமான இந்த வசனத்தை கேட்ட ராஜா முதலாயினார்கள் மகிழ்ந்து, குந்தலதையது வசனமே உண்மை என்று கருதி, உதிதோதய மகாராஜன், மந்திரி, அஞ்சன சோரன், அர்ஹதாசர் முதலாயினவர்கள் புத்திரர் கையில் ஒப்படைத்துவிட்டு பகவதர்ஹத் பரமேச்வரனுக்கு மகாபிஷேக உத்சவங் களைச செய்து குணபட்டாரகர் ஸ்ரீபாதத்து ஜின தீக்ஷா ப்ராப்தராயினர். சிலர் சிராவக விரதம் கைக்கொண்டனர். சிலர் சுபபரிணாமம் அடைந்தனர். ராஜா, மந்திரி, அர்ஹதாசர் முதலானோர் மனைவிகள், உததிஸ்ரீ என்னும் ஆர்யாங்கனைகளிடத்து. தீக்ஷை பெற்றுக் கொண்டனர். ராஜா முதலான வர்கள் தபோதிசயத்தால் சுவர்க்கம் அடைந்தனர் என்று கௌதம சுவாமிகள் அருளிச் செய்ய, சிரோணிக மகாராஜன் முதலாயினார் சம்யக்த்வத்தை அடைந்தனர்.

**சுவடியின் வரலாறு :**

கௌமுதிக் கதைகள் என்னும் இந்நூல் இந்நூலகத்தில் தமிழ்ப் பிரிவில் சுவடி எண் 1078, வரிசை எண் 1682 என்ற எண்ணில் வைத்துப் பாதுகாக்கப் படுகின்றது. இந்நூல் ஓலைச் சுவடியில் தமிழும், கிரந்தமும் கலந்த மணிப்பிரவாள நடையில் உள்ளது. சுவடி சுமாரான நிலையில் உள்ளது. இந்நூலை எழுதியவர் பெயர் குறிப்பிடப்படவில்லை.

**நன்றியுரை :**

கௌமுதிக் கதைகள் என்னும் இந்நூலினைப் பதிப்பிக்க ஆணை வழங்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குனர் உயர்திரு சி. கோசலராமன் இ. ஆ. ப. அவர்களுக்கும், நூலக நிருவாக அலுவலர் உயர்திரு சாமி. சிவஞானம் M. A. அவர்களுக்கும், நூலகப் பதிப்பு மேலாளர் மற்றும் நூலகர் உயர்திரு அ. பஞ்சநாதன் M. A M. L. I. S. அவர்களுக்கும், இந்நூலைப் பதிப்பிக்கும்போது ஏற்பட்ட சந்தேகங்களையும் விளக்கங்களையும் அளித்து உதவி புரிந்த அறங்கூறும் அன்னை திருமதி ராஜலக்ஷ்மி ஜினகுமார் அவர்களுக்கும், சுவடியினை ஒப்பிட உதவி புரிந்த நூலகப் பண்டிதர் ஆ. வீரராகவன் அவர்களுக்கும், இந்நூலினைச் செம்மையாக அச்சிட்டுத் தந்த அச்சகத்தார் அனைவருக்கும், நூற்கட்டுத் துறையினருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எஸ். இராஜலக்ஷ்மி,
சம்ஸ்கிருதப் பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
11—12—2001

|| ஸ்ரீ: ||

# கௌமுதிக் கதைகள்

சாஹித்ய சிரோமணி
**எஸ். இராஜலக்ஷ்மி,** எம். ஏ.,
சம்ஸ்கிருதப் பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

ஸ்ரீவர்த்தமானமானம்ய ஜினேந்த்ரம் ஜகத்ப்ரபும் ।
வக்ஷ்யேஹம் கௌமுதி ந்ருணாம் ஸம்யக்த்வ குணஹேதவே ॥

என்பது ராக-த்வேஷ-மோஹ-மத-ஹர்ஷ-மாத்சர்யாதி சகல தோஷ விப்ர முக்தனாகிய பகவதர்ஹத் பரமேஸ்வரன் ஸ்ரீ விரவர்த்தமான சுவாமிகளை நமஸ்கரித்து கௌமுதி என்னும் புண்ணியகதையினைச் சொல்லுவென். பவ்யபிராணிகளுக்கு (சகல உயிரினங்களுக்கும்) சம்யக்த்வமுண்டாக்குதல் காரணமாக ஜம்பூத்வீப பரத க்ஷேத்திரத்து மகத விஷயத்து சந்ததம் விகாரத் திணையும் தானபூஜா தப ஜீ(சீ)லங்களால் நிறைந்த சிராவகரையும், அழகிய வனங்களையும், உடைத்தாகிய அளகாபுரியை யொக்கும் ராஜ கிருஹ நகரத்து ராஜா ச்ரேணிக மகாராஜன் தேவி சேலினி மகாதேவி, இவர்கள் இஷ்டவிஷய காம போகங்களை அனுபவித்து செல்கின்ற காலத்து இந்த நகரத்து பாஹ்யோமானத்து (வெளியே) உலாவுகின்ற வனபாலகன் அபூர்வமாயின சில கண்டு சொல்லுவான். சுஷ்க (வரண்ட) தடாகம் சம்பூர்ணமும் அகாலத்தில் பல புஷ்பங்களையும் பழங்களையும் ஒன்றுக்கொன்று பகைகளாயுள்ள அஸ்வமும் (குதிரை), மஹிஷமும் (எருமை), மார்ஜாரமும் (பூனை), எலியும், பாம்பும், கீரியும், புலியும். புலவாயு (கலைமான்) முதலாகிய மிருகங்கள் தம்மில் பகையின்றிக் கூடியிருத்தலையும் கண்டு, இது சுபமோ, அசுபமோ வென்று விசாரித்து உலாவுகின்ற வன பாலகன், இந்நகரத்து பச்சிம திசையின் கண் விபுலாசலபர்வதத்தின் மிசை சதுர்வித தேவர்களாலும், ஜய ஜயவெனும் தேவ கோஷங்களாலும், திவ்யமாகிய துந்துபி த்வனிகளாலும், விளங்கிய ஸ்ரீ வர்த்தமான சுவாமிகள் சமவ சரணத்தைக் கண்டு, இந்த வனத்தில்

உண்டாகிய அதிசயங்களை எல்லாம் பகவான் எழுந்தருளின மகிமை என்று நினைத்து, பகவானுடைய தீர்த்தம் அவதீர்ணமானமை, நம்முடைய சுவாமிக்கு அறிவிப்போமென்று விசாரித்து. அபூர்வமான பல புஷ்பங்களையும், பழங்களையும் கொண்டுவந்து ராஜாவின் கோயில் வாசல் குறுகி, துவார பாலகர்களுக்கு அறிவிக்க, த்வாரபாலகர்களும், ராஜாவுக்கு அறிவிக்க, ராஜாவும் சீக்கிரம் வருகவென்றதும், வனபாலகனும் சென்று பல புஷ்பங்களையும், பழங்களையும் கொடுத்து நமஸ்கரித்து, சுவாமி தேவரீருடைய புண்ய மகிமையினாலே விபுலாசல பர்வதத்தின்மிசை ஸ்ரீ வீரவர்த்தமான சுவாமி சமவசரணம் அவதீர்ணம் ஆனது என்று விண்ணப்பம் செய்தலும், ராஜாவும் எதிரெழுந்து சப்தபதம் சென்று திக்கு நோக்கி நமஸ்கரித்து—வனபாலகனுக்கு மிகவும் சிறப்புச் செய்தனன். மிகவும் சந்தோஷமாகிய வனபாலகன் சொல்லுவான், ராஜாக்கள் — தேவதைகள் — குருக்கள் — நிமித்தக்ஞர் முதலானோர்க்கு அபூர்வ பலன்களைக் கொடுத்தால் மிகுந்த பலன் உண்டென்பது ப்ரத்யக்ஷமாகக் கண்டேன் என்று பிரியப்பட்டனன்.

ததநந்தரம் (அதன் பிறகு) மகாராஜன் கைவல்ய பூஜை நிமித்தமாக ஆனந்த மகாபேரி அறைவித்தான். அறைதலும் நகரத்து சதுஸ்சங்கத்திலுள்ளவர்களும், ராஜாவும், அந்தப்புர பரிவாரமும், பந்துஜனங்களுடன் (சுற்றத்தார் உடன்) கூட சமவஸரணம் பிரவேசித்து கந்தகுடியை த்ரிப்ரதக்ஷிணம் பண்ணி சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து

ஜய பச்சிம தீர்த்தேச ஜயாமரகணார்ச்சித
ஜய ஸத்ய ஸாவஸ்தாந ஜயநிர்ஜித மன்மத ।
ஜய பவ்யாப்த வர்மாம்சோ ஜய ஜீவப்ரியங்கர
ஜய முக்தி வதூநாத ஜயவாசாமகோசர ॥

என்ற பிரகாரத்தினால் அநேக ஸ்துதி சத ஸஹஸ்ரங்களால் ஸ்தோத்திர ப்ரணாமாதிகளையும் பண்ணி அஷ்ட விதார்ச்சனைகளாலும் ஸ்தவன (ஸ்தோத்திர) மாலைகளாலும் அர்ச்சித்து நமஸ்கரித்து ச்ருத மண்டபமடைந்து கௌதமசுவாமிகளை குருபத்தி பூர்வமாக நமஸ்கரித்து மனுஷ்ய கோஷ்டத்திருந்து கௌதமசுவாமிகளைப் புனரபி (மறுபடியும்) நமஸ்கரித்து கௌமுதி என்னும் சம்யக்த்வ கதையினை அருளிச் செய்தருள வேணுமென்றனன். பகவானும் பரஹித மதுர வசனங்களால் அருளிச் செய்வார்.

ஜம்பூத்வீப பரதக்ஷேத்திர சௌர தேசத்து உத்தரமதுரை என்னும் நகரத்து ராஜா பத்மோதயன் பிரதான வல்லபை ஜாம்பவதி என்பாள், இவ்விருவருக்கும் புத்ரன் உதிதோதயன், மந்திரி சம்பின்னமதி பார்யை சுப்ரபை. இவர்கட்குப் புத்ரன் சுபுத்தி. இந்நகரத்து சோரன், அத்ருஸ்யாஞ்ஜநம், தாலோத்காடனம், முதலாகிய வித்தைகளில் பிரஸித்தன் ரூப்யகுரனென்பான். இவனுடைய பார்யை ரூப்யகுரை. இவர்கட்குப் புத்ரன் சுவர்ணகுரன். இந்நகரத்து ராஜச்ரேஷ்டி ஜினதத்தர். பார்யை ஜினமதி. இவர்கட்குப் புத்ரன் அர்ஹத்தாசர். இவர்கட்கு தேவிமார் எண்மர். மித்ரஸ்ரீ விபுலஸ்ரீ, நாகஸ்ரீ, பத்மஸ்ரீ, பத்மலதை, கனகலதை, வித்யுல்லதை, குந்தலதை ஆக எண்மர். ராஜா உதிதோதயன் தன் நகர பாஹ்யோத்யானத்திலே(வெளியில் உள்ள தோட்டத்திலே) வருஷந்தோறும் கார்த்திகை மாஸ, பூர்வபக்ஷத்துப் பௌர்ணமை நாள் வனகிரீடை பண்ணுவிப்பான். அவ்விடத்தில் புருஷரை அன்றி நகரத்திலுள்ள சாதுர்வர்ணத்திலுள்ள ஸ்த்ரீ ஜனங்கள் நிருத்த கீதாதி விநோதங்களோட கூட கிரீடைப் பண்ணி அதிசயமாகப் பெருஞ்சிறப்புடன் நகரமடைவர், இப்படி வருஷம் தோறும் இந்த யாத்ரை நடத்திச் செல்லும் நாளில், ஒரு வருஷத்தில் கார்த்திகை மாச பூர்வ பக்ஷத்துப் பௌர்ணமி நாள் ராஜா வனகிரீடைக்குப் போகவென்று முரசறைவித்தனன். இந்த நகரத்தில் உள்ள ஸ்திரீகள் எல்லாரும் வனகிரீடைக்கு வருவார்களாகவும், இராத்திரி திவசம் அந்த வனத்திலே இருப்பார்களாகவும், புருஷராயுள்ளவர்கள் சகலரும் நகரத்திலே இருப்பார்களாகவும், யாவனொருவன் புருஷன் வனத்திலே ஸ்திரீகளிடத்தில் செல்லில் அவன் ராஜத்ரோஹி என்று கோஷணைப் பண்ணுவித்தனன்.

ததவஸரத்திலே சொல்லுவான் ராஜாவை ஒருவன் ஆக்ஞை மீறுதலும், குரு விஷயமுள்ளவர்களுக்கு உதாசீனம் செய்தலும், ஸ்திரீகள் நாயகன் வேறாக வசித்தலும், ஆகியவை * ஆயுதமின்றியிலே வதிக்கும் வதமென்றும், (ஆயுதம் இல்லாமல் புரியும் கொலைகளாகும்). ராஜா யாதொரு வசனம் சொல்லினன். அதனைப் பிராணிகள் ராஜா கற்பித்தபடியே செய்யவேணும். "ராஜாவுக்கு பலம் ஆக்ஞையென்றும், தவசுக்குப் பலம் பிரும்மசர்யம், ஞானத்துக்குப் பலம் ஹேயோபாதேயங்களை அறிதல், தனத்துக்குப் பலம் சத்பாத்திரங் கொடுத்தலும், போஜித்தலுமென்று கோஷணைப் பண்ணினன்.

---

* சாணக்கிய நீதி சமுச்சயம் - பக்கம் 54, சுலோகம் 65.
(சரசுவதி மகால் நூலக வெளியீடு)

பௌர்ணமை நகர ஜனங்கள் ஸமஸ்தரும் (எல்லோரும்) வந்து வன க்ரீடையைப் பண்ணிக்கொண்டிருந்தனர். இவர்களுக்கு துஷ்ட ஜனங்களாலும் துஷ்ட மிருகங்களாலும், பாதை வராமல் இருக்க யோக்யமான காவலைப் பண்ணிவித்தனன். எது காரணமெனில் "நதிகளையும், நகமுள்ள துஷ்ட மிருகங்களையும், ஆயுதபாணிகளையும், நீதியில்லாத ராஜாவையும், குணம் இல்லாத ஸ்திரீகளையும் நம்பவொண்ணாது".

என்னும் பிரசித்தியினால் ரக்ஷையைச் செய்வித்தனன். ஸ்திரீகள் அனைவரும் வனக்கிரீடையை பண்ணிக்கொண்டிருந்தனர். நகரத்திலுள்ள வர்கள் சிருங்கார லீலைகளோடு கூடியிருந்தனர். சந்த்ரோதயமான ளவிலே ராஜா காமானுராகத்தினாலே தன்னுடைய ஸ்திரீயை நினைந்து, நித்திரை இன்றி விரகபீடித்தனாகி சுபுத்தி மந்திரியை நோக்கிச் சொல்லுவான், மந்திரியே, 'வனக்கிரீடைக்குப் போக வருவாயாக' என்று சொல்லுதலும், ராஜாவின் வசனத்தைக் கேட்டு, 'மகாராஜனே, வனத்துக்குப் போக எண்ணுவது நீதியல்ல. போகில் பகு ஜனங்களோடு பெரிதாகிய விரோதம் உண்டாகும். விரோதமாகிய பொழுது செங்கோல் முறைமை கெடுமென்றும், பின்னும் சொல்லுவான், பகுஜனங்களோடு விரோதமானால் ஜபம் பண்ணுகை யரிது. அது எதுபோலவெனில், "மகா சர்ப்பமானதுக்கு ஒரு ஊனமுண்டாகிய விடத்து எறும்புகளால் பாதைப்படும். அதுபோல நமக்கும் அநர்த்தம் வரும் என்று ராஜாவுக்குச் சொல்லுவான்.

மந்திரியே யான் குபிதனாயுள்ளளவில் (கோபமாய் உள்ள அளவில்) ஹீநராகிய பகுஜனங்களால் என்ன செய்யப்படும். அது போலவெனில் — "செந்நாயும், மானும் தம்மில் விரோதமின்றிக் கூடியவிடத்தும் மத்தகஜத்து மஸ்தகத்தினையும் பிளக்குமோ, சிம்மராஜன் முன்னே கஜம் நிற்க வருமோ வென்றான்.

அது கேட்டு மந்திரி சொல்லுவான், மகாராஜனே, சர்வ பிராணிகளும் தனித்த விடத்து, பலஹீனரானவர், கூடியுள்ளளவில் பலவான்களாவர். அது எது போலவெனில் பலஹீனராயுள்ளவர்களும், கூடியவிடத்து மிகுந்த பலவான்களாவர். "த்ருண சமூஹமானது ரஜ்ஜுவாயுள்ளளவில், கஜேந்திர னையும் கட்டப்படும். அது போல வென்றாலும், இதனைக் கேட்டு ராஜா சொல்லுவான்.

மந்திரிமுக்கியனே உன்னால் சொல்லப்பட்ட சமூகத்திலும் முக்கியமான குணங்களையும், சௌர்யவீர்ய பராக்ரமங்களையும் உடையவனொருவன் பிரஸித்தனாகும். அப்படியொன்று கேட்பாயாக, ஹீனராகிய பலர் கூடிய விடத்து உத்ஸாஹ சக்தி, பிரபுசக்தி, மந்த்ர சக்தி இவை இல்லாத ஒருவனுக்கு பிரகாசமுண்டாகாது. அநேக தாரா கணங்கள் கூடியவிடத்து சந்திரனுடைய பிரகாசமுண்டாகாதவாறு போல வென்றாலும், அது கேட்டு மந்திரி சொல்லுவான்.

ராஜாவே உனக்கு விநாசகாலம் ஆஸந்ந (நெருங்கி) மாகா நின்றது போலும், விபரீதமான புத்தியுண்டாகையினாலே கேட்பாயாக, ஸ்ரீராமஸ்வாமி சமஸ்தஞாந சம்பூர்ணனாகியும், மதிமயங்கி மாயமானின் பின் சென்றனன். அப்படியொத்த புத்தியானது நிகழ்கின்றது. மீளவும் போதித்தனன் மகாராஜனே பஹு (பல) ஜனங்களோடு விரோதம் பண்ணினால் அநர்த்தமே யொழிய சுகமில்லை என்றும், அர்த்தாகுரம் (விளக்கம்) சொல்லுவான், அவதானம் பண்ணிக் கேட்பாயாக.

அஃதாமாறு ஹஸ்திநாபுரத்து ராஜா ச்யோதனன் துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் தத்பரனாயுள்ளான். பார்யை கமலை. இவர்கட்குப் புத்திரன் குணபாலன். மந்திரி புருஷோத்தமன். மந்திரிகளுக்கு லக்ஷணமான குணங்களால் நிறைந்தவன். ஸ்த்ரீ, லக்ஷ்மீ இவர்கட்குப் புத்ரன். தேவபாலன் புரோஹிதன், கபிலன்.

இவனுடைய குணமாவன. நாலு வேதத்திலும், ஆறு அங்கத்தினாலும், சகல தத்வங்களினாலும், ஜபஹோமாதிகளினாலும், ஆசீர்வாதத்தினாலும் பரிபூரணன். பார்யை கபிலை. இவர்கட்குப் புத்ரன் சோமசர்மன், தலையாரி, யமதண்டன், ஸ்திரீ தனவதி, இவர்கட்குப் புத்திரன் வசுமதி. இப்படி மந்திரி புரோகிதன் முதலாகிய பரிஜனங்களையும், உடையனாகி, இஷ்ட விஷயாதி, காமபோகங்களை அனுபவிக்கச் செல்லும் நாளுள், ஒருநாள் ஆஸ்தான மண்டபத்து சிம்ஹாசனத்து சமஸ்த பரிவார சம்பூர்ணனாகி இருந்த நாகராஜ்யத்தில் ஜனங்கள் சொல்லிக் காட்டினர். தேவரீர் தேசம் சத்ருக்களால் உபத்ரவமாகா நின்றது (கஷ்டப்படுகிறது) எனக்கேட்டு ராஜா அதிகுபிதனாகிச் (மிகவும் கோபமாகி) செரல்லுவான். மிருகராஜன் நித்ரை என்னும் முத்ரையை உடைத்தாய குகைக்குள்ளே வசித்தபொழுது க்ஷித்ர (அல்ப) மிருகங்களானவை குகையளவாக கர்வம் பண்ணிக்கொண்டு திரியும் சிம்மம் நித்ரையை நீங்கித் தன்னுடைய கோரமான நாதங்களையும்

தொனித்து எழுந்திருந்தவளவில் இந்த மிருகங்கள், எந்த திக்கேயடையும் என்று தெரியாது. அதுபோலவென்று, தனது சௌர்யவீர்ய பராக்ரமங்களை சொல்லி சாதுரங்க பலசஹிதனாகி யுத்த வீரத்தையுள்ளவர்களையும் பகு தனத்தினாலும், பிரீதியான வசனங்களினாலும், சந்தோஷிப்பித்தும் சொல்வான். "தனது பரிஜனங்களை அவசரம் வந்த விடத்து ஏவியும், பந்துக்களை வ்யசனம் வந்தவிடத்தும், மித்திரர்களை ஆபத்துவந்தவிடத்தும், ஸ்திரீயை ஐச்வர்யம் மில்லாதவிடத்தும் அறிவரர்களாகவென்று தலையாரி, யமதண்டனை அழைத்துச் சொல்லுவான்.

நாம் யுத்த பூர்வகம் ஜயம் பண்ணி, மீளுமளவும், நாட்டிலுள்ள ஜனங்களையும், நகரத்திலுள்ள ஜனங்களையும் நன்றாக ரக்ஷித்துக் கொள்வாயாக வென்றும் கற்பிக்க, திருவிளம் பற்றினபடியே செய்கின்றேன் என, விபுல ராஜனும் யுத்தத்துக்குப் போய்ச் சிறிது நாளையில் சத்ருக்களையும் ஜயித்து சர்வஸ்வஹரணம் பண்ணி, விரமுரசு, வெற்றிமுரசு, தியாகமுரசு முழங்க மீண்டும் நகரமடைந்தனன். நாடு நகரத்தில் உள்ள ஜனங்கள் வந்து மகாராஜனைக் கண்டு இருந்தார்களாக. ராஜாவும் சுமுகப் பிரசாதஞ் செய்து, நாட்டவர்களே சுகமாக இருந்தீர்களா, வென்றனன். சுவாமி யமதண்டப் பிரசாதத்தினாலே நாங்கள் சுகமே இருந்தோம் என்றனர்.

அது கேட்டுச் சிறிது நேரம் சென்ற பின்பு மீளவும் கேட்க, அவர்களும் முன்போலவே சொல்லினர். பின்பு நாட்டு ஜனங்களுக்கு விடை கொடுத்து, தன்னிலே விசாரிப்பான். யமதண்டன் துஷ்டாத்மா, சர்வ ஜனங்களையும் தன் வசமாகப் பண்ணிக்கொண்டனன். நம்முடைய ராஜத்ரோஹி இவனை உபாயத்தினால் வதிப்போமென்று (வெல்வோம் என்று) உடாயம் சிந்தித்துச் சொல்லுவான். நீ யோகிகளை நம், யதேஷ்டாசாரிகளும் மூடராகிய ராஜாக களும் பூனைகள்ளப் பாலுக்குக் காவல் பண்ணும் அக்ஞானிகளுக் கொப்ப ரென்று அவமான புத்தியுடைய நாகி, தன்னுள்ளே கருதி மிகவும் வியாகூல முற்றனன். யமதண்டன் ராஜாவினுடைய அநியான ஹ்ருதயத்தினைக் குறிப்பினால் கண்டு தன்னிலே சிந்திப்பான்.

நான் ராஜகார்யம் தப்பாமல் சர்வ ஜனங்களையும் ரக்ஷிக்கவும் ராஜா விபரீதமாக விசாரிக்கின்றனன். ராஜா யாவற்கும் அவசியம் நல்லவன் என்று சொல்லுவான். காகத்துக்கு சுத்தமும், சூதாடு பவனுக்கு சத்யமும், பாம்புக்கு க்ஷமையும், ஸ்திரீகளுக்கு காமத்தில் உபசாந்தி

அலியனுக்கு த்ருடமும், சுராபாணிக்கு உண்மை ஞானத்தைச் சிந்தித்தலும் ராஜாவினுடனேயோ யாவராலும் கண்டதுமில்லை கேட்டதுமில்லை என்றனன்.

இப்படிச் செல்லும் நாளுள் ஒரு நாள் ராஜா, மந்திரி - புரோஹிதன் இருவரையும் அழைத்துச் சொல்லுவான். யமதண்டன ராஜத்ரோஹி. இவனை உபாயத்தினால் மரணமடைவிப்போமென்று, அது கேட்டு இவர்கள் புத்திமான்களாயும், ராஜாவினுக்கு ஹிதோபதேசம் பண்ணாமல் கர்மவசத் தினால் அப்படிச் செய்யத் தகும் என்றனர். புத்தியும் உத்சாஹமும் சகாயமும் மேல் வரு மதுக்கிடாக சம்பவிக்கும். இப்படி இவர்கள் தங்களில் விசாரித்து ராஜா, மந்திரி, புரோகிதர் மூவரும் கூடி ராஜபாண்டாகாரத்தில் அகழ்ந்து புக்கு உள்ள தனமெல்லாம் எடுத்து பயத்தினோடும் சென்று வேறொரு இடத்திலே நிக்ஷேபித்து (வைத்து) மெதியடி, முத்திரை மோதிரம், யக்ஞோபவிதம், இவை மூன்றினையும் பயத்தினால் மறந்துபோயினர். ராஜா உதய காலத்தில் ஆஸ்தான மண்டபத்தில் இருந்து யமதண்டனை யழைத்துப் போக விட்டனன் யமதண்டனும் தன் மனசிலே விசாரிப்பான். இன்று நமக்கு மரண திவசமென்று கருதிச் சொல்லுவான்.

வித்வான் அவித்வானாகவும், சமர்த்தன் அசமர்த்தனாகவும், சூரன் பீருவாகவும், ஆயுள் உள்ளவன் அல்பாயுசு உள்ளவனாகவும், வம்சவான் வம்சஹீனனாகவும், நரபதிகள் விபரீதராயுள்ள அளவிலென்றும் வசனத்தினை நிச்சயித்து வந்து ராஜாவைக் கண்டனன். ராஜாவும் வெகுண்டு சொல்லு வான். மகாஜனங்களுக்கு ரக்ஷையைப் பண்ணி நம்முடைய அளவில் உதாசீனம் பண்ணினவன் பாண்டாகாரத்தில் தனமுள்ளதைச் சோரர் கொண்டு போயினர். தனமும், சோரரையும் சீக்கிரம் கொண்டு வருவாயாக. இல்லை யாகில் உன்னை சிரச்சேதம் பண்ணுவேன் என்றனன்.

ராஜாவின் வசனத்தைக் கேட்டுப் பயந்து கன்னவாசல் காப்பான் போயினன். அந்த ஸ்தலத்து மேற்படி மெதியடி, முத்திரை மோதிரம், யக்ஞோபவிதம் இவை மூன்றினையுங்கண்டு மெதிபடியால் ராஜாவை சோரனாகவும், முத்திரை மோதிரத்தால் மந்திரியை சோரனாகவும், யக்ஞோப வீதத்தால் புரோஹிதனை, சோரனாகவும், புத்திபண்ணி அதை மறையப் போகவிட்டுத் தன்னிலே சிந்திப்பான். அஹோ ராஜா முதலாயினர் இப்படிச் செய்யில் யாவர் முன்னே சொல்லுவேன் என்று பின்னும் சொல்லுவான்,

"யானைப் பட்டி மேயிலும், ராஜா தஸ்கரநாகிலும் (திருடனானாலும்) வித்வான்கள் பாபத்தைப் பண்ணினாலும், சிஷிக்கவல்லாரில்லை யென்றும், வசனத்தை நிச்சயமாகக் கருதிநன். இந்த விருத்தாந்தங்கள் எல்லாம் கேட்டு சமஸ்த நகர ஜனங்களும் ராஜ பார்ச்வ அடைந்தனர். இவர்கட்கு சர்வ விருத்தாந்தமும் ராஜா அறிவித்தனன்.

மகாஜனங்கள் சொல்லுவர், யமதண்டன், சப்த தினாந்தரம் சர்வ திரவியமும் சோரரையும் கொண்டு வரக்கடவன். வராவிடில் தேவரீர் திருவுள்ளத்திலெப்படி இருந்ததோ, அப்படியே செய்வீராக வென்று சொல்ல, ராஜாவும் அநேகம் வருத்தத்தினாலே அனுமதி பண்ணினன். இப்படி நிர்ணயம் பண்ணி நகர ஜனங்கள் புறப்பட்டனர்.

யமதண்டனும் மகாஜனங்களோடு சொல்லுவான். இப்பெரியதாகிய அவஸ்தை வந்து யான் செய்யுமதேதென்பான். மகாஜனங்கள் சொல்லுவர், அஞ்சாதொழிவாயாக. நீ தனவானாயுள்ள நாள் முதல் சோர வியாபார மில்லை, இப்பொழுது உன்னாலே யாதல், ராஜாவினாலே யாதல், சோர விருத்தியுண்டானது, இருவரில் ஒருவர் அநீதி செய்தவர்களை நிக்ரஹம் பண்ணுவோம் என்றனர். அதுகேட்டு யமதண்டனும் ப்ரசன்னனாயினன்.

பின்பு துர்ஜன வேஷங்கொண்டு சோரரைத் தேடிக் காணாது சபையை அடைந்து, ராஜாவை நமஸ்கரித்து இருந்தனன். ராஜாவும் கள்ளரைக் கண்டாயோவென, யமதண்டனும், சுவாமி யான் எவ்விடத்திலும் பரிபிரமித்து தேட வெறொருவிடத்தும் கள்வரைக் காணேன் என்றனன், அதுகேட்டு இந்த தேச காலமெல்லாம் என் செய்தாயென, ஒரு பிரதேசத்து ஒருவன் கதைச் சொல்லக் கேட்டு அதனால் நெடுநேரம் சென்றதென, யாதொரு கதையினாலும் மரணத்தை மறந்து கேட்டனன். அந்தக் கதையினைச் சொல்லுவாயாகவென சொல்கின்றேன்." அவதானம்(கவனமாக) பண்ணிக் கேட்டருள வேண்டுமேன்று சொல்லுவான்.

ஒரு மகாவன சமீபஸ்தமாகிய தடாகத்துக் கரையில் உயர்ந்ததொரு விருக்ஷத்தின்மேல் அநேக ஹம்ச சமூக மிருக்குமிவற்றைக் கண்டானொரு வியாதன் (வேடன்). இந்த ஹம்சங்களை ஹிம்சை பண்ணுவான் வேண்டி விருக்ஷத்தின் மேல் ஏறுதற்கு, வல்லியாகிய தொரு கிழங்கினைக் கொண்டு வந்திட்டனன். இதனைக் கண்ட விருத்த ஹம்சம் புத்ர பௌத்ரங்களுக்கு ஹிதமாக ஒரு வசனம் சொல்லும். பிள்ளைகளே, பேரன்மார்களே, எனது வசனத்தைக் கேட்டு உங்கள் மூக்குகளால் தோன்றுகின்ற மூளையினை

ஓடிந்துப் போமின்ரோக, அல்லது உங்கள் அனைவருக்கும் மரணம் சம்பவிக்கும் என்ற வசனத்தைக் கேட்டு பாலஹம்சங்கள் அத்யந்தம் ஹாஸ்யைப் பண்ணி அஹோவிருத்தனாகியும். மரணத்துக்கு அஞ்சி சர்வ காலமும் ஜீவிதத்துக்கு இச்சியா நின்றது. இதனால் வரும் பயம் ஏதும் இல்லை என்று பரிகாசம் பண்ணிய வசனத்தைக் கேட்டுத் தன்னிலே விசாரிக்கின்றது.

அஹோ! இந்த மூர்க்கன் ஹிதோபதேசமறியாமல் மிகவும் கோபத்தைப் பண்ணினான். அதெப்படி துர்ஜனனுக்கு அதிக சன்மார்க்கோபதேசம் மிகவும் கோபமயத்தான் இருக்கும். நாசிகாச்சேதனம், நிர்மலமான கண்ணாடியினது காட்சி, கோபமாகியவாறு போல வென்றது. மீளவும் விருத்த ஹம்சமானது, சொல்லும் முற்றும் பரிபாகமான ஞானமில்லாதவர் களுக்கும் மார்க்கோபதேசம் பண்ணும் யோக்யாவசனத்தை வ்யர்த்தமாகப் பண்ணுதலும். இவனுக்கு இந்த வசனம் சொன்னோம் என்னும் சந்தாபமும் பிரஹரிக்க எழுந்திருந்தலும், பழிச் சொலவு, மென்னும் நாலு பலத்தினைத் தருமென்று நிச்சயித்து, இந்த விருத்த ஹம்சம் மேல் வரும் அநர்த்தத்தினை காண்பனவாகமென்று நிச்சயித்து, விருக்ஷக்ரத்திலிருந்து (மரத்தின் உச்சியில்) காலாந்தரத்து விருக்ஷத்தின் மேல் சாகோப சாகைகளெங்கும் மேறிப்பற்றிய விதனை வியாதன் கண்டு, இதன் மேலேறி வலையை வளைத்தனன். இராத்திரி யில் ஹம்சங்கள் அனைத்தும் பாசபந்தங்களாகிய பின்னே உண்டாகிய கோலாஹலத்தினைக் கண்டு, விருத்த ஹம்சம் சொல்லும். பிள்ளைகளா நான் சொல்லிய ஹிதோபதேசத்தினை இகழ்ந்தீர். வித்தையிலும் புத்தி மிகுதியாயிருக்கும்.

அதன் போல வெனில் முன்பொரு சிம்ஹத்தினை ச்ருகாலன் (நரி) புத்தி விசேஷத்தினால் சொல்லும். மிருக ராஜனே மனுஷ்யனுக்கு ராஜாவைப் போல. மிருகங்களுக்கு ராஜாவாகிய நீ ந்யாய மார்க்கம் பண்ணாமல் பஹு ஜீவவதம் செய்தாய். இனிமேல் முறைமை நீ நியாயமே செய்வாயாக வென்று சங்கல்ப்பித்துச் சொல்லும். நானும் இந்த ச்ருகாலனுக்கு (நரிக்கு) முறை யாகிய அன்று, சேற்றினுள் புரண்டு சென்று செப்பும், மிருகேந்த்ரனே இந்த வனத்துள் மற்றொரு சிம்ஹம் வந்து யான் கர்த்தன் எனக்கேட்ட யானும் அதனுடன் ஸ்பர்த்தைப் (போட்டி) பண்ணிய காரணத்தினால் கர்த்தமத்துள் (சேற்றினுள்) புரண்டு வந்தேனெனக் கேட்டு அதிகுபிதனாகி ச்ருகாலன் (நரியின்) பின்னே செல்ல ஒரு ஜீர்ண கூபத்தைக் (கிணறு) காட்டின அதனை வஞ்சகமாகக் கருதாதே, அந்தக் கூபத்தினுள் விழுந்தது போல வித்யை

யுண்டானாலும் புத்திஹீநன் விநாசத்தை அடைவான் என்றது கேட்டு பாலஹம்சங்கள் சொல்லும்.

தாதனே அக்ஞானிகளாகிய நாங்கள் ஈடேறும் வழியைச் சொல்லுவாயாக வென்றனர். விருத்த ஹம்சம் சொல்லும், அக்ஞான பாவத்தாலும், பிரமாதத்தினாலும், உதாசீனம் பண்ணிக் கெட்டதொரு காரியம் கழிந்த நீருக்கும் அணைக்கோலுமது போலும் என்ற பின்பும் பாலஹம்சங்கள் சொல்லும்,

தாதனே உனது மனதை ஒருப்படுத்தி யாங்கள் உய்யும் வகை விசாரிப்பாயாக. சித்த நிர்மலமாய் உள்ளளவில், ஸமஸ்தமும் அறியலாம். சித்த விநாசமாகிய விடத்து சப்த தாதுக்களும் விநாசமாகி, ஹேயோபாதேயங்களும் தோன்றாததால் உனது சித்தத்தினை ஒருப்படுத்தி யாங்கள் உய்யும் வகை விசாரிப்பாயாக வென்றனர்.

விருத்த ஹம்சம் சொல்கிறது. நீங்களனைவரும் ம்ருத (இறந்த) சரீரம் போல் இருப்பீராக அல்லது வியாதன் (வேடன்) உங்கள் சிரசினையும், பக்ஷங்களையும் சேதம் பண்ணுவன் என்றது. பிரபாத சமயத்திலே வியாதன் பக்ஷி சமூகத்தினை கத (இறந்த) ஜீவன்களாகக் கருதி விருக்ஷத்தின் மேல் ஏறி பக்ஷிகளை அதோபாகத்து (கீழே) விழ்த்தினன். அதன் பின் விருத்த ஹம்சம் சொல்லும். சர்வஹம்ச சீக்ரபுத்தி பலாயனம் பண்ணுவீராம் மென்ன பறந்து போயி நதி தீரத்திருந்து விருத்த ஹம்சத்தினை ஸ்தோத்திரம் பண்ணி — அஹோ விருத்த வசனத்தினாலுய்ந்தோம். ஞான விருத்தரது வசனத்தினை நல்லதாக ஸ்வீகரித்தால் இஹபரலோகங்கட்கு ஹிதமாகுமென்றனர்.

இதனைக் கேட்ட வியாதன், இது கதையின் அபிப்ராயமறியானாகி துராக்கிரஹத்தினாலுணர்ந்திலன். கிருஷ்ண பாஷாண ஜலத்தை ஆச்ரயித்தும் மிருதுவாகக் கூடாதவாறு போல இப்படிக் கதையினைச் சொல்லி விடை கொண்டு போகிற யமதண்டன் ஸ்வக்ருஹமடைந்தனன். இது பிரதம தின விருத்தாந்தம்.

இரண்டாம் நாள் யமதண்டன் ராஜாவைக் கண்டனன். தளவயனே கள்வரைக் கண்டாயோ, வென, எங்கும் பரிப்பிரமித்துத் தேடியும் வேறொரு விடத்தும் கண்டேன் இல்லை. என்பது கேட்டு பகு தேச காலமெல்லாம் யாது செய்தனை யென, ஒரு பிரதேசத்திலே கும்பகாரரால் (குயவன்) ஒரு

கதையை சொல்லக்கேட்டனன், அது காரணமாகக் காலாதீகமானது (காலம் அதிகமானது) யென்ன அந்தக் கதையினைச் சொல்லுவாயாக வென, தளவரன் மசால்லுவான்.

சகல பாண்டங்களும் வனைவதற்கு எங்கள் குலத்தினை ரக்ஷித்தற்கும், யோக்யமான ம்ருத்யு (மண்) வானது எனது முதுகினை முறித்தது. ரக்ஷிப்பாரே, பக்ஷிப்பாராகில் யாவர் முன்னும் பேசுதலரிதென்றனன். இந்தக் கதையின் அபிப்ராயம் அறிந்திலன். ததநந்தரம் ராஜாவை விடைக்கொண்டு தனது கிருஹமடைந்தனன். இது த்விதீய தின விருத்தாந்தம்.

திருதீய தினத்தும் ராஜா பார்ச்வமடைய யமதண்டா, சோரரைக் கண்டாயோவென, தேவனே எவ்விடம் தேடியும் கள்ளரைக் கண்டிலேன் என இந்நேரம் என் செய்தாய் என, ஒருவன் ஒரு கதைச் சொல்லினன். அது கேட்டதனால் நேரம் சென்றதென்றனன். அந்தக் கதையினைச் சொல்லெனச் சொல்லுவான்.

பாஞ்சால தேசத்து, வரசித்தி நகரத்து ராஜா சுதர்மன் பரம தார்மிகன், ஜயினோத்தமன். பார்யை ஜினமதி. அவளும் சம்யங் த்ருஷ்டி. மந்திரி ஜயதேவன். மித்யா த்ருஷ்டி. கிருபா சூன்யன். சூன்யமதி, பார்யை விஜயை அவளும் மித்யா த்ருஷ்டி. நிஷ்கருணை. ராஜா இஷ்ட விஷய காம போகங்களை அனுபவித்துச் செல்கின்ற காலத்து ஒரு நாள் ஆஸ்தான மண்டபத்து அநேக நரபதிகள் புடைசூழ இருந்த அவசரத்திலே ஒருவன் வந்து சொல்லுவான். மஹாபலன், மஹாதவளன் என்னும் ராஜ்யத்துக்கு மகத்தான பாதை வர்த்திக்கின்றதெனக் கேட்டுச் சொல்லுவான்.

வனத்திலே மத்தகஜங்கள் கர்வத்தினோடும் கூடியதும் சிம்ஹத்தினைக் காண மிகவும் கர்வத்தில் நீங்குமது போல வென்று, மீளவும் சொல்லுவான். சஸ்த்ரவதம் சஞ்ஜனங்களாலே யோக்ய மல்லவாகினும், சமரபூமியில் (போர்க்களம்) எதிர்த்தவன் சத்ருவாவான். நமது ராஜ்யத்துக்கு விரோதியாகும் அவனை நிக்ரஹம் பண்ணுதலும், யோக்ய ஜனங்களைப் பரிபாலனம் பண்ணுதலும், ராஜ தர்மமாகுமென்றுஞ் சொல்லி, சதுரங்க பலசஹிதனாகி சமரபூமிக்குச் சென்று சத்ருக்களையும், ஜயித்து, சர்வஸ்வஹரமும் (கைப்பற்றி) பண்ணி ஆனந்தத்தோடும் நகரப்பிரவேசம் பண்ணுகிற அவசரத்தில் மதிலும், கோபுரமும் விழுந்தது, இதனைக் கண்டு அபசகுனமாக விசாரிச்சு நகர பாஹ்யத்திலே (வெளியில்) யிருந்த நன்மந்திரி ஜடிதியில் கோபுரமும், மதிலும்

இரண்டும் ஸ்தபதிகளால் எடுப்பித்தனன். மற்றை நாள் நகர பிரவேசக் காலத்து வஞ்சகத்தினால் விழ்ந்தது. திருதிய தினத்தும் முன்பு போல பண்ணிச் செல்ல விழ்ந்தது கண்டு ராஜா, மந்திரியை நோக்கி இப்படி வீழ்தற்கு ஏது காரணமென்ன. மந்திரியும் மஹாராஜனே தேவதைகளால் வந்த உபசர்க்கம் நரபலியினைச் செய்யில் ஸ்திரமாகும். துர்தேவதைகளால் வந்தது என்று சொல்லக் கேட்டுப் பரமதார்மிகன் கருணாபரவசனாகிச் சொல்லுவான். இந்த அநாசாரம் செய்தால், இகபரலோகங்கட்கும் விருத்த மாகும். யாமிருந்தவிடம் வனமாகிலும், நகர மாத்ரமென்று பின்னும் சபை யிலுள்ள சமஸ்தரும் விபரம் சொல்லுவார். ஆயுஷ்யம், பலம், ஆரோக்யம், ஐச்வர்யாதிகளை வாஞ்சிக்கின்றவர்கள் பரஹிம்சை முதலாகிய துராசாரங் களைத் தவிர வேணுமென்றும் சாஸ்திர பிரமாணத்தினையும் சொல்லி அநேக தனங்களையும், பூமிகளையும், தானம் பண்ணியவிடத்தும் ஒரு ஜீவனை ரக்ஷிக்கும் பலம் இல்லை என்றும் சொல்ல, மந்திரியும் மகாஜனங்களுக்குச் சொல்லுவார்.

தேவரீர் இஷ்டத்திலே எழுந்தருளியிருக்க யாங்கள் செய்வோமென்ன பாபபீருவாகி (பாபத்தினால் பயந்தவர்) ராஜாவும் சொல்லுவான். ராஜ்ய ஜனங்கள் செய்த புண்ணிய பாபங்களில் ஆறில் ஒன்று நமக்கு மாத்ரம், அதனாலும் யோக்யமில்லையென புண்யாம்சம் தேவரீரவர்கட்காகக் கடவது, பாபாம்சம் எங்களுக்கென்ன, கற்பனைக் கல்லைப் பிளக்கு மென்கிற நியாயத் தினால், ரராஜாவும் அனுமதி பண்ணினன் பின்பு மகாஜனங்களும், மந்திரியும் சுவர்ணமயத்தினாலே புருஷ ரூபம் பண்ணி பகுவித ரத்னாபரணங்களால் அலங்கிருதம் செய்து கோடி தனத்தினையும், சகடையின் (வண்டி) மேல் ஏற்றிச் சாத்தினர். "மாதா தனது ஹஸ்தத்தினால் விஷத்தினைக் கொடுக்க, பிதா கழுத்தினை முறிக்க, இப்படி ஒரு புத்திரனைத்தரில் இந்த தனத்தினையும் சுவர்ணமயமாகிய புருஷனையும் தருவோமென்று விதிகள் தோறும் முரசு முழங்கிய வசனத்தினைக் கேட்டு, அந்த நகரத்தில் உள்ள ஜனங்கள் எல்லாம் கவாடபந்தனம் (கதவை சாத்தினர்) பண்ணியிருந்தனர். கிருபா, சூன்யனும், மகா தரித்ரனும் ஆகிய வனதத்தன் என்னும் பிராமணனுக்கு ஸத்ரீ நிஷ்கருணை.

இவர்கட்குப் புத்ரர் எழுவர். இவருள் இந்திரதத்தனென்னும் எல்லார்க்கும் மிளையானைக் கொடுத்து திரவியத்தினை வாங்கி நாம் இதற்கு இணங்கி இருந்தால் வேண்டு புத்திரர்கள் உள்ளவர்க்கும் என்று புறப்பட்டு கோஷணைப் பண்ணி வருகிறவர்களை நோக்கிச் சொல்லுவான், நீங்கள்

உரைக்கின்றபடியே உடன் வருகிறேனென்று சுவர்ணமயமாகிய புருஷனையும், தனத்தினையும் வாங்கித் தன் புத்திரனையும் சகடையேற்றித் தானும், ஸ்தரீயும் கூடிச் செல்லாநிற்ப இந்திரதத்தன் சிந்திப்பான். அஹோ தனத்தின் மகிமை இருந்தவர், தரித்திரம் வந்த விடத்துச் செய்யும் காரியம் செய்யாரென்று பிரசித்தரது வசனத்தினைச் சிந்தித்துச் சென்றானாக. சகலரும் சந்தோஷம் பண்ண சுமுகனாகி மந்தஸ்மிதம் செய்யக்கண்டு மகாராஜன் சொல்லுவான். மரண நிமித்தமாகத் தான் நின்றிருந்தேன் என, பயம் வருமளவும் உண்டாகிய துக்கம் வந்தவிடத்து சகிக்கலாகும். "பிதாவினால் சந்தாபிதனாகிய (கஷ்டப்படுத்திய) பிள்ளை, மாதாவினை யடையும். மாதாவினால் சந்தாபிதனாகிய பிள்ளை, பிதாவினை யடையும். இருவராலும் சந்தாபிதனாகியவன் ராஜாவினை யடைவான். ராஜாவினால் சந்தாபிதனாகியவன் மகாஜனங்களை அடைவான். மாதா விஷத்தினைத் தர, பிதா கழுத்தினை முறிக்க, மகாஜனம், திரவியம கொடுத்துக் கொள்ள, ராஜா அனுமோதநாகியிருப்ப, யாவர் முன்னே செல்லுவேனென்று, தீரதையினால் (மன உறுதியினால்) மரணம் வந்தவிடத்தும் துக்கத்தை சஹித்தால் சுகதியாகும் என்று, அது காரணமாக மந்தஸ்மிதம் (சிரித்து) செய்தேன் என்றனன்.

இந்த வசனத்தினைக் கேட்டு ஜைனோத்தமனாகிய நரபதியும், நகரமும், கோபுராதிகளும், எங்களுக்கு வேண்டுவதில்லை. இருந்த இடம் நகரமாகுமென்று ஹிம்சைக்கு அனுமோதம் பண்ணாதிருப்ப, இவனுடைய சம்யக்த்வத்தினையும் இந்திரதத்தன் தைரியத்தையும் கண்ட நகர தேவதைகள் கோபுரங்களையும், ஸ்திரமாகப் பண்ணி, இந்திரதத்தனையும், ராஜாவையும், பிரசம்ஸித்து பஞ்சாஸ்சர்யங்களால் பூஜித்து ஸ்தோத்திரம் பண்ணிச் சொல்லுவான். "உத்யோகமும், துணிவும், ஞானமும், புத்தியும், சக்தியும், பராக்ரமமும் மந்தர வாதமுமாகிய, எழு குணமும் யாரொருவருக்கு உண்டோ, அவனே தேவனாக ஸ்மரிக்கப்படுவர் என்று சொல்லி தமதிடமடைந்தன. இந்த விருத்தாந்தத்தினைக் கேட்ட ச்யோதனன் அபிப்ராயம் அறியானாயினன். இப்படிச் சொல்லி யமதண்டன் ராஜாவை விடைகொண்டு தனது கிருஹம் அடைந்தார்.

நாலாம் நாளும் ராஜா பார்ச்வமடைய, ராஜாவும் சோரரைக் கண்டாயோ என, எவ்விடத்தும் கண்டேன் இல்லை, எனக்கேட்டு, நெடுநேரமாக என்ன செய்தாயென, வழியிலே ஒரு மானின் கதையைக் கேட்டதனால் நேரம் சென்றது என, நீ கேட்ட கதையினைச் சொல்லுவாயாக என்றவுடன் யமதண்டன் சொல்லுவான்.

மகாவனத்தில் வசிப்பதொரு மான்பேடும் (பெண்மான்), கலையும், புத்ர பௌத்ர முதலாயினருடன் செல்லும் நாளுள் வனத்தைச் சூழ வலையைக் கட்டி, வாபி, கூபம் முதலாகிய ஜலங்களில் விஷங்களைக் கரைத்து, பூமியிற் படுகுழி பண்ணி, சேஷித்த (மீதம் உள்ள) வனங்களில் அக்னியினை இட்டு வேடன் வில்லினைப் பிடித்துப் பின் செல்ல, இந்த மானுக்கும் போக்கிடமற்றது என்றனன். இந்த அவசரத்துப் பெருங்காற்றும், பெருமழையும் வந்து அக்னியை அழித்து, வலையையும் முறித்தது. இந்தக் கதையினைக் கேட்டு தாழ்த்தேனென (காலதாமதம்), ஸ்யோதனன் கதையில் சிறிதும் அபிப்ராயம் அறிந்திலன். இந்த அர்த்தாக்யானத்தினை ராஜாவுக்குச் சொல்லி விடைகொண்டு போயினன். சதுர்த்ததின விருத்தாந்தம்.

அஞ்சாம் நாளும் ஆஸ்தான மண்டபமடைந்து ராஜாவைக் கண்டிருத்தலும், யமதண்டன் கள்வரைக் கண்டாயோவெனக் கேட்டு எவ்விடத்தும் தேடி வேறு ஒரு இடத்திலும் கள்ளரைக் கண்டேன் இல்லை என்றனன். இந்த தேச காலம் என்ன செய்தாய் என, க்ராமத்தின் பாஹ்யத்திலே (வெளியிலே) சிலர் கதை சொல்லக் கேட்டு காலாதிகமானதென, அந்தக் கதையை நமக்குச் சொல்லுவாயாக என யமதண்டன் சொல்லுகிறான்.

நேபாள தேசத்து பாடலீபுர நகரத்து ராஜா வசுபாலன், ஸ்த்ரீ வசுமதி, ராஜா கவித்வத்திலே பிரசித்தன். மந்திரி பாரதிபூஷணன், பார்யை தேவகி. இவனும் கவித்வத்திலே ஜகத் பிரசித்தின். ஒரு நாள் ஆஸ்தானத்தில் இருந்து ராஜா சொன்ன சப்தத்தினை பஹிஷ்பூஷணம் பண்ண ராஜா அதிகுபிதனாகி மந்திரியினைப் பெருகிற ஆற்றினுள் கட்டிவிட, புண்ய வசத்தினால் மணற்குன்று சித்திக்க, அதன் மேல் இருந்து சொல்லுவான். சத்ருவினிடத்தும், ஜலம், அக்னி இவற்றுள் அகப்பட்டவிடத்தும், சமுத்ரம் மகாபர்வதாக்ரம் இவையாதியாக இவையிற்றுள்ளே எய்தியவிடத்தும், மத்தகஜம் எதிர்படவும், புண்ய மகிமை உண்டானால் வருந்தாதிருப்பாருமுளரென்று, "பின்னும், வித்வானை, வித்வான் சகியான் என்றும், சொல்லுமது, சத்யமாயிருக்குமென்று சொல்லுவான். "சிஷ்ட ஜனங்கள் காரணமாக துஷ்டரும், வ்ரதஸ்தன் காரணமாக காமிகளும், விழித்திருப்பவர் காரணமாகச் சோரர்களும், தர்மத்தைச் செய்கிறவர்கள் காரணமாக, மிகுந்த பாபத்தை செய்கிறவர்களும், சூரர் காரணமாகப் பீதிமான்களும், அக்ஷரவான்கள் காரணமாக, அக்ஷர ஹீனரும், மிகவும் கோபத்தினைச் செய்வார்களென்று, என்னால் ப்ரத்யக்ஷமாகக் காணப்பட்டது என்றும், ஜலத்துக்குண்டான குணங்களனைத்தினைச் சொல்லுவான்.

சைத்யமும், பரஹிதமும், நிர்மலத்வமும் அசூசியாய் வந்தடைந்தவர்களை, சுத்தம் பண்ணுகையும், மற்றும், அநேக சத்குணங்களை உடைத்தாகியும் உயர்ந்தவிடத்துச் செல்லாமை, தாழ்ந்தவிடத்திலே மிகவும் சென்றமை, என்று அந்யோந்யம் தேசத்தினைச் சொல்லிப்போக விடைகேட்ட ராஜாவும் நம்மால் அபராதம் செய்யப்பட்டது என்று சொல்லுவான். சந்திரனுக்கு பிரக்ருதி, க்ஷயமும், வக்ரமான சரீரமும், மந்த புத்தியும் தோன்றியிருத்தலும், ராத்ரியில் பிரகாசமானதாலும், மிதீரனாகிய ஆதித்யனுக்கு விபத்து வந்தவிடத்துத் தான் தோன்றுதலும், ஹீநாது குணம்போல வர்த்திக்கின்ற சந்திரனையும், ஈச்வரன் சடாபாரத்திலே தரித்தனன். ஆதலால் ஆச்ரிதரிடத்து மகத்துக்களது குணதோஷ சிந்தை இல்லை என்று சிந்தித்து மந்திரியினைக் கரையேற்றி, மந்திரி பதத்தில் ஸ்தாபித்து அநேக ஸத்காரம் பண்ணினனென்று சொன்ன கதையினைக் கேட்டும் சியோதனன் அபிப்ராயம் அறிந்திலன். இப்பெற்றிதான அர்த்தாக்யானத்தினைச் சொல்லி விடைகொண்டு யமதண்டன் தனது க்ருஹம் அடைந்தனன். பஞ்சதின விருத்தாந்தம்.

ஆறாம் நாளும் ஆஸ்தான மண்டபம் அடைந்து ராஜாவை நமஸ்கரித்து நிற்க, யமதண்டா கள்வரைச் கண்டாயோவென, எவ்விடத்துத் தேடியும் கண்டேன் இல்லை என்றனன். பகுதேச காலம் என் செய்தாய் என்று கேட்க, கடைத் தெருவிலொரு கதைச் சொல்லக் கேட்டு தேச காலம் சென்றது என, அந்தக் கதையைச் சொல்லுக என்றவுடன் ராஜாவுக்கு தளவரன் சொல்லுவான்.

குரு ஜாங்கல விஷய பாடலிபுத்ர நகரத்து ராஜா சுப்ரபன், ஸ்த்ரீ சுபத்ரை என்பாள். ராஜா நந்தவனம் ஒன்றும் செய்வித்தனன். அதனுள் அபூர்வமான விருக்ஷங்கள், அமைத்தனன். அநேக விதமாகிய கதளிகளையும், பஹு (பல) விதமான தே, மா, பலா, நாளிகேரம், நாரங்கம், எலுமிச்சை, முதலான விருக்ஷங்களையும், சந்தனம், நிர்யாசம், அகில் முதலாகிய விருக்ஷ விசேஷங்களையும், சிறுசண்பகம், மல்லிகை, யிருவாட்சி, முல்லை, முதலான வல்லி விசேஷங்களையும், சண்பகம், மகிழம் முதலான, சுகந்த புஷ்பங்களையும், விருட்சங்களையும், மற்றும் அபூர்வமானவற்றையும் அழகுபெற அமைப்பித்துச் செல்லும் நாள், வானரங்கள் சென்று வனத்தினை உபத்திரவம் பண்ணி, பனஞ்சாற்றினையும், பருகியபின், வனபாலகன் பகுசேஷ்டிதமாக மர்க்கடோ (குரங்கு) பத்ரவத்தினையும் சுப்ரபமகாராஜாவுக்குச் சொல்ல, ராஜாவும் வனத்தை ரக்ஷிக்கும் நிமித்தமாகத் தன்னுடைய கிரஹத்துள் வினோதார்த்தமாக இருக்கும் விருத்த வானரங்களை வனத்தே போகவிட, இவையும் அவையோட

கூடித் தோப்பை அறிந்தது. அதுகண்டு வநபாலகன் சொல்லுவான், மாம்ச த்ருஷ்டியினுள் காணும் பதார்த்தங்களையும், ஞானதிருஷ்டியினுள் காணும் பதார்த்தங்களையும் அறியாத மூர்க்கன், இகலோக, பரலோக மிரண்டுக்கும் விரோதத்தினை யெய்தா நின்றார்கள் என்றனன். இந்தக் கதையின் அபிப்ராயத்தை ராஜா முதலாயினோரும் அறிந்திலன். பின்பு ராஜாவை விடைகொண்டு யமதண்டன் தனது கிருஹம் அடைந்தனன். ஷஷ்டதின விருத்தாந்தம்.

ஏழாம் நாளும் ஆஸ்தான மண்டபம் அடைந்தனன். ராஜாவை நமஸ்கரித்து நிற்க, யமதண்டா கள்ளரைக் கண்டாயோ வென்றனன். தேடிய விடங்களுள் வேறு கள்ளரைக் கண்டிலேன் என்றனன். நெடுநேரம் சென்றதற்குக் காரணம் என்னவென, நாற்சந்தி கூடியவிடத்து, ஒரு கதை சொல்லக்கேட்டு. அதனாலே தேசகாலம் சென்றதென, அந்தக் கதையினைச் சொல்லுவாயாக என்று ச்யோதனன் முதலாயினோர் கேட்க தளவரன் சொல்லுவான். உஜ்ஜயினி நகரத்து வைச்யன் யசோபத்ரன். இவனுக்கு ஸ்திரீகள் இருவர். தன் மாதாவினிடத்திலே ஸ்திரீகளிருவரையும் வைத்து, நல்ல முகூர்த்தத்தில் வாணிஜ்யார்த்தமாகப் (வியாபார விஷயமாக) புறவீடு விட்டிருந்து காரிய வசத்தினால் ராத்ரி யசோபத்ரன் கிருஹத்தேவர, சாரித்ர ஹீனையாகிய தன் மாதா சோரபர்த்தாவுடனே வர்த்திக்கின்ற அவசரத்தில் கதவைத் திறந்து அபசாரித்ர பயத்தினால் வஸ்த்ரத்தினையும் மறந்து ஒரு மூலையுள் ஒதுங்கினள். கிரஹத்துள்ளே செல்லுகின்ற யசோபத்ரனும் ஏரண்ட விருக்ஷத்தின் மேல் மாதா உடுத்த வஸ்த்திரத்தினைக் கண்டு, அஹோ! காமராஜனுடைய பெருமை இருந்தவாறு மிருத ரூபமாகிய இவளையும் விரஹத்தினால் பீடிக்கின்றானென்று சொல்லுவான். "ஒரு வ்ருத்த ஸ்வா (வயதான நாய்) வற்றின சரீரத்தினையும் அற்ற செவியினையும், இற்ற வாலினையும். ஒரு கண்ணினையும், வ்ரணத்தினாலும், சீயினாலும் கிருமி சமூகத்தினாலும், இடைந்த சரீரத்தினை உடைத்தாய்ச் செல்லா நின்றவிது பசியினால் மிகவும் வருந்தி பானையுள் தலை செல்ல, கழுத்திலிட்ட வாயோடாகி கண்டவர்கள் நிந்திப்பச் செல்கின்றது. காம விகாரத்தினால் ஒரு விருத்த ச்வாவினை ஸ்பர்சித்தது போலுமென்று பின்னும் சொல்லுவான்.

அஹோ ஸ்த்ரீ ஜனங்களது சரித்திரம் யாவராலும் அறயலரிது என்னும் லௌகிக (பொதுவான) வசனத்தினை நினைந்து ஸ்த்ரீகளது வஞ்சக ரூபத்தினை மனமகிழ்ந்து உரைக்கின்றனன். "ஒருவனை ஆலிங்கனம் பண்ணி நின்றும், மற்றொரு புருஷனை வசனத்தினாலும், பார்வையினாலும்

ஏமிப்பிக்கையும் ஒருவனோடு க்ரித்ரிம (பொய்யான) க்ரோதத்தினோடும், மற்றொருவனை நினைந்து அழுகையும், ஸ்பர்சனம் பண்ணிய புருஷனை ப்ராதா முதலாயினாரென்றும் சத்யம் பண்ணுகையும், புருஷனோடு வசிக்கையில் மற்றொருவனை ஸ்பரிசிக்கின்றவனளாகவும், பாவிக்கை முதலாகிய பகுவித மாயா ரூபிகளை துஷ்டனாகிய ஸ்ரஷ்டாவினால் பண்ணப்பட்டதென்றனன். அஹோ, மிகவும் விருத்தையாகிய (வயதான) இவள் சரித்திரம் இப்படியாகில் பாலைகளாகிய நமது பார்யைகள் சரித்திரம் எப்படியாமோ, வென்று சொல்லுவான்.

ஆஷாட மாசத்து மகாவாதத்தினால் யானையும், கோவும் பட்டபடி கண்டால் மகஷி ஈ), கொசு முதலான இவற்றுக்குச் சொல்ல வேண்டுவதில்லை, என்று ஸ்திரிகளிருவரும் மாதாவின் துஸ்சரித்திரத்தினைச் சொல்லாமல் அன்யோபதேசத்தினால் அவர்களைப் பரிக்ஷித்தனன். பின்பு செட்டியும் தேவிமாரும் மிகு வைராக்யமாகத் துறந்தனர், என்று சொல்லக் கேட்டும் இந்த அபிப்ராயம் சோமதனன் முதலாயினோர் அறிந்திலன். இப்பற்றியான (இதைப்பற்றியதான) கதையினைச் சொல்லி விடைகொண்டு யமதண்டன் தனது கிருஹம அடைந்தான்.

எட்டாம் நாளும் ஆஸ்தான மண்டபம் அடைந்து நின்ற யமதண்டனை ராஜா அதிகுபிதனாகிக் கள்வரைக் கண்டாயோவென, தேவனே! வேர வொரு விடத்திலும கள்வரைக் கண்டேன் இல்லை என்று சொல்ல, சமஸ்த ஜனங்களையும் அழைத்துச் சொல்லுவான், நம்முடைய பேரில் குற்றமில்லை, நாள் ஏழும் சென்றது. கள்வரையும், தனத்தினையும் இவன் கடுககக் கொண்டு வராவிடில் எட்டு திசையிலும் பலியாக இடுவிப்பேன் என்றியம்பலும், எமதண்டனும், கொடிதாகிய வசனத்தினைக் கேட்டு, மெதியடியும், மோதிரமும், யக்ஞோபவீதமும் கொண்டுவந்து முன்னே வைத்துக் கூறுவான். சாவதமிவை, சோரரிவர்கள். சான்றோரே நியாயமானபடி, விசாரித்துச் செய்வீராயீர் என்றனன். மகாஜனங்களும், பரிவாரமும் கூடித் தம்முள்ளே விசாரித்து, மெதியடியாலும், மோதிரத்திதாலும், யக்ஞோபவீதத்தினாலும் ராஜா முதலாயினார் மூவரும், சோரராக நிச்சயித்து, இராஜ்ய லக்ஷணத்துக்கு யோக்யர் அல்லர் என்று சொல்லி, "வஞ்சகனான தோழனும், பதிவ்ரதாபாப மில்லாத களத்ரமும், வம்ச நீதியைக் கெடுக்கும் புத்ரனும், ஹேயோபாதேய மறியாத மந்த்ரியும். நீதிகேடான ராஜாவும், பிரமாதம் செய்யும் வைத்யனும்; ராகத்வேஷமுண்டான தேவதையும், மோகமும், பாசமும் ஆரம்ப முதலாயின

ஹீன குணங்களோடு கூடிய தபஸ்வியும், கிருபை இல்லாத தர்மமும்", இவர்களனைவரையும் விட்டு, நீங்காதவர்கள் சத்ருணங்களை நீங்குவரென்றும், மகாஜனங்கள் விசாரித்து, ராஜா, மந்திரி, புரோஹிதன் மூவரையும் யோக்யன் அல்லரென்று நிர்தாரணம் பண்ணி கர்த்தபமேற்றி துரத்தி, ராஜபுத்ரனை ராஜ பதத்திலும், மந்திரி புத்ரனை மந்திரி பதத்திலும், புரோஹித புத்ரனை புரோஹித பதத்திலும், ஸ்தாபித்தனன். சகல ஜனங்களும் ராஜ்ய பிரஷ்டராகிப் போகின்ற இவர்களைக் கண்டு சொல்லுவார்.

ஸ்ரீராமன் சர்வகுண சம்பன்னனாகியும் மாயமானின் பின் சென்றது போலவும், தர்மபுத்திரன் எல்லா புத்தியையுடையனாகியும். சூதினால் ஸ்வதேசத்தை இழந்தது போலவும், இவர்களும் சோர வ்ருத்தியால் ஸ்வதேசமிழந்தனர் என்று சொல்லினர். போகின்ற இவர்கள் நம்முடைய அநீதியால் நாடு நகர முதலானவை அக்ஞான மிருந்தவாரென்று பச்சாதாபமெய்து துறந்து போயினரென்று, இந்த விருத்தாந்தம், சுபுத்தி, மந்திரி உதிதோதய மகாராஜனுக்குச் சொல்லவும், அவனும், மகாமந்திரியே உன்னால் சொல்லப்பட்ட ஸ்யோதனன் முதலானோர் அவஸ்தை (கஷ்டம்) வருவது நிச்சயம் என்றனன். சுபுத்தி மந்திரி சொல்லுவான், விஷத்தினாலும், சஸ்த்திரத்தினாலும், முதலாகிய ஊறுபட்டவர்கள் அனைவரும் மொழிய வேறு மரணம் அடைவாரில்லை, ஹேயோபாதேயமுள்ள மந்திரியில்லாத ராஜாவின் பந்துவர்க்கமும், இராஜ்யமும், ராஜாவும் விநாசத்தை அடைவார்கள் என்ற வசனத்தைக் கேட்டு, மந்திரியாகிய சுபுத்தியினை பகுவித பூஜ்ய வசனங்களால் சந்தோஷிப்பிக்கச் செய்துச் சொல்லுவான்.

வர இருக்கும் ஆபத்தினையும், மேல் வரும் பாபத்தினையும் தடைப் பண்ணி சர்வ போகங்களையும் உண்டாக்கி சுவர்க்க மோக்ஷத்தினையும் தருவிக்கும் சத்துக்களது இணக்கமென்று ராத்திரி நகர சோதனைக்கும் நகரத்திலுள்ள ஆச்சரியங்களையும் காண்போம். அது சஜ்ஜனங்களால் யோக்யமாகுமென்று சொல்லுவான்.

தர்ம சாஸ்திரங்களினாலும், சத்கதைகளாலும் யோக்யன் பொழுதினைச் செலுத்துவான். ஒழிந்த பாபிகள் நித்திரையாலும், கலகங்களினாலும். துஷ்கதைகளாலும், பொழுதினைப் போக்குவர். என்ற ராஜாவின் வசனத்தினைக் கேட்டு மந்திரியும் அனுமதி பண்ணி நகரத்திலுள்ள ஆச்சரியம் காண்போம் என்று புறப்பட்டனன் ஆக.

அந்ருச்யாஞ்ஜனாச் சாயை தோன்றும் ஒருவனைக் கண்டு இது யாரது நிழல் என்று கேட்க, மந்திரியும் அந்ருச்யாஞ்ஜன முதலாகிய வித்யைகளில் பிரசித்தனாகிய ஸ்வர்ணகுரனென்னும் சோரனது நிழலாகுமென்ன. இவன் செல்கின்ற இடம் காண்போமென்று பின் செல்லா நிற்ப, சகல குண சம்பந்தனும், சம்யக்த்வ பரிபூரணனுமாகிய அர்ஹத்தாசச்ரேஷ்டி (வணிகன்) கிருஹத்தின், பாஹ்ய மதிலருகில் (வெளியில் உள்ள மதில் அருகே) நிற்கும் வட (ஆலமரம்) விருட்சத்தின் மேல் ஏற ராஜாவும், மந்திரியும் விருக்ஷத்தின் கீழ் நின்றனர். இந்த அவசரத்தில் நிகழ்கின்றதொன்று சொல்லுதாம் அர்ஹத்தாசன், கிருஹத்திலே இருந்து ஸ்திரீகளை நோக்கிச் சொல்லுவார்,

உதிதோதய மகாராஜனின் ஸ்திரீகளாயுள்ளவர்கள் இந்தப் பௌர்ணமை நாள் வனக்கிரீடை பண்ணவென்றும், புருஷராயுள்ளவர்கள், நகரத்துள்ளே இருக்கவென்றும். நடக்குற இதற்கு நீங்களும் போவீராயீர் என, அவர்களும், அஷ்டோபவாசத்தோடு கூடிய யாங்கள் வனக்கிரீடைக்குப் போகக்கூடாதென்றனர். "பாம்பும் ராஜாவும் ஒக்கும். பாம்பு மணிமந்த்ர ஔஷதங்களினால் மீளும். ராஜா குபிதனாய் (கோபமாய்) உள்ள அளவில் யாவராலும் மீளவிடல் அரிது என அவர்கள் சொல்லுவார். உபவாசம், பண்ணிய யாங்கள் எந்த உபத்ரவம் வந்தவிடத்தும், விரதபங்கம் பண்ணுவதில்லை. மலைமேற் சென்றவிடத்தும், சமுத்ர யாத்ரை பண்ணுமிடத்தும், கிருஷியைச் (விவசாயம்) செய்யுமிடத்தும், புண்ணியம் உண்டாகும்பொழுது சகலமும் உண்டாகும். புண்ணிய ஹீநமாகிய விடத்து, யாவராலும் சகாயம் பண்ணுதல் அரிதாதலால் யாங்கள் சங்க்கிரஹிக்கப்பட்ட தர்மத்தினை விடுவதில்லை. உபவாச தினத்தில் ஜீன பூஜையும், ஆகமாதி தர்ம கதையினைக் கேட்டலும் யோக்யமாகும். இது கர்மக்ஷயத்துக்குக் காரணமாகும் என்று சொல்லுவார். தர்மத்யானத்தில் மனது ஒருவகைப் படுகையும் பஞ்சேந்திரியங்கள் வசத்தின் செல்லாமலும், ஹிம்சாதி தோஷங்களை அகற்றி இருத்தலும், பரமார்த்த த்யானம் பண்ணுதலும், ஸ்வர்க்காபவர்க்க (மோக்ஷம்) சுகசாதனமாகும. ஆதலால் நமது சகஸ்ரகூட சைத்யாலயத்து மஹா பூஜையினையும் பண்ணி தர்ம கதையினை சொல்லியிருப்போமாக என அனுமதி பண்ணி அர்க்கதாசரும் அநேக வாத்யங்களோடுகூட பகவதர்ஹத் பரமேஸ்வரனுக்கு பஞ்சாம்ருத பூஜையினையும், பண்ணி திவ்யமாகிய அஷ்டவிதார்ச்சனைகளாலும் ஸ்தவன (ஸ்தோத்திரம்) மாலைகளாலும் அர்ச்சித்து, நமஸ்கரித்து, ஸ்ருத பூஜையினையும் பண்ணி முகமண்டபத்திருந்து அர்ஹதாசரை நோக்கி ஸ்திரீகள் சொல்லுவார், தேவரீர்க்கு தர்சனம் விசுத்தி உண்டாகக் காரணம்

அருளவேண்டுமென அவரும் உங்கட்கு சம்யக்த்வம் கூடினவாறு சொல்லுவீராம் என்ன தேவரீர் நாங்கட்கு முந்நூற அருளிச் செய்யுமது முறைமையாகும் என்று சொல்லுவார். பிராம்மணருக்கு குரு அக்னியென்றும், வர்ணங்களுக்கு முக்யம் பிராம்மணன் என்றும், ஸ்திரீகளுக்கு பர்த்தா குரு என்றும், அதிதியாய் வந்தவன், அந்த கிராமத்துக்குப் பூஜ்யனாகுமென்றும் ஸ்திரீகள் சொன்ன வசனத்தினைக் கேட்டுத் தமக்கு சம்யக்த்வம் (நம்பிக்கை) வந்தமைச் சொல்லுவார்.

இந்த உத்தர மதுரையில் ராஜா பத்மோதயன், தேவீ ஜாம்பவதீ. இவர்கட்குப் புத்திரன் உதிதோதயன். இப்பொழுது மகாராஜனாகிச் செங்கோல் முறைமையைச் செய்கின்றனன். மந்திரி சம்பின்னமதி. பார்யை சுப்ரபை. இவர்கட்குப் புத்ரன் சுபுத்தி மந்திரியாகி வர்த்திக்கின்றனன். அஞ்சன சோரன் ரூப்யகுரன். பார்யை ரூப்யகுரை. இவர்கட்குப் புத்ரன் சுவர்ணகுரன், அஞ்சந சோரனாகி, வர்த்திக்கின்றனன். ராஜச்ரேஷ்டி ஜிநதத்தன். பார்யை ஜிநமதி. இவர்கட்குப் புத்ரன், அர்ஹத்ததாஸனாகிய யான் ராஜாவுக்கு ச்ரேஷ்டியாகி வர்த்திக்கின்றேனென்று வசநத்தினை ராஜாவும், மந்திரியும் கேட்டனர். சோரனும் கேட்டு, நமக்கு யிற்றைக்குக் களவு வேண்டாம். இவர்கள் சொல்லுகின்ற கதையினைக் கேட்போர் என்று சிந்தித்தனன். ராஜாவும் மந்திரியும் அப்படியே நினைத்தனர். ஸ்திரீகளே த்ருஷ்டமும் கேட்கையும் அனுபோகமுமாகிய கதையினைச் சொல்லுகிறேன். அவதானம் பண்ணிக்கேட்பீராக, என்று சொல்லுவார்.

முன்பு சொன்ன ரூப்யகுரனென்னும், அஞ்ஜன சோரன், மதுமாம்சமும், சுராபாநமும், வேச்யாகமநமும், வேட்டையாடுதலும், களவும், பரஸ்த்ரீ கமநமும் என்னும் சப்த வியசனங்களோடு கூடிய இவன் ஒருநாள் சூதாடிவென்ற பஹுதனமெல்லாம், பரிஹாசர் முதலாயினார்க்குக் கொடுத்து மத்யான காலத்துப் பசியினால் மனையை நோக்கிச் செல்கின்றனவன் ராஜாவுக்கு அமுது சமைக்கின்றவிடம் குறுகிய (வந்த) பொழுது சுகந்த பரிமளாதிகளை அறிந்து மனமகிழ்ந்து அஞ்ஜன சித்தியால் போஜிப்போம் எனக் கருதி, அன்று முதல் அஞ்ஜனமிட்டு ராஜாவினுடன் போஜனம் பண்ணிச் செல்லும் நாளுள், ராஜர்வின் தேகம் மிகவும் இளைத்தமைக் கண்டு, மந்திரி சொல்லுவான், "ஆகாரத்தினால் சரீரமும், நயனத்தினால் முகமும், நயத்தினால் ராஜ்யமும், லவணத்தினால் போஜநாதிகளும், தர்மத்தினால் இஹபரலோகமும், சந்திரனால் இராத்திரியும், பிரகாசம் ஆகும்" என்னும் வசநம் ஜகத்பிரசித்தமாய் இருக்கும். தேவரீர் திருமேனி மிகவும் இளைத்தமை காரணம் என்னே

என, முன்பு நடந்துவரும் நிர்ணயத்தினால், நாலுபடிச் சமைத்துச் செல்லவும், ஒருவன் கூட, போஜனம் பண்ணுகிறது போலிருக்கும். இம்மாயகையிலனை நீ அறிவாயாக என்ற ராஜாவின் வசனத்தைக் கேட்டு, விசாரித்துச் செய்வான்.

ராஜா அமுது செய்யும் வேலையிலே எருக்கம் பூவினால் விரளமாகப் பரப்பி சதுர்க்கோணங்களிலும் (நான்கு பக்கங்களிலும்) பாம்பின் தோல், மனுஷ்யன் தலையின் மயிர் முதலான ரௌத்ர தூமத்தினையும் குடத்திற்குள் வைத்து அடைத்து, வாய்க்கட்டி, மல்வர் முதலான, சேவகரையும் மறைவு செய்துவைத்து, மந்திரவாதிகள் சூழ இருப்ப, அஞ்ஜன சோரன் முன்போல வருகின்றவன் பரப்பி இருந்த புஷ்பங்களை மிதிக்க, சப்திக்கின்றது கேட்டு துவாரபந்தனம் பண்ணி (கதவைச் சாற்றி) தூமத்தினை விடுதலும் நயனத்தில் இட்ட அஞ்ஜனம் கதமாகப் (தெளிவாக) பலரும் காண்கின்ற இவனைப் பாசத்தினால் (கயிறு) பந்தித்து ராஜாவினுக்குக் காட்டக் கொண்டு வருகின்றவிடத்து, கள்ளன் தனது மனஸில் விசாரித்தனன்.

ஒரு மத்தகஜம் திருஷ்ணையால் (தண்ணீர் தாகம்) தடாகத்தினை அடைந்து தண்ணீர் உண்ணப் புகுந்தவிடத்து, அவற்றினுள் காலற்றலும், விதிவசத்தால் விபனமுற்றது போலவும், யோக்யன் ஒருவனுக்கு அயோக்யன் விபரீதமாக சிந்தித்தவிடத்தும் விபரீதம் சிந்தித்தவனுக்கே துக்கமாகும். அதன் போலமெனில் ஒரு ராஜாவினுக்கு மாயா வேஷதாரியாகிய தாபஸனொருவன் ராஜபுத்ரியைக் கண்டு மோகிதனாகி வஞ்சகத்தினால் சொல்வான். இந்தக் கன்யகை அன்யதேசத்தில் செல்லின் உனக்கு அநேக விபவ (பெருமை) முண்டாகும், அல்லது அநர்த்தம் வரும் எனக்கேட்டு ராஜாவும் ஆற்றினுள் கம்ச மஞ்சுஷையில் (வெண்கலப் பெட்டி) கட்டி விட்டனன். இதன்மேல் எரிகின்ற விளக்கினால் இருளகற்றிச் செல்லா நிற்ப, வேட்டைக்குப் போய் மீள்கின்ற மந்திரியினை அழைப்பித்துப் பார்க்க, ராஜ புத்திரியாகியது கண்டு, மஞ்சுஷையில் ஒரு வியாக்ரத்தினை அடைத்து நகரத்திற்கு வந்தனன். இந்த தாபஸனும் தனக்கு மாந்யமாக நடக்கும் ஒரு கிராமத்து ஆற்றில் வரும் மஞ்சுஷையினுக்கு அடையாளம் சொல்லிவரவிட அவர்களும் ஆற்றில் வந்த மஞ்சுஷையினைப் பிடித்து, இவன் கிரஹத்தின் உள்ளே கொண்டுபோய் வைத்தனர். தாபஸனும் ராஜாவுக்கு அறிவித்து எனது தேகததில் ஒரு வியாதி உண்டு. பரிஹாரம் பண்ணிக்கொண்டு மீள்கின்றேனென்று வந்து தனது கிருஹம் அடைந்து ஸ்நானம் பண்ணி, போஜன காலத்தின் பின், ஏகாந்தமாக ஒரு கிரஹத்துள் துவாரபந்தனம் பண்ணி மஞ்சுஷையினை (பெட்டி) திறந்தனனாக அதனுள் இருந்து வ்யாக்ரம். பக்ஷிப்ப (உண்ண) மரணமடைந்தனன்.

இந்த விருத்தாந்தத்தினைக் கேட்ட ராஜா, வியாகுலமுற்றவிடத்து, மந்திரி கன்யகையினை முன் வைத்து, உள்ளபடி எல்லாம் அறிவித்தனன். இந்தக் கதைப் போலவும், "தாமரைப் பூவினுள் மதுவை உண்டு மயங்கி இருந்த பிரமரம் (வண்டு), ப்ரபாத சமயத்து சிந்திக்கின்றது. ஆதித்யனும் உதிக்கின்றனன். ப்ரபாத காலமும் ஆகா நின்றது. தாமரைப்பூவும் மலரும் என்று விசாரிக்கின்றவிடத்து, மத்தகஜமொன்று வந்து, தாமரையினைப் பிடுங்கி தரைமேல் எறிய, வண்டும் மரணத்தை அடைந்தது" போலவும், யான் செய்த அன்யாயத்தால் இப்படி வந்தது என்று சிந்தித்தவனை ராஜாவின் முன்னே கொண்டுவந்தனர்.

ராஜாவும் அதிகுபிதனாகி (கோபமாகி), இவனை உயிர்க்கழுவின் மேல் வைப்பீராம் என்று பரிஜனங்களை நியோகிக்கக்கொண்டு போகின்ற விடத்து, கண்டவர்கள் சொல்லுவார். சூது முதலாகிய வ்யசனங்களினால் கெட்டவர்கள் பலருமுளர். சூதினால் தர்மபுத்திரனும், மாம்ச பக்ஷணை யினால் பகத்கும்பன் என்னும் ராஜாவும், மத்யபானத்தினால் யாதவ வம்சத்துள்ளாரும், வேச்யா கமநத்தினால் சாருதத்தன் என்னும் வைச்யனும், வேட்டையினால் பிரஹ்மதத்தனும், க்ஷத்திரியனும், களவினால் சிவபூதி என்னும் உகித்தாபசனும், பரஸ்த்ரீ கமநத்தினால் ராவணனும், கீசகனும் அழிந்தனர். சப்தவியசனங்களோடு கூடியவனுக்கு வரும் மரணம் அவசிய மாகும் என்றனர். தனத்தினையும், கோமுதலானவற்றையும், அன்ய பூமியில் அல்ப க்ஷேத்திரமாகிலும் தஸ்கரணம் (திருட்டு) பண்ணினவர்கள் நரகத்தினை அடைவர். சந்ததம் சோரனாகிய இவனுக்கு வருமது சொல்லவேண்டுமோ வென்றனர். ராஜநியோகத்தால் கழுவின் மேல் ஏற்றி நாலு திக்கிலும் மறைய ஒற்றாட்களையும் வைப்பித்து, இந்தக் கள்ளனுடன் வார்த்தை பேசினவர்கள், ராஜத்ரோஹி என்றும், அவனிடத்திலே சோர விருத்தியினால் உள்ள தனமெல்லாம் இருப்பிடம் என்றும் அவர்களை நம்முடைய முன்வந்து சொல்லுவீராமின் என்றும், நியோகித்துச் செல்லும் நாளுள் ஒரு நாள் அர்ஹதாரோடுகூட ஜினதத்தர் நகரபாஹ்ய சகஸ்ரகூட சைத்யாலயத்து அபிஷேகாஷ்டவிதார்ச்சனைப் பண்ணி ஜினசந்த்ர பட்டாரகரை குருபக்தி பூர்வமாக நமஸ்கரித்து, கிருகமேற் போகாநிற்க, வழியில் தண்ணீர் தாகத்தி னோடும் ரக்தம் சிரவியா (பெருகி) நிற்க கண்டக்க ந ப்ராணனாகிக் கழுவின் மேல் இருந்த இவனைக் கண்டு அர்ஹதாசர் தாதனே இவன் என்ன பாபம் செய்தானென்ன பூர்வார்ஜித பாபோதயமாகும் என்று சொல்லுவார்.

நாகலோகம், சுரலோகம், மஹாமேரு முதலாகிய முக்கிய ஸ்தலங்களில் இருந்தவிடத்தும், மணிமந்திர ஔஷதாதிகளும், பகுவிதமாகிய வித்யைகளும், உளவானாலும் 'வருவதை விளக்கலரிது' என்ற ஜினதத்தர் வசனத்தினைக் கேட்ட சோரனும், ச்ராவகோத்தமரை நோக்கிச் சொல்லுவான். கிருபா சாகரனே, பாரதார்மிகனே என்று முதலாகிய ஸ்தோத்திரங்கள் பலவும் சொல்லி, தண்ணீர் தாகம் உண்டு இது தீரும் வண்ணம் விசாரிப்பாயாக என்று சொல்லுவான்.

எவன் ஒருவனது மனது சர்வபிராணிகளிடமும் கிருபையுண்டாகா நின்றது. அதுவே ஞானமும். மோட்சமும். பகுவித வேஷங்களால் ப்ரயோஜனம் ஒன்றுமில்லை என்றும், "விருக்ஷமானது தான் வெய்யிலில் வருந்தி தனது நிழலினைப் பரோபகாரமாகப் பண்ணியும், தன்னிடத்தில் உண்டாகிய பழங்களை சர்வ ஜீவனுக்கும், ஜனங்களுக்கும் உபசரிக்கும். தனக்கு ஒன்றையும் இச்சியாது. அது போலவும், பரோபகாரம் பண்ணும் பசு போலவும், பழ விருட்சம் போலவும், ஆறு போலவும் ஆகா நின்றது. சத்துக்களது பிரக்ருதி என்றும் ஒருவன வருந்த, உலகாற்று என்றும் நியாயத்தினையும் உடைய மகானுபாவனே, ரக்ஷிப்பாயாக என்னும் வசனம் கேட்டு நம்மால் பனிரெண்டு சம்வத்சரம் பரமகுருவை சேவைப் பண்ணி இன்று பிரசன்னராய் மகாமந்த்ரோபதேசம் பண்ணியருளினர். தண்ணீருக்குப் போய் மீளுமளவில் மந்திரம் விஸ்மிருதியாகுமென்று (மறந்துவிடும்) பயத்தினால் போகாதொழிந்தோம் என, சோரனு மந்த மந்திரத்தினால் சாத்யமாகுமது யாதென, பஞ்ச நமஸ்கார மஹா மந்த்ரமாகும். சமஸ்த சுகங்களையும் தருவது என்றும், பஞ்சாட்சர மகிமையினைச் சொல்லுவார். சுவர்க்காதி சம்பத்துக்களை வரும்படி பண்ணுகையும் மோக்ஷலக்ஷ்மியை வசியம் பண்ணுகையும், விபத்துக்களை போக்குகையும், பாபங்கள் வெறுத்துப் போகும்படி பண்ணுகையும், பொல்லாத கதிகளில் செல்லாதபடி பண்ணுகையும், மகா மோகங்களில் மயங்கிப் போகும்படி பண்ணுகையும், ஆகிய குணங்களை உடைய மஹாமந்திரம் எனக்கேட்டு, தண்ணீர் கொண்டுவருமளவும் மறவாமல் ஜபம் பண்ணிக்கொண்டு இருக்கிறேன் என்று பரம மந்த்ரோபதேசத்தினைக் கைக்கொண்டு, பரமாத்ம த்யானத்தோடு கூடியிருந்த அவசரத்து, தர்ம நாயகனாகிய ஜினதத்தர் தண்ணீர் கொண்டுவருமளவும் சமாதியினோடும்கூடி சௌதர்ம கல்பத்து தேவனாயினன். இவரும் இவனது சன்யாச மரணத்தினை கண்டு சம்வேக, நிர்வேக, பாவநாபரனாகி ஸ்நானம் பண்ணி சைத்யாலய மடைந்து உபவாசத்திலே கூடியிருந்த அவசரத்து நிகழ்கின்றது. குருக்கள்

ஜினசந்த்ர பட்டாரகருர், சோரனது சமாதி மரணத்தினைக் கேட்டு மகத்துக்களது சம்சர்க்கம் சமஸ்த தோஷத்தையும் போக்கும் என்று அருளிச்செய்தார்.

வஞ்சகமான புத்தியினை அகற்றி, சத்ய வசனத்தினை உண்டாக்கி, பாபஹரணத்தினையும் செய்து, மனசையும் பிரியப்படுத்தி, திகந்தரங்களிலும் கீர்த்தியை யுண்டாக்கு என்று அருளினர். அதன் பிறகு ராஜாவிடம் சென்று, ஜினதத்தச்ரேஷ்டி சோரனோடு பகுதேசகாலம் சம்பாஷணம் பண்ணினார் எனக் கேட்டு, அவன் ராஜத்ரோகி, சோரனுடைய திரவியமும் அவனிடத்திலே என்று குபிதனாகி (கோபமாகி) சீக்ரம் கொண்டு வருக என்று பரிஜனங்களை ஏவினான். இந்த அவசரத்திலே சௌதர்ம கல்பத்தில் அநேக பரிஜனங்களோடும் சோடசாபரண பூஷிதனுமாகி, சோரனாகிய தேவன் அவதி ஞானத்தால் சமஸ்த விருத்தாந்தத்தினையும் அறிந்து ஜினதத்தச்ராவகர் பண்ணின தர்மோபதேசத்தினால் சமஸ்த மகிமையும் உண்டானதென்று சொல்லுவான். சம்பூர்ணமான அன்னபானமும், நன்றாகிய சய்யாசநமும், கந்தாதிகள், வஸ்த்ரம், ஸ்த்ரீகள், ஆபரணம், வாஹனம், தண்டிகை முதலானவை அழகிய மாளிகை இவை எல்லாம் புண்யாதி கிருப தேசத்தினாலே வந்தது. மகோபகாரியாகிய இவரை மறக்கில், நம்மில் மிகுந்த பாபிகள் இல்லை என்று சொல்லுவார்.

"ஒரு அக்ஷரத்தை உபதேசம் பண்ணினவர்களையும், ஒரு பதத்தினை உபதேசம் பண்ணினவர்களையும், ஒரு கிரந்தத்தினை உபதேசம் பண்ணினவர்களையும் மறந்தவன் பாபி என்று சொல்லும்" தர்மத்தை உபதேசித்த சத்வபுருஷரை மறந்தால் அதுபோல் ஒத்த பாதகம் இல்லை என்று நிச்சயித்து, தனக்கு முக்கிய குருவாகிய ஜினதத்தர் விபத்தினை நீக்குகைக் காரணமாக தண்டாயுதத்தினையும் கைப்பிடித்து விகுர்வணையால் மனுஷ்ய ரூபத்தினைக் கைக்கொண்டு இவர் வாசலில் வந்து நின்று ராஜாவின் மனுஷ்யரை நோக்கி, ஏழைகள் வந்த காரணம் என்ன என, அவர்களும் ஜினதத்தரை ராஜாக்ஞையால் கைக்கொண்டு போகவந்தோம் என்றனர். அவரில்லை என்றும், நீங்கள் போவீராம் என்றும் திக்கரிக்க, எங்கள் கையால் உனக்கு மரணத்தை வாஞ்சிக்கின்றாய் போலும் என தேவன் சொல்லுவான்.

உங்களது ஸ்தூலமாகிய ரூபத்தினால் ப்ரயோஜனம் ஒன்றும் இல்லை. எனது குறளாகிய ரூபம் கண்டு இகழவேண்டாமென்றும், "யானை மிகவும் பருத்தவிடத்தும் அங்குசத்தினால் வணங்குகின்றது. வஜ்ராயுதம் சிறிதாகிய

தானாலும், பெரிதான மலைகளை எல்லாம் பிளந்து பலவாகா நின்றது. பெரிதாகிய இருள்நின்றவிடத்து அல்பமாகிய தீபம் காண கெட்டுப் போகின்றது. இவைப்போல ஸ்வபிரகாசமாகிய ஒருவன்முன், ஹீனராகிய திரள் நிற்கமாட்டார் என்றும், சிம்ஹம் மிகவும் சிறிதாகியும், பெரிதாகிய யானை முன் நிற்கமாட்டாது. அநேகம் யானைகள் கூடிய வனத்தில் ஒரு சிம்ஹமானது த்வனி கேட்க, மதத்தினையும் ஒழிந்து பயத்தினையும் அடையும் என்று சொல்லி சிலரை மிருதராகவும், சிலரை மோகவசத்தினால் பிரமிபித்தும் சிலரை விசேஷம் சொல்லும்படியாயும், விடுத்தனன். ராஜாவும் அதிகுபிதனாகிப் பின்பும் சிலரை ஏவ அவர்களையும் மரணம் அடைவித்த செய்தி கேட்டு, சாதுரங்க பலசஹிதனாகி, மஹாயுத்தம் விளைந்த விடத்து அனைவரும், தேவனது மஹிமையால் மரணம் அடைந்தனர். ராஜாவும் மகா குபிதனாகி திசை நடுவில் ஓடா நிற்ப, தேவனும் அதிபயங்கரமாகிய ராக்ஷஸ ரூபத்தினைக் கைக்கொண்டு பயததினால் ஓடுகின்ற ராஜா, எவ்விடம் சென்றனன், அவ்விடம் சென்று அக்ஞானி உனக்கு ஆயுஷ்யம் வேண்டுவது யாகில் நகர பாஹ்ய ஸஹஸ்ரகூட சைத்யாலயத்திருந்த ஜைனோத்தமராகிய ஜினதத்தரை சரணமாக வந்தடைந்தால் ஈடேறுவை எனக்கேட்டு ஜினாலயம் அடைந்து ச்ரேஷ்டி உனது சரணமடைந்தேன். உன்னால் எனது வம்சம் பிரதிஷ்டிதமாகும்படி அருள்வாயாகவென்று சொல்வான்.

பல ஹீனத்தினால் கெட்ட வம்சமும், இடிந்த கிணறும், உடைந்த குளமும், க்ஷாம முதலாகிய மகாபாதைகளால் வருத்தமுற்ற தன்னை சரணமாக வந்தடைந்தவர்களையும், பசுக்களையும், யோக்யமான பிராஹ்மணரையும், ஜீர்ணமான தேவாலயங்களையும், பிரயத்தனத்தினால் யாவனொருவன் ரக்ஷிக்கின்றான் பூர்வத்தில் செய்வித்தவனிலும் நாலு படி புண்ணியம் உண்டு என்றனன். இதுகேட்ட ஜினதத்தரும் ராக்ஷஸனது ரௌத்ர ரூபத்தினையும் பீருவான (பயந்த) ராஜாவினையும் கண்டு, ராக்ஷசனைக் கண்டு நோக்கிச் சொல்லுவார் பயத்தினால் ஓடுகின்றவனின் பின்செல்வான் இல்லை, உன்னுடைய பராக்கிரமத்திற்கும், மகிமைக்கும் போதாதெனக் கேட்டு பிரக்ருதியான தேவரூபம் கைக்கொண்டு இவரை த்ரிபிரதட்சிணம் பண்ணி நமஸ்கரித்த பின்பு, பகவானையும் பரமாகமத்தையும், குருக்களையும் நமஸ்கரித்து இருந்தனனாக ராஜாவும் தேவலோகத்தில் உள்ளவர்களுக்கு விசாரம் இல்லையாய் இருந்தது. தேவனையும், ஆகமத்தையும், குருக்களையும் தவிர்த்து பிரதமம் கிருஹஸ்தனுக்கு நமஸ்காரம் செய்தது யாதினோடொக்கும் என்று சொல்லுவான்.

ஜகத்பிரசித்தமான கிரமத்தினை ஒழித்து, கிரமஹாநி செய்தல், போஜனம் செய்தபின், ஸ்நானம் பண்ணி, தேவன் முதலாயினரைப் பூஜை

முதலான ஸத்காரம் பண்ணுதலோடு ஒக்கும். எனக் கேட்டு. ராஜாவே சமஸ்தமும் அறிவோம். பிரதமம் தேவன் முதலாயினாரை நமஸ்கரித்து, சிராவகனாயினார்க்கு அஞ்சலி மாத்ரம் பக்தி பண்ணுமது யான் இப்படி செய்தற்குக் கேட்பாயாக, இவர் எனக்குப் பரமகுருவாக உள்ளவரைப் பற்றி அறிவிப்பாயாக என சொல்லுவான்.

பூர்வத்தில் அஞ்சன சோரனாகி சக போஜனம் பண்ணிய நாள் முதல் தேவ போகமானவளவும் உள்ள விருத்தாந்தம் உள்ளபடி சொல்லக் கேட்டு, ப்ரஸன்னராகிய ராஜாவும் சொல்லுவான். ரஸமற்ற நீரைச் சிறிது நாள் அனுபவித்துத் தனது ஆயுஷ்ய பரியந்தம் அம்ருத ரூபமான ஜலங்களை நாளிகேரம் கொடுத்தாற் போல, ஒருவர் செய்த உபகாரத்தினையும், யோக்யர் மறவார் என்று சொல்ல தேவன் சொல்லுவான். யோக்யர் பரோபதேசம் இன்றியே ஸ்வபாவத்தினால் ஜீவன்களை ரக்ஷிப்பர். அது எதுபோலவெனில் விளக்கினைக் காண இருள் கெட்டார் போலவும், க்ரிஷ்ம காலத்திலே வழி அடைத்து நின்ற விருட்சம் போலவும், அகாலத்து மேகம் போலவும், யோக்யரும் இப்படி பரஹிதத்தினைப் பண்ணுவர் என்று தேவன் சொல்லக் கேட்ட ராஜா, தர்மங்கள் பலவிலும் சம்யக்த்வ விசுத்தியுடையானாகிய யோக்யனுக்கு உபகாரத்தை பண்ணுவது. புண்யாதி கிரியை எனக் கேட்டு ஜினதத்தரும் மகாராஜன் சொல்லிய வசனம் சத்யமென்று சொல்லுவார். அகிம்சாதி தேச விரத சஹிதமான "ஜினதர்மமும்" யோக்யருடன் கூடியிருத்தலும் வித்வான்கள் கோஷ்டியுள் சொல்லும் வசனம் திருத்தமானமையினாலும். சர்வசாஸ்திரங்களிலும் சாமர்த்தியமும், பதிவிரதோத்தமையும், குணவதியுமான ஸ்திரியினைப் பெறுதலும், தோஷமற்ற பவித்ரமான ஆசாரத்தை யடைதலும், பகுபுண்யத்தினால் உள்ளதாகும் எனக் கேட்டு சமஸ்தரும் சந்துஷ்டராயினர். தேவனும், பஞ்சாச்சர்யங்களினால் 'ஜினதத்தச்ரேஷ்டியை" பூஜித்து, ஸ்தோத்திரம் பண்ணிக் கள்வனாகிய யான், தேவரீர் அகாரணத்தினால் உபதேசம் பண்ணி அருளிய மகிமையினால் ஈத்ருசமாகிய யான் இந்த விபவத்தினை யடைந்தேன் என்றனன்.

இந்த விருத்தாந்தமெல்லாம் பிரத்யக்ஷமாகக் கண்டு, ராஜா சொல்லுவான். அஹோ தர்மத்தினது மகிமை இருந்தவர். தேவனாகிய இவனும், தாஸனாகி வர்த்திக்கின்றனன் என்று தர்மத்தினது மகிமை சர்ப்ப மாலையும், முத்து மாலை ஆகா நின்றது. ஆயுத ரூபமாகச் செய்யப்பட்டது. மாலையும் சுகந்தபுஷ்பமாலையாகா நின்றது. விஷமும் அம்ருதமாகும். சத்ருவும் ப்ரீதியைச் செய்கின்றனன். தேவர்களும் வந்து பஹுவித ரத்னங்களாலும், திவ்யமாகிய நிருத்த கீதாதிகளாலும், சிறப்பினைச் செய்கின்றன.

என்று சொல்லி, பத்மோதய மகாராஜன் புத்திரனுக்கு ராஜ்யபதம் கொடுத்து, ஜினசந்த்ர பட்டாரகர் ஸ்ரீபாதத்திலே ஜின தீக்ஷையைப் பிராபித்தனன், மந்திரியும் சிரேஷ்டி முதலாகிய பலரும் தீக்ஷித்தனர். சிலர் சிராவக விரதம் கைக்கொண்டனர் சிலர். சுபபரிணாமத்துடன் கூடினர். தேவனும் பஞ்சவிம்சதி மலரஹிதமான சம்யக்த்வமான கிரகணம் பண்ணி சுவர்க்கமடைந்தனர் என்று அர்ஹத்தாசர் ஸ்திரிகளுக்கு இந்த விருத்தாந்தம் எல்லாம் பிரத்யக்ஷமாகக் கண்டதனால் சம்யக்த்வ கிரஹணம் பண்ணினோம் என, ஸ்திரிகளும் இந்தத் திருஷ்டமும் ச்ருதமும், அனுபோகமுமாகிய சகலமும் எங்களுக்கும் அனுமோதம் என்று, அஞ்சலி பண்ணியபின் குந்தலதை என்னும் எட்டாம் ஸ்த்ரீ சொல்லுவாள்.

எனக்கு உடன்பாடு இல்லை. அஞ்சலி செய்வதும் இல்லை, என்ற இவளது வசனம் கேட்ட ராஜாவும், மந்திரியும், சோரனும் குபிதராகி, ராஜாவும், மந்திரியும், எங்களுக்கு ராஜ்ய விபவமும் தந்து, தீக்ஷா கிரகணமும் பண்ணினவர்களுக்கு இந்த விருத்தாந்தம் சகலமும் அறிவார்கள். பாபிஷ்டையான இவள் அர்ஹதாசரது வசனத்தை அசத்யம் என்றனள், பிரபாத சமயத்து இவளுக்கு நிக்ரஹத்தை செய்வோம் என்றனர். அஞ்சன சோரன் சொல்லுவான். இந்த விருத்தாந்தம், யான் அறிய பஞ்ச நமஸ்கார மகிமையால் தேவனாகி ஜினதத்தரது உபசர்க்கத்தினையும் நீக்கினமை யானும் அறிவன். இப்படி இருக்க அஸத்யமென்றனள். ஹீனரது சுவபாவமென்று சொல்லுவான்.

ஒரு தடாகத்து ஹம்சமானது நெடுநாளாகக் கூடியிருந்தும், தாமரையில் உண்டாகிய பூவினைத் தனது மூக்கினால் சேதிக்கும், அதிதூரன் ஆகிய ஆதித்யனும் இந்தப் புஷ்பத்தினை எல்லாரும் சந்தோஷிக்கும்படிப் பண்ணுவான் என்று தன்னுடைய ஹிருதயத்திலே சிந்தித்தான்.

அர்ஹதாசரும் சம்யக்த்வ காரணத்தினைச் சொல்லினர், மித்ரியை நோக்கி உனது தர்சனகிரஹண காரணத்தினைச் சொல்லுவாயாக என்றனர். அவளும் சொல்லுவாள். மகத விஷயத்து, ராஜகிரஹ நகரத்து ராஜா சங்கிராம சூரன் பார்யை கனகமாலை, அந்நகரத்து வைச்யர் விருஷபதாசர் மகாசம்யக்திருஷ்டி சகலகுண சம்பூர்ணர், பரமதார்மிகர், புருஷ லட்சணம் உள்ளவர். புருஷ லட்சணமாவது, சத்பாத்திரங்கள் எய்தியவிடத்து தானம் பண்ணுதலும், குணவான்களிடத்து அனுராகம் பண்ணுதலும், பந்துவர்கங்கள் பரிஜனங்கள், இவர்களுடன் ஜீவித்தலும், சந்ததம், தர்மசாஸ்திரங்களை ஓதுதலும், சத்ருவுக்கு பின்னிடாதிருத்தலும், ஆகிய ஐந்து லட்சணம் உடையவர். பார்யை ஜினதத்தை, சம்யக்த்வாதி குணங்களுள் சர்வலட்சண சம்பூர்ணங்களும் உடையவள். இவளது லட்சணம் பர்த்தாவின் வசனம்

மீளாமை, உடன்படுதல், எப்பொழுதும் பிரியத்துடன் கூடியிருத்தலும், சமர்த்தயாய் இருத்தலும், பதிவிரதா பாவமும், ஹேயோபாதேய ஞானமு மாகிய குணங்களையுடையவள். லக்ஷ்மியை ஒப்பாள். இப்படிப்பட்ட குணங்களையுடைய ஜினதத்தைக்குப் புத்திரரின்மையால் பகுபிரகாரமான பரிஹாரங்களைச் செய்தும், புத்திரரில்லாமையால் தனது பர்த்தாவை நமஸ்கரித்து விண்ணப்பம் செய்வாள்.

சுவாமி. புத்திரர்கள் இல்லாத வம்சம் பிரகாசமுண்டாகாது. அந்த வம்சம் நாசத்தினை அடையும். ஆதலால் இன்னமும் ஒரு விவாஹம் செய்து அருள வேண்டும் என்று சொல்லுவாள், "யானை மதம் பொழிகையினால் பிரகாசமாகும், தடாகமானது தாமரை செங்கழுநீர் முதலிய புஷ்பங்களினால் பிரகாசமாகும், ராத்திரி பூரணசந்திரனால் பிரகாசமாகும், கவித்வம் வியாகரணத்தினால் பிரகாசமாகும், ஹம்சங்களினால் நதிகள் பிரகாசமாகும், சபை, வித்வான்களால் பிரகாசமாகும், ஆசாரத்தினால் ஸ்திரிகள் பிரகாசம் ஆவார்கள், நடையிலும் ஓட்டத்திலும் அசுவம் பிரகாசமாகும், ஸ்ரீவிஹாரம் மகாபிஷேகங்களால் தேவாலயங்கள் பிரகாசமாகும், சத்புத்திரனால் வம்சம் பிரகாசமாகும், ராஜாவினால் இராஜ்யம் பிரகாசமாகும், தார்மிகன் ஒருவனால் உலகம் மூன்றும் பிரகாசம் ஆகும்" என்றும், "இராத்திரிக்கு விளக்கு சந்திரன், பகலுக்கு விளக்கு ஆதித்யன், மூன்று லோகங்களுக்கு விளக்கு தருமம், சத்புத்திரன் குலத்துக்கு விளக்கு" என்றும், சம்சாரத்தில் இளைத்த ஜீவன்களுக்கு இளைப்பாற்றியான காரணம் யோக்யரான பிள்ளைகளும், ஆசு, மதுரம், சித்ரம், விஸ்தாரம் என்னும் கவியும், ப்ராப்த ருடன் கூடி, வர்த்தித்தலும் என்றும், இவை மூன்றும் ஒழிய மித்யாத்ருஷ்டி களும் இப்படிச் சொல்லுவார். பிள்ளை இல்லாதாற்கு கதியில்லை என்றும், சுவர்க்கமில்லை என்ற வசனம் உண்டென்றும், புத்திரனை தரிசித்தப் பின்பு சன்யசிக்க வேண்டுமென்று சொல்ல விருஷபதாசர் சொல்லுவார்.

சகலமும் அநித்யமானதைக் கண்டு மோக பரிணாமத்தினைத் தவறாத மூர்க்கரே ஞானசூன்யரென்பர். இந்த ஸ்திரீகளது சரீரம் ஆஹாராதிகளால் ரூபம் போல் தோன்றுகின்றது. விசாரிக்கின்றவிடத்து விஷயத்தினால் மூடராயினர். [ருரூபமாகத் தோன்றுகின்ற அல்லது ரஸருதிரமாம்ச மேத அஸ்தி, மஜ்ஜை, சுக்லம் ஆன சப்த தாதுக்களாலும், வாத, பித்த, சிலேஷ்ம, உதராக்னி, சர்ம, மலமூத்ரமாகிய ஏழுமாக சதுர்த்தச தாது ரூபமாகிய அஷ்ட ரூபம், இதனை ஞாதாக்களொன்றாக விசாரியார்கள் என்று சொல்லி பின்னும் எழுபது வயசு தீரசய (முதிர்ந்த) சென்ற யான் விவாஹத்தினைச் செய்யில் பலருக்கும் ஹாஸ்ய காரணமும், விரோதமும் ஆகும் என்றும், வியாதியாளன் ஆபரணம்பூண வாஞ்சிக்கின்றதும், தரித்ரனும் அதிவிருத்தனும் ஆகியவன்,

பால்யமான ஸ்திரிகளை வாஞ்சிக்கின்றதும், லோக விருத்தமும், அன்யோன்ய விரோதமும், ஆத்மாவுக்கு துர்கதிக்கு ஹேதுவும் ஆகும்" என்ன ஜினதத்தை சுவாமி ராக ரசத்தினால் செய்யில் தேவரீர் அருளிச் செய்தது நியாயமாகும். குலசந்தான விருத்தியின் பொருட்டு, தர்ம சந்தான விருத்தியின் பொருட்டு மாதலால், தோஷம் யாதும் இல்லை எனக் கேட்டு விருஷபதாசரும் அநேக பிரயத்தனத்தினால் பொருந்தினர்.

ஜினதத்தை உகாபேதத்து மாதா பந்துஸ்ரீ, புத்ரி கனகஸ்ரீ இவளை விவாஹ நிமித்தமாகக் கேட்டனர், யான் தமக்கை வாழ்க்கைப்பட்டிருக்கின்ற விடத்துக் கொடுக்கில் ரக்ஷையாகும் என ஜினதத்தையும் போஜன காலம் ஒழிய கனகஸ்ரீ கிரஹத்திலே வர்த்திக்கக் கடவள். நியமானுஷ்டானத்தில் யான் இருக்கக் கடவேன் என்று பிரமாணம் பண்ணி, சுபமுகூர்த்தத்து விவாஹம் பண்ணிய பின் ஜினதத்தை, நியமத்திலே இருப்ப, கனகஸ்ரீ கிருஹத்தில், இஷ்ட விஷயாதிகளையும் அநுபவித்து, இல்லறந்தக்கு யோக்யமான தான, பூஜை, விரத, அனுஷ்டானங்களையும் தப்பாமல் நடத்திச் செல்லும் நாளுள், கனகஸ்ரீ ஒருநாள், தன் மாதாவைக் காணச் சென்றவிடத்து புத்ரியைக் கண்டு ப்ரீதி யெய்தி அருகணைத்துக் கொண்டு, உன்னுடன் பர்த்தாப் பொருந்தியிருக்குமோவென, மாதாவே என்னுடன் வசனமாத்ரமும் இல்லை, காமபோகாதிகளும் இல்லை. என்னுமது கேட்க வேண்டா, தமக்கையின் இடத்தில் என்னை கல்யாணம் பண்ணிக்கொடுத்த எனக்கு சுகம் உண்டோவென்று கேட்கின்றனன்.

யான் சிரோமுண்டனம் பண்ணி பிக்ஷைப் பண்ணுவது அல்லதில்லை. ஜினதத்தையும், பர்த்தாவும் திவாராத்ரமும் ஜினாலயத்தில் இருந்து சுகானுபவம் பண்ணிக்கொண்டு போஜன காலத்துக்கு வந்து போவது அல்லது வேறில்லை, யான் இராத்திரியில் தனிமையால் நித்திரை பண்ணேனென்று சோகித்து, மாதாவுடன் வஞ்சகம் சொல்லினள். ஸ்திரிகளது வஞ்சகத்தை அறிவிக்கும் நீதி சொல்வதும், ஸ்திரிகளும், வித்வான்களும், தாபசரும், விரோதிகளும், பழியும், பாவமும் பாராமல் தமக்கு ருசிக்குத் தோன்றியதைச் சொல்லியும், செய்துவிடுவார். அப்படியே பந்துஸ்ரீ சொல்லுவாள்.

லக்ஷ்மியை ஒத்த என்னுடைய புத்ரியைத் துறந்து ஜரையினாலும், விருபத்தினாலும் ஹீனையான இவளோடு காமானுபவம் பண்ணுகின்ற இவனுக்கு லஜ்ஜை இல்லை என்றும், இந்திரன் அநேக ஸ்திரீகளோடு கூடி

கல்பக விருட்சம் முதலாகிய திவ்ய போகங்களை அனுபவித்து இருக்கின்றவன், வனவாசியாய் கிழங்கு முதலாயின போஜித்து வர்த்திக்கின்ற கௌதமனெனும் தாபஸனுடைய ஸ்த்ரீ அகல்யயைக் காமாக்னியால் அனுபவித்தனன். ஆகலால் ஆசையுற்றவிடத்து, பிராப்தராணையும் விடுமது, பற்றுமது அறியாரென்றும், காமுகனுக்கு லஜ்ஜை, அயோக்யமான பதார்த்தங்களை தரிசிக்கையும், நல்ல வசனத்தைக் கேட்கையும் யோக்யம், அயோக்யம் அறிகையும் இன்றிப் பொல்லாததொரு பதார்த்தங்களையுக் நல்லதாகக் கருதிவிடும். அஹோ ! காமராஜனது மகிமையிருந்தவாறு, குருஜனமாகிய இவன் தூர்த்தனாகி வர்த்திக்கின்றனன். சகல சாஸ்திரங்களையும் கற்றவன் என்றும், சகல கலைகளிலும் வல்லவன் என்றும், தீர புருஷன் என்றும் விசாரியாமல் இப்படியொத்தவர்கள் மனசையும், ஹீன விருத்தியாகப் பண்ணுவரென்று ராகத்வேஷத்தால் பகுதுஷணம் பண்ணிப் புத்ரியே, பாபரூபியான ஜினதத்தையை உபாயத்தினால் மரணம் அடைவிப்போம் என்று சொல்லி, கனகஸ்ரீயைத் தனது கிருஹத்திலே கொண்டிருந்து, ரௌத்ர தியானத்தோடு செல்லும் நாளுள் ஒருநாள், ஒரு காபாலி, எலும்பினால் செய்யப்பட்ட ஆபரணத்தினால் விக்ரஹமான ரூபத்தினையும், திரிசூலம், டமருகம் முதலாகிய ஆயுதங்களையும் உடையனாகி அநேகம் ஸ்த்ரீகளோடும், இவளது கிரஹத்துக்கு வரக்கண்டு, இப்படிப்பட்ட காபாலியை யொப்பார், இதற்கு முன் யான் கண்டதில்லை. இவனிடத்திலே நான் விசாரிக்கின்ற காரியமாமென்று நிச்சயித்து ஷட்ரசங்களால் நெடுநாள் இவனுக்குப் பிக்ஷை கொடுத்தனள். இதற்குக் காரணம் விசாரித்துக் காபாலி சொல்லும் லோகம், தேவன் முதலாகியவரிடத்தும் கார்யார்த்தமாக சேவை அல்லது வேறொன்றும் இல்லை.

பசுவினிடம் பால் மறததுள்ள அளவில் கன்று அருகில் நில்லாமல் வேறிடம் சென்றதுபோலும் காபாலியும் இவளது பக்தி கண்டு சொல்லுவான். ''மாதாவும், உபநயனம் பண்ணினவர்களும், வித்யாப்யாசம் பண்ணிவித்தவர்களும், ஆஹாரதானம் பண்ணினவர்களும், அஞ்சாதே என்று பயத்தை நீக்கியவர்களும், இவர்கள் அனைவரும் மாதா பிதா மரியாதியாகச் சொல்லும் தாயே'' என்னிடத்தில் வேண்டும் வித்தைகள் பலவும் உண்டு என்று இவர்களது இங்கிதம் அறிந்து சொல்ல, பந்துஸ்ரீயும் சிறிது பிரலாபித்து சர்வ விருத்தாந்தத்தினையும் மறிவித்துப் பாபிஷ்டையான ஜினதத்தையை மரணம் அடைவிக்கச்செய்யவேண்டும் என்ற வசனம் கேட்டு காபாலியும் சொல்லுவான்.

அபரபக்ஷத்து சதுர்தசி நாள் வித்யாசாதனம் பண்ணி நீ சொன்னபடி செய்வேன் இல்லையாகில், அக்னிப்பிரவேசம் பண்ணக்கடவேன் என்று

பிரதிக்ஞைப் பண்ணிச் சதுர்தசி நாள் பூஜா திரவியங்களும் வாங்கிக்கொண்டு ச்மசானம் அடைந்து, ஒரு அசரண சவத்தை ஸ்நான சுத்யாதிகளையும் பண்ணி அதன் கையில் வாளையும் பந்திப்பித்து, ஜபம் பண்ணுதலும், வேதாள தேவதையும், ஆவேசமாய் வந்து தோன்றிக் காபாலியை அழைத்துக் காரணம் என்ன என, மஹாமாய ஜினாலயத்தில் இருக்கும் கனகஸ்ரீ அக்ரஜை (அக்கா), ஜினதத்தையை வதம் பண்ணுவாயாக என, தேவதையும், ஹாஸ்ங்காரசகிதமாக விகுர்வணை (பயங்கர உருவம்) செய்து பஹுகோரத்தினோடும் சென்ற விடத்து பகவதர்ஹத் பரமேச்வரன் மஹிமையினாலும், ஜினதத்தையாரது சம்யக்த்வ விசுத்தியினாலும், துர்தேவதைக்கு அசக்யமானது.

துர்தேவதை தர்சனத்தின் மகிமையைச் சொல்லும், மகாபயத்தினைச் செய்யும் சிம்மம், அக்னி, ஜலம், மகாசர்ப்பம், பெரிய பாதாளம், இவை களாலும் இடையூறு வராது. ஹிம்சைப் பண்ணவந்த கள்வனும் தாஸனாகி வர்த்திப்பன். மகாபூதாதிகளும் சேவைப் பண்ணும், தர்ம த்யானமுள்ளவர் களிடத்து ஆதலால் என்று வேதாளியும் ஜினாலயத்தை திரிபிரதக்ஷிணம் பண்ணி அவ்விடத்தில் நிற்கவும், சக்தி ஹீனமாய் மீண்டும் சொல்லாமல் போய் ச்மஸானத்தில் விழ்ந்துபோனது.

இப்படி மூன்று நாள் சென்றபின் நாலாம் நாள் தனது மரண பயத்தினால் காபாலி சொல்லுவான். மாதாவையாகிலும், மகளையாகிலும் இருவருள்ளும், அநீதியானவர்களை தண்டிப்பாயாக என்று ஏவ, தேவதையும் தனது கிரஹத்தில் ஏகாங்கியாகி நித்திரைப் பண்ணின கனகஸ்ரீயினை மரண மடைவித்துங் ச்மசானம் அடைந்து காபாலிகனுக்கு யிந்த சேதியை அறிவித் தலும், அவனும் இதனைப் போகச் சொல்லி பந்துஸ்ரீயினுக்கு நீ நினைத்த காரியம் முடிந்தது என்று சொல்லிப் போயினன்.

உதயகாலத்து பிரியத்தோடு கூடிய பந்துஸ்ரீ, தன் மகள் நித்திரைப் பண்ணிய விடத்துக்குச் சென்றனளாக கனகஸ்ரீயது மரணம் கண்டு ஆக்ரோசம் பண்ணி ராஜ பார்ச்வமடைந்து சொல்லுவாள். தேவனே என் புத்திரியை ஜினதத்தை மரணம் அடைவித்தனள் எனக் கேட்ட ராஜாவும் மிகவும் கோபமாகி ஸ்திரீ, புருஷர் இருவரையும் அழைத்துக்கொண்டு வருகவென்று சில மூர்க்கரை நியோகிக்க, அவர்களும் தர்மத்தின் மகிமையாலே யாதும் செய்திலர். இந்த விருத்தாந்தம் கேட்ட விருஷபதாஸரும், பார்யையும், ஊழ்வினை யாவராலும் விலக்கல் அரிதென்று சொல்லுவார். புண்யபுருஷர் லோக ரக்ஷணார்த்தமாகப் பூமியில் வந்து அவதாரம் செய்துள்ள அளவில் சகல

இந்திரரும் சுவர்க்காவதாரணம், மந்திராபிஷேகம், மஹாப்ரஸ்தானம், தேவலோத்பத்தி, பரிநிர்வாணம் என்னும் பஞ்சகல்யாணங்களையும் பஞ்சாசர்யாதிகளையும், பண்ணி தாசரைப்போல சேவையினைப் பண்ணினர். அதனால் சர்வதோஷமற்ற மஹாபுருஷருக்கும் அது போகத்தை விலக்கலரிது. இன்ன தேசத்து, இன்ன காலத்து, இன்ன முகூர்த்தத்து, இன்ன வாரத்து சுகம் துக்கம் வரும் என்பதனை யாவராலும் விளக்கலரிது, என்று ஒருவருக்கொருவர் அன்யோந்ய தர்மோபதேசம் பண்ணிக்கொண்டு நமது உபசர்க்கம் நீங்குமளவும் ஆகாராதிகளும், நிவ்ருத்தி செய்து ஜினாலயத்து உள்ளிருந்தனர்.

இந்த அவசரத்திலே யோகி, நகரத்திலே வந்து தன் வாக்கினால் ஜினதத்தை நிரபராதி. பந்துஸ்ரீ வசனத்தினால் வேதாளி என்னும் தேவதை கனகஸ்ரீயை மரணம் அடைவித்தது என்றனன். ஒரு பிரதேசத்து நகர தேவதையும், வேதாளியும் வ்ருத்த ஸ்த்ரீ ரூபம் கைக்கொண்டு சொல்லும். அஹோ சர்வ ஜனங்களும் கேட்பீராக, கனகஸ்ரீ, துராத்மா, ஜினதத்தை புண்யவதி. ஆதலால் பாபிஷ்டையான இவளை யான் மரணம் அடைவித்தேன் என்றது, கேட்டு சர்வ ஜனங்களும், அஹோ ஜினதத்தை மகாபதிவ்ரதோத்தமை என்றனர். இந்த அவசரத்திலே தேவர்கள் பஞ்சாஸ்சர்யத்தினைச் (ஆச்சரியம்) செய்தனர். இதனைக் கண்டு ராஜா, பந்துஸ்ரீ துராத்மா. இவளை கழுதையேற்றி துறத்தவென்று நியோகிக்க அவளும் எனது, அக்ஞானத்தால் அயோக்யம் செய்தேன். எனக்குப் பிராயச்சித்தம் கல்பித்தருளவென, நீ செய்த மகாபாதகத்துக்கு ஒரு சாஸ்திரங்களிலும் பிராயச்சித்தம் இல்லை என்று சொல்லுவான்.

"தனது மித்ரனுக்கு வஞ்சகம் விசாரித்தவனுக்கும், செய்நன்றி கெடுக்கும் மவர்களுக்கும், ஸ்திரீ வதம் பண்ணினவர்களுக்கும், கோட் சொன்னவர்களுக்கும், நரகம் அல்லது வேறொன்றும் இல்லை" என்று நகர பாஹ்யத்தில் கழுதையில் ஏற்றித் துறத்தினர். அவள் சொல்லுவாள், மிகுந்த பாபம் இகலோகத்தில் மூன்று நாளையில், மூன்று பக்ஷத்தில், மூன்று மாசத்தில், மூன்று வருஷத்தில் அனுபோகமாகும் என்னும் வசனப்பிரமாணம் யான் திருஷ்டமாகக் கண்டேன் என்று போயினள்.

ததநந்தரம் ராஜாவும், சர்வதோஷ ரஹிதமான ஜினதர்மம் அல்லது ஒழிந்த தர்மங்களில் மகிமை இல்லை என்று நிச்சயித்து ஜினாலயம் அடைந்து சமாதிகுப்த பட்டாரகரையும், விருஷபதாசரையும் ஸ்திரீயையும் நமஸ்கரித்து குருக்களுடன் விண்ணப்பம் செய்வான். இவர்களுக்கு மகோபசர்க்கம் வர

புண்ணிய மகிமையால் நீங்கியது என்ன, குரு, குருக்களும், தர்மத்தினால் வாஞ்சித்தன எல்லாம் ஆகும் என்று அருளிச்செய்வார். இராஜ்யமும் சம்பத்தும், போகங்களும், உத்தம வம்சத்தில் பிறத்தலும், ரூபமுண்டாகுதலும் சகல கலையும், பாண்டித்யமும், ஆயுஷ்யமும், ஆரோக்கியமும், கீர்த்தியும், பயம் அற்று இருத்தலும், சௌபாக்யமும், சுவர்க்காபவர்க்மும், ஆகும் என்றும், பின்னும் தர்மமொழிய சர்வமும் அனித்யமாதலால் தருமம் செய்யத் தகும் என்றும், ஐச்வர்யாதிகளது அனித்ய சுபாவத்தினை அருளிச் செய்வார்.

தனம் பாதரஸம் போல ஓரிடத்தில் நில்லாது என்றும், மலையினும் விரிகின்ற ஆறு போல ஜடிதியில் நாசமாகும். யௌவனமும், நீர்மொக்குப் போல, சரீரத்திற்கு நிலை இல்லை என்றும் நிச்சயித்து தர்மத்தினைச் செய்கின்றவன் சுவர்க்க மோக்ஷ துவாரங்களை நீக்கிச் சொல்லுகைக்கு யோக்யராகின்றார்கள், என்றது கேட்டு தர்மம் எப்படிப்பட்டது என, தபோதனரும் அருளிச செய்வார். அஹிம்சையும், சத்யமும், களவு நிவிருத்தியும், பரஸ்திரி கமந நிவிருத்தியும், பொருள் வரைதலும், மது மத்ய மாம்சங்களை விடுதலும், ராக துவேஷ மோகாதிகளைத் தவிர்த்தலும், அஷ்டாதச தோஷ ரஹிதனான தேவனையும், பரமாகமத்தையும், குருவையும், பக்தி பண்ணு தலும் புண்ணிய காரணமாகும் மென்றது கேட்ட சங்க்ராம சூரனும் தன் புத்ரனாகிய சிம்ஹ சூரனுக்கு இராஜ்யபதம் கொடுத்து ஜைநோத்தமராகிய விருஷபதாஸர் முதலாயின அநேகம் பேருடன் ஜீன தீக்ஷையைக் கைக் கொண்டனர். சிலர் சிராவக விரதத்தைக் கைக்கொண்டனர், சிலர் சுபப் பரிணாமத்தினைக் கைக் கொண்டனர். ராஜாவின் ஸ்த்ரீ கனகமாலை ஜினதத்தை முதலான அநேக ஸ்த்ரீகள், ஜினமதி க்ஷாந்திகளென்னும் ஆர்யாங்கனைகளிடத்து தீக்ஷயினைக் கொண்டனர். குருக்களும், பிரியத் தோடு கூடி லோகங்களில் பதார்த்தங்கள் எல்லாத்துக்கும் பயமுண்டு. வைராக்யத்திற்கு ஒரு பயமும் இல்லை என்று அருளிச் செய்வார். "போகத் திற்கு ரோகத்தினால் பயம். சுகத்திற்கு தரித்திரத்தினால் பயம், ஐச்வர்யத் திற்கு அக்னி, ராஜா, சோரன், ஞாதிகளால் பயம், தாசனுக்கு சுவாமியால் பயம், சமர (சண்டை) பூமியில் சத்ருவினால் பயம். வம்சத்திற்கு ஸ்திரி களிடத்தில் அநீதியுண்டாகும் என்னும் பயம், சன்மாநத்திற்கு துர்மாநி களால் பயம், குணவான்களுக்கு துர்ஜனரால் பயம். சரீரத்திற்கு காலனால் பயம். இவையனைத்திற்கும் பகுவிதமான பயம் உண்டு." ஆசையற்ற யோக்யரானவர்களுக்கு யாவராலும், யாதொன்றினாலும் பயமில்லை என்ற இது கேட்டு, மித்ரஸ்ரீ சுவாமி இந்த விருத்தாந்தம் பிரத்யக்ஷமாகக் கண்டமை யால் எனக்கு தரிசனத்தில் உறுதியானதென்ன, அர்ஹத்தாசரும் ஊன்னால்

கைக்கொள்ளப்பட்ட தர்மம் நமக்கும் அனுமோதம் என்றனர். ஒழிந்த (மற்ற) ஸ்திரிகளும் அப்படி சொல்ல, குந்தலதை சொன்ன வசனம் எல்லாம் அஸத்யம் என ராஜாவும், மந்திரியும், சோரனும் தங்கள் மனசில் இப்படி விசாரித்தனர்.

இவள் பாடமிஷ்டை, சத்யமான கதையை அசத்யம் என்கின்றனள். உதய காலத்து கர்த்தபத்து (கழுதை) மேலேற்றித் துறத்துவோம் என்றனர். சோரன் சிந்திப்பான். குணஹீனரானவர்கள் குணவான்கள் வசனத்தைப் பூஜ்யம் பண்ணினார்கள். அதன்போலவெனில் ஸ்தனத்தின் மேல் வைத்த உண்ணியானது ரத்தபானம் பண்ணும் மல்லாது பாலினைப் பானம் பண்ண அறியாதவாறு போல் என்று சிந்தித்தனன். சுபமஸ்து.

அதற்குப்பின் விபுலஸ்ரீ என்னும் பார்யையினை நோக்கி உனது சம்யக்த்வ கிரஹண காரணத்தினைச் சொல்லுவாயாக எனச் சொல்லுவான். ஜம்பூத்வீப, பரத க்ஷேத்ர குரு ஜாங்கல விஷய ஹஸ்தினாபுரத்து ராஜா போகன், பார்யை போகவதி, ராஜ ச்ரேஷ்டி குணபாலன், பரமதார்மிகன், சம்யக்த்வவசிகாமணி, பார்யை குணவதி, இந்நகரவாசி, பிராம்ஹணன், சோமதத்தன் மஹாதரித்ரன், பார்யை சோமிலை, பதிவிரதோத்தமை, இவர்கட்குப் புத்திரி சோமை, சோமிலை, மகாதாஹஜ்வர பீடிதையாகி மரண மடைய சோமதத்தனும், மகா துக்கமெய்தி வர்த்திக்கின்றவன், ஒரு திவ்ய தபோதனரைக் கண்டு, நமஸ்கரித்து, மனோதுக்கத்தினை விண்ணப்பம் செய்தலும் குருக்கள் அருளிச்செய்வன். ஜனனம் முள்ளவன்றே மரணமும் நிச்சயமாதலால் மோஹபாசத்தினை விட்டுக் கேட்பாயாக.

நாகலோகம், மனுஷ்யலோகம், சுவர்க்கலோகம், வ்யந்தரலோகம், சமுத்திரங்கள், பெரிய வனங்கள், திகந்தங்கள், பர்வதாக்ரங்கள் நிலவறைகள் இந்த இடங்களில் இருந்தாலும், க்ரூரனாகிய காலன் சரீரிகளை விடான். கொண்டுபோமாதலால் இகபரலோகம் இரண்டிற்கும் தர்மமே ஹிதத்தினைச் செய்யும். அக்ஞானம் என்னும் இருளைக் கடிவதற்கும் ஒரு ஆதித்யன் பவ்ய (ால) ஜீவன்களுக்கு வரும் ஆபத்தினை உபசமம் (அமைதி) பண்ணுதைக்கும் சாமர்த்தியமாய் உள்ளது. பரலோகத்தில் சகல ஐச்வர்யங்களுக்கும் ஒரு வைப்பிடம். அதிதிகளை ரக்ஷித்தற்கு ஒரு பந்து நிலையுடைய மித்ரன், கல்பதரு மிகுந்த சம்பத்தினையுடையதொரு இராஜ்யம் என்று, தபோதனர் அருளிச்செய்யக் கேட்டு உபசமபாவத்தால் சம்யக் தர்சனாதி சிராவக விரதங் களையும், கைக்கொண்டு யதாசக்தி சத்பாத்திரங்களில் தானங்களையும்பண்ணி

பாத்ரதானம் அல்பமாகிலும், நவபுண்ணிய கிரமத்தினால் பண்ணியவிடத்துப் பெரிதாகிய சுவர்க்க மோக்ஷங்களைத் தரும் என்று சிந்தித்து, தானபூஜா தபச் சீலங்களோடு செல்லும் நாளுள், ஒருநாள் குணபாலச் சிராவகர் சோமதத் தனது தரித்ரம் கண்டு, வாத்சல்யத்தினால் தனதான்யாதிகளையும் கொடுத்து விவாகத்தினையும் செய்யவேண்டும் என அதிசந்துஷ்டனாகி பிராமணன் சொல்லுவான்.

குணவான்கள். குணவான்களோடு கூடியவிடத்து மிகவும் பிராப்தியினை அடைவர். நன்றாகிய ஜலமானது கங்கையோடு சேர்ந்தவிடத்து சகலராலும் பூஜ்யமானாப்போலவும், யோக்யர், யோக்யருடன் கூடியவிடத்து அப்ராப்தர் ஆவர். கங்கா ஜலமும், சமுத்திரத்தைச் சேர்ந்தவிடத்து உவர்நீர் ஆனாப் போலே வென்றும், பாலுடன் கூடிய ஜலம் போல வென்றும். குணபாலரை ஸ்தோத்திரம் பண்ணி, வர்த்திக்கின்ற காலத்து, சோமதத்தனுக்கும், தாக ஜ்வரம் தோன்றுதலும் தனது மரணமறிந்து குணபால ச்ரேஷ்டியை அழைத்து உம்முடைய அனுக்கிரஹத்தினால், சகல தர்மங்களும் பண்ணிக் கொண்டேன். புத்திரி சோமையை ஜைன பிராம்மணரைத் தவிர வேறு ஒருவருக்கும் கொடுக்க வேண்டாம் என்று சொல்லி, கன்யகையைக் காட்டிக் கொடுத்து சன்யாச விதியால் சரீர பரித்யாகம் செய்து சௌதர்மகல்பத்து தேவனாயினன். பவாச்ரயமான அவதி (பூர்வ ஜன்மத்தில் இருந்த நிலை) ஞானத்தால் சகலமும் அறிந்து சொல்லுவான். ஞானமும், தபஸ்ஸும், தனமும், வீரத்வமும், வம்சமும் ரோகமின்றி இருத்தலும், இராஜ்யமும், சுவர்க்கமும், மோக்ஷமும் சத்கர்மத்தினாலாகும் என்றனள். இப்பால் குணபாலரும், சோமையை தன் புத்திரிபோல் ரக்ஷித்துச் செல்லும் நாளுள், அந்நகரத்து தூர்த்த விருத்தியால் வசிக்கும் ருத்ரதத்தன் என்னும் பிராம்மணன் நாள்தோறும் சூதாடிச் செல்லும் நாளில், ஒருநாள் வழியிடத்து சோமையைக் கண்டு, இந்த கன்யகா யாருடைய புத்திரியென மித்ரரைக் கேட்க, சோமதத்த பிராமணன் மரண காலத்து குணபால சிரேஷ்டியிடம் வளர்க்கக் கொடுத்தனன், என்ற வசனம் கேட்டு ருத்ரதத்தன் சொல்லுவான்.

நான் இந்த கன்யகையை விவாஹம் பண்ணுவன் எனக் கேட்டு மித்ரர், அக்ஞானி என்ன வசனம் சொல்லுற்றனை, தீக்ஷிதர் முதலாகிய பிராம்மணர் கேட்ட விடத்தும், ஜயின பிராமணர்கல்லது கொடுப்பதில்லை என்று சொல்லி விட்டனர். துராசாரியாகிய உனக்குத் தருவது இல்லை எனக் கேட்டு, லஜ்ஜிதனாகி கர்வித்துச் சொல்லுவான் அஹோ எனது புத்தியின் மகிமை

காண்மின் அவசியம் விவாஹம் பண்ணுவன் என்று பிரதிக்ஞை பண்ணி தேசாந்திரம் போய் மாயையால் பிரஹ்மசாரியாகி, தேவதாஸ்தவனாதிகளையும் பாடம் பண்ணிப், பூர்வ நகரம் அடைந்து, குணபால சிரேஷ்டியது சைத்யாலயத்து இருப்ப, சிராவகோத்தமரும் ஜினாலயம் அடைந்து, தேவதாஸ்தவனம் பண்ணியபின் பிரம்மசாரியை நமஸ்கரிக்க தர்சண விசுத்திரஸ்து என்று ஆசீர்வாதம் பண்ணி, குணபாலரும் சுவாமி எந்த தேசத்திலும் எழுந்தருளித்தென, ஜினசந்த்ர பட்டாரகர் ஸ்ரீபாத சேவைப் பண்ணி, அபூர்வ தேசங்களில் தீர்த்தகர தேவபஞ்ச கல்யாண ஸ்தானங்களை வந்தித்து வருகின்றோம் எனக் கேட்டு, இந்த ஜினாலயத்து, நியமானுஷ்டானம் பண்ணியிருக்க வேண்டுமென்று பிரார்த்திக்க மாயா பிரஹ்மசாரி சொல்லுவான். தேவபூஜையும், கிருபையும், சத்யவசநமும், குணவான்களுடன் கூடியிருத்தலும், சத்பாத்ர தானமும், கர்வம் மற்று இருத்தலும், என்கின்ற குணங்களை எவனொருவன் நாள்தோறும் மாராதிக்கின்றனன் அவனுக்கு இகபர லோகங்களில் பிரகாசமும், சுகமும் உண்டாகும் என்று சொல்லக் கேட்டு. பூஜ்யனே. ஜன்மதேசம் யாதெனச் சொல்லுவான். இந்த நகரத்துப் பிராமணன் சோமசர்மா, பார்யை சோமசர்மை. இவர்கட்குப் புத்திரன் ருத்ரதத்தனாகிய யான். பிதா மரணம் அடைய, அதனால் தீர்த்தயாத்திரைப் போய் வாராநசி நகரத்து, ஜினசந்த்ர பட்டாரகர் உபதேச மகிமையால் விரதங்களைக்கைக்கொண்டேன். கோத்ரமும், தேசமும், சம்சாரமும், யாவர்க்கும் நிலை இல்லை என்னும், அநேக ஜனன ஐச்வர்யத்துடன் ராஜாவாகியும், அநேக ஜனனம் துக்கரூபமாகிய நராதிகளையும், அனுபவித்துச் செல்கின்ற, இந்த ஜீவன்களுக்குச் சஞ்சல ரூபமாக மனுஷ்ய தேகத்தில் சுகமில்லை. அதனால் தர்மானுஷ்டானங்களைப் பண்ணி சகலமும், இஷ்டகாம்யங்களும் எய்தி மோக்ஷம் பெறலாம் என்று தர்ம மகிமையினைச் சொல்ல, சிரேஷ்டியும், பூஜ்யனே,

பிரம்மசர்ய விரதம் தர்ம நியாயமோவென நியமம் என்றாலும், தம்முடைய புத்திரி சோமையை விவாஹம் செய்வீராமினென. விவாகத்தினால், சம்சார பிரமணமுமாகி சாஸ்த்ர விருத்தமுமாகும் என்று பின்னும் சொல்லுவான். வசியமும், ஔஷதமும், யந்த்ர மந்த்ரமும், பகுவாக உண்டானாலும், ஸ்த்ரீகளை வசீகரணம் பண்ணுதல் அரிதென்ன, இவனது மாயை அறியாமல் சம்யக்த்ருஷ்டி என்று பிரார்த்தித்து உதகம் பண்ணிக் கொடுத்தனன். மற்றை நாள் பூர்வரூபமான தூர்த்த வேஷம் கைக்கொண்டு ருத்ரதத்தன் சூதாடுமிடத்திற்குச் சென்று மித்ரருடனே எனது பிரதிக்ஞை முடிந்ததென அவர்களும்

இவனைப் ப்ரசம்ஸித்தனர். இவன் பூர்வ பார்யை வசுமித்ரை, வேச்யை, குட்டினி, புத்திரி காமலதை இவர்களுடன்கூடி வர்த்திக்கின்றனன். இந்த விருத்தாந்தத்தினை அறிந்த சோமை யான் பண்ணிய கருமம் இருந்தவாறு, விதியை யாவராலும் விலக்கலரிதென்றும், வஞ்சகரது சுவபாவத்தைச் சொல்லுவாள், "பொய்யினால் திருத்தமும, கொடிய மனசும், யோக்யரை அவமானம் பண்ணுகையும், மித்யாத்வத்தினை நம்புதலும், தர்மஹாநி பண்ணுதலும், குரு முதலாயினார்க்கு வஞ்சகம் செய்தலும், மிருதுவும் ரசமுமான வசனத்தினை முன்சொல்லிப் போகவிட்டுப் புறங்கூறுதலுமாகிய, இவை கலியுக மகாராஜனுடைய சேனை என்றபின்னும், தாதனே "சந்திரனுக்குக் களங்கமும், தாமரைக்கு முட்தாளும், சமுத்ரஜலம் உவரானதும், வித்வான் மிடியனாதலும், ரூபவதி சரீரம் துர்கந்தமாகலும், தனவான் கிருபாசூன்யனாகவும்" விதியினால் அடையப்பட்டதென்று. பின்னும், பெரியவர்கள் செய்யும் தர்மாதிகளுக்கும் பகுவிக்னங்கள் உண்டு. கால விசேஷத்தால் குணஹீனர் செய்யும் அநாசார தர்மங்கள் நிர்விக்னங்களாகி முடியுமென்று, தாதனே எனக்குத் தேவரீர் பிரசாதத்தினால் ஒரு துக்கமும் இல்லை. சூதாடுபவர் சுவபாவம் சொல்லுவான். "சோரனுக்கு சத்யவசனம் இல்லை. வேச்யாபதிக்கு சுத்தமில்லை. சுராபாநிக்கு யோக்யரிடத்து மித்ரபாவம் இல்லை. இவை மூன்றும் சூதாடுபவனுக்கு இல்லை என்றும், வம்சமும் குணமும் உண்டென்று துர்ஜனனை விச்வசிக்கக் கடவர்களல்ல. சைதயமும், சுகந்தமும் உடைய சந்தனத்தில் தோன்றிய அக்னியும், சகல வஸ்துக்களையும் தஹித்தவாறு போல, என் புத்திரியே, எனது அக்ஞானத்தினால் இவ்வண்ணம் விளைந்தது. இதனை க்ஷமிப்பாயாக என்று சொல்லி பருநனத்தினையும் கொடுத்து தான பூஜா தபஸ்சீலங்களை அனுஷ்டித்திருப்பாயாக வென சோமையும், இந்த திரவியம் கொண்டு ஒரு ஜினாலயம் பண்ணிவைத்து அர்ஹத் பரமேச்வரனையும் எழுந்தருளப்பண்ணி பிரதிஷ்டை ஸ்ரீ விஹார மகாபிஷேகம் பண்ணி சாதுர்வண்ண சங்கத்தில் உள்ளவர்களுக்கும் யோக்ய பிரகாரத்தினால், ஆகார சுவர்ண வஸ்திரங்களையும் தானம் பண்ணியபின், நகரத்தில் உள்ள ஜனங்களையும், ருத்ரதத்தன் பார்யை வசுமித்ரை, குட்டினி, புத்ரி காமலதை இவர்களையும் அழைத்துப் போஜனாதி சத்கார்யங்களையும் பண்ணினாள்.

குணவான்களது மகிமை சொல்லுதும் குணஹீனமாயுள்ள ஜனங்களிடத்தும் கிருபையினைச் செய்வர். "சந்திரன் தனது கிரணங்களை, தேவாலயங்கள், யோக்யரிடங்கள், வனங்கள் எங்கும் தனது கிரணங்களை ஒக்க (ஒருமிக்க) வெறித்தனன். வசுமித்திரை, குட்டினி இவர்கள் சோமையது ரூபத்தினைப் பாதாதி கேசாந்தமாகப் பார்த்து, விஸ்மயம் எய்தி, அசூயையினால் இவள் இருக்கில் நமக்கு ஜீவனமில்லை என்று கருதி உபாயத்தினால் மரணம்

பண்ணுக நினைத்து, ஒரு குடத்தில் கொடிதாகிய, சர்ப்பத்தினையும், புஷ்ப மாலைகளையுக இட்டு, புத்திரியே இந்த தாமங்களால் (பூமாலை) தேவனுக்கு அர்ச்சிப்பாயாக வென்று, சோமை கையில் கொடுக்க, இவளது புண்ணிய மகிமையால், அர்ச்சித்த சர்ப்பமும் புஷ்பமாலை ஆனது.

ததனந்தரம், தனது கிருஹத்தில் போஜன வஸ்திராதிகளால் உபசாரம் செய்து, பின் ஆசீர்வாத பூர்வகம் காமலதையது கழுத்தில் சர்ப்ப மாலையினை இட, அதுவும் இவளைக் கடிக்க, மூர்ச்சித்து பூமியில் வீழக் கண்ட குட்டினி, ஆக்ரோசம் பண்ணி, ராஜயசபைக்குச் சென்று சொல்லுவாள். குணபால புத்திரி சோமை, எனது புத்திரியினைக் கொன்றனள் எனக் கேட்ட ராஜா, சோமையை அழைப்பித்து, காமலதையைக் கொல்லக் காரணம் என்ன என, தயாயுக்தமான ஜினதர்மத்தில் உள்ள நான், அவ்வண்ணம் செய்யில் என்னில் மிகுந்த பாபி இல்லை என்று சொல்லுவாள். "பாபத்தினால் துக்கமும், தர்மத்தினால் சுகமும், பிரசித்தமாய் உள்ளது. ஆகையால் சுகத்தை இச்சித்த வர்சள் கிருபை அல்லது செய்யாரென்று, பூர்வ விருத்தாந்தத்தினையும் அறிவிக்க, குட்டினி குடத்துக்குள்ளிருந்த சர்ப்பத்தினைக் காட்ட, சோமை அதனை எடுக்க, புஷ்பமாலை ஆனது. குட்டினி அதை வாங்க சர்ப்பமானது. இப்படி பகு (பல) வாரம் (தடவை) செய்ய, ராஜா முதலாகிய சகல ஜனங் களும் ஆச்சரியப்பட்டனர். இது கண்டு குட்டினி சொல்லுவாள்.

தேவனே, இவள் மகிமையுள்ள சோமை. என்னுடைய புத்திரியை விஷத்தை நீக்கினாளாகில் சுத்தாத்மாவெனக் கேட்டு 'பகவதர்ஹத்' பரமேச்வரனை நினைத்து, காமலதை சரீரத்தினைப் ஸ்பர்சித்து இறக்குதலும் நிர்விஷமாகி எழுந்திருந்தபின் சொல்லுவாள். 'ஜினதர்மத்தினை' நம்பினவர் களுக்கு சகல விக்னங்களும் நாசத்தினை அடையும். டாகினீ பூதங்களும் அகன்றுபோம். மகாவிஷங்களும் நிர்விஷமாகும் என்றனள். ராஜாவும் குட்டினியை நோக்கிப் பயமின்றி இந்த விருத்தாந்தத்தினை உள்ளபடி சொல்லுவாயாக என, எங்கள் வஞ்சனை, என்று பூர்வவிருத்தாந்தத்தினைச் சொல்லினள். இந்த அவசரத்தில், சோமையது தர்மபிரபாவனம் கண்டு தேவர்கள் பஞ்சாஸ்சர்யத்தினைச் செய்தனர். ராஜா முதலாயினவர்களும் பூஜித்து, அஹோ சத்தர்மத்தின் மகிமை இருந்தவாறு என்று பலவிதமாக ஸ்தோத்திரம் பண்ணியபின் ராஜாவும் சிரேஷ்டிகுணபாலர் முதலாயினோர் பலரும் 'ஜினசந்த்ர பட்டாரகர்' ஸ்ரீபாதத்திலே ஜினதீக்ஷையைக் கைக் கொண்டனர். சிலர் சிராவக விரதம் கைக்கொண்டனர். சிலர் சுபபரிணாமம் கைக்கொண்டனர்.

ஸ்ரீமதி என்னும் ஆர்யாங்கனைகள் பார்ச்வத்திலே ராஜ பார்யை போகவதி, குணபாலன் பார்யை குணவதி, சோமை முதலாயினோர் தீக்ஷித்தனர். ருத்ரதத்தன், வசுமித்திரை, குட்டினி, காமலதை இவர்களும் சம்யக்தர்சனம் கைக்கொண்டனர். சுவாமி இந்த விருத்தாந்தத்தினை பிரத்யக்ஷமாகக் கண்டு, அதனால் சம்யக்த்வ விசுத்தி யுண்டானதென்று, விபுலஸ்ரீ சொல்லக் கேட்ட 'அர்ஹதாசரும்', ஸ்த்ரீகளும் அனுமோதம் பண்ணினர்.

குந்தலதை இந்த விருத்தாந்தம் சர்வமும் அஸத்யம், எனக்கு அனுமோதம் (ஏற்புடையதாக) இல்லை என, ராஜாவும், மந்திரியும், சோரனும் கேட்டு, பாபிஷ்டையாகிய குந்தலதை இதனை ஸத்யம் இல்லை என்றனள். பிரபாத சமயத்து, கர்த்தப மேற்றி துரத்துவோம் என்றனர். சோரன் சிந்திப்பான். இந்தக் கால ஸ்வபாவ மிருந்தவர் யாவனொருவன் வித்துக்களது குணத்தினைச் சொல்லாமல் குணத்தை மறைத்து தோஷத்தைப் பாராட்டுபவன் பாபங்களுக்கு இருப்பிடம் நிந்தியன், கீர்த்தியற்றவன், பிராணிவதம் பண்ணினவர்களோடொப்பர் என்று சிந்தித்தனன்.

அதன் பிறகு அர்ஹதாசர் நாகஸ்ரீயது சம்யக்த்வ காரணத்தினை வினவச் சொல்லுவாள். வச்ச விஷய கௌசாம்பி நகரத்து ராஜா அஜிதஞ்ஜயன், பார்யை சுப்ரபை, மந்திரி சோமசர்மா, பார்யை சோமை. சோமசர்மா சந்ததம் அபாத்ரதாந தத்பரனாகி செல்லும் நாளுள், இந்த நகர பாஹ்யோத்யானத்து சமாதி குப்தி பட்டாரகர் எழுந்தருளி 'மாசோபவாச விரதம்' கைக்கொண்டு யோகத்திலிருக்க, அந்த வனம், உலர்ந்த அசோகம், மா, மகிழ், பேரீச்சை, பலா, புன்னை முதலாகிய விருக்ஷங்கள், அகாலத்துப் புஷ்பங்களாலும், பழங்களாலும் தளிர்களாலும் சாகோபசாகைகளாலும் நிறைந்தன. சுஷ்க தடாகம் சம்பூர்ணமும், தாமரை, செங்கழுநீர் முதலாகிய புஷ்பங்களும் உத்பன்னமாயிற்று. ஹம்சம், மயில், குயில் முதலாயின கிரீடைகளையும், ஸ்வரங்களையும் பண்ணின. சிறு செண்பகம், செண்பகம், மந்தாரை, மல்லிகை, முல்லை, பன்னீர், தாழை முதலாகிய புஷ்பங்கள், விகசிதமாதலும், ஆம, குஞ்சி, மிறுவண்டு தேனென்னும் நால்வகை ஜாதியும் புஷ்ப கந்தங்களை ஜீவித்து. சங்கீதம் பண்ண அந்த வனம் மிகவும் சோபிதமானது (அழகானது). யம நியம சுவாத்யாய தியான. அனுஷ்டான தத்பரராகிய சமாதிகுப்த பட்டாரகரது மகிமையாவது சரீரத்தில் கர்வம் அத்திருத்தலும், குருக்களிடத்தில் வினயமும், பஞ்சவித ஸ்வாத்யாயமும், சரீரத்தில் பிரகாசமும், மகோபசமமும், சம்சாரத்தில் நிர்வேகமும், பாஹ்யாப்யந்த்ர பரிக்ரஹ மில்லாமையும், உத்தம க்ஷமாதி தசதர்மமும், க்ஷாதிக சம்யக்த்வ முதலாகிய குணங்களையுடைய முனிந்திரர் யோகம் முடிந்து, சர்யா மார்க்கம் எழுந்தருளக் கண்டு, மந்திரிக்கும் காலலப்தி கூடி, சுபபரிணாமத்தில் சிரத்தை முதலாகிய

குணங்களோடு கூடி நவபுண்ணிய கிரமத்தினால் தானம் பண்ணியபின் பலவிதமாக ஸ்தோத்திரம் பண்ணி நமஸ்கரிக்க, இந்த அவசரத்து தேவர்கள் பஞ்சாஸ்சர்யத்தையும் செய்து, தபோ தநராது மகிமை இருந்தவர், தா தாவினது குணங்களில் இருந்தவர் என்று ஸ்தோத்திரம் செய்து போயினன்.

பின்பு மந்திரி பட்டாரகரது மகிமையினைக் கண்டு, அஹோ! யான் வைஷ்ணவ தர்மத்துக்கு சொல்லப்பட்ட தீக்ஷிதர் சோமாஜிதன், புரோஹிதர், சன்யாசிகள், யோகிகள் இவர்கட்கு சுவர்ணம், எள்ளு, கஜம், அச்வம், கோ, தாசிகள், பூமி, கிராமம், தேர், கன்யகை, கபிலை என்கின்ற மகாதானங்களை பண்ணியும் யான் பிரத்யக்ஷமாகக் கண்டது ஒன்றும் இல்லை என பட்டாரகர் அருளிச்செய்வார். மந்திரி முக்யனே அர்த்தரௌத்ரயுக்தராகிய மித்யா திருஷ்டிகளுக்கு பண்ணின தானம் நிஷ்ப்ரயோஜனம் ஆகும்.

தானம் மூன்று வகைப்படும். ஆர்த்த, ரௌத்ர ரஹிதராகிய நிஷ்பிருஹத்துக்குக் கொடுக்கும் தானம், உத்தம தானமாகும். அதிதிகள் ஜீவஹிம்சையில் நீங்கினவர்கள், ரோக பீடிதரானவர்கள், விருத்தர், அந்தகர், மூகர் இவர்கள் முதலாயினோர்க்குக் கொடுத்தல் மத்யம தானமாகும். ஹிம்சை, மாம்சம், மத்யம், மது முதலான தோஷ வஸ்த்துக்களை ஜீவிக்கும் மித்யா திருஷ்டிக்குக் கொடுத்தல் அதமதானமாகும். உத்தம, மத்யமத்திற்குக் கொடுத்த ஆஹார தானத்தில் ஆயுஷ்யமும், கீர்த்தியும், சுவர்க்கமும், மோக்ஷமுமாகும். அபய தானத்தினால் சுவரூபமும், நிர்பயமும் ஆகும். ஔஷத தானத்தால் சர்வ ரோகங்களும் நீங்கும். சாஸ்த்ர தானத்தால் சிருதகேவலி பகவானாவர். அபாத்ர தானத்தில் கொடுத்தவர்கள் நரககதி, திர்யக்கதி, நீச கோத்ரங்கள் முதலாகிய துக்கங்களை அடைவர்,

அதுவென் போலவெனில் பஸ்மத்திற்குப் பண்ணிய ஹோமம் போலவும், உவர் நிலத்தில் வித்திய பீஜம் போலவும், ஒரு தடாகத்து ஜலம் கரும்பில் பாய ரசத்தினையும், வேம்பிற்பாய கசப்பினையும் எய்தியவாறு போல, பாத்திரங்களில் கொடுத்த தானம் இப்பெற்றியது. தயா தானம் சகலர்க்கும் செய்யப்படும் என்று அருளிச் செய்த பின்பு புனரபி (மறுபடி) மந்திரி நமஸ்கரித்து சுவாமீ என்னைப் போல சத்பாத்திரங்களில் தானம் பண்ணி மகிமை எய்தினார் உளரோவென அருளிச் செய்வார்.

தக்ஷிண தேச வேணுதடாகபுரத்து ராஜா சோமபிரபன், பார்யை சோமப்ரபை. ராஜா பிராம்மண பக்தன். ஆதலால் சொல்லுவான். கோவும் பிராம்மணரும், தேவர்களும், பதிவிரதைகளும், சத்யவாதிகளும், லோபமில்லாதவர்களும், தனசீலரும் என்கின்ற இவர்கள் எழுவராலும் லோகம் உண்டாகா நின்றது என்று புத்தி பண்ணிச் சொல்லுவான். தவம் மூன்று

வகையினால் கெடும். தியாகத்தினாலும், போகத்தினாலும், அக்னி சோரர் இவர்களாலும், நாசம் வரும், ஆதலால் யாவனொருவன் தியாக போகங்களைச் செய்யாதொழியில் ராஜா, அக்னி, சோரர் முதலிகளை கைக்கொள்ளப்படும், என்று புத்திப் பண்ணி மகாதனத்தைத் தானமாகக் கொடுக்குமதொரு யாகத்தினைத் துடங்கிப் பண்ணும் நாளுள், ஒரு நாள் பகுதனத்தை தானமாய்க் கொடுத்தனனாக, யாகசாலை சமீபத்து, சகலகுண சம்பன்னனும், சம்யக்த்வ சிகாமணியும், யம நியம சம்யமருமாகி, நிஸ்ப்ருஹ சித்தனுமாகிய விப்ரோத்தமன் விச்வபூதி, பார்யை சத்யவதீ பதிவிரதோத்தமை, இவர்கள் தரித்ரத்துடன் கிருஹஸ்தாசாரம் அனுஷ்டித்துச் செல்லும் நாளுள் தன்னில், செந்நெல் விளையும் இடங்கள் சென்று, உதிர் நெல்லுப் பொறுக்கிச் சேர்ந்ததனால் பாகம் பண்ணி, இதனை நாலுபாகம் செய்து, ஒரு பாகம் ஹோமம் பண்ணி, அதிதிகளுக்கு ஒரு பாகமும், தனக்கு ஒரு பாகமும், பார்யைக்கு ஒரு பாகமும் கல்ப்பித்து, நடந்து செல்லும் நாளுள், ஒரு நாள் பிஹிதாஸ்ரவ பட்டாரகர் சர்யாமார்க்கம் எழுந்தருளக் கண்டு, பரமானந்தத்தோடும், நவபுண்ணிய கிரமத்தால் எதிர் கொண்டு, அதிதிகளுக்கு நியமித்த பாகத்தினையும், தனது பாகத்தினையும் கொடுத்து, ஸ்திரியது முகத்தை நோக்க, அவளும் பிரியத்தினோடும் தனது பாகத்தினையும் கொடுத்தனள். இவளது பரிணாமம் கண்டு சிந்திப்பான். பிதாவின் வசனம் மீறாமல் செய்யும் புத்திரனும், சாரித்ரத்துடன் கூடிய சாஸ்திரமும், ரோக ரகிதனாய் இருத்தலும், குணவான்களுடன் கூடியிருத்தலும், பர்த்தாவினது வசனம் மீறாத ஸ்திரீயும், இவர்கள் துக்கம் அற்று இருத்தற்குத் தோன்றியதொரு சிந்தாமணி என்று சிந்தித்தனன்.

ததநந்தரம் அக்ஷயம்தானமஸ்து என்று ஆசீர்வாதம் பண்ணிய அவசரத்து தேவர்கள் ரத்ன விருஷ்டி, புஷ்ப விருஷ்டி, மந்தமாருதம், தேவ துந்துபி, தேவ கோஷணை என்னும் பஞ்சாஸ்சர்யங்களைப் பண்ணிய அவசரத்தில் மித்யா திருஷ்டி பிராம்மணர் சுவர்ணயாக மகிமை என்று ராஜா சோமபிரபனுக்கு அறிவிப்ப, அவனும் சந்துஷ்டனாயினன். பிராம்மணரும் சென்று இந்த ரத்தினங்களை எடுப்ப, அவை அவர்கள் கைப்படக் கரியானமைக் கண்டு ராஜாவினுடன் சிலர் சென்று சொல்லுவார். விச்வபூதி ஜின முனிகளுக்குத் தானம் பண்ணின மகிமை அல்லது பஞ்சாஸ்சர்யம் யாக மகிமையல்ல வெனக் கேட்டு, கால லப்தியினால் தான மகிமையே தப்பாதென்று நிச்சயித்து சிந்திப்பான். ஆர்த்தரௌத்ர பராயணரும், கிருஹத்தரும், அசுபபாவநாதத்பரரும், சீலாச்சாரரஹிதரும் க்ஷமாஹீநருமாகிய, மித்யாதிருஷ்டிகட்குக்

கூடாதென்று நினைத்து வந்து விச்வபூதியாகிய, விப்ரோத்தமனை பகுவிதமாக ஸதோத்ரம் பண்ணி நமஸ்கரித்து, சுவர்ண யாக பலத்தைக் கைக்கொண்டு, முனி தான பலத்தைத் தருகவென. மகாராஜனே சுவர்க்க மோக்ஷங்களைத் தரும் மகாதானத்தினைத் தந்து, நரகாதி துக்கங்களுக்கு பாஜநமாகிய மித்யா யாகததினைக் கைக்கொள்வனோ வென, உமது தரித்திரம் நீங்க வேண்டும் தனம் தருவேன், தான பலத்தினைத் தருக வென, யோக்யர் தரித்ரமுற்ற விடத்தும், நீதி யல்லது செய்யாரென்று சொல்லுவான்.

சிம்ஹமானது, பசி, தண்ணீர் தாகம், முதலாயின விடத்தும், யானையின் மேல் செல்லும், அல்லது க்ஷுத்ர மிருகத்துச் செல்லாது போல நீதிமான்களும் வ்யசனமுற்றவிடத்து அநீதியினைச் செய்யார் என்று மறுத்த பின், பிஹிதாஸ்வரபட்டாரகரது ஸ்ரீபாதமடைந்து நமஸ்கரித்து விண்ணப்பம் செய்வான். சுவாமி கிரஹஸ்தர் ஆகாராதிகளை எது காரணமாகச் செய்கின்றனர் என, ஆகார தானம் போக பூமியில் அநுபோகங்களையும் பண்ணி சுவர்க்கமோக்ஷங்களையும் கொடுக்கும். ஆதலால் சகஸ்ரம். அச்வம், கோ, பூமிகள், சுவர்ணங்கள், வெள்ளிகள் முதலாயின பகுதானமாகப் பண்ணிய விடத்தும், ஆகார தான சமானமாகாது. ஔஷத தான மகிமையால் நிர்வியாதியாகும். அதனால் சம்யக் ஞானமும், மோக்ஷமுமாகும். அபய தானத்தால் நிர்பயராவர். சாஸ்திர தானத்தால், சப்ததத்வம், நவபதார்த்தம் பஞ்சாஸ்திகாயம், ஷட் திரவியம், தேவ நிச்சயம், குரு நிஸ்சயங்களும் அறிந்த பின்பு, க்ரமேண கேவல ஞானம் ஆகும். ஆவாசதானத்தால் ஸ்வர்க்கவாசம் ஆகும் என்று, தான மகிமையினை அருளிச் செய்தபின் மித்யா திருஷ்டிகளுக்கு பண்ணிய தானம், சர்பத்துச்கு கொடுத்த, பால் விஷமாகப் பரிணமித்தார் போல், துர்கதிகளுக்கு ஹேதுவாகும் என்று அருளிச்செய்ய ராஜாவும் தான மகிமையை பிரத்யக்ஷமாகக் கண்டபடியினாலும் சாஸ்திரம் கேட்டபடியினாலும், சம்யக்த்வ கிரகணம் பண்ணியபின் சிராவக விரதங்களையும் கைக்கொண்டு ஆகார தானம் பண்ணும் கிரமத்தினைக் கேட்க, அவர் சொல்லுவார்.

தேசம், காலம், பாத்ரம், கிரமம் அறிந்து பவித்ரமான ஆகாரத்தினைப் பண்ணத் தகும். யோக்யமான வஸ்த்துக்களைக் கொடுக்கத்தகாது. அவை யாவன உத்தம தோஷம் பதினாறாவன. சமைத்த பாண்டத்திலும், மற்றொரு பாண்டத்திலே, ஒழித்து வந்து தானம் பண்ணுவதும், தேவதைகள், யக்ஷர் முதலாயினார்க்குப் பலியிட்ட தான்யத்தினால் தானம் பண்ணுவதும், காலாதிக் கிரமத்தில் தானம் கொடுப்பதும், அக்னி ஜ்வலிக்கையிலே தானம்

பண்ணுவதும், விலைக்குக் கொண்ட அசநத்தினால் தானம் பண்ணுவதும், அதம வெட்டியினால் வந்த திரவியத்தை தானம் பண்ணுவதும், ஆகாரம் போதாதிருக்கில் வேறு வாங்கி வந்து தானம் பண்ணுவதும், மங்கலமல்லாத அஷ்ட தோஷமுள்ள பாத்திரத்தில் தானம் பண்ணுவதும், தளத்து மேல் சமைத்து இழிச்சு வந்து தானம் பண்ணுவதும், வலிய வாங்கின வஸ்துவினால் தானம் பண்ணுவதும், தூது நடந்த வஸ்துவினால் தானம் பண்ணுவதும், தன்னைப் புகழ்ந்து தானம் பண்ணுவதும், வைத்யம் பண்ணி வந்த உடைமையால் தானம் பண்ணுவதும், கோபத்தாலும், கர்வத்தாலும், தேடின உடைமையினாலும் தானம் பண்ணுவதுமாம்.

உத்பாத தோஷம் பதினாறாவன. மாயையினால் தேடிய வஸ்துவில் ஆகாரமும், போகத்தினால் தேடிய வஸ்துவில் ஆகாரமும், ஒருவனைக் கொண்டாடி வாங்கின வஸ்துவில் ஆகாரமும், உண்டதற் பின் பண்ணும் ஆகாரமும், மந்திரவாதத்தினால் வாங்கிய வஸ்துவில் ஆகாரமும், சூர்ணத்தினால் வாங்கிய வஸ்துவில் ஆகாரமும், கூட்டில் நெடுநாள் நின்ற நெல்லின் ஆகாரமும், அப்ராசுக வஸ்துவைத் தொட்டிட்ட ஆகாரமும், பச்சிலை இட்டு மூடி வைத்த ஆகாரமும், நன்றாக மூடாத ஆகாரமும், முந்தானையில் இழுக்கக்கேடு வந்திட்ட ஆகாரமும், பிரசூதிகை ஏக மாசத்துக்குள்ளே கொண்டுவந்திட்ட ஆகாரமும், ஸுராபோஜியிருக்கும் மனையில் ஆகாரமும், வியாதியாளர் தீண்டிய ஆகாரமும், ச்மசான பர்யந்தம் சவாநுகமநம் பண்ணினவன் தீண்டிய ஆகாரமும், பேடி தொட்ட ஆகாரமும் எனவாம்.

ஏஷணா தோஷம் பத்தாவன. ஷண்மாசத்தின் மேற்சென்ற கர்ப்பிணி கையில் கொள்ளு மாகாரமும், வம்சம் இல்லாதார் கையில் கொள்ளும் ஆகாரமும், ஸ்நான சுத்தியில்லாதார் கையில் கொள்ளும் ஆகாரமும், தபஸ்விகள் முன்னே இடறி விழுந்தார் கையில் கொள்ளும் ஆகாரமும், பஞ்சமித்யாத் திருஷ்டிகள் கையில் கொள்ளும் ஆகாரமும், விரதமில்லாதார் கையில் கொள்ளும் ஆகாரமும், எட்டு வயதிற்குக் கீழ்ப்பட்டார் கையில் கொள்ளும் ஆகாரமும், வேச்யாபதியாயினார் கையில் கொள்ளும் ஆகாரமும், உறுப்புகள் குறைந்தவர் கையினால் கொள்ளும் ஆகாரமும், பல நாளும் பய்ய மானங்களைத் தோஷம் சொல்லுவார் கையில் கொள்ளும் ஆகாரமும் எனவாம். ஸம்யோஜன தோஷம் நாலாவன. தபஸ்விகள் முன் அக்னியினை ஜொலிப்பித்தும், அவித்தும், அப்போது இறக்கி வந்திட்ட ஆகாரமும், முனிவரன் முன் மெழுகுவதும், பெருக்குவதும், பிள்ளையை அழவிட்டிட்ட ஆகாரமும், ரிஷிகள் கீழே இருக்க, தான் உயர விருந்திட ஆகாரமும், கலகலவென்று பேசி இடும் ஆகாரமும் எனவாம்.

இவைமுதலாகிய நாற்பத்தாறு தோஷம் நீங்கிய பவித்ராஹாரத்தினை, ரோகம் உள்ளவர்கள், உறுப்புக் குறைந்தவர்கள், கிலேசமுள்ளவர்களின்றி த்ரிகரண சுத்தராகி. வஞ்சகமும். கர்வமும், கொடிய வசனங்களும் நீங்கி, சிரத்தையும், சக்தியும், லோபம் இன்றி இருத்தலும். அஷ்ட விதார்ச்சனைகளால் அர்ச்சித்து நமஸ்கரித்தலும், மதுரமான வசனமும், மனசும், சரீரமும் சுத்தமாய் இருத்தலும். ஆகார சுத்தியுமென்கின்ற குணங்களோடு கூடிக் கொடுக்குமது உத்தம தானமாகும் என்று அருளிச் செய்தனர்,

கர்ண ரசாயனமும், கர்ம விநாச காரணமுமாகிய தர்மாமிருதத்தை பருகிய பின் தான பூஜா தபச்சீலங்களோடு கூடி வர்த்தித்து, வைராக்ய பாவனையால் தீக்ஷாபிராப்தனாகி சுவர்க்கம் மடைந்தனன் என்று சமாதி குப்த பட்டாரகர் அருளிச்செய்த சுவர்ணயாக விருத்தாந்தத்தினைக் கேட்ட சோம சர்ம மந்திரி சம்யக்த்வ கிரஹணம் பண்ணியபின் சுவாமி இந்த சரீரமுள்ளளவும் மரவாள் அல்லது லோகமயமான ஆயுதம் எடுக்கக் கடவேன் அல்ல என்று, விரதம் கைக்கொண்டு, செல்லும் நாளில் மந்திரிக்கு விரோதியாயினா னொருவன். இந்த விருத்தாந்தம் ராஜாவுக்கு அறிவித்தனன்.

அது எதுபோலவெனில் மக்ஷியானது ஜீவிக்கும் ஆஹாரத்து விழ்ந்து பிராணத் தியாகம் பண்ணி, போஜித்த ஆஹாரத்தினை சக்தியாக்கி, விசனத்தையும் பண்ணிவிக்கும். அதுபோல, துர்ஜனரும் தாங்கள் வருத்தமுற்றாகிலும், யோக்யருக்கு அவமானத்தைப் பண்ணிவிப்பரென்று ராஜா விசாரித்து, இவன் வசன பரீக்ஷார்த்தமாக, உபாயத்தினால் ஆயுதங்கள் மகிமை சொல்லித், தனது வாள் முதலாக சகல ராஜகுமாரர் வாளினையும் பரீக்ஷித்து, மந்த்ரியை நோக்கி, உனது வாளினையும் காண்போம் தருகவென. இங்கித சேஷ்டைகளால் அறிந்து விசாரிப்பான். ஒருவர் வாக்கினாற் சொல்லிய வசனங்களை கோமுதலாகியவையும், அச்வகஜங்களும் அறியும்.

பண்டித ஜனங்களுக்கு மகிமையாவது பலரது இங்கித சேஷ்டைகளை அறியும். சுபுத்தியென நினைந்து, ஜயினோத்தமனாகிய மந்திரி, பகவதர்ஹத் பரமேச்வரனே, தேவன், பரம ஆகமமே, ஆகமம். ஜினமுனிகளே முனிகள், என்னும் நிச்சயமெனக்குண்டாகில், இந்த வாள் லோகமயமாகக் கடவதென்று தியானம் பண்ணிக் கொடுப்ப, லோகமயமாய் ஆதித்ய பிரகாசம் போலே ஆதலும், அதனை சொன்னவனது முகம் நோக்கி, துர்ஜனர் பரதோஷமும், அஸத்யமுமல்லது சொல்லாரென, மந்திரி சொல்லுவான். தேவனே சாஸ்திரம், ராஜாக்கள் சர்வதேவமயமென்று

சொல்லும். அதனால் அவன் விண்ணப்பம் செய்தது அஸத்யமன்று, கோபிக்க வேண்டாமென சத்புருஷரது மகிமையைச் சொல்லுவான். சத்ருக்கள் ஹீனர் பண்ணிய அவமானத்தினைப் பாராட்டாது, அவர்கட்கு உபகாரத்தினைச் செய்வர் என்று மந்திரியை பிரசம்ஸித்து மரவாள் லோகமயமாகியவாறெப்படி என் பூர்வ விருத்தாந்தத்தினையும் தனது நியமத்தினையும் ஜின மகிமையால் லோகமயமானமையும் அறிந்து யான் பண்ணிய அபராதத்தினை மன்னித்தருள எனக்கேட்டு, சகலரும் ஜின மார்க்கத்து மகிமையினையும் மந்திரி தரிசன விசுத்தி மகிமையினையும் கண்டு ஸ்தோத்ரம் பண்ணிப் பூஜித்தனர். தேவர்கள் பஞ்சாஸ்சர்யத்தினையும் செய்து தமது இடம் அடைந்தனர்.

ராஜா அஜிதஞ்ஜயன் அஹோ ஜினதர்மம் அல்லது அன்ய தர்மங்கள் துர்கதிகளை நீக்காதென்றும ஜினதர்மம், துர்கதிகளாகிய பர்வதங்களுக்கு ஒரு அசனியென்றும், வேகமுள்ள காட்டுத் தீக்கு மகாவர்ஷாமென்றும் ஜின தர்மத்தினை ஸ்துதித்து வைராக்ய பாவனையால் சுவபுத்ரனாகிய சத்ரு ஜயனுக்கு ராஜ்யபதமும், மந்திரி புத்ரன் தேவசர்மனுக்கு மந்திரி பதம் கொடுத்து, பல ராஜாக்களுடன் சமாதி குப்த பட்டாரகர் ஸ்ரீபாதத்து தீக்ஷித்தனர். சிலர் சிராவக விரதம் கைக்கொண்டனர். சிலர் சுப பரிணாம மடைந்தனர். ராஜ பார்யை சுப்ரபை மந்திரி பார்யை சோமை முதலாயினார். அபயமதி என்னும் ஆர்யாங்கனைகளிடத்து தீக்ஷித்தனர். சுவாமீ இந்த விருத்தாந்தம் பிரத்யக்ஷமாகக் கண்டதனால் சம்யக்த்வம், திருடமானதென்று நாகஸ்ரீ சொல்ல, அர்ஹதாசரும் நின்ற ஸ்திரீகளும் அனுமோதனம் பண்ணினர். குந்தலதை சர்வ விருத்தாந்தமும் அஸத்யமென்று சொல்ல, ராஜாவும், மந்திரியும் சொல்லுவார். உதய காலத்து கர்த்தபமேற்றி நிக்ரஹம் பண்ணுவோம் எனறனர். சோரன் சிந்திப்பான். இவள் உத்தம ஜாதியாயும், சுவபாவகுணம் தவிர்கின்றவள். சந்தனத்தில் உத்பன்னமான அக்னி சகலருக்கும் உஷ்ணமானால் போலவென்று சிந்தித்தனன்.

அதன்பிறகு பத்மஸ்ரீயினது சம்யக்த்வ காரணத்தினை வினவ, அவளும் சொல்லுவாள். காசி விஷய வாரணாஸி நகரத்து சோம வம்சத்து ராஜா ஜிதாரி, பார்யை கனகசித்திரை, புத்ரி முண்டிகை பித்தபாண்டு சங்கையால் மிருத்துவினைப் பக்ஷித்துச் சொல்லும் நாளில் மந்திரி சுதர்சனன் பார்யை சுதர்சனை. முண்டிகை ஒருநாள் விருஷபை என்னும் பரமச்ராவகியிடத்து தர்மம் கேட்டு சம்யக்தர்சனம் கைக்கொண்டனள். சந்திரன் ஸ்வபாவத்தினால் ஆம்பலை அலர்த்தினாப் போல ப்ராப்தரும் ப்ரத்யுபகாரத்தினை இச்சியாமல் பரோபகாரத்தினைச் செய்வர். முண்டிகையும் நிரதிசாரமாக விரதம்

அனுஷ்டித்து, அதனால் ரோகமும் நீங்கி ரூபவதியாயினள். இதுகண்டு சகல ஜனங்களும் சொல்லுவார். ஆச்ரய விசேஷத்தினாலே அக்ஞானியும் சமர்த்தனான வாளின் வாய் சேர்ந்த ஜலம், தோயல் வாசியால் யானையின் மஸ்த்தகத்தினைப் பின்னமாக்கினார் போல வென்றனர். முண்டிகையும், சிராவசியை நோக்கி உமது பிரசாதத்தால் எனது ரோகமும் நீங்கி ரூபவதி யாயினேனென நிரவத்யமாக விரதமனுஷ்டித்தவர்களுக்கு நரேந்திர, கஜேந்திர, முனீந்த்ர சம்பத்தும் கைவல்ய விபூதியுமாகும். ஆதலால் இது ஆச்சர்யம் அல்ல வென்றனள். ராஜாவும், முண்டிகையினை சுவயம்வர விதியால் கொடுப்பான் வேண்டி சகல ராஜபுத்ரர்களையும் அழைப்ப சம்சார விரக்தியால் அசாரம் பாவமென்று மறுப்ப ராஜ குமாரரும் போகியபின், அயோத்யா விஷயத்து, சக்ரோட நகரத்து ராஜா பகவதத்தன் சமஸ்தவஸ்து பரிபூர்ணனும், தானசூரனும், ரூபவானுமாகிய இவன், ஜாதிஹீனன், பார்யை லக்ஷ்மீமதி, மந்திரி சுபுத்தி, பார்யை குணவதி, பகவதத்தன் முண்டிகையினைக் கல்யாணம் பண்ணிக் கொள்வான் வேண்டிக் கேட்டு வரக்காட்ட ஜிதாரி குபிதனாகி ஜாதி ஹீநனாகிய தான், என்னுடைய புத்ரியைக் கேட்பானோ என, வந்த தூதன் சொல்லுவான். குணமே பிரதானம், கஸ்தூரியினது வர்ணம் வர்ணஹீனமானாலும் அதனிடத்தில் உத்பவித்தமான அண்டம், கர்த்தமம், போன்றிருந்தும் லோகத்தில் சகல சுகந்தங்களது மகிமையைப் பரிமள விசேஷத்தால் மறைத்தது போல குணப்ரதானமல்லாது வம்சத்தினால் ப்ரயோஜனமில்லை என ஜிதாரி அதிகுபிதனாகிச் சொல்லுவான். சமர பூமியில் ஜயம் பண்ணியவன், வீரபுருஷனும், சகல ரத்னாதிபதியும் எனது கர்வத்தினைப் போக்கியவனும் ஆகும் என்ற தீரவசனத்தைக் கேட்ட தூதனும் சென்று சொல்லுவான். பகவதத்தனும் யுத்த சன்னத்தனாகி புறப்பட சுபுத்தி மந்திரி சொல்லுவான். சதுரங்கபலத்தோடு கூடிச் செல்லாதளவில் யுத்த முகத்து அபஜயம் வருமென்று ஹிதோபதேசமாகச் சொல்லிய வசனம் சத்ய மென்று புத்தி பண்ணி சாதுரங்க பலசஹிதனாகிப் புறப்பட ஸ்வபார்யை சொல்லுவாள். துராக்ரஹ புத்தியால் நிஷ்பிரயோஜனமாகிய யுத்தம் வேண்டாம் மென்னும் விவாஹ சம்மந்தங்களுக்கு வம்சம் ஆசாரம் சமமாகிய விடத்தல்லது சுகமில்லை யதனால் நமக்கு அதிகமான விடத்துச் செல்வது லோகத்துக்கு ஹாஸ்ய காரணமும் பாபானுபுத்தியுமாகும். முன்பே யொருவர் நரம் மரத்தை பிளப்ப, அதிற் கடாவி இருந்த ஆணியைப் பறிப்ப, ப்ரத்யக்ஷமாக துக்கம் வந்துற்றார்ப் போல, அவச்யம் அனர்த்தம் வருமெனத் தனது, சௌர்யவீர்ய பராக்ரமங்களைச் சொல்லி, உதாசீனம் பண்ணி, யாவராலும் விதியை விலக்க வொண்ணாது என்று, சொல்லவும், யுத்த

சன்னத்தனாகி புறப்பட, சுப சகுனங்கள் உளவாயின. ததியும், அறுகும், அக்ஷதமும், பூர்ணகும்பமும், கரும்பும், தாமரைப் பூவும், சர்ப்பிணியான ஸ்திரி, வீணை, கண்ணாடி. இவைக் கண்டு, பிரசன்னனாகிச் செல்கின்ற அவசரத்து, ஜிதாரிபக்கல் சிலர் சென்று சொல்லுவார். பகதத்தன் பலசகிதனாகி வருகின்றனன் என, கர்வத் யுத்தனாகிச் சொன்னான்.

லோகத்தில் சிம்ஹத்தின் மேல் சென்ற மிருகங்களும், ஆதித்ய பிரகாசத்தை மறைத்த சந்திரனும், மார்ஜாரத்தின் மேற்சென்ற எலியும், கருடன் மேற்சென்ற பாம்பும், வியாக்ரத்தின் மேற்சென்ற சர்த்தபமும், யமன் மேற்சென்ற பூதவர்க்கமும், வலியன் மேற்சென்ற காகமும், யாவராலும் காணப்பட்டதில்லை. என்னும் அனலில் சமர பூமியில் வந்தனன், எனக் கேட்டு சாதுரங்கப் பல சகிதனாகிப் புறப்பட அபசகுனங்கள் உளவாயின. அகால வர்ஷமும், பூமி கம்பமும், பகலில் பெரிதாகியதொரு உல்காபதநமும் (நெருப்புத்துண்டு) முதலாகிய துர்சகுனங்களைக் கண்டு, சுதர்சன மந்திரி சொல்லுவான். தேவனே கன்னிகையினைக் கொடுப்பது கருமமென்றும் ஒரு தேசம் ஒரு கிராமத்தால் அழியுமாகிலும், கிராமம் ஒரு வம்சத்துள்ளாரால் அழியுமாகிலும், ஒரு குலம் ஒருவனால் அழியுமாகிலும், அல்பமாகிய அனைகளை விட்டு அறிவு வாராமல் ரக்ஷிக்குமது பிராப்தற்கு முறைமையாகுமென், மந்திரியை நோக்கிச் சொல்லுவான். இந்த லோகத்தில் "பர்வதங்களைப் பின்னமாக்கும் வஜ்ராயுதத்தின் முன் நின்றவர்களும், சமுத்திரத்தினைக் கைநீத்தால், நீந்திக் கரையேறியவர்களும், அக்னி சயனத்தின் மேலேறி சுக நித்திரை பண்ணினவர்களும், ஆலாஹல மென்னும், விஷம் எரிந்து வர, அதன் முன் நின்றவர்களும் இல்லை." என்ற அவசரத்துப் பகதத்தனது, பகு சேனையைக் கண்டு, மேற்செல்லுமது கருமம் அல்ல எனப், பின்னும் தனது சத்தியத்தினைச் சொல்லுவான்

ஆதித்யன் தேருக்கு உருளையொன்று. பூணும் குதிரை ஏழு, தேர் செல்லும் வீதி ஆகாசம். தேர்ப்பாகன் பாதசூன்யன். இப்பெற்றியவாகியும், தினந்தோறும், மகாமேருவை பிரதக்ஷிணமாக வருகின்றனன். ஆதலால் சாதுரங்க பலம் அற்பமானாலும் சத்யமே விரதமென்று, அவசரத்துப் 'பகதத்தன்' யுத்த சன்னத்தனாகிப் புறப்பட, மந்திரி தேவனே, லக்ஷணயுக்தனாகிய தூதன் சென்று, சாம வேதாதிகளையும் சொல்லி, அறிந்த பின், யுத்தத்திற்குச் செல்வது யோக்யமாகும் என, புத்திமானும், சமர்த்தனும், பரரது சித்தவிருத்தியறியும் அவனும் தைர்யவானும், சொல்வன்மையும்

என்னும் தூத லக்ஷண சம்பூர்ணனாகிய திவாகரன் என்னும் தூதனை ஏவ அவனும் சென்று ஜிதாரியை நோக்கிச் சொல்லுவான். முண்டிகையினையும் கொடுத்து 'பகதத்த மகாமண்டலேச்வரனுக்கு' சேவையும் பண்ணி, சுகத்தில் இருப்பாயாக வென, அல்லது நாசம் வரும் என்றும், தன்னால் செய்ய முடியாத காரியங்களுக்கு, உத்யோகம் பண்ணுதலும், ஸ்வபாவத்தில் பலருடனும், விரோதம் பண்ணிக்கொள்ளுதலும், பலவான்களுடன் ஸ்பர்தை (போட்டி) பண்ணிக் கொள்ளுதலும், ஸ்திரிகளை நம்புதலும், என்னும் இவை நாலும், விநாச காரணமாகும். என்று கேட்ட ராஜா, எழாய் என்ன வசனம் சொல்லுகின்றனை, சிம்ஹ சமானமான என்முன் மிருகங்கள் நிற்கவற்றோ, கர்ம வசத்தால் வருவன யாவற்கும் வரும். ஹரிசந்திர மகாராஜனுக்குச் சண்டாள சேவையும், ஸ்ரீராமனுக்கு வனவாசமும், தர்மபுத்திரர்களுக்கு பல ராஷ்டிரத்து பகுவிதருபமான ராஜசேவையும், இவர்கள் மகாபலவான்களாயும் வந்ததென்றனன்.

பின் மந்திரி துராக்ரஹணம் பண்ணிய தூதனை வதிக்கவென மந்திரிகளும், தூதரும், விதிக்கப்படாரென்று சொல்லி திக்கரித்து துரத்தினர். தூதனும் சென்று இந்த விருத்காந்தம் அறிவித்தனன். பின் பகதத்தமகாராஜனும் அதிகுபிதனாகி சாதுரங்க பலத்துடன் ரங்கபூமியிற் சென்றனன. எனக்கேட்ட ஜிதாரியும், யுத்த சன்னத்தனாகி சாதுரங்கப் பலத்துடன் சென்றனன். உபயபலமும் எதிர்ப்பட்டு மகாயுத்தம் விளைந்தது. திகந்தரங்களில் உள்ளவர்களும் சலன மெய்தினர். சமுத்திரமும் மகாகோஷமடங்கிற்று, பூமியும் ஸ்தப்பித்தது. சண்ட வாயுவையொக்கும் அதிவேகத்தினையுடைய அச்வங்களும் சஹிதமாயின. மத்தகஜங்களும், திவ்ய ரதங்களும் மந்திரி சாமந்த சேனாபதி முதலாகிய யுத்த வீரரும், பகுவிதமான த்வஜ சாமராதிகளும் படு-படஹ-மிருதங்க-பேரீ வீணை-குழல்-வீரமுரசு-வெற்றி முரசு முதலாகிய தோல்கருவி, துளைகருவி, நரம்புகருவி, கஞ்சகருவி, மிடற்றுக்கருவி முதலாகிய பஞ்சமகா சப்தம், பரந்தொலிப்ப "தேரும், தேரும் எதிர்ப்பட, மாவும் மாவும் மலைந்தெதிர்ச் செல்ல, யானையும் யானையும் தம்மிற் பகைத்தெழ, வீரரும் வீரரும் விரைந்தெதிர்ச் செல்ல தூளினால் ஆதித்ய கிரணத்தையும் மறைத்தது. இப்படி உபயபலமும், மகாயுத்தம் விளைந்தவிடத்து, விஜய கஜங்களது மதஜல வெள்ளத்தால் அறைப்பட்டது. பின் ரத சக்ர மர்த்தனத்தால் சுக சஞ்சாரம் போக்யமாயிற்று. ஆயினபின், வில்லாட்கள் முதலாகிய சகல படவர்க்கங்களால் ஒருமுறையே விடப்பட்ட சரம், பரசு, நாராசம், வல்லயம், எரிசக்ரம் குந்தம், முதலாயின ஆயுத வர்ஷம் ஆகாசத்தலத்தை மூடிற்று. மூடிய பின்.

சரப்பிரஹார வேதனையால் விழ்ந்து சுழல்கின்ற கஜதுரகங்களாலும், விரண வேதனையால், குபிதமாகி மறுகி எதிர்ச்செல்கின்ற மகாவாரணங்களாலும், கோபசம்ப்ராந்தராய்த் திரிகின்ற யுத்த வீரர்களது ஹூங்காரமாகிய கோஷங்களாலும், அதிவேகத்தால் ஓடுகின்ற ருதிர நதிப் பிரவாஹத்து நுரையொத்த சத்ர சாமரத்வஜங்களாலும், சஸ்திர பிரஹாரத்தினால் விழ்ந்து, கோப வேகத்தினால் சிவந்து, சுழன்ற கண்ணினையும், மடித்தவாயினையும், நெறித்த புருவத்தினையும் உடையராகிய மகாவீரர்களது நிஷ்டூர ஹிங்காரத்தினால் அதிசுலபமாகிய ருதிரமாம்சங்களால் பரிதுஷ்டராகித் திரிகின்ற வேதாள கணங்களது அட்டஹாசங்களாலும், பயங்கரமாகிய கபந்தங்கள் நிருத்தங்களாலும், யுத்தாங்கம் அதிபயங்கரமாயிற்று. ஜிதாரியது சேனை அபஜயம் கண்டு மந்திரி நிஷ்பலமாகிய யுத்தத்தினை தவிர்க்க என ராஜாவும், ஜயமாகில் இகலோகத்தில் சௌக்யமாகும், சமர பூமியில் ம்ருதனாகில் வீரசுவர்க்கம் ஆகும் எனவும், சுவாமி பக்தியால் பகுபிரயத்தனத்தோடும் ராஜாக்ஞையும் கொண்டு நகரம் செல்கின்றனன். இந்திரனுக்கு ராவண புத்ரனால் அபஜயம் வந்தது, பாண்டவர்களுக்கும் கர்ம வசத்தால் வனவாசம் வந்ததென்று ஹிதோபதேசத்துடன் செல்லா நின்றபொழுது, பகதத்தன் பலசகிதனாகிய பின் செல்ல, மந்திரி பீதியினால் செல்கின்றவர் பின் செல்வது வீரராயினோர்க்கு நீதியல்லவென்றனன். பிதாவினது விருத்தாந்தம் கேட்டு முண்டிகை அர்ஹத் தேவனையும், குருக்களையும் நினைந்து பஞ்சநமஸ்கார மந்திர தியானத்துடன் அகாதமாகிய வொரு ஜீர்ண கூபத்துள் வீழ, சம்யக்த்த மகிமையால் தேவர்கள் ரத்ன மாளிகை நிர்மித்து, அதனுள் சிம்ஹாசனத்தின் மிசை வைத்துப் பவித்ர ஜலங்களால் அபிஷேகம் பண்ணி திவ்ய வஸ்திராபரணாதிகளால் அலங்கரித்து பஞ்சாஸ்சர்யங்களாலும் பூஜித்தனர்.

பகதத்தனும் மோகவாஞ்சையால் நகரத்து ப்ரதம த்வாரத்தினையும் திறந்து மேற்செல்ல ஸ்வபரிவாரமும், நகர ஜனங்களும், ஹாஸ்யம் பண்ணவும், ஜிதாரியது மாளிகை நோக்கிச் செல்லாதபடி அபிபவித்தது. இந்த அவசரத்து முண்டிகை விருத்தாந்தத்தினைச் சிலர் வந்து சொல்லிய பின் தானும மந்திரியுமாகச் சென்று ப்ரத்யக்ஷமாகக் கண்டு கர்வ ரஹிதனாகி முண்டிகையது பாதத்தில் விழ்ந்து நமஸ்கரித்து, அக்ஞானத்தால் யான் செய்த அபராதத்தினை க்ஷமித்தருளவென்று ஜிதாரியையும், மதுர வசனங்களால் உபகரித்து, விரக்த பாவனையால் நிந்தாகர்ஹணம பண்ணி, மித்திரபாவத்தால் இவர்களுடன் சத்தர்மம் கைக்கொள்வான் வேண்டி ஸ்வபுத்திரர்களுக்கு ராஜ்யபதம் கொடுத்து, ஜிதாரி சம்சார மசாரபாவமென்று வைராக்ய சுவபாவனையால் மந்திரி சுதர்சனன் முதலாயினாருடன் சாகரபட்டாரகர் ஸ்ரீபாதத்து ஜினத் தீக்ஷையினைக் கைக்கொண்டனர். கனகசித்திரை, முண்டிகை முதலாயினார். ஜினமதி என்னும் ஆர்யாங்கனைகளிடத்தே தீக்ஷித்தனர்.

பகதத்தன், சுபுத்தி முதலாயினோர் யோக்யமாகிய தீக்ஷையினையும், சிராவக விரதங்களையும், கைக்கொண்டனர். சிலர் சுபபரிணாமமடைந்தனர். சுவாமி இந்த விருத்தாந்தம் பிரத்யக்ஷமாகக் கண்டு சம்யக்த்வ திருடமான தென்று பத்மஸ்ரீ சொல்ல, அர்ஹத்தாசரும், ஸ்திரீகளும் அனுமோதம் பண்ணினர். குந்தலதை சர்வமும் அஸத்யம் என ராஜாவும், மந்திரியும் சத்யத்தை அசத்யமென்கிற பாபிஷ்டையைப் பிரபாத சமயத்து கர்த்தப மேற்றி நிக்ரஹம் பண்ணுவோம் என்றனர். சோரன் சிந்திப்பான். துர்ஜன ராகிய ஜனங்கள் சத்ஜனர்க்கு அபவாதம் சொல்லி அல்லது சுகத்தையடையார். அதன்போலவென்னில் "சுவா" சர்வ ரசங்களும் முன்னிருக்க அதனைப் பக்ஷியாமல், அமேத்ய பக்ஷணம் பண்ணி சுகமுற்றவாறு போலவென்று சிந்தித்தனன்.

ததநந்தரம், பத்மலதையை நோக்கி, சம்யக்த்வ க்ரஹண காரணத்தினை வினவ, அவளும் சொல்லுவாள். அங்க விஷய சம்பா நகரத்து ராஜா தாடி வாஹனன். பார்யை பத்மாவதி. புத்ரி பத்மஸ்ரீ. மகாபதிவிரதை. அந்நகரத்து வைச்யன் புத்ததாசன். இவன் பௌத்த மார்கத்து உபாசகர் களுக்கெல்லாம் பிரஸித்தன். பார்யை புத்ததாஸி. புத்ரன் புத்த சங்கன்.

இவன் ஒரு நாள் தன் மித்ரனாகிய காமதேவனுடன் சைத்யாலய மடைந்து, தேவனுக்குப் பூஜை பண்ணிவிக்கின்ற பத்மஸ்ரீயது ரூப லாவண்யம் கண்டு, காமாதுரனாகித்தனாகிச் சொல்லுவான். மரகதம் போன்ற வர்ணத் தினையும், வெள்ளைத்தாள் போன்ற காதினையும், வேல் போன்ற விழி யினையும், வேய் போன்ற தோளினையும், துடி போன்ற இடையினையும், தாமரை முகை போன்ற ஸ்தனங்களையும், கஜமஸ்தகம் போன்ற ஜகன பாரத்தினையும், நாகபாசம் விரிந்தாற் போன்ற அங்குல் பிரதேசத்தினையும், வாழைத்தண்டு போன்ற ஊரு பிரதேசத்தினையும், அப்ராக்தோன்றி போன்ற முழந்தாளினையும், ஆமை முதுகு போன்ற புறங்காலினையும், தாமரைப் பூப்போன்ற உள்ளங்கையினையும், நிர்த்துவி போன்ற நாபியினையும், மாலை யொழுங்கு போன்ற ரோமாவளியினையும், கன்னிக் கமுகு போன்ற கழுத்தினையும், முல்லை யறும்பு போன்ற தந்தங்களையும், கோவைப் பழம் போன்ற அதரத்தினையும், குமிழம் பூ போன்ற நாசியினையும், பூரணசந்திரன் போன்ற முகத்தினையும், இந்திர நீலத்தினைத் தொகுத்து வைந்தாற் போன்ற அளக பாரத்தினையும், அன்னம் போன்ற நடையினையும், சௌபாக்கியத்தினையும் உடைய பத்மஸ்ரீயது பாதாதி கேசாந்தமான ரூபலாவண்யம் கண்டு, அதிமோஹிதனாகித் தனது க்ருஹம் அடைந்து, சயனத்தின் மேல் வீழ்ந்து சந்தாப மெய்திய புத்திரனைக் கண்டு புத்ததாஸி,

உனக்கென்ன செய்கின்றது என்று கேட்க, புத்தசங்கனும் லஜ்ஜை (வெட்கம்) நீங்கிச் சொல்லுவான். விருஷபதாஸ ச்ரேஷ்டி புத்திரி பத்மஸ்ரீயினை விவாஹம் பண்ணினேனாகில் நானது பிராணனிராதென்று புத்தி பண்ணி விவாஹ யோக்யமான ப்ரவர்த்தனத்தினைச் சிந்திப்பாயாக என்று சொல்லுவான்.

க்ரோதாத்மாவுக்கு நல்ல மௌனமும், வஞ்சகனுக்கு மித்ரனும், க்ருரனுக்கு ஸ்திரியும், சுகியானவனுக்கு வித்யையும், விஷயபரனுக்கு லஜ்ஜையும், சோம்பனுக்கு லக்ஷ்மியும், உண்டாகாவென்று, புத்திப் பண்ணிப் புத்ர விருத்தாந்தத்தினை பர்த்தாவினுக்கு அறிவிப்ப, புத்ததாசன் புத்திரனை நோக்கிச் சொல்லுவான். மது மாம்ச பக்ஷகராகிய நம்மை, விருஷபதாசர் சாண்டாளத்வ சமமாகக் கருதும் அவனிடத்து, உனக்கு விவாஹார்த்தமாகக் கன்யகையை யாசித்தல் அசாத்தியமாகும். மகாமேருவினது அக்ரத்தை யேறுவான் உத்யோகிக்கின்ற பால சர்ப்பம் போல, காம, க்ரஹ பீடிதரான வர்களும், சாத்யா சாத்யமறியார். புத்தியான்கள் அசாத்யமான வஸ்துக்களிடத்து, ஆதரம் பண்ணாரென்றும் விவாஹ சம்பந்தம் பண்ணும் இடத்து, ஐச்வர்யமும், வித்யையும், சீலமும், குணமும், தர்மமும், சமமாகிய விடத்தில் அல்லது கூடாதென்றும், பல சொல்லி என்ன எனக்கு பிராணாவஸ்தை ஆகின்றதென புத்ததாஸரும், காமாக்னி பீடிதரானவர்களுக்கு, பகுவிதமாகிய சீதோபசாரங்கள் செய்தவிடத்தும், நீங்காதென்றும், பகுவிதமான சிந்தாந்த சூத்திரங்களை அறியாமையினால் விச்வத்துக்கெல்லாம் ப்ரகாசம் உண்டாகியும், மனசினால் பரிஹரிக்கப்பட்ட, விரத நியமத்தினை யுடைய ராகியும், விஷயாசக்தரானவர்கள் விரஹாக்கி சயத்தினால் விநாசமான சத்குணங்களை யுடையவராவர்.

சமுத்திரத்தினை உபாயத்தினால் கரை காணலாம்; மகா சர்ப்பங்களை மந்திர யந்திரங்களினாலே சிரசிலே வகிக்கலாம். மூர்க்க ஜனங்களது, சித்தத்தை யாவராலும் ஆராதிக்க அரிதென்றும், மெத்துக்கள் துர்ஜனற்கு சர்வோபசமமாகிய அநேக திருஷ்டாந்தங்களைச் சொல்லிய விடத்தும் தமது சுபாவ குணம் விடார் என்று புத்ததாஸர் சொல்ல, சுவ பார்யையும், புத்திரனை நோக்கிச் சொல்லுவாள்,

வ னரத்துக்கு பகுசிக்ஷை பண்ணியவிடத்தும் தனது துச்சேஷ்டையினை விடாதென்றனன். புத்ததாசர் புத்திரனை நோக்கி உபாயாந்தரத்தினால் உனது இஷ்ட கர்ம்யத்தினை முடிப்பன் என்று சொல்லுவான், க்ரமத்தினால் கடினமான பூமியும், ஜலத்தினால் ம்ருதுவாகும். சகல கார்யங்களும் வினய வாத்ஸல்யத்தினால் க்ரமேண சித்தியாகும். உபாயத்திலும் க்ருத்ரிம ரூபத்

தினாலும் சத்ருவினையும் அடைவிலே ஜயிக்கலாம். அக்ஞானத்தினை நீக்கி தானாபூஜா தபச்சீலங்களைச் செய்ய க்ரமேண மோக்ஷமுமாகும் என்று தம் முன் நிச்சயித்து யசோதர குருக்கள், ஸ்ரீபாதத்து க்ரித்திரிம புத்தியினால் ஜைன விரதம் கைக்கொண்டு வர்த்திக்கின்ற இவர்களைக் கண்டு விருஷபதாச ச்ரேஷ்டி மகாசந்துஷ்டனாகி, "அஹோ இவர்கள் மித்யாத்வம் பரித்யஜித்து சம்யக்த்வ க்ரஹணம் பண்ணினமையால் தன்பரராயினர் என்று மித்ரபாவத்தனாகிச் சொல்லுவான். பதார்த்தங்களைக் கொடுத்தலும், ப்ரதிக்ரஹணம் பண்ணுதலும், ரஹஸ்யத்தினைச் சொல்லுதலும், மீண்டும் கேட்டலும், தான் சென்று போஜித்தலும், அவர்களைப் போஜிப்பித்தலும், என்னும் இந்த ஆறு குணத்தினையும் சொல்லி விருஷபதாஸர், புத்ததாசரைப் போஜனார்த்தமாக உபசரிக்க வேண்டாவென்று மறுக்கக் காரணம் என்ன என, உம்முடைய புத்ரி பத்மஸ்ரீயினை புத்த சங்கனுக்குத் தருவிராகில் போஜனத்துக்கு வருவன் என, அவரும் தர்ம வாத்சல்யத்தால் உடன்பட்டுச் சுபதின முகூர்த்தத்து கல்யாண விதியால், கன்யகையினையும் கொடுத்து, மித்ர பாவத்தால் வர்த்திக்கின்ற நாளுள், கபட விருத்தியனாகிய, புத்த தாசாதிகள் புனரபி புத்த மார்க்கஸ்தராகிய இவர்களைக் கண்டு விருஷபதாசர் சொல்லுவார். மித்யாத்ருஷ்டிகள் ஜைன ஆகமத்தினைப் பாடம் பண்ணியும், மித்யாத்வத்தில் அதிகமாகா நின்றனர். அது எதுபோலவெனில் துர்திருஷ்டியாகிய சர்ப்பம் க்ஷீரத்தைப் பானம் பண்ணியும் அதிகம் விஷமானவாறு போலவும், மார்ஜாரமானது சாதுரூபம் போன்றிருந்து பாலினைப் பருகியவாறு போல, இவர்களது மாயா விருத்தியிருந்தவாறென்று, ப்ராண பரித்யாகம் வந்தவிடத்தும், குரு சாக்ஷியாகக் கொண்ட விரதத்தினை விடில் ஜன்மம் தோறும் துக்கரூபிகள் ஆவர் என்று நிச்சயித்து இருந்தனர்.

ஒருநாள் புத்ததாசருடைய பூர்வகுரு "பத்மசங்கன்" பத்மஸ்ரீயினை நோக்கிச் சொல்லுவான். புத்ரியே பௌத்த தர்மத்திலும், பெரியதொரு தர்மம் இல்லை என்று, தன் மார்க்க சௌக்கியத்தினைச் சொல்ல, ஜைனோத்தமையாகிய பத்மஸ்ரீயும், கேளாய், பத்மசங்கா, சன்மார்க்கத்தினைப் பரித்யஜித்து, நீசமார்கஸ்தராவார் இல்லை. அதென்போல சிம்ஹமானது தான் போஜிக்கும் அல்லது த்ருண விசேஷங்களை ச்பர்சியாதுபோல வம்சோத்பவரும், வ்யசனயுற்றவிடத்தும் நீதியல்லது செய்யார். ருத்ரன் ஆலாஹாலமென்கின்ற விஷம் தனதிடமடைவதையும் சகித்தனன். சமுத்ரம் துஸ்சஹமாகிய வடவாமுகாக்கினியையும் சகித்தவாறு போல, சத்துக்களும் துக்கமெய்தியவிடத்தும் சுகமாகக் கருதுவர். அல்லதும் தேவகுரு சமீபத்தைக்

கொண்ட விரதத்தை ஹாநி பண்ணினவர்கள், தனதான்யாதிகளால் தரித்ரரும், பயசஹிதரும், சந்ததம் துக்கிகளும், ஆவரென்று சன்மார்க்க மகிமையினைப் பகுவிதமாகப் பத்மசங்கள் கேட்டுத் தனது இடம் அடைந்தனன்.

விருஷபதாஸர் சரீர பரித்யாகம் செய்து சுவர்க்கமடைய, அதனால் மிகவும் துக்க சகிதையாகிய பத்மஸ்ரீயினை நோக்கி, புத்ததாஸன் சொல்லு வான். உன்னுடைய பிதா சரீரம் விட்டு வந்து மிருதம் ஆயினன் என்று எனது குருக்கள் அருளிச்செய்யக் கேட்டேன் என, பத்மஸ்ரீ அதிகுபிதையாகி உங்க ளுடைய குருக்களுக்கு இப்பெற்றியவாகிய ஞானமுண்டாகில் யானும் புத்த மதம் கைக்கொள்கின்றேன் என, ப்ரஸன்னஹ்ருதயனாகி பௌத்த தபஸ்வி களுக்குத் தனது வஞ்சக விருத்தாந்த முதலாயின அறிவிப்ப, அவர்களும், ஹர்ஷத்துடன் வர, தனது கிருஹமத்யத்துள் ஆசனமிட்டுப் பூஜித்தனன்.

குசலையாகிய பத்மஸ்ரீயும், உபாயத்தினால் இவர்களது, பாதரக்ஷை களில் ப்ரத்யேகம் ஒவ்வொன்றை அழைப்பித்து அனேக சூக்ஷ்மரூபமாக்கி, அதற்கு யோக்யமான பதார்த்தங்களை இட்டு கறிப்பண்ணிப் போஜனமிட அவர்களும் போஜனாந்தரம் கந்த லேபன தாம்பூலாதிகளையும் சேவித்தபின், சஸ்பாதிகள் சமைத்தமை அழகியதென்று, பிரியப்பட்டு பிரபாத சமயத்து பௌத்த விரதம் தருவோம் என்று போகின்ற அவசரத்து பாதரக்ஷைகள் ஒவ்வொன்றும் காணாமல் பரிப்பிரமிக்கின்றமை கேட்டு பத்மஸ்ரீ உங்களது ஞானத்தினால் பார்க்க என, இப்பெற்றியவாகிய ஞானம் எங்களுக்கு இல்லை என, உங்களது உதரத்தில் இருக்கின்ற பாதரக்ஷையை அறியாத நீங்கள் என் பிதாவினது கதியினை அறிந்த வண்ணம் மெப்படி என, அவர்களும் எங்கள் உதரத்தில் பாதரக்ஷையிருக்கின்றதோவென, பத்மஸ்ரீயும், சந்தேஹமில்லை என்றபின் உத்காரம் பண்ண, சூதினால் சூக்ஷ்ம சர்ம ரூபத்தினைக் கண்டு லஜ்ஜையினை அடைந்து புத்ததாசருடன சொல்லுவார், பாபிஷ்டா உனது வசனத்தைக் கேட்டமையால், எங்களுக்கு அபகீர்த்தியானதென்று போயினர்.

லஜ்ஜா சகிதனாகிய புத்ததாசனும், விஷண்ண ஹிருதயனாகி, புத்திர னையும், பத்மஸ்ரீயினையும், தனது கிருஹத்துக்கு நின்றும், துரத்தி, இவர்களது சகல வஸ்துவையும் கைக்கொள்ள, பத்மஸ்ரீ பர்த்தாவை நோக்கி எனது மாதாவினது கிரஹம் யேற் போவோமென, பந்துக்களிடத்தில் போவதில், பிக்ஷை பண்ணுமதே நன்றென மறுத்து, துஷ்ட மிருகங்களால் நிறைந்த வனங்களுட் சென்று, சாகாமூல பலங்களை ஜீவித்து, விருட்க்ஷ மூலத்து த்ருணங்களை சயநமாகவும், ஜீர்ண வஸ்த்திரங்களை, ஆடை

யாகவும் செல்வது, ச்ரேஷ்டியும், பந்துக்களிடத்து தநஹீனனாகி வர்த்தித்தல் மிகவும் கஷ்டம் என்று நிச்சயித்துப் புறப்பட்டு. தேசாந்திரம் போகின்றவர்களை, நகர பாஹ்யத்து சார்த்தவாஹனன் என்னும் வைச்யன், பத்மஸ்ரீயது ரூபம் கண்டு, மோஹிதனாகிப் புத்தசங்கனை, விஷம் கலந்த ஆஹாரத்தினால், மரணம் அடைவிப்பான் வேண்டித் தனது விடுதியிடத்துப் போஜனம் செய்ய வேண்டி அழைப்ப, சார்த்த வாஹனனது இங்கித சேஷ்டையால், பத்மஸ்ரீ அவனது சித்த விருத்தியினை அறிந்து நிவாரிக்கவும், தவராது அவனது கிரஹத்துக் சென்று, சஹ போஜனம் செய்து இருவரும் மூர்ச்சை அடைய, பர்த்தாவினது வியாகூலத்தினால் பத்மஸ்ரீ, விஷண்ண ஹ்ருத்யத்தினளாகி இருப்ப, ப்ரபாத சமயத்து சிலர் சென்று, புத்ததாசனுக்குப் புத்ர விருத்தாந்தம் அறிவிப்ப, அவனும் சங்க்கிலேச பரிணாமத்தனாகி வந்து, க்ரோதத்தினாற் சொல்லுவான்.

டாகினி, லங்கணி எனது புத்திரனையும், சார்த்தவாஹனனையும், பக்ஷித்தனை, பல சொல்லி என்ன, என் பிள்ளையை எழுப்பாத அளவில், உன்னை நிக்ரஹம் பண்ணுவன் என்று ஸ்வபுத்திரனைப் பத்மஸ்ரீயது பாத மூலத்தில் இட்டு, கிலேசிக்கின்றனனாக. அவளும் எனது ஜன்மாந்தர கர்மம் மிகுந்தவாறு, பிரும்மா, திலோத்தமையது வாஞ்சையால் சிரசொன்று சேதிக்கப்பட்டனன்.

சந்த்ராதித்யாள் ராஹு, கேதுக்களால் பாதைப்பட்டனர், ருத்ரன் நக்நருபனாகி, பிரும்ஹசிர கபாலமேந்தி, பிக்ஷாடனம் பண்ணினன். சீதாங்கனையும் சிறையில் இருந்தனள். ஆதலால் ஊழ்வினை ஒருவராலும் விலக்க அரிதென்று நிச்சயித்து, கரகமல முகுளிதையாகி, எனக்கு ஜினமார்க்க நிச்சயமும், பதிவிரதா பாவமும், அகிம்சையும், அஸ்தேயமும், சத்யமும், பர புருஷ சேவையும், பொருள் வரைதலும், மது மத்ய மாம்ச நிவிருத்தியும், இராத்திரி ஜீவியாமையும், ரிஷிகளை வந்தித்தலும் என்னும் தசவிரதமும், எனக்கு உண்டாகிலும், ஜினதர்ம பரிபாலனம் பண்ணுகின்ற சாஸன தேவதைகளால் என் பர்த்தா பிராண சகிதனாகி எழுந்திருக்க வேண்டுமென்றும், சார்த்தவாகனனும், அப்படியாகவென்று சொல்ல. இவளது விரத மாஹாத்மயத்தினால் நிர்விஷராகி எழுந்திருப்ப, நகர ஜனங்களும், கோபாலாதியரும், பிரசம்சித்துச் சொல்லுவார். வேத சாஸ்திர நிபுணனும், விப்ரோத்தமனும் ஆகியவன் பண்டிதனாதலும், நீதி சாஸ்திர நிபுணனுமாகிய ராஜா தார்மீகனாதலும், அதிருபவதியும் யௌவன பதபிராப்தையுமாகியவள் பதிவிரதோத்தமையாதலும், தரித்ரனானவன், பாபத்தைப்பண்ணாதிருத்தலும்,

லோகத்துக்கு ஆச்சர்யமென்று பத்மஸ்ரீயினைப் பூஜித்தனர். தேவர்கள் பஞ்சாஸ்சர்யங்கள் பண்ணினர். இந்த விருத்தாந்தம் எல்லாம் ப்ரத்யக்ஷமாகக் கண்ட ராஜா "தாடிவாஹனன்", சம்சார சரீர போகங்களில் நிர்விண்ணனாகி அஹோ ஜின தர்மம் அல்லது ஆத்மாக்களுக்கு இகபர லோகங்களில் சுகத்தைத் தருவதில்லை என்று சொல்லி ஸ்தோத்திரம் பண்ணி, நயவிக்ரமன் என்னும் புத்திரனுக்கு ராஜ்ய பதம் கொடுத்து, அநேக ராஜாக்களுடன் யசோதர குருக்கள் ஸ்ரீபாதத்து ஜின தீக்ஷையினைக் கைக்கொண்டனர். ராஜபார்யை பத்மாவதி, விருஷபதாஸர் பார்யை பத்மாவதி, பத்மஸ்ரீ முதலாயினார். சரஸ்வதி சாந்திகளென்னும் ஆர்யங்கனைகள் சமீபத்து தீக்ஷித்தனர்.

ராஜா நயவிக்ரமன், புத்ததாசன், புத்தசங்கன். முதலாயினார் சம்யக்த்வ க்ரஹணம் பண்ணினர், சிலர் சுபபரிணாம மடைந்தனர். இந்த விருத்தாந்தம் ப்ரத்யக்ஷமாகக் கண்டவதனால், சம்யக்த்வ க்ரஹணம் பண்ணினேன் என்று பத்மலதை சொல்லக் கேட்டு, அர்ஹதாசரும். தேவிமாரும் எங்களுக்கும் அனுமோதம் என்று சொல்லினர். குந்தலதை சகல விருத்தாந்தமும் அஸத்யமென்று எனக்கு அனுமோதம் இல்லை என்று சொல்லினள். ராஜா, மந்திரி இருவரும். இவள் பாபிஷ்டை, ப்ரபாத சமயத்து கர்த்தமமேற்றி நிக்ரஹம் பண்ணுவோம் என்றனர். சோரன் சிந்தித்திப்பான், துர்ஜனர் யோக்யரை அயோக்யரென்று புத்தி பண்ணுவர் என்று சிந்தித்தான்.

ததனந்தரம் அர்ஹதாசர் கனகலதையது சம்யக்த்வ கிரஹண காரணத்தினை வினவச் சொல்லுவாள். அவந்தி விஷயத்து உஜ்ஜைனி நகரத்து ராஜா நரபாலன், பார்யை மதனவேகை, மந்திரி மதனதேவன், பார்யை சோமை, ராஜ ச்ரேஷ்டி, சமுத்ரதத்தன், பார்யை சாகரசேனை, புத்ரன் உமயன், புத்ரி ஜினதத்தை, இவளைக் கௌசாம்பி நகரத்து ஜினதத்தன் என்னும் பரம சிராவகர்க்குக் கல்யாண விதியால் கொடுக்க இஷ்ட விஷயாதிகளை அனுபவித்து இனிது செல்கின்ற நாளில் உமயன் சப்தவ்யசனதத்பரனாகி வர்த்திக்கின்றவன் பிதா நிவாரிக்கவும், தவிராதொழியச் சொல்லுவான்.

காமனுக்கு மாதா லக்ஷ்மியாகியும், பிதா விஷ்ணுவாகியும், சகல ஜனங்களையும் மோகிப்பிக்கும் முல்லை, அசோகம், நீலோத்பலம், சூதபுஷ்பம், தாமரை என்னும் புஷ்பங்களை பாணமாக உடைய இவனும் ஈச்வரனால் தத்தனாயினன் என்று சொல்லி, உபார்ஜித கர்மத்தை விலக்கல் அரிதென்று விட்டனன். இவனும் நாள்தோறும் நகரத்துள் சோர வியாபார தத்பரனாகி

வர்த்திக்கின்றவனை இராத்திரியில், யமதண்டன் என்னும் தளவரன் கண்டு ச்ரேஷ்டி காரணமாக பருஷாரம் எல்லாம் க்ஷமித்து யமதண்டன் சொல்லுவான்.

அஹோ சிரேஷ்டி இடத்து உத்பன்னராகியும், ஜினதத்தை பதிவிரதோத்தமை ஆயினள். இவன் துர்ஜனனாயினன். ஒருவர் ஜாதியிடத்து உத்பவிதமாகிய வண்டுகளில் சில வேணுவில் உத்பவிதமாகிய குழல் முதலாகிய த்வனி போன்று, கீதத்தினைச் செய்து, புஷ்பசங்களையும் போஜித்து வர்த்திக்கும். சில அமேத்யமான ரக்த முதலாயினவற்றை போஜித்து நீச விருத்தியாக வர்த்திக்குமாறுபோல வென்று சொல்லி சிக்ஷித்தனன். மற்றொரு நாள் சோரவிருத்தி பண்ணுகின்ற உமயனைக் கண்டு தளவரன் ராஜபார்ச்வத்துக் கொண்டுவந்து ச்ரேஷ்டி சமுத்ரதத்தன் புத்ரன் உமயன் சகஸ்ரவாரம் நிவாரிக்கவும், தஸ்கரவிருத்தி தவிர்க்ககின்றிலன். தேவனே திருவுளத்தில் இருந்து மரியாதை செய்தருள வேண்டுமென்று சொல்லுவான். பூபதிகள் சர்வ தேவமயமாய் இருக்கும். தேவர்களிலும் விசேஷம் உண்டு. சுபாசுப பலத்தை ப்ரத்யக்ஷமாகப் பண்ணுவர். தேவர்கள் பரலோகத்து அல்லது பண்ணமாட்டார் என ராஜா சமுத்ர தத்தனுர்க்கு ஒரு குணமும் இல்லை. தன் புத்திரனிப்படி வர்த்திக்கவும் ஹினராகி பண்ணும் அவர்போலவும் யாதுமறிகின்றனன் என்று பகுதூஷணம் பண்ணி, ததனந்தரம் ச்ரேஷ்டியை அழைத்து பாபியாகிய இவன் இப்படி வர்த்திக்கில் உனக்கு மானபங்கரம், பாபமும் உண்டாகுமென்று யோக்யருக்கு துர்ஜன சம்சர்க்கம் தோஷத்தினை உண்டாக்கும். சமுத்ரமும், அபராதியாகிய ராவணனது சம்சர்க்கத்தினால் அடைய உண்டார் போல் உனக்கு துக்க ஹேதுவாகும் என்று உமயனையும், இவன் வசத்தில்விட கிருஹம் அடைந்து பார்யையை நோக்கிச் சொல்லுவான். இவன் தேசாந்திரம் போகாவிடில் அநர்த்தம் வரும் என்று சொல்லுவான். கைக்கூலியும், ப்ரியத்தினால் பண்ணிய தானமும், சூதாடி வென்ற திரவியமும், அபூர்வமான சப்தங்களும், சோர விருத்தியால் விபாகமும் சீக்ரம் கிரஹிக்கும், அவனே புத்திமானாகச் சொல்லும். அதனால் இவன் நம்முடன் இருக்கில் வம்சஹாநியாகும். பல ஜனங்களின் விரோதமும், பாபானுபந்தியும் ஆகும் என்று சொல்ல். அவளும் புத்ர வாஞ்சையால் துக்க ஹ்ருதயத்தினவளாகிய பின் சிரேஷ்டியும் திக்கரித்து தேசாந்தரம் போகவென, உமயனும் சார்த்தத்தோடு போகி, கௌசாம்பி நகரம் அடைந்து, அனுஜையாகிய ஜினதத்தை கிரஹமடைய, அவளும் மானபங்கமாகிய இவளது விருத்தாந்தத்தினைக் கேட்டு, உதாசீனம் பண்ண, உமயனனும் அபிமானதரனாகி, அஹோ யான் பண்ணிய கர்ம மகிமையிருந்தவாறென்று, உபசம பாவத்தால் பராச்ரயத்தினது நிந்தையைச் சிந்திப்பான்.

சந்திரனுக்குப் பரிவாரம் நட்சத்ராதிகள், சைத்யத்தினால் சகல விருக்ஷாதிகளுக்கும நாயகன். அமிருத கிரணங்களாலும், சம்யுக்தனாகியும், ஆதித்யனை அடைய அப்ரகாசமாயினவாறு போல வந்து, ஜனங்களிடத்து வர்த்தித்தல் நிந்திதமாகும் என நிச்சயித்து, ஜினாலயமடைந்து, ச்ருதசாகர முனிகள் ஸ்ரீ பாதத்து தர்மச்ரவணானந்தரம் சப்த வியசன நிவிருத்தி செய்து, சம்யக்தர்சன பூர்வகம், சிராவக விரதத்தினையும், பேரறியாப்பழம் பக்ஷியாமலும் விரதம் கைக்கொண்டனன். இவனது உபசமபாவம் கண்டு, தர்ம ஜனங்கள் சொல்லுவார். "குணஹீனரும் குணவான்களை ஆச்ரயித்தபொழுது, பிராப்தியினை அடைவர், கற்பூரம் பாதிரப்பூ ஜலத்துடன் கூடியவிடத்து, பரிமளம் பிரகாசமாயினவாறு போல வென்றனர்".

ததனந்தரம் உமயனது உபசம பாவத்தினையும், சம்யக்த்வ கிரஹணத்தினையும் கண்டு, அனுஜையாகிய ஜினதத்தை தனது கிரஹமடைவித்து, போஜன வஸ்திரங்களால் ப்ரீதி பண்ணி, பகுதனத்தையும் கொடுத்து, தர்ம வாத்சல்யத்தால் வந்திப்ப, அஹோ ஜினதர்ம மகிமை இருந்தவர் என்று ப்ரியப்பட்டனன். இவன் மாதா சார்த்தத்துடன் கூடி வருகின்றவள், சன்மார்க்கஸ்தனாகிய உமயனைக் கண்டு பிரசன்ன ஹிருதயத்தினள் ஆகி, உத்தமருடைய சம்சர்க்கத்தால் உத்தமன் ஆயினை என்று சொல்லுவார்கள். ஆகாசத்து வீழ்கின்ற ஜலம் தடாகத்தை ஆச்ரயித்துத் தாமரை முதலாயின உத்பலிக்க ஹேதுவானாற்போலவும், சமுத்திரத்துள் சிப்பி, வலம்புரி முதலாயினவற்று வீழ்ந்த ஜலம் முத்தாயினாற் போலவும், உவர் நிலத்தில் வீழ்ந்தது உப்பு நீரானாற் போலவும், ஆச்ரய விசேஷத்தால் ஆத்மகுணங்கள் அனேக விதமாகும் என்று ஆச்சர்யப்பட்டு, சார்தத்தோடு வழி வருகின்றவர்கள், இராத்திரியில் மார்க்க விபரீதத்தால் மகாரண்யத்துக்கு பரிபிரமிக்கின்றவர்கள், உதயமான பின் வழி தேடியும் காணாது மிகவும் க்ஷுத்பிபாசாதிகளால் வருந்தி, ரூபம், கந்தம், வர்ணம், ரசங்களோடும் கூடிய கிம்பாக பலத்தினைப் போஜித்துப் பின் உமயனுக்குக் கொடுப்ப பலத்துக்கு நாமம் யாதென்றதும் பேரறியாப் பழம் என்ன, எனக்கு விரதமென்று பக்ஷியாது தவிர்த்த பின் சகலரும் மூர்ச்சித்துப் பூமியில் வீழ்ந்தனர்.

உமயனும் விஷண்ண ஹ்ருதயனாகி, அஹோ! இப்பெற்றியதான பழ்ம் காலகூடமோ, மஹாவிஷமோ, என்று இந்தப் பலத்தின் க்ரூரத்தைப் பகுவிதமாகச் சொல்லிய அவசரத்து, இவனது விரத மகிமையினை பரிக்ஷிக்க காரணமாக, வனதேவதை அதிரமணீயமாகியதொரு ஸ்திரிரூபம் கொண்டு

சொல்லுவாள். திவ்ய ரசமாகிய இந்த விருக்ஷத்தின் பலம் ஜீவியா தொழிந்தனை, இது கல்பக விருட்சம், இதனை ஜீவித்தவர்களுக்கு சர்வ ரோகங்களும் நீங்கும். பூர்வம் விருத்தையாகிய என்னை, இந்திரன் ரக்ஷித்து உபயோகிக்கவென, அன்று முதல் இதனை போஜித்தமையால் ஈத்ருசமாகிய யௌவனபத பிராப்த்தையாயினேன் என, உமயன் சொல்லுவான். அவ்வாய் பேரறியாப் பழம் ஜீவியாமல் விரதம் கைக்கொண்டேன். பலத்தின் மகிமை அநேகமாக வுண்டானாலும், விரதம் தவிர்த்து ஜீவிப்பதில்லை என்று மறுப்ப, இவனது தைரியம் கண்டு, மகிழ்ச்சி யெய்தி, உனக்கு வேண்டுவது யாது, வரம் தருகின்றேன் என, எனது சகாயராகிய இவர்களையும் எழுப்பி, உஜ்ஜைனி நகரத்துக்கு மார்கத்தையும் காட்டுவாயாக வென, இவனது உத்யோகம், சாஹசம், ஞானம், புத்தி, சக்தி, பராக்ரமம் என்னும் ஆறு குணங்களையும் உடைய உமயனது விரத மகிமைக் கண்டு, மூர்ச்சிதரானவர்களையும், திவ்ய சக்தியால் எழுப்பி, அன்யோன்யம் பிரசம்சித்த பின், நகரத்திற்குச் செல்லும் மார்கத்தினையும் காட்டி மறைந்தனள். இவர்களும் உஜ்ஜையினி நகரமடைய இவனது சாரித்ர மகிமைக் கண்டு, நகர தேவதைகள் ஸ்தோத்திரம் பண்ணினர். ராஜா, மந்திரி முதலாயினார் இவனது விருத்தாந்தம் கேட்டு, அஹோ யோக்ய சம்சர்க்கத்தால் பூஜ்யனாயினை. சுகந்தபுஷ்பமானது பரிமள விசேஷத்தால் சிரசில் தரித்தாற் போல, லோகத்திற்குப் பூஜ்யனாயினை என்று ஸ்தோத்திரம் பண்ணினர்.

ததனந்தரம் தேவர்கள் ரத்னமண்டபம் நிர்மித்து சிம்ஹாசனத்தின்மிசை வைத்துப் பவித்ர ஜலங்களால் அபிஷேகம் பண்ணி. திவ்ய வஸ்திராபரணங் களால் அலங்கரித்துப் பஞ்சாசார்யத்தினையும் பண்ணினர். இதனைக் கண்ட ராஜா,சர்வ ஆபத்தினையும் பரிஹரித்தற்கு ஜினகர்மம் அல்லது இல்லை என்று ஸ்தோத்திரம் பண்ணி, ஸ்வபுத்ரனுக்கு ராஜ்யபதம் கொடுத்து, மதனதேவ மந்திரி ச்ரேஷ்டி சமுத்ரதத்தன், புத்ரன் உமயன், முதலாகிய அனேக ஜனங் களுடன் சஹஸ்ரகீர்த்தி முனிகள் ஸ்ரீபாதத்து ஜின தீக்ஷாப்ராப்தராயினர். சிலர் சிராவக விரதம் கைக்கொண்டனர். சிலர் சுபபரிணாமமடைந்தனர். ராஜா பார்யை மதனவேகை, மந்திரி பார்யை சோமை, ச்ரேஷ்டி பார்யை சாகரதத்தை, முதலாயினார். அனந்தமதி என்னும் ஆர்யாங்கனைகள் சமீபித்து தீக்ஷித்தனர். ஸ்திரீ ஜனங்கள் பலரும் ச்ராவக விரதம் கைக்கொண்டனர். இந்த விருத்தாந்தம் எல்லாம் ப்ரத்யக்ஷமாக கண்டவதனால் சம்யக்த்வம் திருடமானதென்று கனகலதைச் சொல்லக் கேட்டு, அர்ஹததாசரும், தேவிமாரும் அனுமோதம் பண்ணினர். குந்தலதை இந்த விருத்தாந்தம் அஸத்யம் என,

ராஜாவும், மந்திரியும் ப்ரத்யக்ஷ கதையை அஸத்யம் என்றனள். இவளை ப்ரபாத சமயத்து கர்தபமேற்றி நிக்ரஹம் பண்ணுவோம் என்றனர். சோரன் சிந்திப்பான். நீச கோத்ரத்துக்கு ஹேதுவானவர்கள், சத்தியத்தினை அஸத்யமென்றும், குணவான்களை குணஹீனரென்றும், பாவிப்பார்களென்று சிந்தித்தனன்.

ததனந்தரம் வித்யுல்லதை என்னும், பார்யையை நோக்கி, உனது சம்யக்த்வ கிரஹண காரணத்தைச் சொல்லுவாயாக எனச், சொல்லுவாள். தரக தேசத்து சூர்ய கௌசம்பி நகரத்து ராஜா சுதண்டன், பார்யை விஜயை, மந்திரி சுமதி, பார்யை குணஸ்ரீ, ராஜச்ச்ரேஷ்டி சுரதேவன், பார்யை குணவதி. சுரதேவன், வாணிஜ்யார்த்தமாக பகு தேசம் அடைந்து, சில ஜாத்யச்வம் கொண்டுவந்து, சுதண்டராஜனுக்குக் கொடுப்ப சந்துஷ்டனாகி பகுதனத்தினையும் கொடுத்து, சத்கார வசனங்களையும் சொல்லிச் செல்லும் நாளுள் ஒருநாள் சுரதேவன் ஆகமத்தில் சொல்லும் விதி கிரமத்தினால் "குணசேந பட்டாரசற்கு" ஆஹார தானத்தினைப் பண்ண, தபோதனரது மகிமையால், பஞ்சாஸ்சர்யத்தினை அடைந்தனன். இந்த நகரத்து அன்யச்ரேஷ்டி சாகரதத்தன், தரித்ரன், பார்யை ஸ்ரீதத்தை, புத்ரன் சமுத்ரதத்தன். இந்த சமுத்ரதத்தன் சுரதேவன் பண்ணிய ஆகாரதான பலாதிசயம் கண்டு, அஹோ! தனஹீனனாகிய யான், தானம் பண்ணும் க்ரமம் எப்படி என்று சிந்தித்து, சூரதேவனைப்போல, பகு தனங்களை உபாசித்து தானாதிகளைப் பண்ணுவோம் என்று, தனத்தினது மகிமையைச் சொல்லுவான். ஐச்வர்யமுண்டானவர்களுக்குப் பூஜ்யமும், காந்தியும் யௌவன் யோக்யமான போகோபபோக திரவ்யங்களும், வித்யையும் கீர்த்தியும், மித்ரரும், பந்துக்களும் இதனால் ஆகும். தனஹீனருக்கு தானபூஜா தவச்சீலங்களும் இல்லையாகி, தரித்ரத்தால் யோக்யனும், துர்ஜனன் ஆவான் என்று நிச்சயித்து, பகள தேசத்து வாணிஜ்யார்த்தமாகப் போவான் வேண்டித் தன் மித்ரர் நாலு பேரையும் கூடக் கொண்டு புறப்பட்டு தேசாந்திரம் சென்று, 'பலாசக்ராமம்' அடைந்தபின், மித்ரரை நோக்கிச் சொல்லுவான்.

சமுத்ரதத்தன, நாம் கொண்டுவந்த பதார்த்தமுள்ளதும் விற்று, நமது தேசத்துக்கு யோக்யமான பதார்த்தங்களும் கொண்டு, த்ரிவர்ஷாந்தரம் வரை மீண்டும் போகுவோம் என்று நிச்சயித்துத், தங்களில் சீமை பண்ணிக்கொண்டு போயினர். சமுத்ரதத்தன் மார்க்கச்ராந்தியாய் சில நாளில் நகரத்திலிருந்து விசாரிப்பான். லோகத்துள் கஷ்டம் மூர்க்கனாய் வர்த்தித்தலும், யௌவனத்தில் தரித்ரமும், பரிகிரஹங்களில் வசித்தலும்,

பிறரிடத்தில் ஜீவித்தலும், ஹீனமென்றபின் இந்நகரவாசி வைச்யன், அசோகன் அச்வ வியாபாரியாகும். பார்யை வீதசோகை. புத்திரி கமலஸ்ரீ. அசோகன் ஆச்வ ரக்ஷணார்த்தமாக, ரக்ஷகரைத் தேடுகின்ற விடத்து, சமுத்ரதத்தன் இவனது சமீபம் அடைந்து, யான் அசுவரக்ஷகனாகின்றேன். எனக்கு நீ செய்யும் முபகாரம் யாதென, தினம் ப்ரதி போஜனமும், ஆறு மாதத்திற்கு ஒரு வஸ்திரமும், ஒரு கம்பளமும், பாதரக்ஷையும், மூன்று சம்வத்சரம் சென்றால், அச்வ சமூகத்தில் உனக்கு வாஞ்சிதமான அச்வமிரண்டும், தருவேன் என, சமுத்ரதத்தனும் அனுமதி பண்ணி, அசுவரக்ஷகனாகிச் செல்லும் நாளுள், அடவியில் அபூர்வமான புஷ்பங்களும், பழங்களும், கந்தமூலங்களையும், ச்ரேஷ்டி புத்திரி கமலஸ்ரீ, இவனுக்குக் கொடுத்துத் தான் அப்யசித்த, கீத கலா விசேஷத்தினையும், அறிவித்துச் செல்லும் நாளுள், க்ரமேண கமலஸ்ரீ, இவனிடத்துப் புத்தியினளாகி, திவாராத்ரம் நமக்கு இவனே பர்த்தா என நிச்சயித்துக் கூடி வர்த்திக்கும் நாளில் சிந்திப்பாள்.

காஷ்டங்கள் அக்னியுடன் கூடின பொழுது திருப்தியினை அடையும், நதிகள் சமுத்ரத்துடன் கூடிய பொழுது பிராப்தியினை அடையும். சர்வ பிராணிகளும் யமனுடன் கூடியபின் சுக துக்கங்களை அடைவர். ஸ்திரிகள் புருஷருடனும் கூடியபோது சுகத்தினை அடைவர் என்று சிந்தித்தனள். இவனை நோக்கி, உன்னால் மகா சுகத்தினை இத்தனை நாளும் அடைந்தேன். யான் எனது ஜன்ம தேசத்துக்குப் போகின்றேன். யான் செய்த குண தோஷங்கள் இரண்டையும் சகிக்கவெனக் கேட்ட கமலஸ்ரீ, சம்யக்லேச ஹ்ருதயத்தினளாகி சோகித்து, நாதனே உன்னையன்றி ஒரு முகூர்த்தமும் ஜீவியேன், யானும் உன்னுடன் போதுவேன் என, நீ மகா தன்யனுடைய புத்திரி, தரித்ரனும், தேசாந்திரவாசியும் ஆகிய என்னுடன் போகில், உனக்கு ஒரு சுகமும் இல்லை. அதனால் என்னுடன் போவது ப்ராப்தமல்லவென்று சொல்லுவான். ருத்ரன் ப்ராப்தனும். உதாரபுருஷனும் ஆகியும், இவனுக்கு வஸ்த்ரம், வ்யாக்ர சர்மம் பூணும் ஆபரணங்கள், அஸ்தி, ஆமை, கொக்கிறகு, சவபஸ்மம், சிரோமாலை, முதலாகியதல்லது வேறொன்றும் இலன் என்று கங்காதேவி சமுத்ரராஜனைச் சென்றடைந்தனள். ஆதலால் தனஹீனற்கு சுகமில்லை என்று பகுவிதமாகச் சொல்லவும், அவள் யான் கூட வருவேன் எத்தப் பிரதேசத்துச் சென்றாலும் அனுபோக முள்ளது தவிராதென்று நிச்சய மாகச் சொல்லியபின், சமுத்ரதத்தனுடன் பிரியாளாகி யொருப்பட்டு, ரஹஸ்யமாகச் சொல்லுவாள். அச்வ சமூகத்துள் அதி மகாபலமுமாகப் பவழ வர்ணமு மாகியது ஜலகாமி என்னும், தவள வர்ணமுமாகி துர்லபமுமாகியது

ஆகாசகாமி என்றும் உபதேசித்து, இவற்றை உனக்கு ஜீவிதமாகக் கைக்கொள்வாயாக வென்று சொல்ல, சந்துஷ்டனாகி எனது புண்ணிய மகிமை இருந்தவாறு, என்னும் புத்திப் பண்ணி செல்லும் நாளுள் ஒருநாள், தேசாந்திரம் போகிய மித்ரரும், கருதிய தேசம் சென்று, கொண்டுபோன பதார்த்தங்களை பகு லாபத்திற்கு விற்று, ஜன்ம தேசத்துள் அபூர்வமான பதார்த்தங்களாயும் கொண்டு, பலாச கிராமம் அடைந்து, சமுத்ரதத்தனைக் காண, அவனும் ப்ரீதியினோடு எதிர்கொண்டு, போஜன வஸ்த்ராதிகளால் சத்காரம் பண்ணி, பரஸ்பரம் ப்ரிய வசனம் சொல்லி இருந்தனர். சமுத்ரதத்தன், அசோகன் சமீபம் அடைந்து சொல்லுவான்.

